வெளியீடு 10-9-2005

Issued 10-9-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 4, 2005—தொகுதி 79—எண் 1

Monday the 4th April, 2005—Volume 79—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

[Legis]lative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211,31805
/P05.79.1.
186277

[Price Rs. 3.00

563
21-2-06

**4-4-2005**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. இரங்கல் தீர்மானம்—** | |
| போப்பாண்டவர் இரண்டாவது ஜான் பால் மறைவு | 1-2 |
| **2. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-37 |
| **3. விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| ஜப்பான் நிதி நிறுவன உதவியுடன் காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்துதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 37-40 |
| **4. தகவல் கோரல்—** | |
| (அ) ஒரு வழக்கிற்காக நீதிமன்றத்தில் பேரவைத் தலைவர் ஆஜராக வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருப்பது | 40-48 |

பக்கங்கள்

**4. தகவல் கோரல்**—தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| (ஆ) | சுனாமியால் பாதிக்கப்பட்ட தேவனாம்பட்டினத்தில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவந்த திரு. விவேக் ஓபராய் பாண்டிச்சேரியில் பணிகள் மேற்கொள்வது | 48-50 |
| (இ) | உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 50-51 |
| (ஈ) | கன்னியாகுமரி மாவட்டத்தில் பலத்த மழை காரணமாக உயிர் இழந்தவர்களுக்கு நிவாரண உதவி | 51 |

**5. அறிவிப்புகள்**—

| | | |
|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை மற்றும் தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்தல் | 52-53 |
| (ஆ) | உறுப்பினர் இல்லாததால் கவன ஈர்ப்பு ஒத்திவைப்பு | 53 |

**6. கவன ஈர்ப்பு**—

| | |
|---|---|
| வேலூரில் நவீன பேருந்து நிலையம் அமைப்பதில் ஏற்படும் காலதாமதம் | 53-57 |

**7. அறிக்கை அளித்தல்**—

| | |
|---|---|
| மதிப்பீட்டுக் குழு | 58 |

**8. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—

| | | |
|---|---|---|
| (அ) | கோரிக்கை எண் 14—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 58-90, 94-148 |
| (ஆ) | கோரிக்கை எண்31—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | |





பக்கங்கள்

**8. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் | 58-59, 81, 83, 84, 89, 95, 117-118, 120, 132-133, 134, 135, 136, 138 |
| மாண்புமிகு திரு. ப. அண்ணாவி | 70, 81, 107-109, 111, 141 |
| *திரு. எ.வ. வேலு | 82-84, 88, 89, 94-96 |
| திரு. எம். சக்திவேல் முருகன் | 96-106 |
| திரு. கோவை தங்கம் | 107-116 |
| *திரு. டி.கே. இராஜா | 116-121, 124-127 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 127-134, 136-146 |

**9. அரசினர் தீர்மானங்கள்**—

| | | |
|---|---|---|
| (அ) | பேரவை பணிகளினின்றும் திரு. பரிதி இளம்வழுதி அவர்களை கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல் | 90-93 |
| (ஆ) | திரு. பரிதி இளம்வழுதி அவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி அளித்தல் | 93-94 |
| (இ) | விதி 32-ஐத் தளர்த்தல் | 148-149 |

**10. பேரவைமுன் வைக்கபெற்ற ஏடுகள்**— 149-151

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

*பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.*

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

*பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.*

V2ll,31'P05
P05:79.1

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

*நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், திட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.*

தமிழ்நாடு ... காப்பகம்
185217

**4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

**5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

**6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

**9. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.



**10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**12. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**13. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

**15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

**16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Food and Co-operation** | .. | **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

| | | |
|---|---|---|
| 6. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Hindu Religious and Charitable Endowments. |
| 7. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 8. **Minister for Health** | .. | **The Hon. Thiru N. Thalavai Sundaram:**<br>Health, Medical Education and Family Welfare. |
| 9. **Minister for Rural Industries** | .. | **The Hon. Tmt. B. Valarmathi:**<br>Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board. |
| 10. **Minister for Adi-Dravidar Welfare** | .. | **The Hon. Thiru C. Karuppasamy:**<br>Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |
| 11. **Minister for Transport and Electricity** | .. | **The Hon. Thiru R. Viswanathan:**<br>Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development. |
| 12. **Minister for Industries** | .. | **The Hon. Thiru Nainar Nagenthran:**<br>Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |



| | | |
|---|---|---|
| 13. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru K. Pandurangan:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 14. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru Se.Ma. Velusamy:**<br>Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| 15. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru P.V. Damodhiran:**<br>Animal Husbandry. |
| 16. **Minister for Forests and Environment** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:**<br>Forests & Environment and Pollution Control. |
| 17. **Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**<br>Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 18. **Minister for Education and Commercial Taxes** | .. | **The Hon. Thiru C.Ve. Shanmugam:**<br>Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes. |
| 19. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:**<br>Milk and Dairy Development. |

20. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

21. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

22. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.

23. **Minister for Labour** .. **The Hon. Thiru P. Annavi:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

24. **Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**

Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply.

25. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**

Sports and Youth Welfare.

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. அ. அன்வர் ராஜா

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

முனைவர் செ.கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். - இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். - இணைச் செயலாளர்

திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். - இணைச் செயலாளர்

திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். - இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்

திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. - குழு அலுவலர்

திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். - குழு அலுவலர்



திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். - குழு அலுவலர்

திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. கோ. தேவராஜன், பி.ஏ. - சார்புச் செயலாளர்

திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. - தலைமை நிருபர்

திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. - பேரவைத் தலைவரின் தனிச் செயலர்

திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி சீ. நிர்மலா, பி.காம். - தலைமை நிருபர்

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். - தலைமை நிருபர்

திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. - தலைமை நிருபர்

செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. - சார்புச் செயலாளர்

திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. - சார்புச் செயலாளர்

திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. கோ. சுப்புராம், பி.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. மு. கதிரேசன், எம்.ஏ. - தலைமை நிருபர்

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)



90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், முனைவர் செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி.. பேராவூரணி
128. துரைமுருகன், திரு. - காட்பாடி
129. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
130. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
131. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
132. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
133. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
134. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
135. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
136. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு



137. நளினி மனோகரன், திருமதி - போளூர்
138. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
139. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
140. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
141. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
142. பச்சைமால், திரு. கே.டி. - குளச்சல்
143. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
144. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
145. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
146. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
147. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
148. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
152. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
153. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
154. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
155. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
159. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
160. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
162. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
163. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
164. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
166. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
168. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. டி.பி. - சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
174. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
176. மணி, திரு. டி. - விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. - கடலூர்
182. முரளிதரன், திரு. கே.வி. - தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. - சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
193. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். - காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

| | | |
|---|---|---|
| 204. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 206. வடிவேல், திரு. ஆர். | .. | வாணியம்பாடி |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 208. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 211. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 212. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 213. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 216. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 217. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 218. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 224. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 225. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 231. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 232. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 233. (வெற்றிடம்) | .. | காஞ்சிபுரம் |
| 234. (வெற்றிடம்) | .. | கும்மிடிப்பூண்டி |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

- - -

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 22, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 ஏப்ரல் 4, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு*
*உரிமை உடைத்துஇவ் வுலகு".*

முறைசெய்தலாகிய தன்னுடைய கடமை கெடாமல், கண்ணோட்டம் செலுத்தும் வல்லமையுடைய அரசருக்கு, இந்த உலகமே உரிமையுடையதாகிறது.

### 1. இரங்கல் தீர்மானம்

#### போப்பாண்டவர் இரண்டாவது ஜான் பால் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புனிதத் தந்தை போப்பாண்டவர் இரண்டாவது ஜான் பால் அவர்கள் 3–4–2005 அன்று மறைவுற்ற செய்தியைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பெருந்தகையின் மறைவு குறித்து கீழ்க்காணும் இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

"உலகின் கோடானுகோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதத் தலைவராகவும், அருள் தொண்டராகவும், அன்பு, கருணை, அமைதி ஆகியவற்றின் மொத்த உருவமாகவும், புனிதத் தந்தை என்று அனைவராலும் அழைக்கப்படுபவருமான போப்பாண்டவர்

[2005 ஏப்ரல் 4

இரண்டாவது ஜான் பால் அவர்கள், தனது 84 ஆம் அகவையில் 3-4-2005 அன்று அதிகாலை வாடிகன் நகரில் மறைவுற்ற செய்தி அறிந்து, இம்மாமன்றம் தனது ஆழ்ந்த அதிர்ச்சியையும், ஆற்றொணாத் துயரத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

27 ஆண்டுகளாக போப்பாண்டவராகப் பதவி வகித்த அவர் அன்பையும், ஆன்மீகத்தையும் பரப்ப இந்தியா உட்பட 120 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். உலகம் முழுவதும் அன்பையும், இரக்கத்தையும் பரப்புவதற்காக அவர் தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தவர் ஆவார்.

அவருடைய மறைவினால் இவ்வுலகம் கருணை உள்ளம் கொண்டவரை இழந்து தவிக்கிறது. அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் வாடிகன் கத்தோலிக்கத் திருச்சபைக்கும், கோடானு கோடி கத்தோலிக்கக் கிறிஸ்தவ மக்களுக்கும் இம்மாமன்றம் தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த போப்பாண்டவர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.)*

## 2. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள், வினா எண் 281, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**281—**

### சிட்டா நூல் விற்பனை மையம்

***19187—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 4]

(அ) கைத்தறிக்குரிய சிட்டா நூலுக்கான வரியைக் குறைத்து குடியாத்தம் நகரில் அரசு சார்பான சிட்டா நூல் விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெசவாளர் மக்களின்மீது உண்மையான அக்கறை கொண்டிருப்பதனால் அந்த நெசவாளர் மக்கள் பயன்படுத்தக்கூடிய சிட்டா நூலுக்கு கலால் வரி முற்றிலுமாக நீக்கப்படவேண்டுமென்று மத்திய அரசுக்கு கோரிக்கை அனுப்பினார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு கலால் வரியை முற்றிலுமாக நீக்கியிருக்கிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான நூல் குடியாத்தத்தில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் நூல் கிடங்குகளில் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்நிலையிலே குடியாத்தத்திலே தனியாக அரசு சார்பான சிட்டா நூல் விற்பனை மையம் அமைக்க வாய்ப்பு இல்லை. (ஆ) இவ்வினா எழவில்லை.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போருக்கு அஞ்சாத இமயமாய், புன்னகைக் காட்டும் தாயாய், தென்னகத்துத் தெய்வமாய், அண்ணா திராவிடத்தின் தென்றலாய் வரம் தரும் எங்கள் அன்னையை வணங்குகின்றேன். இந்தியாவிலேயே கைத்தறி உற்பத்தியில் குடியாத்தம் பெரும் பங்கு வகிக்கின்றது. அம்மாவின் பொற்கால ஆட்சியில்தான் நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றினார்கள். மேலும், சிட்டா நூல் தேவைக்கு ஏற்ப நெசவாளர்களுக்குக் கிடைப்பதில்லை. கைத்தறிக்கு நூல் பற்றாக்குறை ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. நூல் ஆலைகள், கழிவு நூலை உற்பத்தி செய்வதிலே காட்டும் ஆர்வத்தை, சிட்டா நூல் செய்வதில் காட்டுவதில்லை. கைத்தறி நூல்களைத் தலையிலே சுமந்து விற்று, கைத்தறியாளர்கள் பசியைத் தீர்த்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர்களுடைய கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள அம்மா அவர்கள், இராஜ்ய சபாவிலே உரையாற்றியபோது, கைத்தறிக்கு 22 இரகங்களை ஒதுக்கவேண்டி குரல் எழுப்பியதை நெசவாளர்கள் இன்றும் நன்றியுடன் நினைவுகூர்கிறார்கள். இம்மையம் குடியாத்தத்தில் தொடங்கப்பட்டால் சுமார் 30,000 கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை மேம்பாடு அடையும். அந்நியச் செலாவணி பெருமளவிற்குக் கிடைக்கும். தேங்கிய கைத்தறி

[2005 ஏப்ரல் 4

சரக்குகளைக் கொள்முதல் செய்து, அவர்கள் வாழ்விலே மறுமலர்ச்சி செய்து, சிட்டா நூலுக்கு மத்திய அரசு விதித்த கலால் வரியை நீக்கி, போராடி, வெற்றிகொண்டு, கேட்காமலேயே வரம் தரும் அம்மா அவர்கள் அரசில் சிட்டா நூல் விற்பனை நிலையம் குடியாத்தத்தில் அமைத்துத்தரப்படுமா என தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10--05

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு 2003–2004 ஆம் ஆண்டில் 124.39 இலட்சம் எடையுள்ள சுமார் 122.89 கோடி ரூபாய் மதிப்புடைய சிட்டா நூல், கைத்தறி நெசவாளர்களுக்கு தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலம் கலால் வரியின்றி விநியோகிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நிறுவனமான தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழக அலுவலகம் சென்னை, காஞ்சிபுரம், கோவை மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களிலே செயல்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கலால் வரி முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. கோ-ஆப்டெக்ஸ் நூல் கிடங்கு குடியாத்தத்தில் உள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான சிட்டா நூலினை இங்கே கொள்முதல் செய்துகொள்ளலாம் எனவும், தனியாருக்கான நூல் தேவைக்கு கைத்தறி வளர்ச்சிக் கழகம் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு கிளைகளில் சிட்டா நூல் கொள்முதல் செய்துகொள்ளலாம். இந்த நிலையிலே, குடியாத்தத்திலே விற்பனை மையம் தனியாக அமைக்கத் தேவையில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்–அங்கே நெசவாளர் மக்கள் அதிகமாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்; ஆகையாலே, கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலமாக தனியாக நூல் விற்பனை நிலையம் தொடங்கப்படுமா என்று ஒரு கேள்வியினைக் கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணையினைப் பெற்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சி.எம். சூரியகலா.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானத்தைக் காக்க ஆடை தந்த மண்ணுலக பிரம்மாக்களுக்கு, விண்ணுலக தேவதைபோல் வந்த அம்மா அவர்கள் பசியாற வழி கண்டார்கள். கேட்டவர்களுக்குக் கஞ்சி தந்தார்கள். கேட்காதவர்களுக்கு பை நிறைய அரிசி வழங்கினார்கள். நெசவாளர்களின் குழந்தைகள் படிக்கக் கல்வி உதவித்தொகை வழங்க ஆணையிட்டு கருணைக் கடலாக



2005 ஏப்ரல் 4]

விளங்குகின்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்டா நூலுக்கு மத்திய அரசு விதிக்கிற கலால் வரி நீக்கப்பட்டு இருந்தாலும்கூட, மாநில அரசு 2 சதவிகித வணிக வரியை இந்த சிட்டா நூலுக்குப் போட்டுக்கொண்டு இருக்கிறது. அதைத் தாங்கள், எப்படியாவது அந்தத் துறையோடு பேசி இந்த சிட்டா நூல்–ஆந்திரா போன்ற பகுதிகளிலே அதற்கான வரி இல்லை. அங்கே போய் சில பேர் பெறக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய தமிழகத்திலே, தமிழக அரசு விதிக்கிற 2 சதவிகித அந்த வணிக வரியை, சிட்டா நூலுக்கு இருப்பதை அரசு நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா? அதேபோல பல கோடி ரூபாய் நெய்த துணிகள், அந்த இடத்திலே தேங்கிக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் கொள்முதல் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின்மூலமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தவறான ஒரு கருத்தை இங்கே சொல்லி இருக்கிறார்கள். தமிழகத்திலே கூட்டுறவுச் சங்கங்களிலே எங்கேயுமே, இப்போது தேக்கம் இல்லை. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே சுமார் 443 கோடி ரூபாய்க்கு துணிகள் இருப்பிலே இருந்தன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினால், இன்றையதினம் கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும் 221 கோடி ரூபாய்க்கு துணிகள் இருக்கின்றன. தேக்கம் இல்லாத ஒரு நிலையை இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர், இங்கே, சிட்டா நூலுக்கு 2 சதவிகிதம் வரியைப் போட்டு இருக்கிறார்கள்; ஆந்திராவிலே அந்த வரி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நெசவாளர்களின் மேலே உண்மையான அக்கறை கொண்டு இருப்பதனாலேதான், உற்பத்தி செய்யக்கூடிய அந்தத் துணிகளின் மதிப்பிலேகூட, இன்றைக்கு 20 சதவிகிதம், 30 சதவிகிதம், 45 சதவிகிதம்,

55 சதவிகிதம் வரை, தள்ளுபடி மானியம் கொடுத்து அந்த நெசவாளர்களைக் காப்பாற்றிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் (குறுக்கீடு). போதும்; அவ்வளவுதான்.

**திரு. சி. ஞானசேகரன்:** Straight answer வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்திலே விவாதம் கூடாது. என்ன இது?

**திரு. சி. ஞானசேகரன்:** 2 சதவீதம் நான் கேட்டது. நேரடியாக பதில் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திரு. மு.பெ. சாமிநாதன், (குறுக்கீடு) திரு. மு.பெ. சாமிநாதன் சொல்லுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு சிட்டா நூல் சில நேரங்களிலே கிட்டா நூலாகிவிடுகிறது. கடந்த காலங்களில் கழக ஆட்சி இருந்தபோது கூட்டுறவு நூற்பாலையின்மூலம் இதுபோன்ற நூல்களை உற்பத்தி செய்து நெசவாளர்களுக்கு நூல்கள் தட்டுப்பாடு இல்லாத சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது; நெசவாளர்களுடைய வாழ்வு மேம்பட்டது. இன்றைக்கு, கடந்த 4 ஆண்டுகளாக பல கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. தொடர்ந்து அந்த நூற்பாலைகள் இயங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து, அந்த நெசவாளர்களுக்குள்ள நூல் பிரச்சினையைத் தீவிரமாகக் கண்காணிக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அத்தனை நூற்பாலைகளுக்கும், 40 சதவிகிதம் சிட்டா நூலை கண்டிப்பாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, இப்போது இந்த ஆட்சியிலே சிட்டா நூல் கிடைக்கவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். ஒரு கருத்தை நான் இங்கே வலியுறுத்த விரும்புகின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய





ஆட்சியிலேதான் இதுவரை இந்தத் துறை செய்ய முடியாத ஒரு சாதனை 697 கோடி ரூபாய்க்கு (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் உற்பத்தி செய்து, விற்பனை செய்திருக்கின்றோம் என்பதை நான் என்னுடைய மானியக் கோரிக்கையிலேகூட பேசியிருந்தேன். ஆக, நூல் இல்லை என்றால், இவ்வளவு துணி எப்படி நாங்கள் உற்பத்தி செய்திருக்க முடியும், எப்படி விற்பனை செய்திருக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் இன்றைக்கு ஆலை அதிபர்களுக்கெல்லாம், 40 சதவிகிதம் சிட்டா நூலைக் கண்டிப்பாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரில் பட்டு வேஷ்டி உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடர்ந்து கோராவாகவே பட்டு நூலைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா? இதனால் 2,000 குடும்பப் பெண்கள் வேலை செய்கின்ற நிலைமை இருந்து வந்துகொண்டிருக்கின்றது. எனவே, உஸ்னா செய்வதற்கு தொடர்ந்து கோராவை வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல, அவர்களுக்குத் தேவையான அந்தக் கோராக்களை twist செய்யாமலே கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 282, திரு. க. தவமணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**282—**

**ஜரிகை**

***67334—திரு. க. தவமணி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 4

(அ) கும்பகோணம் சரகத்தில் பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு ஜரிகை நிறுவனம்மூலம் ஜரிகைகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கும்பகோணம் பகுதியிலுள்ள 19 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே மாதந்தோறும் தேவைப்படும் ஜரிகை சராசரியாக 3,500 மார்க்குகள் ஆகும். தமிழ்நாடு ஜரிகை ஆலையின் கும்பகோணம் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த ஜரிகையின் அளவு சராசரியாக 1,100 மார்க்குகள் மட்டுமே. இப்பிரிவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த ஜரிகை மார்க்குகள் கும்பகோணம் சரகப் பகுதிக்கு உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமே சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மொத்தத் தேவையான 3,500 மார்க்குகளில், கும்பகோணம் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் 1,100 மார்க்குகள் சப்ளை செய்யப்பட்டதுபோக, மீதம் தேவையான மார்க்குகள் காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு ஜரிகை ஆலையின் மூலமாகவும், சூரத்திலுள்ள ஜரிகை ஆலை மூலமாகவும் சப்ளை செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. தவமணி. (குறுக்கீடு) திரு. டி. மணி.

**திரு. க. தவமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. டி. மணி:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. தவமணி கேட்கட்டும். (குறுக்கீடு) தவமணி கேட்கட்டும், தவமணி கேட்கட்டும்.

**திரு. க. தவமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக் காலத்தில் மரணப் படுக்கையில் வீழ்ந்திருந்த நெசவுத் தொழிலானது, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், புத்துயிர் பெற்றுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு சலுகைகள் அளித்து நெசவாளர்களுக்கு மறு வாழ்வு அளித்துள்ளார்கள். எங்களது, திருவிடைமருதூர் தொகுதியில் உழவுத் தொழிலுக்கு அடுத்து, நெசவுத் தொழில் விளங்குவதால், அந்த நெசவாளர் குடும்பங்களின் சார்பாக எங்கள் நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறோம். தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருபுவனம் சிறப்பு ஊராட்சியில் தற்சமயம் அரசுக்குச் சொந்தமான ஜரிகை ஆலை ஒன்று உள்ளது. அந்த ஆலையிலே மாதந்தோறும் ஆயிரம் முதல் 1,200 மார்க்குகள் ஜரிகை உற்பத்தி செய்யப்படுகிறது. இங்குள்ள நீர்வளத்தால் ஜரிகையினுடைய நிறமும், தரமும் உயர்வாக உள்ளது. கும்பகோணம் சரகத்திலுள்ள இந்தப் பகுதியிலே ஒன்றரை இலட்சம் நெசவாளர்கள் உள்ளார்கள். இங்குள்ள 22 பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களில், 15 பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. இவற்றின் மாதாந்திரத் தேவையானது 3,000 முதல் 3,500 மார்க்கு ஜரிகை ஆகும். இந்த ஜரிகையை ஈடு செய்கிற வகையில், திருபுவனத்திலுள்ள ஜரிகை ஆலையின் உற்பத்தி அளவை மேலும் ஒரு ஷிப்ட் அறிமுகப்படுத்துவதன் மூலம் ஈடு செய்ய முடியும். எனவே, அந்த அளவுக்கு, அந்த ஜரிகை ஆலையின் உற்பத்தியை ஈடு செய்து, அந்தப் பகுதிக்குத் தேவையான ஜரிகையின் தேவையைப் பூர்த்தி செய்யும்வகையில், அந்த ஆலை விஸ்தரிக்கப்படுமா என்பதை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களிடம், தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 ஏப்ரல் 4]

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்துள்ள கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்த ஜரிகை ஆலை, மிக விரைவிலே விரிவுபடுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜரிகை உற்பத்தி செய்வதில், 20 அல்லது 50 சதவிகிதம் வெள்ளி, அதிலே சேர்க்கப்படுவதாகவும், அதன்மூலமாகத்தான், அந்த ஜரிகை, நீண்ட காலம் ஈடு கொடுப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், சமீபகாலமாக, அந்த ஜரிகையிலே, தேவையான வெள்ளி சேர்க்கப்படாததன் விளைவாக, அந்தச் சேலையை வாங்கிப் பயன்படுத்துகிறவர்கள், அது கறுத்துப் போய்விடுகிறது என்ற புகார்களைக் கூறி வருகின்றார்கள். எனவே, அதனை உற்பத்தி செய்கின்ற பகுதிகளில், வெள்ளியை முறையாக சேர்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2005 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பயன்படுத்தக்கூடிய ஜரிகை, வெள்ளி இழையிலே தங்க முலாம் பூசப்பட்டு ஜரிகை மார்க்குகளாக நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆண்டொன்றுக்குச் சுமார் 150 கோடி ரூபாய்க்குப் பட்டுச் சேலைகளை நாம் விற்பனை செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த ஜரிகை குறுத்திருப்பதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். இதுவரை, அரசுக்கு அப்படிப்பட்ட எந்தத் தகவலும் வரவில்லை. தொன்றுதொட்டு, கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்யப்படுகின்ற சேலைகளைத்தான், தரமுடன் இருப்பதாக எண்ணி மக்கள் ஆர்வமுடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்து, எந்தப் பகுதியிலே இருக்கிறது என்று சொன்னால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணிக்கு, சேலையிலே என்ன அவ்வளவு அக்கறை என்று தெரியவில்லையே! (சிரிப்பு) திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில், ஆரணி தொகுதியிலே, பட்டுச் சேலைகள், அதிக அளவிலே, கைத்தறி நெசவாளர்களால் நெய்யப்படுகின்றன. ஆனால், அரசின்மூலம் கிடைக்கக்கூடிய ஜரிகை, குறைவாக இருக்கின்ற காரணத்தால், பல இடங்களில், போலி ஜரிகைகள் வந்து, அதன்மூலம் வாங்குகின்ற தாய்மார்கள், அவை போலியான பட்டுப் புடவைகளாக இருக்கின்றன என்று சொல்கின்ற நிலை இருக்கிறது. அந்த நிலை மாறுகின்ற வகையிலே, அதிக அளவிலே பட்டு உற்பத்தி செய்யக்கூடிய ஆரணியிலே, அரசு சார்பாக இப்படிப்பட்ட ஒரு ஜரிகை ஆலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பட்டுச் சேலையிலே இருக்கக்கூடிய ஜரிகையின் தரம், ஒவ்வொரு மார்க்காக, தமிழ்நாடு ஜரிகை ஆலையின்மூலமாக அங்கே டெஸ்ட் செய்யப்பட்டு, பிறகுதான் நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்து, தனியார் நெய்யக்கூடிய



2005 ஏப்ரல் 4]

சேலையிலே இருக்கலாம். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய அந்தச் சேலையிலே இருக்கக்கூடிய ஜரிகை, ஒவ்வொரு மார்க்கும் தரம் செய்யப்பட்ட பிறகுதான், அது நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அதுமட்டுமல்ல; அங்கே ஒரு ஜரிகை ஆலை உருவாக்கப்படுமா என்ற ஒரு கேள்வியை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மேற்கொண்டு அந்தக் கோரிக்கையினை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம், பாபநாசம் பகுதியைச் சேர்ந்த பல பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள், தங்களுடைய தேவைக்கேற்ப, பட்டு ஜரிகைகள் கிடைக்காத காரணத்தினால், உற்பத்தி பாதிக்கிறது என்பதற்கு, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆலை விரிவுபடுத்தப்படும் என்கின்ற பதிலைத் தந்திருக்கிறார்கள். நெசவாளர்களுடைய கோரிக்கையினை ஏற்று, விரிவுபடுத்துகின்ற அந்தப் பணி, 3,200 மார்க்குக்கு உற்பத்தி செய்கின்ற பணி, இந்த நிதியாண்டிலேயே விரிவுபடுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய தேவைக்கு, சூரத் நகரிலிருந்து அதிகமான ஜரிகைகள் வருகின்றன. அந்த ஜரிகைகளில், குறைபாடுகள் இருப்பதாக, மக்கள் சொல்கிறார்கள். எனவே, இங்கே பயன்படுத்துகிற அந்த ஜரிகைகளை இங்கேயே பரிசோதிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்கிறதா? அப்படி என்றால், அந்தப் பரிசோதனை நிலையங்கள் தமிழகத்தில் எங்கெங்கு இருக்கின்றன என்பதை நம்முடைய அமைச்சர் அறிவிப்பாரா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2005 ஏப்ரல் 4

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஜரிகையைத் தரம் செய்வதற்காக, காஞ்சிபுரத்திலே 24 இலட்சம் ரூபாய் செலவிலே, எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம் ஒன்றை அம்மா அவர்கள் நிறுவியிருக்கிறார்கள். இப்போது காஞ்சிபுரத்திலே சேலை வாங்க வரக்கூடிய வாடிக்கையாளர்கள் எல்லாம், அந்தச் சேலையிலே இருக்கக்கூடிய ஜரிகையினுடைய தரத்தை அறிவதற்கு, அந்த ஆய்வுமூலமாக நல்ல தரமான ஜரிகைகளா, இல்லையா என்பதை அவர்கள் கண்டறிந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் நல்லதொரு திட்டமாக இருப்பதனால்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருபுவனத்திலே இதுபோல ஓர் இயந்திரமும், கோயம்புத்தூர், சேலம் ஆகிய பகுதிகளிலே நிறுவுவதற்கும் அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் தாலூகாவிலே கீழ்ப்பட்டு, வடபாதிமங்கலம், களம்பூர் போன்ற கிராமங்களிலே, பட்டு நெசவில் அந்தக் கிராமமே ஈடுபட்டு இருக்கிறது. அந்தக் கிராமத்தில் நெய்யப்படுகின்ற பட்டுச் சேலைகள்தான் ஆரணி, காஞ்சிபுரம் போன்ற பகுதிகளிலே விற்பனைக்கும் வருகின்றன. அங்கே இருக்கின்ற தனியாருக்கு அந்த ஜரிகைகள் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் அந்த ஜரிகை விநியோகிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால், தனியார் துறையிலே செய்யப்படுகின்ற அந்தப் பட்டுச் சேலைகள் பெரிய, பெரிய கடைகளில், காஞ்சிபுரம் கடைகளிலும், சென்னையிலும் அந்தப் பட்டுப் புடவைகள் விற்பனைக்கு வருகின்றன. தரம் இல்லாது அந்த ஜரிகைகள் இருப்பதினால், அந்தப் பட்டுப் புடவைகளின் விலை குறைகிறது. தனியார் தயாரிக்கின்ற அந்தப் பட்டினுடைய விலை அரசுக்கு ஈடாக இருப்பதனால், தனியாருக்கும் அந்தப் பட்டு ஜரிகைகள் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல,



2005 ஏப்ரல் 4]

தனியார் நெசவாளர்கள் அவர்கள் விருப்பப்படுவதுபோல் எங்கு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். ஆனால், நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலே மட்டும் வாங்கக்கூடிய அந்த ஜரிகையின் தரம், தனியார் உற்பத்தி செய்யக்கூடிய அந்தச் சேலையிலே இருக்கக்கூடிய ஜரிகையினுடைய தரத்தைவிட மிக உயர்ந்த தரத்தை நாம் போடுகிறோம். உங்களுக்கு இன்னும் நான் சரியாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தனியார் நெசவாளர் மக்கள் வாங்கக்கூடிய அந்த ஜரிகைகளில் தங்கம், gold content 4.8 per cent இருக்கும். ஆனால், நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலே கொள்முதல் செய்யக்கூடிய அந்த ஜரிகைகளிலே gold content 5.7 per cent இருக்கும். ஆக, முதல்தரமான ஜரிகையைத்தான் நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலே பயன்படுத்துகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 283, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**283—**

**பாதாளச் சாக்கடை**

***17193—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சியில் கழிவுநீரை அகற்ற பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி சிறப்புச் சிற்றூராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்க போதுமான சாலை வசதிகள் இல்லாததாலும், கழிவுநீரை அகற்றி ஓரிடத்தில் சேகரிக்கப் போதுமான இடவசதி இல்லாததாலும், சிறப்புச் சிற்றூராட்சியின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டும், பேராவூரணி சிறப்புச் சிற்றூராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

[2005 ஏப்ரல் 4

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி வளர்ந்து வருகின்ற நகரம். அந்த நகரத்திலே உள்ள கழிவுநீரை நகரத்தை விட்டு வெளியேற்றிட ஒரு திட்டமிட்ட வடிகால் அமைப்புகள் இல்லாததினாலே, அந்த நகரத்திலே சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரக் கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்த பேராவூரணி பேருராட்சிப் பகுதிக்கு பாதாளச் சாக்கடை அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி சிறப்புச் சிற்றூராட்சியின் கடைத் தெருவு, மெயின் ரோடில் கழிவுநீர்க் கால்வாய் கட்டுவதற்கு ரூபாய் 20 இலட்சம், பாதாளச் சாக்கடை கட்டுவதற்கு ரூ. 3 கோடி தேவைப்படும். இச்சிறப்புச் சிற்றூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததாலும், இத்திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து நிதி வசூல் செய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லாததாலும், இப்பணிகளை தற்போது செயல்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே, பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்தினை தற்போது செயல்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி நகரம் ஏறக்குறைய 25 வார்டுகளைக் கொண்ட பகுதி. அங்கே ஏறக்குறைய 35,000-க்கும் அதிகமான பொதுமக்கள் வசிக்கின்றார்கள். இந்தக் கழிவுநீர் அகற்றப்படாத காரணத்தினாலே, சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு அங்கே தினந்தோறும் கொசுக்கடி மற்றும் சுகாதாரக் கேடு, பல்வேறு தீமைகள் எல்லாம் ஏற்படுகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பாதாளச் சாக்கடை அமைக்கவில்லை என்றாலும், அந்த நகரம் முழுவதும் இருக்கின்ற கழிவுநீரை வெளியேற்றுகின்ற வகையிலே, அந்த நகர் முழுவதும் திறந்தவெளி சாக்கடை வடிகால் வாய்க்கால் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, அந்த சிறப்புச் சிற்றூராட்சியினுடைய நிதிநிலையைச் சீர் செய்தவுடன், அந்தப் பகுதியில் இருக்கின்ற கழிவுநீரை வெளியேற்றுவதற்குண்டான ஆயத்தப் பணிகள் குறித்துப் பரிசீலிக்கப்படும் என்று கூறுகின்றேன்.



2005 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க 23 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. சேலம் மாநகரின் பொதுமக்கள் நலன் கருதி, சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பணியானது இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு, மிக விரைவில் அந்தப் பணி முடிப்பதற்குண்டான ஆயத்தப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே, மாவட்டத் தலைநகரங்களாக இருக்கக்கூடிய நகரங்களில் எல்லாம் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுமென்று ஏற்கெனவே இந்த அவையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே பேராவூரணிக்குப் பக்கத்திலே புதுக்கோட்டை நகராட்சி இருக்கிறது. புதுக்கோட்டை நகராட்சியிலே 39 வார்டுகள் இருக்கின்றன. அந்த 39 வார்டுகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்கான கருத்துரு அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருக்கிறது. ஆக, அந்தத் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு அமைச்சரிடத்திலே அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவிப்பின்படி ஐந்து இடங்களிலே — மாவட்டத் தலைநகரங்களிலே பணியானது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும், இருக்கின்ற இடங்களிலே கூடிய விரைவில் அந்தப் பணியானது மேற்கொள்ளப்படும் என்பதைக் கூறி அமர்கின்றேன்.

[2005 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மிகுதியாக இருந்துவருகின்றன. உலகிலேயே புகழ்பெற்ற பேரணாம்பட்டு நகரம் வர்த்தக நகரமாக இயங்கி வருகிறது. இந்த நிலையில் கழிவு நீர்க் கால்வாய்கள் ஆங்காங்கே தேங்கிக் கிடப்பதாலும், அது பாதுகாக்கப்பட்ட குடிநீரில் கலந்து விடுவதாலும் டெங்கு போன்ற வியாதிகள் பரவுவதற்கு ஏதுவாக இருக்கிறது. இந்நிலையில் பேரணாம்பட்டு தொகுதி நகராட்சியிலே இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்குவதற்கு செயற்குறிப்பு ஒன்று இருப்பதாக அறிய வந்தேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் எப்போது அமலுக்கு வரும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய நான் விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல கழிவுநீரானது குடிநீரோடு எங்கும் கலப்பதில்லை. அப்படி ஏதேனும் சந்தர்ப்பச் சூழ்நிலையில் அந்த நிகழ்வு ஏற்பட்டால் உடனுக்குடன் கண்டறியப்பட்டு அது நிவர்த்தி செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 284, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**284—**

### குடிநீர்

***20172—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வைகை அணையிலிருந்து நீரேற்று இயந்திரம் மூலமாக மதுரை வடகரைப் பகுதிக்கு வழங்கப்படுகின்ற குடிநீரின் அளவு குறைவாக உள்ளதால், வைகை அணையிலிருந்து நேரடியாக குடிநீர் வழங்க அரசு முன்வருமா?



2005 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை வடபகுதிக்கு வைகை அணையிலிருந்து குடிநீர் நேரடியாக வழங்க, வைகை குடிநீர்த் திட்டம்–II ஆய்வில் உள்ளது. இதற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைக் கழகம், சென்னை மூலமாக உலக வங்கியிடமிருந்து மானியம் பெற்று திட்ட ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்ட ஆய்வு முடிந்து மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு திட்டத்திற்கான நிதியுதவி பெற்றபின்பு மேற்கண்ட பணிகள் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இத்திட்டம் முடிந்தவுடன் மதுரை வடபகுதிக்கு நேரடியாக புவிஈர்ப்பு மூலமாகவே வைகை அணையிலிருந்து குடிநீர் விநியோகம் செய்துதர ஏதுவாக இருக்கும்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை வடபகுதிக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டத்தை இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு திட்ட மதிப்பீடு செய்தது என்ற குறிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பகுதி என்பது மிகவும் பாதிக்கப்பட்ட பகுதி. 1991–1996 ஆம் ஆண்டு மதுரை மாநகர தென் பகுதிக்கு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 37 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இந்த தென் பகுதிக்கு வைகையிலிருந்து நேரடியாக தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது, குடிநீர் வந்து கொண்டிருக்கிறது. அதைப்போல் வடபகுதிக்கும் இந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தினால் மதுரை மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆசியோடு நிறைவேறும். அம்மாவினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று விரைவாக அமைச்சர் அவர்கள் முடித்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, உடனுக்குடன் ஆயத்தப் பணிகளை மேற்கொண்டு செயல்படுகின்ற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்ட அந்தப் பகுதியினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அந்தத் திட்டமானது மதிப்பீடு செய்யப்பட்டு, மிக விரைவிலே அதற்கான நிதியும்

[2005 ஏப்ரல் 4

பெறப்பட்டவுடன் அந்தப் பணியானது மேற்கொள்ளப்படும் என்பதைக் கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ராஜாங்கம்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அன்பு தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலேயே எங்களுடைய வேலூர் மாவட்டத்திலேதான், வருண பகவான் வஞ்சித்துவிட்ட காரணத்தினாலே, மழையே இல்லாமல் கடந்த மூன்று ஆண்டுகளாக குடிநீருக்கு மிகவும் பிரச்சினையாகி நாங்கள் திண்டாடிக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, எங்களுடைய வேலூருக்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு— எங்களுடைய வேலூர் மாவட்டத்திலே 13 லிட்டர் தண்ணீர்தான் ஒரு நபருக்குக் கிடைக்கிறது—ஆகவே அமைச்சர் அவர்கள், எங்களுடைய மாவட்டத்திற்கு, 35 கோடி ரூபாயை நீங்கள் தயவுசெய்து ஒதுக்கீடு செய்து, குடிநீரை எங்களுடைய மாவட்டம் முழுக்க விநியோகிக்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் ஏற்கெனவே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவையிலே இருக்கின்றபோது, இந்தக் கோரிக்கையையெல்லாம் எடுத்துவைத்தார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையிலே வேலூர் மாவட்டத்தில் இருக்கின்ற தண்ணீர்ப் பிரச்சினை மற்றும் தமிழகத்திலே வேறு எந்தப் பகுதியில் தண்ணீர் பிரச்சினை இருக்கின்றதோ அவற்றை நிவர்த்தி செய்வதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையிலே அந்தப் பணிகளானது



2005 ஏப்ரல் 4]

தொடங்கப்பட்டு, கூடிய விரைவிலே அங்கேயிருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடையக்கூடிய ஓர் இனிப்பான செய்தியை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைப்படி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக மேற்குத் தொகுதி மக்களுடைய சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மதுரை மக்களுடைய ஜனத்தொகையைப் பொறுத்தவரையில், தினமும் குறைந்தது 110 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவையென்று சொல்கிறார்கள். ஆனால் வைகை அணைக்குப் பக்கத்தில் 8 கிலோ மீட்டர் தூரத்திலேயுள்ள பண்ணைப்பட்டியிலே இருந்து, குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு, மதுரைக்கு 65 மில்லியன் லிட்டர் தண்ணீர்தான் வந்துகொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரும் அரசரடி நீரேற்று நிலையத்திலே சேமித்து வைத்து, என்னுடைய தொகுதிக்கு, குறிப்பாக செல்லூரின் சில பகுதிகள், சின்னசொக்கிகுளம், வைகை வடகரையினுடைய ஆழ்வார்புரம் போன்ற பகுதிகளுக்கு supply செய்கின்றபோது, மேடான பகுதிகளுக்கு தண்ணீர் சரியாக வருவதில்லை. நேற்றைய முந்தையதினம் நான் தொகுதிக்குச் சென்றிருந்தபோதுகூட, மக்கள் என்னிடத்திலே அந்தக் குறையைச் சொன்னார்கள். எனவே, புதிய திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமல்படுத்துகின்ற வரை, எல்லாப் பகுதி மக்களுக்கும் ஒரே சீராக, குடிநீர் கிடைப்பதற்கு, ஆவன செய்வாரா? மாற்றுத் திட்டம் ஏதேனும் உள்ளதா? ஏனென்றால் அதிக pressure கொடுக்கின்றபோது, குழாய் வெடிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அதைக் கருத்தில்கொண்டு, மாற்றுத் திட்டம் ஏதாவது அந்தப் புதிய திட்டத்தை அமல்படுத்துகின்ற வரை கொண்டு வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்திலே மழை பெய்யாத காரணத்தினால் வைகை அணையினுடைய நீர் மட்டம் குறைந்துவிட்டது என்று சொல்கிறார்கள். கோடைக்காலத்தில் தண்ணீர் தேவையை நிறைவேற்றுவதற்கு, போதுமான தண்ணீரைப் பெறுவதற்கு நம்முடைய அரசாங்கம் என்ன மாற்று ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[2005 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வைகை வடகரைப் பகுதிக்கு, அரசரடி தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில், குடிநீர் தேக்கப்பட்டு, தினந்தோறும் 23 மில்லியன் லிட்டர் குடிநீர் 270 H.P. திறன் கொண்ட motor மூலமாக உந்தப்பட்டு, மேல்நிலைத் தொட்டிமூலம் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது உறுப்பினர் சொல்லியதுபோல, செல்லூரில் மேடான பகுதிகளான தாகூர் நகர், மீனாட்சிபுரம், சத்தியமூர்த்தி தெரு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் கிடைக்க தனியாக 300 மில்லி மீட்டர் விட்டம் உள்ள குழாய்மூலம் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, ஆழ்வார்புரத்திற்கு தனியாகக் குழாய்கள் பதித்து குடிநீர் சீராக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புதிய திட்டத்தைச் செயல்படுத்தும் வரை சில பகுதிகளுக்கு, முல்லை நகர், கிருஷ்ணாபுரம் காலனி, தாமஸ் வீதி, Reserve lane பகுதிகளிலே, வண்டிப்பாதை, ஆத்துக்குளம் ரோடு ஆகிய பகுதிகளுக்குப் புதிதாகக் குடிநீர் குழாய் பதித்து, குடிநீர் வழங்குவதற்கு வேலை உத்தரவுகள் வழங்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது. இரண்டு மாதங்களுக்குள் மேற்குறிப்பிட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படும். விடுபட்ட பகுதிகளுக்கு புதிய திட்டத்தைச் செயல்படுத்தும் வரை, லாரிமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வைகை அணையினுடைய நீரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். வைகை அணையில் நீர் மட்டம் தற்போது குறைந்து வருகிறது.

முற்பகல் 10-35

கோடை காலத்தில் வரவிருக்கும் பற்றாக்குறையைப் போக்குவதற்கு தேக்கடி பகுதியிலுள்ள பெரியாறு அணையிலிருந்து நீரை வைகை அணைக்குக் கொண்டுவர பொதுப் பணித் துறை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், கோடை மழையின்மூலம் நீர் வரத்து இருக்கும் பட்சத்தில் அந்த நீர் பெரியாறு அணையிலிருந்து வைகை அணைக்குக் கொண்டுவரப்பட்டு, குழாய்மூலம் மதுரைக்குக் குடிநீர் வழங்கப்படும். சென்ற 10 ஆண்டு காலத்தில் இதே காலகட்டத்தில் கோடை மழை பெய்துள்ளது. தற்போது வைகை அணையின் நீர் மட்டம் 26.74 அடி ஆகும். அதாவது 258 மில்லியன் கன அடி தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் உபயோகப்படுத்தக்கூடிய நீரின் அளவு 156 மில்லியன் கன அடி ஆகும். இந்த நீரைக் கொண்டு ஏப்ரல் மாதம் முடிய தினமும் 5 மில்லியன் கன அடி வீதம் குடிநீர் வழங்க முடியும். பெரியாறு அணையிலிருந்து



2005 ஏப்ரல் 4]

பெறப்படும் நீரைக் கொண்டு மேலும் 15 தினங்களுக்கு அதாவது மே 15 வரை குடிநீர் வழங்க முடியும் என்பதைக் கூறி இன்றையதினம் நபர் ஒருவருக்கு 73 லிட்டர் தண்ணீர் வீதம் அங்கே வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்குத் தொகுதியில் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிப்பதற்காக சில நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு இருந்தன. அவை செயல்படாமல் இருப்பதை மாற்றி முறையாகச் செயல்பட்டு மக்களுக்கு நீர் விநியோகம் சிறப்பாக நடக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். வடகரை குடிநீர்த் திட்டம் விரைவில் நிறைவேறுவதற்கான வழிவகையையும் காண வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல அந்தப் பகுதியிலே குடிநீர் தேக்கி வைக்கின்ற தொட்டியானது செயல்பாடு இல்லாமல் எந்தப் பகுதியிலும் இல்லை. அப்படி குறிப்பிட்டு ஏதேனும் அவர் கவனத்திற்குக் கொண்டு வருவாரென்றால், அது உடனடியாகச் சரி செய்யப்பட்டு, அந்தப் பகுதியிலே தண்ணீர் விநியோகம் செய்வதற்கு உரிய ஆயத்தப் பணி மேற்கொள்ளப்படும் என்று கூறிக்கொண்டு, அந்த வடகரைப் பகுதியிலே தண்ணீர்ப் பிரச்சினையை எவ்வளவு விரைவிலே தீர்த்துவைக்க முடியுமோ அந்த அளவுக்கு மிகவும் விரைந்த முறையிலே செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 285, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**285—**

### தூர் வாரும் பணி

***8684—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 4

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாவத்தூர்–பண்ணப்பட்டி–பஞ்சப்பட்டி–பாப்பக்கபட்டி வரையுள்ள காட்டுவாரியை தூர் வாரி விவசாயிகளுக்கு பாசன நீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாவத்தூர்–பண்ணப்பட்டி–பஞ்சப்பட்டி–பாப்பக்கபட்டி வரை உள்ள காட்டுவாரியைத் தூர் வாரும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தங்கத் தாரகை அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் அமைந்துள்ள மாவத்தூர் – பண்ணப்பட்டி – பஞ்சப்பட்டி – பாப்பக்கபட்டி வரையுள்ள வரத்துவாரியின்மூலமாக கடவூர் கிருஷ்ணராயபுரம் ஒன்றியப் பகுதியில் விவசாயிகள் பாசன வசதி பெறவும், கிணறுகளின் நீர்நிலை உயரவும் பயனுள்ளதாக உள்ளது. ஆகையினால், அம்மா அவர்களின் அரசு மேற்கண்ட வரத்துவாரியைத் தூர் வார நிதியொதுக்கி விவசாயிகளின் பகுதிகளுக்குப் போதிய பாசன நீர் வழங்க நடப்பு ஆண்டில் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாவத்தூர் – பண்ணப்பட்டி – பஞ்சப்பட்டி – பாப்பக்கபட்டி வரையுள்ள காட்டுவாரிகளின் நீளம் சுமார் 35 கி.மீ. ஆகும். இந்தக் காட்டுவாரிகளைத் தூர் வாரும் திட்டம் தற்போது அரசிடம் இல்லாவிடினும், ஏரிகள், வரத்துக் கால்வாய் மற்றும் பாசனக் கால்வாய்களைத் தூர் வார முன்னுரிமை அளித்து செயல்படுத்த வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் அரசாணை வெளியிடப்பட்டு, அரசாணையின்படி தெரிவிக்கப்பட்ட ஏரிகள் மற்றும் கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள ஏரிகள் தூர் வாரும் பணி செயல்படுத்தப்பட்டிருக்கிறது. வேலைக்கு உணவு என்ற திட்டத்தின்மூலம், பொதுப் பணித் துறையின்மூலமாக கோவாக்குளம் ஏரி ரூ. 2.77 இலட்சத்திற்கும், பாப்பக்கப்பட்டியில் ரூ. 2.10 இலட்சத்திற்கும், ஐயன்குளத்திற்கு ரூ.1.94 இலட்சத்திற்கும், சிவாயம்



2005 ஏப்ரல் 4]

ஏரி ரூ.3.31 இலட்சத்திற்கும், ஆக ரூ. 10.12 இலட்சத்திற்கு பொதுப் பணித் துறைமூலமாகவும், ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாக பண்ணப்பட்டியில் ரூ.3 இலட்சத்திற்கும், வளையல்காரன்புதூர் ஏரி ரூ. 2.70 இலட்சத்திற்கும், மாவத்தூர் ஏரி ரூ.3 இலட்சத்திற்கும், ஆக ரூ8.70 இலட்சத்திற்கும், மேலும் 22–5–2003 அரசாணையின்படி, பஞ்சப்பட்டி நீர்த்தேக்கம் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் தூர் வாரி மேம்படுத்தும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருப்பது பொதுப் பணித் துறையினுடைய கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் இல்லாத பகுதியைக் குறிப்பிடுகிறார் என்று கருதுகின்றேன். பொதுவாக நீர்ப்பிடிப்புப் பகுதியில் இருக்கின்ற இயற்கையோடு இணைந்த அந்தக் கால்வாய்களைத் தூர் வாரும் திட்டம் எப்பொழுதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் அதிக இடங்களில் குளம், குட்டைகள் தூர் வாரியது பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த 4 ஆண்டு கால ஆட்சிக் காலத்தில், எந்த அரசும் செய்யாத அளவுக்கு அனைத்து கிராமப் பகுதிகளிலும் கண்மாய்கள், ஏரிகள், வரத்துக் கால்வாய்கள் போன்றவற்றைத் தூர் வாரும் பணி மிகவும் தரமான முறையிலே செய்து கொடுத்திருக்கிறது அம்மா அவர்களுடைய அரசு. அப்படிப்பட்ட அம்மா அவர்களுடைய ஆண்டிப்பட்டி தொகுதியில் இருக்கின்ற வைகை டேம் என்பது 6 மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயிகளுடைய உயிர் ஜீவநாடியாக இருந்து கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கும், தேனி மாவட்டம், மதுரை மாவட்டம், மதுரை மாநகர் மாவட்டம், புறநகர் மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை மாவட்டம் ஆகிய இந்த மாவட்டங்களுக்கு வைகை–முல்லை– பெரியாறிலிருந்து தண்ணீர் வந்தாலும்கூட, வைகை டேமில் தேக்கி வைத்துத்தான் இந்த மாவட்டங்களின் விவசாயத்திற்கும், குடிதண்ணீருக்கும் சப்ளை செய்து கொண்டிருக்கின்ற நிலையில், எனக்கு ஞாபகம் தெரிந்த நாளிலிருந்து இதுவரை அந்த வைகை டேமை தூர் வாரியதாக, கேள்விப்பட்டது கிடையாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு

[2005 ஏப்ரல் 4

வரும் நிதியாண்டிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அம்மாவிடம் நேரடியாக எடுத்துக்கூறி, அந்த 6 மாவட்டங்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், தண்ணீரை அதிகமாகத் தேக்கி வைத்து விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கும், அம்மா அவர்களிடம் நேரடியாக அமைச்சர் அவர்கள் ஆணைபெற்று வைகை அணையை இந்த ஆண்டு தூர் வாரி கொடுப்பார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் இருக்கின்ற வைகை அணையைத் தூர் வாருவதற்கு திட்ட மதிப்பீடு சுமார் 440 கோடி ரூபாய் என்ற அளவுக்குத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. வருகின்ற நிதி ஆண்டுகளில் நிதிநிலைக்கு ஏற்ப அந்தப் பணி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டும் வறட்சிப் பணியாக வேலைக்கு உணவுத் திட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு கூலித் தொழிலாளர்களுக்கு ஊதிய விகிதத்தை உயர்த்தி அறிவித்தார்கள். அந்த ஊதிய விகிதத்திலே தற்போது நடந்து கொண்டிருக்கின்ற வேலைக்கு உணவுத் திட்டத்திலே அந்தக் கூலித் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவு என்ற திட்டத்தின்கீழ் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கூலி மத்திய அரசு கூறுகின்ற நிர்ணயப்படி வழங்கப்படுகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஒரத்துப்பாளையம் அணையைச் சுத்தப்படுத்த வேண்டும் என்பதற்காக திருப்பூர் சாய சலவைப்



2005 ஏப்ரல் 4]

பட்டறைகளுடைய உரிமையாளர்கள் தங்கள் சொந்தச் செலவிலே அதை clean செய்து கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் ஆணையிட்டதற்கு ஏற்ப ஒரு கோடி ரூபாய் பணத்தைக் கட்டியுள்ளார்கள். மீதிச் செலவை அரசே ஏற்று அந்த ஒரத்துப்பாளையம் அணையை clean செய்ய முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் அவர்களாகவே குளம், ஏரிகளிலுள்ள மண்ணைத் தூர் வாரி மாட்டு வண்டிகளில் எடுத்துச் சென்றாலும், அரசு அதிகாரிகள் அதற்கு அபராதம் விதிக்கின்ற நிலைமை இருக்கிறது. அரசாங்கத்திற்குச் செலவு இல்லாமல் அவர்களாகவே தூர் வாருகின்ற அந்தப் பணிகளில், விவசாயிகள் தங்கள் நிலத்திற்காகச் செய்கின்ற அந்தப் பணிகளில் அந்தத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற ஏரிகளில் தூர் வாருகின்ற பணியை அனுமதி பெற்று--அங்கிருக்கின்ற மண்ணை அப்புறப்படுத்துவதற்கு இப்போது அனுமதி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அனுமதி இல்லாமல் யாராவது அந்தப் பகுதிகளிலே இருந்து ஏரிகளிலோ, குளங்களிலோ மணலை அள்ளிச் சென்றால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, எங்களது உடுமலை சட்டமன்றத் தொகுதியில் திருமூர்த்தி அணை, அமராவதி அணைப் பகுதிகள் உள்ளன. அங்கே இப்போது வறண்ட நிலை இருக்கக்கூடிய காலகட்டமாக உள்ளதால், அங்கே இருக்கக்கூடிய மகளிமண் அதிகமாக

[2005 ஏப்ரல் 4

அந்த அணையிலே ஏறியுள்ளது. அந்த வனப் பகுதியிலேயிருந்து மகளிமண் அதிகமாக வந்து, அந்த அணையானது உயர்ந்துகொண்டே வருகிறது. அந்த மண்ணை எடுப்பதற்கு அந்தப் பகுதி விவசாய மக்கள் தயாராக உள்ளார்கள். அதைப் பொதுப் பணித் துறைமூலமாகவே, அந்த JCB போன்ற ஒரு வாகனத்தின்மூலமாக எடுக்க ஏற்பாடு செய்து கொடுத்தால், அதை ஒரு load-க்கு அல்லது ஒரு tractor load-க்கு இவ்வளவு என்று நிர்ணயித்தால், அதை அந்தப் பகுதி விவசாயிகள் எடுத்துச்செல்வதற்குத் தயாராக உள்ளார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அதை வரும் நிதியாண்டிலேயிருந்து செய்து கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் சொல்கின்றபோது, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள ஏரிகளிலே தூர் வாரும் பணிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களில் கடந்த நிதியாண்டில் எத்தனை ஏரிகளில் தூர் வாரும் பணியை முடித்துள்ளீர்கள்? அதேபோன்று இந்த ஆண்டிலும் எத்தனை ஏரிகளில் தூர் வாரும் பணியைத் தொடங்குவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை மானியக் கோரிக்கைமீதான விவாதத்திலே பேசுங்கள்.

வினா எண் 286, திரு. கே.வி. முரளிதரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.



2005 ஏப்ரல் 4]

**286—**

## குளம் அமைத்தல்

***35797—திரு. கே.வி. முரளிதரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டம், தாகட்டி கிராமத்தில் புதிய குளம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டம், தாகட்டி கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை வட்டம், தாகட்டி கிராமத்தில் புதிய குளம் அமைக்கப்படுமா என்று கேட்டிருந்தேன். Myrada என்கிற private agency மூலமாகத்தான் அந்தக் குளம் நன்றாகச் செய்யப்பட்டுள்ளது. ஆனாலும், நான்கு வருஷத்திலே எங்களுடைய தளி தொகுதியிலே ஓர் ஏரிகூட தூர் வாரப்படவில்லை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே ஒரு check dam பேவநத்தம் ஊராட்சியில் கட்டப்பட்டது. அது உடைந்து 10 வருஷம் ஆகிவிட்டது. அதையாவது செய்து தரமுடியுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 287, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**287—**

**துணைக் கருவூலம்**

***33761—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, திருவொற்றியூர் நகரத்தில் துணைக் கருவூலம் ஆரம்பிக்க உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னை திருவொற்றியூர் நகரத்தில் துணைக் கருவூல அலுவலகம் அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு இல்லை.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் நகரம் ஒரு மிக முக்கியமான நகரமாகும். இந்நகரமானது சென்னை மாநகரத்தில் மிக முக்கிய பகுதியில் அமைந்துள்ளது. இந்தத் திருவொற்றியூர் நகரத்தில் பல அரசு அலுவலகங்கள் அதிகமாக இருக்கின்றன. பள்ளிகள், கல்லூரிகள் அதிகமாக இருக்கின்றன. இங்கு பணி செய்கின்றவர்கள் அரசுக்குச் செலுத்தவேண்டிய பணத்தையும் அல்லது அரசிடமிருந்து பெறவேண்டிய நிதியையும் பெறவேண்டுமென்றால், Treasury அலுவலகம் – துணைக் கருவூலம் இல்லாத காரணத்தினால், ஒவ்வொரு முறையும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருக்கின்ற Pay and Accounts Office–க்குச் செல்லவேண்டியிருக்கின்றது. அங்கு சென்று, திரும்பவும் அங்கு காசோலையைப் பெற்றுக்கொண்டு, திரும்பவும் திருவொற்றியூரில் இருக்கின்ற அரசு அலுவலகத்திற்கு வந்து, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளிடத்திலே கையெழுத்து பெற்று, மீண்டும் அந்தக் காசோலையை மாற்றுவதற்கு Reserve Bank அல்லது அங்குள்ள Beach Railway Station–க்கு எதிரில் இருக்கின்ற State Bank–க்குச் செல்லவேண்டியிருக்கின்றது. ஆகவே, காலமும், நேரமும் வீணடிக்கப்படுகின்றது. அதைப்போல பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் தேர்விற்குக் கட்டணத்தைச் செலுத்தவேண்டுமென்றால், ஒவ்வொரு முறையும் அந்தப் பகுதிக்கு தூரமாகச் செல்ல வேண்டியிருப்பதன் காரணமாக பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு, புதியதாக ஒரு துணைக் கருவூலம் ஆரம்பிப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.



2005 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதியில் வேலைப் பளு குறைவாக இருக்கிறது. பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் எண்ணிக்கையும், ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது. இதை அங்கு நிறுவுவதற்கு தொடர் செலவு 10 இலட்சம் ரூபாய் ஆகும். ஆரம்பச் செலவு 42 இலட்சம் ரூபாய் ஆகும். இதனால்தான் ஆங்கு இந்த அலுவலகம் அமைக்க வேண்டாம் என ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பி. வள்ளல் பெருமான்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு முக்கியமான நகரமாக இருப்பதன் காரணமாக, வருவாயை மட்டும் கருத்தில் கொள்ளாமல் அதை மறுபரிசீலனை செய்து அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வினாவிற்கும் நான் ஏற்கெனவே அளித்த விடைதான் பதிலாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

முற்பகல் 10–50

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தருமபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டியை வட்டத் தலைமையிடமாக அறிவித்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நல்லமுறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வட்டப் பகுதியிலே ஒரு துணைக் கருவூலம் இருக்கவேண்டுமென்று

[2005 ஏப்ரல் 4

அரசு விதிமுறை இருக்கிறது என்று சொல்லி வருகிறார்கள். மேலும் அந்தப் பகுதியிலே பென்ஷன்தாரர்களும், அரசு ஊழியர்களும், இருக்கிறார்கள். அதேபோல பள்ளிகள், பல்வேறுபட்ட நிறுவனங்கள் அங்கே அதிகமாக இருக்கின்றன. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு நான் கேள்வி நேரத்திலே கேட்கிறபோது, 'பாப்பிரெட்டிப்பட்டிக்கு, அரூர் பகுதிக்குச் சென்றுதான் அந்த மக்கள் பயன்பெறவேண்டும். ஆகவே, 28 கி.மீ. தொலைவு இருக்கிற காரணத்தால், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத் தலைமையிடத்தில் ஒரு துணைக் கருவூலம் அமைக்கப் பரிசீலிக்கப்படும்' என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு அங்கே இந்த நிதியாண்டிலே துணைக் கருவூலம் அமைக்க முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைமையிடம், ஏற்கெனவே இருக்கின்ற 23 இடங்களில் கருவூலங்களுடைய அலுவலகங்கள் இல்லை. ஆனாலும் தூரத்தின் அடிப்படையிலே இது ஆயப்படும் என்று ஏற்கெனவே அவையில் ஓர் உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 288, திரு. ந. கணபதி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**288—**

## கோயில் திருப்பணி

***37525—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, இரும்பை கிராமத்தில் உள்ள ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணியை நடத்திட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, இரும்பை கிராமத்தில் உள்ள ஈஸ்வரன் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்பட்டு, வரும் ஜூன் திங்களில் குடமுழுக்குச் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 ஏப்ரல் 4]

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியிலுள்ள இரும்பை கிராமத்தில் உலகப் பிரசித்திபெற்ற சுற்றுலாப் பயணிகள் அனைவரும் வந்து போகின்ற ஆரோவில் அருகில் மூன்றாம் குலோத்துங்கச் சோழ அரசனால் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட, அருள்மிகு குயில்முகி நாயகி சமேத மகாலீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கு ஜீவசமாதி அடைந்துள்ள கடுவெளி சித்தர் அவர்களின் களங்கத்தை நீக்க சிவபெருமான் எழுந்தருளி சித்தருக்குக் காட்சியளித்த ஸ்தலம் இது என்பது வரலாறு. வெடித்த சிவலிங்கத்தின் மூன்று பகுதிகளும் சிதறி விழுந்த இடங்களில் மிகப் பிரகாசமான இடம் ஆரோவில் நகரமாகும். உலகப் பிரசித்திபெற்ற 63 நாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம் என்பதால், இப்படி பிரசித்திபெற்ற கோயிலுக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பணிகள் முற்றுப்பெற நிதி போதுமானதாக இல்லையென அறிகின்றேன். எனவே, அறநிலையத் துறைமூலம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, குறித்த தேதியில் குடமுழுக்குச் செய்திட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அவர்கள் ரூ.4.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து கொடுத்தார்கள். அதனால்தான் அரசு மானியமாக 1 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. மீதிப் பணிகள் எல்லாம் உபயதாரர்கள் மூலமாக பல்வேறு பணிகளைச் செய்வதாகக் கூறியிருந்தார்கள். இப்போது, அப்படி அவர்கள் நிதி கொடுக்கவில்லை என்று சொன்னால், அரசு மானியத்தின்மூலமாக உடனடியாகப் பணம் கொடுக்கப்பட்டு, வரும் ஜூன் திங்களில் அந்தத் திருப்பணிகள் முடிந்து, குடமுழுக்கு நடைபெறும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள், தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை கோயில்களுக்கும் குடமுழுக்கு நடத்துகின்ற இந்த நல்ல வேளையிலே, என்னுடைய தொகுதியான செஞ்சித் தொகுதி, சிங்கவரத்தில் அமைந்துள்ள ஸ்ரீரங்கநாதர் ஆலயம் உலகப் புகழ்பெற்ற, பிரசித்திபெற்ற ஆலயமாக விளங்குகின்ற காரணத்தால், அந்த ஆலயத்திற்கு பக்தகோடிகள் வந்து செல்கின்ற இந்த நல்ல வேளையில், அந்த ஆலயம் புதுப்பிக்கப்பட்டு, குடமுழுக்கு நடத்த இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயிருக்கின்ற, அவர்கள் கூறுகின்ற ஆலயத்திற்குத் திருப்பணி செய்வதற்கு, அவர்கள் திருப்பணிக் குழு அமைத்து, அதன்மூலமாக அங்கேயிருக்கின்ற ஆலயத்தினுடைய பொது நிதியிலிருந்தும், பொது மக்களுடைய நன்கொடைகளிலிருந்தும், மீதி எவ்வளவு estimate தயார் செய்கிறார்களோ, அதிலே மூன்றில் ஒரு பங்கை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. எனவே, திருப்பணிக் கமிட்டிகளை அமைத்து – 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணிச் செய்யவேண்டும் என்ற அடிப்படையில், உடனடியாகத் திருப்பணிக் கமிட்டி அமைப்பதற்கு முன்வரவேண்டும் என்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

முற்பகல் 10–55

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை நிலை எண் 469, நாள்: 25–9–1998–ன்படி உதவி ஆணையர் நிலையிலுள்ள 7 திருக்கோயில் பணியிடங்களைத் துணை ஆணையர் நிலைக்கும், செயல் அலுவலர் நிலை–1 என்றுள்ள 16 திருக்கோயில் பணியிடங்களை, உதவி ஆணையர் நிலைக்கும், செயல் அலுவலர் நிலை–2 என்றுள்ள 7 திருக்கோயில் பணியிடங்களைச் செயல்





அலுவலர் நிலை–1-க்கும் உயர்த்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பின்படி கோவை, பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோயிலும், ஈச்சனாரி வினாயகர் திருக்கோயிலும் செயல் அலுவலர் நிலை–1-லிருந்து, உதவி ஆணையர் நிலைக்கு உயர்த்தப்படவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, தனிக் கேள்வி போடுங்கள். வினா எண் 289, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**289—**

**முதியோர் இல்லம்**

*32055—திரு. மா. இராஜசேகர்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தொகுதியில் அரசு சார்பில் முதியோர் இல்லம் கட்டி முதியோர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இராஜபாளையம் தொகுதியில் அரசு சார்பில் முதியோர் இல்லம் கட்டி முதியோர்களைப் பராமரிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எனது தொகுதியில் அரசு சார்பில் முதியோர் இல்லம் கட்டி முதியோர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குச் சாத்தியக்கூறு இல்லையென்று பதில் அளித்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எனது இராஜபாளையம் தொகுதி மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் பல பேர்கள் வசதிமிக்க அரசுப் பணிகளில் வேலை பார்ப்பவர்கள்கூட தன்னுடைய வயது முதிர்ந்த

[2005 ஏப்ரல் 4

பெற்றோர்களைச் சரிவர கவனிக்க முடியாமல் இருக்கின்றார்கள். பல முதியோர்களை யாரும் கவனிக்க முடியாத பட்சத்தில் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியுடன் மீண்டும் முதியோர் இல்லம் கொண்டுவருவதற்கு மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் இல்லங்கள் நடத்திட தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதே மாநில அரசின் திட்டங்களில் ஒன்றாகும். முதியோர் இல்லங்கள் எவையும் அரசால் தொடங்கப்பட்டு நடத்தப்படுவதில்லை. முதியோர் இல்லங்கள் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு அதற்கான பரா்மரிப்பு மானியம் மட்டுமே அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 40 முதியோரைக் கொண்டு முதியோர் இல்லம் நடத்தும் 15 தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு பயனாளிக்கு ரூ.500 வீதம் முதியோர் இல்லம் பராமரிப்பதற்காக அரசு மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் முதியோர் இல்லம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கின்றார். முதியோர் இல்லம் நடத்துவதற்கு தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால் அரசு பரிசீலித்து அதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவிபெறும் தனியார் தொண்டு நிறுவனங்கள் சரியாக இயங்கவில்லை என்பதை இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் பலபேர் நன்கு அறிவார்கள். இன்றைக்கு முதியோர் இல்லங்கள் அதிகமாக தேவைப்படுகின்ற ஒரு காலக்கட்டத்திலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம். இந்தத் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு உத்தரவு தந்தாலும்கூட அவர்கள் அதிகமான அளவு பணம் அந்த முதியோர்களிடத்திலே வசூல் செய்து சரியான முறையிலே முதியோர்களைக் காப்பதில்லை. அதனாலே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும், கட்டணம் செலுத்தி முதியோர்களைச் சேர்க்கின்ற வசதியோடு, அரசாங்கமே முதியோர் இல்லம் கட்ட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2005 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொத்தாம்பொதுவாக இந்த முதியோர் இல்லங்கள் சரியாக நடைபெறவில்லை என்றும், பணம் வசூலிக்கின்றார்கள் என்றும் கூறினார். எந்தப் பகுதியிலே எந்த முதியோர் இல்லத்தில் இதுபோன்று பணம் வசூலிக்கின்றார்கள் என்பதனை நீங்கள் எழுதிக் கொடுப்பீர்களானால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 290, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**290—**

## மருத்துவர் நியமனம்

***24907—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் சித்த வைத்தியப் பிரிவில் ஆண் மருத்துவர் மற்றும் பெண் மருத்துவர் ஆகிய இருவரை நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் உள்ள தலைமை மருத்துவமனைகளில் உள்ள சித்த வைத்தியப் பிரிவுகளில் பணிபுரிய ஆண் மருத்துவர், பெண் மருத்துவர் என இருவரை நியமனம் செய்ய தற்பொழுது கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழருடைய பரம்பரை வைத்தியமாகிய சித்த வைத்தியப் பிரிவு, தற்போது மிகச் சிறப்பான முறையிலே பொதுமக்களிடத்திலே வரவேற்பு பெற்றிருக்கிறது. ஆகையாலே, மிக அதிக அளவிலே சித்த வைத்தியப் பிரிவுக்குப் பொதுமக்கள் சென்று சிகிச்சை பெறுகிறார்கள். அதுவும் குறிப்பாக, பெண் நோயாளிகளும், ஆண் நோயாளிகளும், மிக அதிகமாகச்

[2005 ஏப்ரல் 4

செல்வதால், அங்கு மருத்துவர்கள் இருபாலோரையும் நியமிக்க, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தாலும்சரி, மாவட்ட அரசு மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி, அதேபோல் தாலுகா மருத்துவமனைகளாக இருந்தாலும்சரி, ஆங்காங்கே இருக்கக்கூடிய காலியிடங்களை, அதுவும் குறிப்பாக சித்த மருத்துவர்களை நியமிப்பதிலே அரசு இதுவரையிலும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் இதுவரையிலும் கிட்டத்தட்ட 211 சித்த மருத்துவர்களை நியமித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்டவாரியாக கேட்கும்போது திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், திண்டுக்கல், நீலகிரி ஆகிய மாவட்டங்களிலே பெண் மருத்துவர்கள் பணியில் அமர்த்தப்பட்டு அவர்கள் அங்கே மருத்துவ உதவிகள் செய்து வருகிறார்கள். அதேபோல் மற்ற மாவட்டங்களில் இருக்கக்கூடிய தலைமை மருத்துவமனையிலும் ஒரு தலைமை மருத்துவமனையை எடுத்துக்கொண்டால் அங்கே ஒரு District Medical Officer அதாவது மாவட்ட தலைமை மருத்துவ அலுவலரும் அவருக்குத் துணையாக ஓர் உதவி சித்த மருத்துவ அலுவலரும் பணியாற்றி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று – இந்த 30 மருத்துவர்களும், கிட்டத்தட்ட 211 மருத்துவர்களும் அங்கு இருக்கக்கூடிய அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் இருக்கக்கூடிய மருத்துவர்களும் பணிகளைப் பார்த்து அதேபோல் அங்கே இருக்கக்கூடிய அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் இருக்கக்கூடிய மருத்துவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று – வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப கூடுதலாக ஒரு மருத்துவரை நியமிக்க வேண்டுமென்று



2005 ஏப்ரல் 4]

ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### ஜப்பான் நிதி நிறுவன உதவியுடன் காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்துதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர். பி. உட்காருங்கள். முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கை இருக்கிறது. பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லுகின்றபோது பெருகி வரும் தொழிற்சாலைகள், நகர்மயம் ஆதல் ஆகியன தவிர்க்க இயலாதவையாக அமைந்துவிடுகின்றன. அத்துடன் மக்கள் தொகைப் பெருக்கமும் சேர்கின்றபோது இதனுடைய விளைவுகள் இயற்கைச் சூழலுக்குப் பங்கம் விளைவித்து சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்துவிடுகின்றன. நாட்டின் வளர்ச்சிப் பணிகளும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளும் ஒன்றுக்கு ஒன்று பாதிப்பு இல்லாத வகையில் பின்னிப் பிணைந்து செயல்படுவதன்மூலமே நீடித்து நிலைத்து நிற்கும் சமூகப் பொருளாதார வளர்ச்சியை நமது வருங்கால சந்ததியினருக்கு நாம் அளிக்க முடியும். எனவேதான், தமிழகத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கும் எந்த அளவு உயரிய

முக்கியத்துவத்தை நான் அளிக்கின்றேனோ, அதே அளவு முக்கியத்துவத்தை இயற்கை வளங்களை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் நான் அளித்து வருகிறேன்.

காடுகளை ஒட்டியுள்ள கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் அதிகரித்து வரும் நிலையில் தங்களது தேவைக்கு ஏற்ப தாங்கள் சார்ந்துள்ள வனப் பகுதிகளை அபரிமிதமாகப் பயன்படுத்திக்கொள்ளும் நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாகவும், காட்டுத் தீ முதலான இயற்கை இடர்ப்பாடுகள் காரணமாகவும் காடுகள் வளம் குன்றிப் போகின்றன. இவ்வாறு வனங்கள் வளம் குன்றிப் போவதன் காரணமாக சுற்றுச்சூழல் சம நிலை வெகுவாக பாதிக்கப்படுகிறது. இந்த பாதிப்பினை நீக்கும் வகையிலும், வனப் பகுதிகளைச் சார்ந்துள்ள கிராம மக்களின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும், தமிழகத்தில் உள்ள வன வளத்தைப் பெருக்கிட வேண்டுமென்று முடிவெடுத்து எனது முந்தைய ஆட்சிக் காலத்திலேயே, அதாவது 1994 ஆம் ஆண்டிலேயே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை பன்னாட்டு நிதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்திட முனைந்தேன். அதன் அடிப்படையில் வன வளர்ப்புத் திட்டம் தயார் செய்யப்பட்டு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி கோரப்பட்டது. இந்த நிதி உதவி பெறப்பட்டு, இத்திட்டம் செயலாக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. 684 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின்மூலம் சுமார் 12 இலட்சம் ஏக்கர் பரப்பில் உள்ள வளம் குன்றிய காடுகள் மேம்படுத்தப்பட்டதுடன் இக்காடுகளை ஒட்டி உள்ள 1,367 கிராமங்களிலும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

முற்பகல் 11–05

செயற்கைக்கோள் படங்கள் தமிழ்நாட்டில் உள்ள காடுகளில் வனப் பரப்பு மற்றும் காடுகளின் அடர்த்தி உயர்வு அடைந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றன. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டதனாலேயே இது சாத்தியம் ஆயிற்று. எனவே, தமிழகத்தின் வன வளத்தை மேலும் மேம்படுத்த வேண்டும், வளம் குன்றிய காடுகளின் வளத்தை மேலும் பெருக்கிட வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடர்ந்து தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–II திட்டத்தைச் செயல்படுத்த நான் முடிவு எடுத்தேன். இதன் அடிப்படையில், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதி நிறுவனத்தின் உதவி கோரி திட்டக் கருத்துரு அனுப்பப்பட்டது. இத்திட்டத்திற்கான கடன் பெறப்படாத நிலையில், இந்தக் காடு வளர்ப்புத்





திட்டம் தொய்வின்றிச் செயல்படும் வகையில், 2004–2005 ஆம் ஆண்டுக்கு மாநில அரசே நிதி ஒதுக்கீடு வழங்க ஆணையிட்டேன். அதன் அடிப்படையில் மாநில அரசு 69.09 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II என்ற திட்டத்தைச் செயல்படுத்திட, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதி நிறுவனம் கடன் உதவி வழங்கிட ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில் உரிய கடன் உதவி வழங்குகின்ற ஒப்பந்தம், மைய அரசுக்கும் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதி நிறுவனத்திற்கும் இடையே 31–3–2005 அன்று கையொப்பம் ஆகியுள்ளது. இதன்மூலம் நடப்பு நிதியாண்டு முதல் 8 ஆண்டுகளுக்கு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதி நிறுவனம் 409.08 கோடி ரூபாய் கடன் வழங்கும். மாநில அரசு தனது பங்காக 158.34 கோடி ரூபாய் வழங்கும்.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை II–ன்கீழ் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேம்பாடு, ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாடு ஆகியவற்றின்கீழ், காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேம்பாடு திட்டத்தின் வாயிலாக, 650 கிராமங்களிலும் அதனை ஒட்டிய 4,06,250 ஏக்கர் பரப்புள்ள வளம் குன்றிய காடுகளிலும் மேம்பாட்டுப் பணிகளும், காடு வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும். அதேபோல, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக மலைவாழ் மக்கள் வசிக்கின்ற 150 கிராமங்களில் மக்கள் நலப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், அந்தக் கிராமங்களை ஒட்டிய 37,500 ஏக்கர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ், வனத் தோட்டம் அமைக்கும் பணிகள், மண் மற்றும் நீர்ப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் மழைநீர் சேகரிப்புப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படும். வனங்கள் பாதுகாக்கப்படுவதில் பொதுமக்களின் பங்கேற்பை உறுதி செய்யும் வகையில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இப்பணிகளுக்காக, 218.91 கோடி ரூபாய் செலவு செய்யப்படும்.

திட்ட கிராமங்களில் குறைந்தபட்ச அடிப்படை சமுதாய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். கிராம மக்களின் வருவாயைப் பெருக்கிட மாற்று வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 4

வருவாயைப் பெருக்கிட வழிவகை செய்யப்படும். இதன்வாயிலாக காடுகள் அழிக்கப்படுவது முற்றிலுமாகத் தடுக்கப்படும். 800 கிராமங்களில் மேற்கொள்ளப்பட உள்ள இந்தப் பணிகளுக்காக 86.94 கோடி ரூபாய் செலவு செய்யப்படும்.

மேலும், திட்டப் பணிகளை மேற்கொள்ளும் களப் பணியாளர்களுக்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல், பயிற்சி, வன விரிவாக்கப் பணிகள் போன்றவையும் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

தமிழகத்தில் உள்ள வளம் குன்றிய காடுகளை மேம்படுத்தி, அதனை ஒட்டியுள்ள கிராமப்பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வகை செய்யும் இந்தப் புதிய திட்டத்தின் வாயிலாக, தமிழகத்தின் இயற்கை வளம் மேம்படும்; வன வளம் பெருகி சுற்றுச்சூழல் சமநிலை உருவாகும். மேலும், வனங்களையொட்டியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் வனங்களுடன் இணைந்த வாழ்க்கையை மேற்கொள்ளவும், வனச் செல்வங்களைப் பாதுகாத்து, அதேநேரத்தில் தங்களது வாழ்க்கை வளத்தை மேம்படுத்திக் கொள்ளவும், இந்தத் திட்டம் வழி வகுக்கும் என்று தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. தகவல் கோரல்

### (அ) ஒரு வழக்கிற்காக நீதிமன்றத்தில் பேரவைத் தலைவர் ஆஜராக வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருப்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

*முற்பகல் 11–10*

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் பொறுப்பில் இல்லாதபோது, பதிவு செய்யப்பட்ட ஒரு வழக்கிற்காக, விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் கூறியிருப்பதாகச் செய்திகள் பார்த்தேன். அதனைத் தொடர்ந்து பல்வேறு பிரச்சினைகளும் எழுந்திருக்கின்றன. பேரவைத் தலைவர் பொறுப்பு என்பது, அரசமைப்புச் சட்ட வழிப்பட்ட ஓர் அதிகார அமைப்பு என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. பேரவை உறுப்பினர்களுக்கும், பேரவைக்கும் பல சிறப்பு உரிமைகள், privileges வழங்கப்பட்டிருக்கின்றன.



2005 ஏப்ரல் 4] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

பேரவைத் தலைவரின் அனுமதி இல்லாமல் எந்த நீதிமன்ற ஆணையையும் உறுப்பினர்களிடம் வழங்க முடியாது. பேரவையில் பேசியதற்காக எந்த உறுப்பினர் மீதும் எந்த நீதிமன்றத்திலும் வழக்கு தொடுக்க முடியாது. அத்தகைய இறையாண்மைமிக்க பேரவையின் தலைவராக வீற்றிருக்கும் தங்களை, விசாரணை நீதிமன்றத்தின்முன் ஆஜராக வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது. அதிலும், அந்த விசாரணை நீதிமன்றமே தங்களை அந்த வழக்கிலிருந்து விடுவித்துவிட்ட பிறகு, இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. இதில் தாங்கள் என்ன நிலையினை மேற்கொள்ளப் போகிறீர்கள் என்பதை தெரிந்துகொள்ளும் உரிமை இந்தப் பேரவைக்கு இருக்கிறது. அரசியல் சட்ட வழிப்பட்ட அதிகாரம் பெற்ற உயர் அமைப்புகளான, பேரவைத் தலைவருக்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் இடையே எந்த மோதல் போக்கும் ஏற்பட்டு விடாமல் தடுக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில், இந்தப் பிரச்சினையில், தாங்கள் மேற்கொண்டுள்ள நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள நாங்கள் விரும்புகின்றோம்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்பை சரியாக படிக்காமல் இங்கே சில கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றே கருதுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் சிறப்பு அனுமதி மனுவினை, Special Leave Petition உச்ச நீதிமன்றம் முடிவு செய்து வழங்கிய உத்தரவின் அடிப்படையில், பேரவைத் தலைவர் என்ன நிலை மேற்கொள்ளப் போகிறார் என்றும், பேரவைத் தலைவர் பதவி விலக வேண்டுமென்றும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கை தொடர்பாக உண்மை நிலையை இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமையாகிறது.

ராபின் மெயின் என்பவர்மீது மத்திய குற்றப் புலனாய்வுத் துறை, C.B.I. 1985 ஆம் ஆண்டிலேயே முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்தது. அதன்பிறகு கணிசமான காலதாமதத்திற்குப் பின்னர் 1988 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அப்போதுதான் தற்போதைய மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர் – A–31 – ஆக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டார். பின்னர் மாண்புமிகு பேரவைத் தலைவர் சட்ட நிலைகளின் அடிப்படையில் தன்னை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோரி விடுவிப்பு மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். விசாரணை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 4

நீதிமன்றம் மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாதத்தினை ஏற்று, 18–7–2001 ஆம் நாளிட்ட தனது தீர்ப்பில் C.B.I. உரிய முன்னனுமதி வாங்காத காரணத்தால் இவ்வழக்கிலிருந்து அவரை விடுவித்து தீர்ப்பு அளித்தது. இதன்பிறகு, இத்தீர்ப்பினை எதிர்த்து C.B.I. தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவை உயர் நீதிமன்றம் 31–3–2004 அன்று அனுமதித்தது. உயர் நீதிமன்ற மாண்புமிகு நீதிபதி அவர்கள் விசாரணை நீதிமன்றத்தின் கருத்தை ஏற்றுக்கொள்ளாது அவரை வழக்கிலிருந்து விடுவிக்கும் அத்தீர்ப்பினை நீக்கறவு செய்தார். எனவே, பேரவைத் தலைவர் அவர்கள் சிறப்பு அனுமதி மனு ஒன்றினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு உச்ச நீதிமன்றம் தடையாணை விதிக்கவில்லை. ஆனால், பேரவைத் தலைவர் விசாரணையின்போது, நேரில் ஆஜராகத் தேவையில்லையென ஆணை பிறப்பித்தது. பேரவைத் தலைவரை வழக்கிலிருந்து விடுவித்து பிறப்பிக்கப்பட்ட ஆணையை உயர் நீதிமன்ற நீதிபதி நீக்கறவு செய்த பின்னர் கடந்த ஓராண்டில் C.B.I. ஒரேயொரு சாட்சியைத்தான் விசாரணை செய்துள்ளது என நான் அறிய வருகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களது எதிர்ப்பினைத் தெரிவிக்கும் முன்னர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைப் படித்திருக்க வேண்டும். துரதிருஷ்டவசமாக அவர்கள் அப்படிச் செய்யவில்லை போலும். நான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை முழுவதுமாகப் படித்துள்ளேன். இவ்வழக்கில் உரிய முன்னனுமதி வாங்கப்படாதது குறித்த பேரவைத் தலைவரின் வாதத்தை உச்ச நீதிமன்றம் நிராகரிக்கவில்லை. அனுமதி பெறப்படாதது பற்றிய வினா, விசாரணையின் தக்கநிலையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்றுதான் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அதாவது, புகார் தெரிவிக்கப்பட்ட செயல், அவர் தன்னுடைய அரசுப் பணியினை ஆற்றுவதோடு தொடர்புடையதா, இல்லையா என்பதை முடிவு செய்ய போதிய ஆதாரம் கிடைக்கின்றபோதுதான், முடிவு செய்யப்பட வேண்டும் என்பதே இதன் பொருள்.

*முற்பகல் 11–15*

இக்கருத்துகளைத் தெரிவித்து உச்ச நீதிமன்றம் இம்மனுவை முடிவு செய்தது. உச்ச நீதிமன்றம் மாண்புமிகு பேரவைத் தலைவர் நேரில் ஆஜராவது குறித்து எந்த ஆணையும் பிறப்பிக்கவில்லை. எனவே, தற்போதுள்ள நிலை என்னவெனில், மாண்புமிகு பேரவைத் தலைவர் வழக்கினை எதிர்கொள்கிறார்; அவர் எந்தவிதத் தகுதி இழப்பிற்கும் ஆளாகவில்லை. மேலும், குற்ற நடைமுறைச் சட்டத்தின்கீழ், குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு உள்ள உரிமைகளுள் எவற்றையும்



2005 ஏப்ரல் 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

உச்ச நீதிமன்றம் பேரவைத் தலைவருக்கு மறுக்கவில்லை. இப்பொழுதும், C.B.I. வழக்குத் தொடுப்பதற்கான அனுமதியைப் பெறவில்லை என்ற பிரச்சினையை விசாரணையின்போது எழுப்ப மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு உரிமை உண்டு. அவர் நீதிமன்ற விசாரணையின்போது நேரடியாக ஆஜராகாமல் இருக்க தனக்கு அனுமதி வேண்டி விண்ணப்பிக்கலாம். எனவே, எதிர்க் கட்சிகளின் தற்போதைய எதிர்ப்பு, திரு. எஸ்.ஆர்.பி. அவர்களின் கூக்குரல் அர்த்தமற்றதாகும்.

உயர் நீதிமன்றம் தனது ஆணையை 31–3–2004 அன்று வெளியிட்டது. அதன்பின், அதற்கு எவ்விதமான தடை ஆணையையும் உச்ச நீதிமன்றம் விதிக்கவில்லை. 31–3–2004-லிருந்து தொடர்ந்து மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் காளிமுத்து அவர்கள் பேரவைத் தலைவராகவே செயல்பட்டு வருகிறார். 31–3–2004-க்குப் பிறகு ஏற்பட்ட நிலைமைக்கும், தற்போது உச்ச நீதிமன்ற ஆணையின்பின் உள்ள நிலைமைக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் தொடர்ந்து செயல்படுவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இருக்க முடியாது. இதுகுறித்து அரசு தலைமை வழக்குரைஞரின் கருத்து Advocate General அவர்களின் கருத்து, என்னால் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பதவி வகிப்பதற்கு எவ்விதத் தகுதி இழப்புக்கும் ஆளாகவில்லை என்றும், பேரவைத் தலைவர் பதவியிலிருந்து விலகுவது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 179–வது உறுப்புக்கு உட்பட்டதாகும் என்றும், பேரவைத் தலைவர் அவர்கள் அவை உறுப்பினராக இருக்கும் தகுதியை இழப்பாரேயானால்தான், அவர் பேரவைத் தலைவர் பதவியை வகிப்பதற்கு உரிய தகுதியை இழக்கிறார் என்றும் அரசு தலைமை வழக்குரைஞர் கருத்து தெரிவித்துள்ளார். மேலும், பேரவைத் தலைவர், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 8, உட்பிரிவு (3)–ன்படி, தான் வகித்து வரும் பதவியை இழக்கும் வகையில், குற்றம் புரிந்தவராக தீர்ப்பு அளிக்கப்படவில்லை என்றும், இன்றைய நிலையில், குற்ற வழக்கு ஒன்றில் அவர் குற்றம் சாட்டப்பட்டவராகத்தான் உள்ளார் என்றும், வழக்கு நிலுவையில் உள்ளது என்பதால், அவர் பேரவைத் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றுவதற்கு எந்தவிதமான தகுதிக் குறைவும் இல்லை என்றும் அரசு தலைமை வழக்குரைஞர் தெரிவித்துள்ளார்.

ஒரு சட்டமன்றம் கலைக்கப்பட்ட பிறகும், அடுத்து வரும் சட்டமன்றத்தின் முதல் கூட்டம் தொடங்கும் வரை, பேரவைத் தலைவர் பதவியில் தொடர இந்திய அரசமைப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், தொடர்ந்து சட்டமன்ற

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 4

உறுப்பினராகச் செயல்படுகிறார். உச்ச நீதிமன்றத்தால் மாற்றியமைக்கப்பட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி எந்தவிதத் தகுதி இழப்பிற்கும் அவர் ஆளாகவில்லை. இம்மாமன்றத்திலுள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களின் நம்பிக்கையை அவர் பெற்றிருக்கிறார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எனவே, அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை இன்னும் எழுப்பப்படவில்லை. எழுப்பப்படும் என்று எதிர்பார்த்து இதை நான் சொல்கிறேன். அவர் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கை முற்றிலும் அர்த்தமற்றது, உள்நோக்கம் கொண்டது, தனிப்பட்ட முறையில் அவர் பெயருக்குக் களங்கம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எழுப்பப்பட்டுள்ளது.

மேலும், அண்மையில் உச்ச நீதிமன்றம் தெரிவித்த ஒரு கருத்தை இந்த அவையில், இந்த நேரத்தில் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். தற்போது காங்கிரஸ் தலைமையில் செயல்பட்டுவரும் மத்திய அரசில் பல குற்றச்சாட்டுக்கள், குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்ட குற்றவாளிகளாக, Accused ஆக இருக்கின்ற பலர் மத்திய அமைச்சர்களாக மத்திய அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதனை எதிர்த்து ஒருவர் Public Interest Litigation கூட file செய்தார்.

Taking note of the debate in Parliament on tainted Ministers, the Supreme Court said: "No law was violated by inclusion of charge–sheeted persons in the Manmohan Singh Ministry and dismissed the petition seeking a ban on inclusion of such persons." A Bench comprising Justice N. Santhosh Hegde, Justice S.P. Sinha and Justice A.K. Mathur, while dismissing a P.I.L. filed by one Manoj Narula, said, 'No violation of any statute is pointed out by the petitioner. The matter is being debated in Parliament. We will see if Parliament comes out with a legislation on this issue', the Bench said while refusing to entertain the petition.

*முற்பகல் 11–20*

குற்றம் சாட்டப்பட்ட பலர், அவர்கள்மீது குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்ட பலர், இன்று மத்திய அமைச்சரவையில் மத்திய அமைச்சர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இதை எதிர்த்து ஒருவர் Public Interest Litigation தாக்கல் செய்தபோது, உச்ச நீதிமன்றமே ஒருவர்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதனாலேயே அவர் மத்திய மந்திரியாகப் பதவி வகிக்க எந்தத் தகுதியும் இழக்கவில்லை என்று கூறியிருக்கிறது. யாரெல்லாம் இன்றைக்கு, எப்படிப்பட்டவர்களெல்லாம்



2005 ஏப்ரல் 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இன்றைக்கு, மத்திய அமைச்சரவையில் இருக்கிறார்கள் என்று பாருங்கள். இரயில்வே அமைச்சர், திரு. லாலு பிரசாத் யாதவ் அவர்கள். அவர்மீது ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்ததாக, மாட்டுத் தீவன ஊழல் வழக்கு ஒன்று இருக்கிறது. அவர்மீது இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. Disproportionate Assets வழக்கிலும் அவர்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Mohammed Ali Fatmi, Minister of State, Human Resources Development Department, அவர்மீது Kidnapping – கடத்தல் – மேலும் பல குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளன. இவர் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Mohammed Taslimuddin, Minister of State, Heavy Industries, இவர்மீது 12–க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு மைனர் பெண்ணை, வயதுக்கு வராத பெண்ணை கற்பழித்ததாகவும் ஒரு வழக்கு இருக்கிறது.

Thiru Prem Chand Gupta, Minister of State, Company Affairs இவர்மீது கடந்த ஆண்டுதான் மத்திய அரசின் Enforcement Directorate அந்நியச் செலாவணி விதிகளை மீறியதற்காக 10 கோடி ரூபாய் அபராதம் விதித்து இருக்கிறது.

Thiru Shibu Soren, Former Minister for Mines, இவர்மீது பல வழக்குகள் உள்ளதை அனைவரும் அறிவர். அவர்மீது குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர்மீது Non–bailable Arrest Warrant பிறப்பிக்கப்பட்டதால், பிரதமரே அவரை இராஜினாமா செய்ய வைத்தார்.

அடுத்தது, Thiru Jaya Prakash Yadav, Minister of State, Water Resources, இவர்மீதும் பல புகார்கள் இருக்கின்றன. மோசடியாக ஒரு தனியார் கல்வி நிறுவனத்திற்கு அவர் recognition கொடுத்ததாகவும், மேலும் பொய் degree–களை, பட்டங்களை அவர் வழங்கியதாகவும் வழக்குகள் இருக்கின்றன. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இப்போது நான் குறிப்பிட்டுள்ள இவர்களில் திரு. சிபு சோரன் அவர்கள் ஒருவரைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் இன்றைக்கும் காங்கிரஸ் தலைமையில் நடைபெறுகின்ற மத்திய அரசிலேயே மத்திய அமைச்சர்களாக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு உச்ச நீதிமன்றமே என்ன சொல்லியிருக்கிறது? இவர்கள் எல்லாம் குற்றம்

சாட்டப்பட்டவர்கள், இவர்கள்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அவ்வளவுதான்; இவர்கள் தண்டிக்கப்படவில்லை, convict செய்யப்படவில்லை, இன்னும் இவர்கள் குற்றவாளிகள்தான் என்று தீர்ப்பு கூறப்படவில்லை. ஆகவே, எந்தத் தகுதி இழப்பும் இல்லை. அவர்கள் மந்திரிகளாகத் தொடரலாம் என்று உச்ச நீதிமன்றமே கூறியிருக்கிறது.

அதைப்போலவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவராக இருக்கிறார். அவர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வளவுதான். அவர் convict செய்யப்படவில்லை, குற்றவாளி என்று நிரூபிக்கப்படவில்லை. எந்தத் தண்டனையும் அவருக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, அவர் மாண்புமிகு பேரவைத் தலைவராக நீடிப்பதற்கு எந்தத் தடையும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. நான் என்னுடைய கருத்தைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) என்னுடைய கருத்தைச் சொல்லிவிடுகிறேன். பேரவைத் தலைவர் என்ற முறையில் தனிப்பட்ட என்பொருட்டு அவையின் நேரமும், விலை மதிப்பற்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் நேரமும் பயன்படுத்தப்பட்டமைக்காக வருந்துகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு நெஞ்சம் நெகிழ நன்றி கூறுகிறேன். அவர்கள் என்மீது கொண்ட அன்பையும், நம்பிக்கையையும் புலப்படுத்த எதிர்க்கட்சிகள் இந்தப் பிரச்சினையை எழுப்பியது, குறிப்பாக எஸ்.ஆர்.பி. எழுப்பியது காரணம் என்பதால், அவருக்கும் நன்றி கூறுகிறேன்.

நான் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோதும், இந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் என்னை நாடாளுமன்ற உறுப்பினராக்கி, தமிழ் வளர்ச்சித் துறை சிறப்பு ஆணையாளராக்கி, இயக்கத்தின் தலையாய பொறுப்புகளில் அமர வைத்து, பெருமைக்குரிய தேர்தல்களில் எல்லாம் இயக்கத்தின் வேட்பாளராக நான் நிற்கும் வாய்ப்பைத் தந்து, சட்டப் பேரவை உறுப்பினராக்கி, இப்போது சட்டப் பேரவைத் தலைவராகவும் அமர வைத்திருக்கிறார்கள். அத்தகைய உன்னதமான தலைவியின்



தொண்டன் என்னும் தகுதியைப் பெற்ற நான், என் மனமறிய எந்தத் தவறும் செய்தது இல்லை.

முற்பகல் 11–25

எதிர்வரிசைத் தலைவர்களும், உறுப்பினர்களும் அரசியல்ரீதியான மாறுபாட்டையும், முரண்பாட்டையும் இங்கே அரங்கேற்றினாலும், பொதுவாக என்மீது அன்பும், மதிப்பும் கொண்டிருக்கிறார்கள் என்றே நம்புகிறேன். எனவே, நான் குற்றமற்றவன் என்பதை நீதிமன்றத்தில் நிலைநாட்டுவேன். இந்தப் பெருமைக்குரிய பதவியின் கண்ணியத்தையும், மதிப்பையும் காப்பேன் என்று உறுதி கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினையை எழுப்பியது, இந்தப் பிரச்சினையில் தாங்கள் எத்தகைய நிலையை மேற்கொள்ளவிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் எழுப்பினேன். தாங்கள் பதவியிலேயிருந்து விலக வேண்டுமென்று நான் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. நான் எழுப்பவும் இல்லை. எனக்கும் தெரியும். நிலை என்ன என்பது நமக்குத் தெளிவாகவே தெரியும். இது ஓர் அதிகாரம் பெற்ற அமைப்பு. பேரவைத் தலைவர் பதவி என்பது ஓர் அதிகாரம் பெற்ற, அரசமைப்புச் சட்டப்படி அதிகாரம் பெற்ற ஓர் அமைப்பு. நீதித் துறை என்பதும் அரசமைப்புச் சட்டப்படி அதிகாரம் பெற்ற அமைப்பு. நீதித் துறை, அரசு, சட்டமன்றம் இவையெல்லாம் தனித்தனியாக இருக்கவேண்டும். எனவே, ஒருவருடைய அதிகாரத்திற்குள்ளே இன்னொருவர் நுழையக்கூடாது. அந்த வகையில், தாங்கள் எத்தகைய நிலையினை மேற்கொள்ளப் போகிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக மட்டும் எழுப்பினேனே தவிர, நிச்சயமாக இதிலே தாங்கள் இராஜினாமா செய்ய வேண்டும், இன்னும் இருக்கிறீர்களா அல்லது ஏற்கெனவே நீங்கள் குற்றம் செய்துவிட்டீர்கள் என்று நாங்கள் கருதிக் கொண்டிருக்கிறோம் என்று நான் சொல்லவில்லை. எனக்குத் தெரியும். குற்றச்சாட்டு ஒருவர்மீது எழுகின்ற காரணத்தாலே அவர் குற்றவாளி ஆகிவிட முடியாது. எனவே, நான் தங்களைக் குற்றவாளி என்றும் சொல்லவில்லை. உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது; தாங்கள் விசாரணை நீதிமன்றத்திலே ஆஜராக வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. என்ன நிலையை மேற்கொள்ளப் போகிறீர்கள்? ஏனென்றால் நீங்கள் ஓர் அதிகாரம் பெற்ற அமைப்பிலே இருக்கிறீர்கள். அரசமைப்புச் சட்ட வழிப்பட்ட அதிகாரம் பெற்ற இந்தச் சபையினுடைய பாதுகாவலராகவும்

இருக்கிறீர்கள். இந்தச் சபையிலே இருக்கிற ஓர் உறுப்பினருக்கு ஏதாவது ஒரு தொல்லை வருமேயானால், ஒரு பிரச்சினை வருமேயானால், நீதிமன்றத்திலே இருந்து ஒரு warrant வருமேயானாலும்கூட, சட்டமன்றம் கூடியிருக்கின்ற நாட்களில் தங்களிடம் கேட்காமலும், அனுமதி வாங்காமலும் அவர்களைக் கைது செய்ய முடியாது என்பதை நான் அறிவேன்.

அதேபோல உங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை நான் குறைத்து மதிப்பிடமாட்டேன். ஏனென்றால், தனிப்பட்ட முறையில், அரசியல் ரீதியாக இருக்கிற கருத்து வேறுபாடு என்பது வேறு. ஆனால், இந்த மன்றத்தினுடைய மாண்பு ஒருபோதும் குலைய வேண்டும் என்று நான் நினைத்ததும் இல்லை. நினைக்கவும் மாட்டேன். இந்த மன்றத்தின் மாண்பு காப்பாற்றப்பட வேண்டும். இறையாண்மை காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலே நான் தெளிவாக இருக்கிறேன். அதனாலேதான் டெல்லியிலே மக்கள் சபை சபாநாயகர் அன்றையதினம் கூட்டம் கூட்டியபோது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை நான் இதே அவையிலே எழுப்பியிருக்கிறேன். அதே தன்மையிலேதான் இதையும் எழுப்பியதாக நீங்கள் கொள்ள வேண்டுமே தவிர, இராஜினாமா செய்துவிட்டுத்தான் வரவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதற்காகவோ, அப்படி ஒரு கோரிக்கை வைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடோ நிச்சயமாக நான் இந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். இன்னும் உங்களுடைய நிலையைத் தெளிவுபடுத்தியதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நிலை தெளிவுபடுத்தப்பட வேண்டும், நாம் என்ன நிலையை மேற்கொள்ள இருக்கிறோம் என்று. ஒருவேளை அப்படி ஒரு நிலை வருமேயானால் என்ன செய்யப்போகிறோம் என்பதைத் தெரிந்துகொள்வதுதான் முறை. அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற நோக்கத்தோடு, சபைக்கும், சபையின் மூலமாக நாட்டுக்கும் தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் எழுப்பினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்ட தேவனாம்பட்டினத்தில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவந்த திரு. விவேக் ஓபராய் பாண்டிச்சேரியில் பணிகள் மேற்கொள்வது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே நடந்த ஆழிப் பேரழிவு குறித்து நம்முடைய மரியாதைக்குரிய



விவேக் ஓபராய் அவர்கள் கடலூர் மாவட்டம், தேவனாம்பட்டினத்திலே தங்கி, இரண்டு மாத காலமாக மீட்புப் பணிகளிலேயும், நிவாரணப் பணிகளிலேயும் ஈடுபட்டு வந்தார். அவருடைய சொந்தப் பணத்தைப் போட்டு, பல்வேறு தொண்டுள்ளம் படைத்தவர்களுடைய நிதியை எல்லாம் திரட்டி, தேவனாம்பட்டினத்திலே 300 வீடுகள், மதிப்பீடு 11 கோடி ரூபாய் என்று சொல்லி, அவற்றை மீனவர்களுக்காக வீடு கட்டித்தர முன்வந்த நேரத்திலே, நம்முடைய அரசு அந்த நிலத்தை ஒதுக்கிக் கொடுக்காத காரணத்தினாலே இப்போது பாண்டிச்சேரி மாநிலம், காரைக்கால் அருகிலே இருக்கிற ஒரு கிராமத்திற்கு, பட்டினச்சேரி கிராமத்திற்குச் சென்றிருக்கிறார். ஆகவே, நம்முடைய மாநிலத்திற்கு தேவையான பல்வேறு நிவாரண உதவிகளை தொண்டுள்ளம் படைத்தவர்களை, தொண்டு நிறுவனங்களை அழைத்துப்பேசி, உதவிகளைப் பெறக்கூடிய தமிழக அரசு இந்த உதவியைப் பெற ஏன் தவறி விட்டது? அதிலும் குறிப்பாக அரசு நிலம் கொடுக்காத காரணத்தினாலே தவறிப் போயிருக்கிறது என்ற இந்த மாபெரும் குற்றச்சாட்டினை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவேக் ஓபராய் அவர்கள் நடத்திய அந்த நிகழ்ச்சியில் நானும், கல்வித் துறை அமைச்சர் அவர்களும்கூட கடலூரிலே நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டபோது கலந்துகொள்ளக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டது. அவர் அங்கு அரசுக்குச் சொந்தமான இடத்தில்தான் அவற்றை எல்லாம், அந்தத் தற்காலிகக் குடியிருப்புகளை எல்லாம் அமைத்திருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் நேரில் சென்று பார்த்தாலே நன்கு தெரியும். வேறு பிரத்தியேக இடம் ஒன்று வேண்டுமென்று அரசுக்கு இதுவரை அவர் கோரிக்கை விடவில்லை. ஏற்கெனவே ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் தற்காலிகக் குடியிருப்புகளை அவர் ஏற்கெனவே நிறுவி இருக்கிறார். திறப்பு விழாகூடச் செய்துவிட்டார். மேலும் ஒரு பணியாக பாண்டிச்சேரி மாநிலத்திலும் அந்தப் பணியை மேற்கொள்வதற்கு அவர் அன்று செல்கிறார் என்றுதான் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறதே தவிர, தமிழகத்திலே இன்னும் ஓர் இடத்தில் இந்தப் பணியை மேற்கொள்ள கோரிக்கையை அவர் எழுப்பவில்லை. அது தவறான செய்தி. தவறான செய்தியை அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கக்கூடாது.

[2005 ஏப்ரல் 4

முற்பகல் 11–30

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. விவேக் ஒபராய் அவர்களைப் பொறுத்தவரையில், விளம்பரம்தான் மிகவும் பெரிதாக உள்ளது. அவர் செய்தது மிகமிகக் குறைவு. அவர் உதவி புரிந்ததாகக் கூறப்படும் பகுதிகளில்கூட, அரசாங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னென்ன சலுகைகளை, உதவிகளை அறிவித்ததோ, அவற்றையெல்லாம் செய்திருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில் அந்தப் பகுதிகளில் மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளில் 90 சதவிகிதம் அரசால் செய்யப்பட்டது என்றால், 10 சதவிகிதம்தான் திரு. விவேக் ஒபராய் அவர்களால் செய்யப்பட்டது. அவர் சொந்தப் பணத்தைச் செலவழித்து மக்களுக்கு உதவி செய்தார் என்பதெல்லாம் உண்மையான தகவல் அல்ல. மாறாக, என்ன நடந்தது என்றால், அரசு செய்த உதவிகளையெல்லாம் தான் செய்ததுபோல், அவர் விளம்பரப்படுத்திக்கொண்டு, அவர் தனக்கு ஒரு விளம்பரத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதுதான் உண்மை. அவரே, இப்போது பணம் கொடுக்க முன்வந்தவர்கள், Donors இப்போது பின்தங்கிவிட்டார்கள்; அதனால்தான் தமிழகத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை என்று அவரே ஒப்புக்கொண்டு பேட்டியளித்திருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, தமிழகத்தில் அவரால் எதுவும் சாதிக்க முடியவில்லை என்பதற்காகத்தான் பாண்டிச்சேரிக்குச் சென்றிருக்கின்றார். (குறுக்கீடு)

### (இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி என்ன? கேளுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. பரிதி, இன்று காலையில்தான் என்னிடம் கொடுத்திருக்கின்றீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. எப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமோ அப்போது எடுத்துக்கொள்கின்றேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** நாளைக்கு எடுத்துக்கொள்வதாகச் சொன்னால் போதும்.



2005 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதெல்லாம் இப்போது ஜோசியமா பார்க்க முடியும்? (சிரிப்பு) திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, நீங்கள் சொன்னதற்கு முதல்வர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) அதிலே விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) அதிலே விவாதம் வேண்டாம். திரு. ஹேமச்சந்திரன், என்ன? (குறுக்கீடு) இல்லை நீங்கள் கேட்டதற்கு நிதியமைச்சர் அவர்களும் சொன்னார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். திரு. ஹேமச்சந்திரன் சொல்லுங்கள்.

### (ஈ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பலத்த மழை காரணமாக உயிர் இழந்தவர்களுக்கு நிவாரண உதவி

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கன்னியாகுமரி மாவட்டத்திலே மிகப் பெரிய அளவு மழை பெய்து, ஐந்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கின்றார்கள் என்ற தகவல் வரப்பெற்றிருக்கின்றது. அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கும், அதேபோன்று மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த நிவாரணம் கொடுப்பதற்கும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இந்த அவையிலே கோரிக்கை வைத்தாலும், வைக்கவில்லையென்றாலும், அதற்காகக் காத்திருக்காமல், இத்தகைய இயற்கை இடர்ப்பாடுகளால் மரணங்கள் நிகழ்கின்றபோது, அவ்வப்போது விவரங்கள் இந்த அரசுக்கு வரப்பெற்றவுடனேயே, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிக்கொண்டிருக்கின்றோம். மின்னல் தாக்கி இறந்தவர்கள், மழையால் வீடுகள் சரிந்து, இடிந்து விழுந்து அதனால் இறந்தவர்கள், இப்படிப் பல காரணங்களால் இறந்த பொதுமக்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிக்கொண்டே இருக்கின்றோம்; தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கின்றோம். இப்போது ஏற்பட்ட இந்தப் பாதிப்புகளுக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2005 ஏப்ரல் 4

# 5. அறிவிப்புகள்

## (அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை மற்றும் தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சில பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை மற்றும் தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் ஆகியவற்றில் உள்ள காலி இடங்களுக்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ஆட்சிமன்றப் பேரவை 3 உறுப்பினர்கள், சென்னைப் பல்கலைக்கழகம், ஆட்சிமன்றப் பேரவை ஓர் உறுப்பினர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், ஆட்சிமன்றப் பேரவை ஓர் உறுப்பினர், தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் 3 உறுப்பினர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் 3 உறுப்பினர்களின் பதவிக் காலம் 5–12–2007 வரை ஆகும்.

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரது பதவிக் காலம் 6–5–2006 வரை ஆகும்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரது பதவிக் காலம் 21–11–2007 வரை ஆகும்.

தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் 3 உறுப்பினர்களின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

தேர்ந்தெடுக்கப்பட விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 6–4–2005 புதன்கிழமை அன்று பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.



வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்பு மனுக்கள் 7–4–2005 வியாழக்கிழமையன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகின்ற வேட்பாளர்கள் 8–4–2005 வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 3–00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப்பெறலாம். வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், 11–4–2005 திங்கட்கிழமையன்று காலை 10–00 மணிக்கும் பிற்பகல் 1–30 மணிக்கும் இடையே சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலுள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## (ஆ) உறுப்பினர் இல்லாததால் கவன ஈர்ப்பு ஒத்திவைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. தி. வேல் முருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. தி. வேல் முருகன். இருக்கையில் இல்லை. இன்னொரு நாள் எடுத்துக்கொள்ளப்படும்.

# 6. கவன ஈர்ப்பு

## வேலூரில் நவீன பேருந்து நிலையம் அமைப்பதில் ஏற்படும் காலதாமதம்

முற்பகல் 11–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரில் கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான மூடப்பட்ட பழத் தொழிற்சாலை உள்ள இடத்தில் நவீன, புதிய Bus Stand அரசாணைப்படி அமைக்கப்படாமல் காலதாமதம் ஏற்படுவதால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதற்றநிலை குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[2005 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

வேலூர் நகராட்சிக்கென புதிய பேருந்து நிலையம் அமைக்க வேலூர் மாவட்ட கூட்டுறவு நுகர்வோர் மொத்த பண்டகசாலை மற்றும் தனியார்களுக்குச் சொந்தமான 19.47 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் கட்டுவதற்கு அரசாணை எண் 503, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28–10–1999–ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்நிலத்தின் மதிப்பு மிக அதிகமாக உள்ளதாகக் கருதப்பட்டதால், மாற்று இடம் தேர்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்கிணங்க மாற்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டதில், காகிதப் பட்டறை பகுதியில் 12.56 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் புதிய பேருந்து நிலையத்திற்காக தேர்வு செய்யப்பட்டு, இந்த இடத்திற்கான 25 நில உரிமையாளர்களில் 9 நபர்களின் ஒப்புதல் கடிதம் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள நில உரிமையாளர்களின் நில உரிமை சம்பந்தமாக சிக்கல்கள் இருந்ததால் ஒப்புதல் கடிதம் பெற இயலவில்லை. இந்நிலையில் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட வேலூர் மாவட்ட கூட்டுறவு நுகர்வோர் மொத்த பண்டகசாலைக்குச் சொந்தமான நிலப் பகுதி மற்றும் தனியாருக்குச் சொந்தமான இடங்கள், ஆக மொத்தம் 23.49 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த இடம் 28–09–2004 அன்று வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகர் ஊரமைப்புத் துறை ஆணையர், சென்னை ஆகியோரால் கூட்டாய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் முதற்கட்டமாக வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த பண்டகசாலைக்குச் சொந்தமான 8.79 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேலூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு முன்னுரிமையாக 99 ஆண்டுகள் குத்தகைக்கு விட வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அனுமதிக்காக கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 4] [திரு. கே.பி. அன்பழகன்]

மேலும் மாவட்ட ஆட்சியர் மற்றும் வேலூர் உள்ளூர் திட்டக் குழுமத் தலைவரால் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து (Town and Country Planning Development Fund) நிதியுதவி கேட்டு அனுப்பிய கருத்துருவின்மீது நகர் ஊரமைப்பு வாரியம் பரிந்துரை செய்து 18–1–2005–ல் அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இக்கருத்துருவின்மீது ஆணை பெறப்பட்டவுடன், நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி பெற்று புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் இப்போது இருக்கக்கூடிய பேருந்து நிலையம் மிக நெருக்கடியான ஓர் இடத்தில் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு சுமார் 1,500 பஸ்களுக்கு மேல் அங்கே வந்து போகக்கூடிய நிலை. அங்கே போதிய அளவிற்கு இடம் இல்லாத காரணத்தினாலே அடிக்கடி விபத்துகள், அதேபோல traffic jam–நெரிசல் போன்றவையெல்லாம் ஏற்பட்டு, பொதுமக்கள் பெரிய அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே, வேலூரிலே புதிய Bus Stand, நவீன Bus Stand அமைக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை பல வருடங்களாக நிலுவையில் இருந்துகொண்டிருக்கிற இந்தப் பிரச்சினையை இந்த மாமன்றத்தில் பல முறை எழுப்பப்பட்டு, அதற்கான அரசாணைகள் எல்லாம்கூடப் பிறப்பிக்கப்பட்டு, இன்னும் அது செயல் வடிவம் பெறாமலே இருந்துகொண்டிருக்கிறது.

கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான ஒரு பழத் தொழிற்சாலை இருந்த இடம் 8 ஏக்கர் 79 சென்ட் நிலம் இப்போது பல ஆண்டுகளாக கிட்டத்தட்ட ஒரு பதினைந்து ஆண்டு காலமாக சும்மா மூடப்பட்டுக் கிடக்கிறது. அப்படி மூடப்பட்டு வெறுமனே கிடக்கிற அந்த இடத்தைக் குத்தகைக்கு விட்டாலும்கூட அந்தத் துறைக்கும் வருமானம், பேருந்தும் அந்த இடத்திலே இயக்கலாம் என்கிற ஒரு கோரிக்கை நாங்கள் முன்வைத்து, இப்போது அதற்கான — இந்த விவர அறிக்கையிலே அதற்கான விவரங்கள் எல்லாம் இல்லை. இப்போது கூட்டுறவுத் துறை ஏற்கெனவே 29–3–2005 ஆம் தேதி அரசாணை எண் 49–ன்படி, 99 ஆண்டுகளுக்கு அதைக் குத்தகைக்கு விடலாம் என்று ஏற்கெனவே அரசாணை பிறப்பித்திருக்கிறது. அதற்கு நம்முடைய கூட்டுறவுத் துறையினுடைய அமைச்சர், அதேபோல உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் எல்லாம் ஒப்புதல் அளித்ததற்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இதை நீங்கள் உடனடியாக அமலுக்குக்

[திரு. சி. ஞானசேகரன்] [2005 ஏப்ரல் 4

கொண்டுவந்து Bus Stand–ஐ–நீங்கள் உடனே Enter upon Permission இப்போதே கொடுத்து, அந்த இடத்தில் பேருந்து நிலையத்தைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா? அதுபோல அதற்கு நிதி ஓர் இடர்ப்பாடாக... *(மணியடிக்கப்பெற்றது)* ஒரே ஒரு கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கேள்வி கேளுங்கள்; அமைச்சர் பதில் சொன்னபிறகு கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக முதல் கட்டமாக பெறப்பட்டுள்ள 8.79 ஏக்கர் நிலம் வட ஆற்காடு மாவட்ட பழம் பதனிடும் சங்கத்திற்குச் சொந்தமானது. இந்தச் சங்கம் செயல்படாததால் இந்த நிலத்தை வேலூர் மாவட்டக் கூட்டுறவு நுகர்வோர் மொத்த விற்பனைச் சங்கத்திற்கு மாற்ற அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது. அந்த இடத்திலே தற்போது பேருந்து நிலையம் அமைப்பதற்குக் கருதப்பட்டுள்ளது. இந்த இடத்தினை வேலூர் உள்ளாட்சித் திட்டக் குழுமத்திற்கு குத்தகைக்கு விட அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கருத்துருவின்பேரில் அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்மூலம் பரிசீலிக்கப்பட்டு, மேற்படி இடத்தை வேலூர் உள்ளாட்சி திட்டக் குழுமத்திற்குக் குத்தகைக்கு விட அரசு அனுமதி வழங்கவும், மேலும் குத்தகைக் காலம், குத்தகைத் தொகை, முன்பணம் பெறுதல், சட்ட வல்லுநரின் கருத்துரை ஆகியவற்றைப் பரிசீலிக்க கூட்டுறவு மற்றும் உள்ளாட்சி திட்டக் குழுமம் ஆகிய துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்களைக் கொண்டு இறுதி செய்யலாம் எனவும், மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்கும் பட்சத்தில் உடனடியாக வேலூர் திட்டக் குழுமத்திற்கு நிலத்தை ஒப்படைக்கவும், பயன்படுத்தவும் அனுமதி அளிக்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களுக்கு அறிவுரை வழங்கி அரசாணை நிலை எண் 49, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 29–3–2005–ன்படி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதியளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் வேலூரில் பேருந்து நிலையம் அமைப்பதற்காக, தனியாருக்குச் சொந்தமான இடங்கள் சுமார் 13.31 ஏக்கர் நிலத்தினையும் பெற தனி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, இதன்படி வேலூரிலே நீண்டகால கோரிக்கையாக இருக்கின்ற அந்தப் பேருந்து நிலையத்தை அமைப்பதற்குண்டான ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்போடு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு இப்போது Bus Stand அமைக்க வேண்டும் என்று சொன்னால், வேலூர் நகராட்சியிலே போதிய நிதி இல்லை. ஏற்கெனவே சம்பளம் கொடுக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கிற ஒரு நகராட்சியாக வேலூர் நகராட்சி இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதை நகராட்சிமூலம் செயல்படுத்த ஒரு சூழ்நிலை இல்லாத காரணத்தினாலே, இதை நகர ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ஏதாவது grant பெற்று, அப்போதுதான் இந்த Bus Stand–ஐ அமைக்க முடியும் என்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட அங்கு இருக்கக்கூடிய அத்தனை அமைப்புகளும், இப்பொழுது ஊரமைப்பு வளர்ச்சி நிதிக்கு ஏற்கெனவே கோரிக்கை வைத்து, பல செயலாளர்கள் அடங்கிய அந்தக் குழுவும் அதை அங்கீகாரம் செய்து, அதற்கான file இப்போது முதலமைச்சர் அவர்களுக்குச் சென்றிருப்பதாகக் கூறினார்கள். இப்போது நான் கேட்பதெல்லாம், அந்த நகர் ஊரமைப்பு வாரியம்மூலமாக அந்தப் பணத்தை–ஐந்து கோடி ரூபாய்–இப்போது நிலத்தை வாங்குவதற்காக ஒரு proposal கொடுத்தார்கள். ஆனால், இப்போது நிலம் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுவிட்ட காரணத்தினாலே அந்த ஐந்து கோடி ரூபாய் இப்போது கேட்டிருக்கிற பணத்தை grant–ஆகக் கொடுத்து கட்டடம் போன்ற ஒரு infrastructure–அந்தக் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கு நீங்கள் அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். எப்போது இந்த Bus Stand –ஏனென்றால் இப்போதெல்லாம்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் ஞானசேகரன். அவ்வளவுதான். அமைச்சர் சொல்லுங்கள்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தினுடைய மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்றமுகத்தான் மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது அந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்குண்டான ஆயத்தப் பணிகளை மேற்கொண்டுள்ளது. அதன் அடிப்படையிலே அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே அந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்குப் பரிசீலித்து எவ்வளவு விரைவிலே அந்தப் பேருந்து நிலையம் அமைக்க வாய்ப்புகள் உள்ளதோ அதுபோல அமைத்துத் தரப்படும் என்பதைக் கூறுகின்றேன்.

[2005 ஏப்ரல் 4

## 7. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவராக என்னை நியமித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, 2003–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள் குறித்த 28–வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்

### (அ) கோரிக்கை எண் 14 – சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14 – சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.19,98,16,000/– மற்றும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 119 கோடியே...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மூலதனக் கணக்கில் ரூபாய்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வனத் துறை அமைச்சர், 119 கோடியே...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.119,98,16,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2516, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கபிலர்மலைத் தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் வனத் துறைமூலம் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3459, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் எடப்பாடி பகுதியில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களைச் சுற்றி மரங்கள் நட்டு வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4302, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறையின்மூலம் மக்களுக்குப் பயன்படும் வகையில் பலன் தரும் மரங்கள் நட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4625, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5326, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலையில் ஏற்படும் காட்டுத் தீயை அணைக்க கோடைக்காலத்தில் பகுதி நேர ஊழியர்களை நியமித்து காட்டுத் தீக்கு காரணமான காய்ந்த மரங்கள் மற்றும் காய்ந்த சுள்ளிகளை அப்புறப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5789, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறையில் மூலிகைச் செடிகளைப் பெருமளவில் பயிர் செய்து பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6233, திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6287, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6538, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்றாம்பள்ளி தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வனத் துறையின் மூலம் பழக்கன்றுகள், பணப்பயிரான தேக்கு, ரோஸ்வுட், சவுக்கு, தைலம் போன்ற மரக்கன்றுகள் இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7175, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7374, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அதிக அளவில் மரங்களை வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3289, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3853, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் மருத்துவ குணம் கொண்ட சின்கோனா மரங்களை மீண்டும் வனத் துறையின்மூலம் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3964, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் அழிந்து போன பல வனப் பகுதிகளில் புதிய மரங்கள் நட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6344, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மலைகள் மற்றும் வனங்களின் செல்வாதாரமான மரங்களை வனக் கொள்ளையர்கள் அழித்து வருவதைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2794, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5113, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான பனமரத்துப்பட்டி ஏரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் என்.ஜி.ஓ. சார்பில் மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க சேலம் மாநகராட்சி அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5593, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள கடற்கரைகளில் மாங்குரோவ் காடுகள் வனத் துறைமூலம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6658, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் சந்தன மரம் வளர்க்கும் திட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4368, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வைகை நதி உற்பத்தியாகும் இடத்தில் மரக்கன்றுகளை நட்டு மழை வளம் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6907, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டத்தை ஊக்கப்படுத்தி மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7226, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் புறம்போக்கு நிலங்களில் ஊரகத் தோப்புகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6373, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதிக்கு உட்பட்ட ஆற்றுப் படுகைகளில் தரமான தேக்கு கன்றுகள் நடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4150, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட காடுகளில் வெற்றிடங்களில் செயற்கைக் காடுகள் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4601, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4438, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் இயற்கைச் சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3085, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், செலவடை பஞ்சாயத்து, கரட்டுப்பட்டி ஏரி, ராமிரெட்டிப்பட்டி ஓடம்பொறம்போக்கு ஆகிய நிலங்களைத் தனியார் பயன்படுத்தி வருகின்றார்கள். அந்த நிலங்களைத் தனியாரிடமிருந்து மீட்டு அரசுக்கு வருமானம் ஈட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3271, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மழை வளம் குறைந்துள்ள இந்த வேளையில் காடுகள் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2973, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் வனத் துறைக்குச் சொந்தமான மரங்களை வெட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6873, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் யானைகளினால் ஏற்படும் பேரழிவைத் தடுக்க, யானைகள் காட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதற்கு வனங்களைச் சுற்றி 40 கி.மீ. தூரத்திற்கு அகல குழி கால்வாய்கள் ஏற்படுத்த வேண்டியதன் அல்லது வனங்களைச் சுற்றி சோலார் மின்சார தடுப்பு வேலி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6138, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல் உடைக்கும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் தூசியினைக் கட்டுப்படுத்தத் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7249, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்திகரிக்க அனைத்துத் தொழிற்சாலைகளும் ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் சிஸ்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 620, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பம்மல் நாகல்கேணியில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் வெளிவருவதால் நிலத்தடிநீர் மற்றும் அடையாற்றில் ஏற்பட்டுள்ள சுகாதாரக்கேடு குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6194, திரு. ப. அரசன்.

**திரு. ப, அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வு பெற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 220, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை ஆர்.எஸ். புரம் திவான் பகதூர் சாலையையும் வனக் கல்லூரி வழியாக இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4277, திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டாசுத் தொழிலுக்கு மாசு கட்டுப்பாடு விதிகளைத் தளர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.119,98,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.108,45,58,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–45

## (ஆ) கோரிக்கை எண் 31 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,53,42,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2784, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2837, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளம் மற்றும் பணிப் பாதுகாப்பு குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3568, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "படித்து வேலையில்லாமல் உள்ள விளையாட்டு வீரர்கள் இளைஞர்களுக்குத் தொழில் தொடங்க கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4228, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரியலூர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள சில மினி சிமெண்ட் ஆலைகளில் பணிபுரிந்த தொழிலாளர் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4667, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5260, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைவாய்ப்பு கிடைக்காமலேயே வயது வரம்பைத் தாண்டியவர்களுக்கு தொழில் தொடங்க மானியத்துடன்கூடிய கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5832, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து இளைஞர்களுக்கும் சுயதொழில் தொடங்க அரசு இலவச தொழில் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6270, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7116, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தரம் மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7174, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7361, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் ஆபத்தான தொழிலில் ஈடுபடும் கட்டடத் தொழிலாளர்கள், பனையேறும் தொழிலாளர்கள், கல் உடைப்பவர்கள் ஆகியோர் பணியில் இருக்கும்போது மரணம் அடைந்தால் அவர்களுக்கு வழங்கப்படும் தொகையை உயர்த்தித் தருவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3307, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3920, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5487, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5519, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் படித்துப் பட்டம் பெற்று வேலைவாய்ப்புக் கோரி பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 635, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மீனம்பாக்கம் பென்னி இன்ஜினியரிங் நிறுவனத் தொழிலாளர்களுக்குப் பல மாதங்களாக ஊதியம் தராததை உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 963, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தகவல் தொழில்நுட்ப பட்டம் மற்றும் கம்ப்யூட்டர் தகவல் தொழில்நுட்பம் படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3066, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேச்சேரி ஒன்றியத்திலுள்ள கட்டடத் தொழிலாளர்களுக்கு அரசே ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3260, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "படித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து பல ஆண்டுகளாகக் காத்திருப்போருக்கு வேலை வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் தனியார் துறைகளிலும் இட ஒதுக்கீடு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6488, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பணி நீக்கம் செய்யப்பட்ட சாலைப் பணியாளர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5861, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை 2005–2006 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்தம் செய்து, புதிய ஒப்பந்தப்படி கூடுதலாக வழங்க நிர்வாகத்தை அரசு வற்புறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4975, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் அனைத்து கூலித் தொழிலாளர்களுக்கும் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4273, திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த 57 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4593, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4362, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெட்ரோல் பங்குகளில் 5 லிட்டர் calibration செய்வதற்குப் பதிலாக 1 லிட்டர் calibration செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3951, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு பல்வேறு துறைகளின்கீழ் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4082, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் தொழிற்சாலைகளில் இட ஒதுக்கீடு அடிப்படையில் வேலைவாய்ப்பளிக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7270, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பு அலுவலகத்தில் குடும்ப அட்டை இருந்தால்தான் பதிவு செய்ய முடியும் என்றுள்ள நிபந்தனையைத் தளர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6872, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலேயே தொழிற்சாலை நகரமான ஓசூரில் உள்ள துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தை தருமபுரிக்கு மாற்றாமல் அதே இடத்தில் தொடர்ந்து செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6376, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 20 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த வேலைவாய்ப்பும் இல்லாமல் உள்ளவர்களுக்கு உடன் வேலை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6101, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு நகரில் துணை வேலைவாய்ப்பு பதிவு அலுவலகம் ஒன்றினைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6204, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டையில் டிப்ளமா படித்தவர்கள் மற்றும் பொறியியல் பட்டம் படித்தவர்கள் பதிவு செய்ய தனியாக ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4376, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறித் தொழிலாளர்கள் ஓய்வூதியம் பெறும் வயதை 60 என்பதற்குப் பதில் 58 ஆக மாற்றுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7219, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6651, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்புப் பதிவை Internet மூலம் புதுப்பிக்க வழிவகை செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4157, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,09,99,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,42,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

முற்பகல் 11–50

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு

@ 153 முதல் 211 வரையிலான பக்கங்களில் இணைப்பு–I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 213 முதல் 296 வரையிலான பக்கங்களில் இணைப்பு–II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். விவாதத்தில் கலந்துகொள்ளும் மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று முன்மொழியப் பெற்ற இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் தங்களுடைய கருத்துகளை ஒருங்கே தெரிவிக்கலாம். திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு 7 பேர் பேச வேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். முடிந்த அளவிற்கு சுருக்கமாகப் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** இரண்டு மானியக் கோரிக்கைகளும் பெரிய மானியக் கோரிக்கைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. பேசுங்கள்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனம், சுற்றுச்சூழல், தொழிலாளர் நலன் ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளிலே கலந்துகொண்டு என்னுடைய கருத்துகளை, குறிப்பாக எங்களுடைய இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பில் கருத்துகளை பதிவு செய்வதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் பிறந்த கிராமம் என்பது ஒரு வனப் பகுதியினுடைய ஓரத்திலே இருக்கிற கிராமம். எனவே, அந்த ஓரப் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம், பல்வேறு கால கட்டங்களிலே வனத்திலே இருக்கிற விலங்குகள் விவசாயிகளை அடித்துக் கொல்லுகிறபொழுது அல்லது பாதிக்கிறபொழுது, அல்லது கை, கால் உறுப்புகளை இழக்கிறபோது, அன்றைக்கு 5 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை என்று இருந்ததை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியைப் பொறுப்பேற்று நடத்திய எங்களுடைய கழகத் தலைவர், அண்ணன் கலைஞர் அவர்கள் 4–10–1996 ஆம் ஆண்டு 5 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை 50 ஆயிரம் ரூபாயாக, உதவித் தொகையாக நீட்டித்துத் தந்தார்கள். அது போதாது என்று விவசாயப் பெருங்குடி மக்களாக இருக்கிற நாங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க 12–9–2000 அன்று ஒரு இலட்சம் ரூபாயாக அதை நீட்டித்துத் தந்தார்கள். அதேபோன்று, சிறு சிறு காயம் பட்டவர்களுக்கு உதவுகின்ற வகையிலே 20 ஆயிரம்



ரூபாயை அன்றைக்கு அவர்கள் உதவித் தொகையாகத் தந்தார்கள். எனவே, இந்த நேரத்திலே ஒரு வனப் பகுதியிலே வாழ்கிற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்கிற காரணத்தினால்...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு காயம் ஏற்பட்டால் 5 ஆயிரம் ரூபாய்தான். பெரும் காயம் ஏற்பட்டால்தான் 20 ஆயிரம் ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** நான் காயம் ஏற்பட்டால் என்று சொன்னேனேயொழிய பெரிய காயம், சிறிய காயம் என்பதல்ல; ஆக கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒரு தனிப்பட்ட விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் அந்த உதவி கிடைத்தது என்பதற்காக, அந்த வன விலங்குப் பகுதியிலே வாழ்கிற விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் இந்த நேரத்திலே அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தளவிற்கு குறிப்பாக வனம், சுற்றுச்சூழல் ஆகிய இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டை நான் படித்துப் படித்துப் பார்த்தேன். சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருப்பதைத்தான் திரும்ப நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டும் கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு கொள்கைக் குறிப்பு புத்தகத்தை xerox எடுத்து, அதாவது நகல் எடுத்து ஒன்றாக திருப்பிப் படித்தால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இந்த ஆண்டும் கொடுத்திருக்கிறார். இன்னும் சொல்லப் போனால், எங்கள் கிராமப் பகுதியிலே ஒன்று சொல்வார்கள். ஈ அடித்தான் காப்பி என்று சொல்வார்கள். அப்படி ஈ அடித்தான் காப்பியாகத்தான் தொடர்ந்து மூன்று ஆண்டு காலமாக இவ்வாறு கொடுக்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறதேயொழிய புதியதாக இதிலே ஒன்றுமில்லை. அதிலே நான் குறிப்பாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொள்கை என்பது எல்லா காலத்திலும் மாறாது. கொள்கை விளக்கம் அப்படித்தான் இருக்கும். புள்ளிவிவரங்கள்தான் மாறும்.

**திரு. எ.வ. வேலு:** கொள்கை என்பது மாறாது என்பது உங்களுக்கும் தெரியும், எங்களுடைய இயக்கத்திற்கும் தெரியும். ஆனால், இதிலே இருக்கிற புள்ளிவிவரங்கள், பக்கங்கள், பாராக்கள் அவையெல்லாம் தொடர்ந்து இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஒன்று, முதல் பக்கத்திலே, 2–வது பாராவிலே, "இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலக் கொள்கையின் நெறிமுறைக் கோட்பாட்டின்கீழ்

பிரிவுகள் 48 A மற்றும் 51 A(g)—ல் சுற்றுப்புறச் சூழ்நிலை" என்று ஆரம்பித்து கடைசியாக "கடமை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது" என்று இந்த ஆண்டு கொள்கை குறிப்புப் புத்தகத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சென்ற ஆண்டு 2004—2005—ல் அதே para—2—ல் இதேதான் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. வேறு ஒன்றும் மாற்றமே இல்லை.

*முற்பகல் 11—55*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கொள்கை விளக்கக் குறிப்பு என்பது, தொடர்ந்து ஆண்டுக்கு ஆண்டுக்கு அப்படித்தான் வரும். நிதி ஒதுக்கீடு, புள்ளிவிவரங்கள்தான் மாறும். இந்த ஒரு சாதாரண அடிப்படை அறிவுகூட அவருக்கு இல்லை என்பதில் நான் வருத்தப்படுகிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அடிப்படை அறிவு இருக்கிறதா என்பதை இறுதியாக அவர் உரையை நிகழ்த்துகிறபோது சொல்லலாம். ஆனால், இருப்பதை நான் சுட்டிக்காட்டி...

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து எடுக்கலாம்.

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினரைப் பார்த்து அடிப்படை அறிவு இருக்கிறதா என்று கேட்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதா, அவைக்குறிப்பில் இருக்கப்போகிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை இல்லை. அதைத்தான் வேலுவிற்கு நான் ஏற்கெனவே சொன்னேன். அதைத்தான் அமைச்சர் அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். அதில் ஒன்றும் தவறாக அவர் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அதற்குச் சொல்லிவிட்டார். பதிலுரையில் பதில் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டார்.

**திரு. துரைமுருகன்:** அவர் சொல்கிறார் என்பதல்ல. நான் கேட்கிறது, ஓர் உறுப்பினர் தெரிந்துகொள்ள விரும்புவது, நீங்கள் சொன்னதைப்போல், அமைச்சர் சொன்னதைப்போல் கொள்கை மாறாது. அந்த விளக்கங்களுக்கு நான் போகவில்லை. ஆனால், உறுப்பினருக்கு அந்த அடிப்படை அறிவுகூட இல்லையென்று சொல்வதை இந்த அவையில் நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? அப்படித்தான் மற்றவர்களும் பேசலாம் என்று அனுமதிக்கப்போகிறீர்களா என்பதை நான் உங்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்..



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு உறுப்பினரே சொல்லிவிட்டார். பதிலுரையிலே விளக்கம் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டார்.

**திரு. துரைமுருகன்:** நான் அவரைப் பற்றி கவலைப்படவில்லை. எனக்கு வேண்டும் அந்த விடை. ஏனென்று கேட்டால், அது Parliamentary word என்று சொன்னால். அடடா, இவ்வளவு நாட்கள் விட்டுவிட்டோமே; சொல்லாமல் இருந்துவிட்டோமே என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அறிவு என்பது Parliamentary word தான். அறிவு என்பது எல்லாருக்கும் தேவையானதுதானே?

**திரு. துரைமுருகன்:** அப்போது சொல்லலாம் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம்.

**திரு. துரைமுருகன்:** சொல்லலாம் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், சொல்லலாம்.

**திரு. துரைமுருகன்:** இப்போது சொல்லலாம் என்கிறீர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. ரொம்ப நன்றி.

**திரு. எ.வ. வேலு:** அதேபோன்று பக்கம் 2—ல் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) துரைமுருகன், உறுப்பினர்களுக்குள் கருத்துகளைக் காரமாகப் பரிமாறிக்கொள்வது என்பது வேறு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பை வழங்குகிறீர்கள். அந்தத் தீர்ப்பைக்குறித்து ** என்று கேட்பது இந்த அவையை அவமதிக்கின்ற, கண்ணியத்தை மிகவும் குலைக்கின்ற ஒன்று என்பதை கருத்தில்கொண்டு அதை அவைக்குறிப்பில் இருந்து நீக்குமாறு வேண்டுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. நான் துரைமுருகனுக்கு நீண்ட காலமாக நண்பராக இருப்பதிலிருந்து அவருக்கு அந்த சந்தேகம் வந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் தங்களுக்கு நீண்ட கால நண்பர் என்பதை அடிக்கடி அவரும் சொல்கிறார், நீங்களும் சொல்கிறீர்கள். நண்பராக இருக்கலாம், பால்ய நண்பராகக்கூட இருக்கலாம். அதனால் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அதெல்லாம் இந்த அவைக்கு வெளியே இருக்கவேண்டும். இந்த அவைக்குள் நீங்கள், எங்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர். மாண்புமிகு பேரவைத் தலைவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை திரு. துரைமுருகன் அவர்களும் கொடுத்தாகவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நான் மரியாதை கொடுப்பதிலே, அந்த ஆசனத்திற்குக் கொடுப்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்தல்ல. ஆனால், அதைத்தான் நான் திரும்பத் திரும்பக் கேட்டேன். ஓர் உறுப்பினரைப் பார்த்து, அடிப்படை அறிவு இருக்கிறதா என்று கேட்பது சரியானதா என்று கேட்டேன். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். அதை நீங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ** என்கிற வகையிலே அவரை, அதைச் சொல்லவில்லை. அவர் பொதுவாகச் சொன்னது, கொள்கை என்பது மாறாது, புள்ளிவிவரங்கள் மாறும். இந்த அடிப்படை அறிவுகூட இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் பேசக்கூடாது என்றுதான் அவர் குறிப்பிட்டார். (குறுக்கீடு) பொதுவான கருத்தைத்தான் சொன்னார்.

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன். இந்த அடிப்படை அறிவுகூட இல்லாமல் சொல்கிறாரே என்று சொன்னார். சொல்லலாமா என்றுதான் கேட்டேன். அதற்கு கேட்கும்போது. திரும்ப நான் use பண்ணும்போது. ** என்று நான் கிஞ்சித்தும் சொல்லமாட்டேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. துரைமுருகன் உட்காருங்கள். நீங்கள் கேட்டீர்கள். தாங்கள் ஒரு சந்தேகத்தைக் கேட்டீர்கள். அதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



நான் பதில் சொல்லிவிட்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல ** என்பது பேரவையினுடைய கண்ணியத்தைச் சீர்குலைக்கக்கூடியது. ஆகவே, அதுமட்டும் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** அப்படியானால் ஒன்றைத் தெரிந்துகொள்கிறேன். ** உறுப்பினர்களை, அமைச்சர்களைப் பார்த்து சொல்லலாம் என்று ruling கொடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை, இல்லை. இது ரொம்ப தவறு.

நண்பகல் 12–00

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இந்த விஷயத்தை திசை திருப்புகிறார்; திரித்துக் கூறுகிறார். அமைச்சர் அவர்கள் மதிப்பிற்குரிய உறுப்பினரைப் பார்த்து ** என்று கேட்கவில்லை. அவர் பேரவைத் தலைவரைப் பார்த்து, இப்படி இந்த உறுப்பினர் சொல்கிறாரே என்று கொள்கை விளக்கக் குறிப்பைப் பற்றிக் குறிப்பிட்டு இந்த அடிப்படை அறிவுகூட இல்லாமல் பேசுகிறாரே என்றுதான் சொன்னார். ** என்று கேட்பதற்கும், இந்த அடிப்படை அறிவுகூட இல்லாமல் பேசுகிறாரே என்று சொல்வதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது ஆட்சேபனைக்குரிய சொற்களே அல்ல. ஆனால், திரு. துரைமுருகன் அவர்கள் நேருக்கு நேராக அவைத் தலைவரைப் பார்த்துக் கேட்ட கேள்விதான் மிகவும் ஆட்சேபனைக்கு உரியது. மீண்டும் சொல்கிறேன், ஒன்றாகப் பழகியவராக இருக்கலாம், ஒன்றாகப் படித்தவராக இருக்கலாம், ஆனால், அதற்காகத் தொடர்ந்து இந்த அவையில் அளவுக்கு மீறி அவர் உரிமை எடுத்துக்கொள்வதும், அளவுக்கு மீறி இந்த அவையின் நேரத்தை அவர் வீணாக்குவதும், தொட்டதற்கெல்லாம் எழுந்து நின்று பேரவைத் தலைவரோடு சரிசமமாக running commentary போல் பேசிக் கொண்டிருப்பதும் சரியல்ல. இன்றோடு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் ஏதோ running commentary அடிப்பதுபோல இன்றைக்கும் சொன்னார், அன்றைக்கும் சொன்னார். இன்னும் சொல்லப்போனால், நான் பேசாமலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

உட்காந்து கொண்டிருக்கிறேன். ஆனால் ஒன்று, இந்த அடிப்படை அறிவு இருக்கிறதா என்பதை எப்படிச் சொல்ல வேண்டுமென்று சொல்லிக் கொடுத்த முதல்வருக்கு நன்றி. நாங்கள் அப்படியே சொல்கிறோம்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 3-ல், வனங்களின் பரப்பு என்ற தலைப்பிலே 2004-2005, 2003-2004 இரண்டு ஆண்டுகளுக்கான கொள்கைக் குறிப்பிலும் தொடர்ந்து அப்படியே அதே Para-தான் இடம்பெற்றிருக்கிறது. ** இங்கே வனத் துறையின் கட்டுப்பாட்டில் 22870 ஏக்கர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, என்ன இது? அவர் பொதுவாக ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டுச் சொன்னார். (குறுக்கீடு) நீங்கள் மறுபடியும் அதையே சொல்வது முறையல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வேலு அவர்கள் அமைச்சர் அவர்களைப் பற்றிக் கூறியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு வேண்டுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் கூறியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) தயவுசெய்து பேசுங்கள், வேறு ஏதேனும் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சரைக் குறிப்பிட்டு அப்படிச் சொல்வது முறையல்ல. (குறுக்கீடு) அவர் உங்களை நேரடியாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே. (குறுக்கீடு) உங்களை நேரடியாகக் குறிப்பிட்டு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் குறிப்பிடவில்லை. (குறுக்கீடுகள்) வேலு, இன்னும் 4 மணித்துளிகள்தான் கொடுக்க முடியும், இதேமாதிரி பேசினீர்கள் என்றால். இன்னும் 6 உறுப்பினர்கள் பேசவேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார். கொள்கை விளக்கம் என்பது தொடர்ந்து அப்படித்தான் இருக்கும் என்று கூறினார். அப்படி கூறிய பிறகும், அமைச்சரை நோக்கி ** கூறியதை தாங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** This is a personal insinuation; this is a character assassination. It is a personal insinuation. இது அவைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) வேலு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுவாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார் என்பதற்காக, அமைச்சரை நேரடியாக அப்படிக் குறிப்பிட்டுச் சொல்வது என்பது முறையற்றது. (குறுக்கீடுகள்) இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகச் சொல்லவில்லை. ** என்று சொல்லவில்லை. நேரடியாக அவர் குறிப்பிடவில்லை. (குறுக்கீடு) அவர் பொதுவாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டார். (குறுக்கீடு) அதற்கு உடனே, வேண்டுமென்றே இப்படிப் பதில் சொல்வது முறையற்றது.

**திரு. துரைமுருகன்:** திரும்பத் திரும்பச் சொன்னேன். வேண்டாம் Sir, expunge செய்திருந்தீர்கள் என்றால், சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்சினையே வந்திருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, பேசுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி கொள்கைக் குறிப்பு என்று சொல்லிவிட்டு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி இளம்வழுதி, தயவுசெய்து இப்படி உட்கார்ந்து கொண்டு பேசுவது முறையற்றது. தாங்கள் தொடர்ந்து இதேமாதிரியான வேலையைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுந்து பேசாமல், ஓர் உறுப்பினர் பெரிய அறிவாளியா என்று பேசுகிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி இளம்வழுதி, தாங்கள் தொடர்ந்து இதேமாதிரி வேலையைச் செய்துகொண்டிருக்கிறீர்கள். அமர்ந்துகொண்டே பேசுவது, அமர்ந்துகொண்டே விவகாரமாக comment அடிப்பது என்கிற இந்த முறைகள் எல்லாம் சட்டமன்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

நெறிமுறைகளுக்குப் புறம்பானது. (குறுக்கீடு) நீங்கள் நடத்தினீர்கள், எப்படி நடத்தியிருப்பீர்கள் என்று தெரிகிறது. ஆகவே, தயவுசெய்து இப்படிப்பட்ட முறையைப் பின்பற்றக் கூடாது. ஏற்கெனவே பரிதி இளம்வழுதி இரண்டு, மூன்று முறை இந்த அவையிலிருந்து அகற்றப்பட்டிருக்கிறார். அதற்குப் பிறகும் இதே முறையைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார். தயவுசெய்து நிதி அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடர் முடிகிற வரை பரிதி இளம்வழுதியை அவையிலிருந்து நீக்கி வைக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை முன்மொழிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–05*

## 9. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவைப் பணிகளினின்றும் திரு. பரிதி இளம்வழுதி அவர்களை கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொடர்ந்து பேரவைத் தலைவர் அவர்களை அவமதித்தும், அமர்ந்துகொண்டும், தகாத முறையிலே, பேரவையிலே கண்ணியத்தைப் பாதிக்கும் வகையிலே பரிதி இளம்வழுதி தொடர்ந்து பேசுகிற காரணத்தால், இந்தப் பேரவையினுடைய கூட்டம், தொடர் கூட்டம் முடிகின்றவரை அவையிலிருந்து அவரை நீக்கி வைக்க வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திரு. பரிதி இளம்வழுதி அவையிலிருந்து அகற்றப்படுகிறார். இந்தக் கூட்டத் தொடர் முடிகிற வரை அவர் அவை நிகழ்ச்சிகளில்



கலந்துகொள்ளக் கூடாது. (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் அவரை அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(திரு. பரிதி இளம்வழுதி பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர்தான் பேசுகிறார், வேறுயாரும் பேசவில்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர்தான் இப்போது பேசுகிறார். (குறுக்கீடுகள்) துரைமுருகன், பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய பிரச்சினை, இவ்வளவுக்கும் ஆளும் கட்சியினுடைய Treasury Bench–ல் உட்கார்ந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அதற்கு, நான் அதை எடுத்துச் சொன்னபோது, அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அதற்குரிய ஒரு கருத்தை பரிதி அவர்கள் இடத்திலே உட்கார்ந்து சொல்லக் கூடாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதற்கு-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், தொடர்ந்து இதே முறையைப் பின்பற்றுகிறார். ஒருநாள், இருநாள் அல்ல, தொடர்ந்து இதே முறையைப் பின்பற்றுகிறார். முதலில் அவருக்கு அந்த முறையை, எப்படி நடந்துகொள்ள வேண்டும் அவையிலே என்பதைத் தயவுசெய்து கற்றுக் கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு நீங்கள் அழைத்து வாருங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆனால், அதே நேரத்திலே, (குறுக்கீடு) இப்போதும் அந்தப் பக்கத்திலேயும்தான் உட்கார்ந்துகொண்டு பேசுகிறார்கள். இப்போது நான் ஒன்றைச் சொல்கிறேன். மனசாட்சி இருக்கட்டும். (குறுக்கீடு) இப்போது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், போடா indecent fellow என்று சொன்னார். இப்போது இங்கே சொன்னார். நான் அதை எடுத்துக்கொண்டேனா? பரிதியை நீங்கள் வெளியே அனுப்பும்போது. (குறுக்கீடு) ஆம், அதேதான், there you are, there you are, there you are. (குறுக்கீடுகள்) போடா indecent fellow என்று சொல்கிறார். நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டால், அப்போது முதலிலே அவரை வெளியே அனுப்புங்கள்.

[2005 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், அவையிலே நீங்கள் வேறு. எதையும் பேசவே கூடாது என்று நான் கட்டளையிடவில்லை. (குறுக்கீடு) தாங்கள் ஏதாவது பேசலாம், பேசும்போது நீங்கள் நட்பு ரீதியிலே ஏதாவது comment அடிக்கலாம். அது வேறு. (குறுக்கீடு) அது வேறு.

**திரு. துரைமுருகன்:** நான் என்ன சொல்கிறேன் என்றால் ஒரு மாண்புமிகு அமைச்சரே, போடா indecent fellow என்று சொல்கிறார். நான் என்ன சொல்கிறேன் என்றால், அதற்கு அவரே சொல்கிறார்; ஆமாம், indecent fellow என்றுதான் சொல்கிறார். He accepts. ஒத்துக்கொள்கிறீர்களா, அவரை வெளியே அனுப்புகிறீர்களா? அதனால் தயவுசெய்து இதேபோல, எங்கள் பரிதி அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை மிக அதிகம். ஆகையினாலே நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் அந்தத் தண்டனையை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தொடர்ந்து இதே முறையைப் பின்பற்றமாட்டார் என்கிற உறுதியைத் தாங்கள் வழங்கினால், தொடர்ந்து இதே முறையில் அமர்ந்துகொண்டு பேசுவது, அமர்ந்துகொண்டு விளக்கம் சொல்வது, அமர்ந்துகொண்டு கேவலமாகத் திட்டுவது என்கிற இந்த முறையை அவர் பின்பற்றமாட்டார் என்று தாங்கள் உறுதி சொல்வதாக இருந்தால் நான் என்னுடைய நிலைமையைப் பரிசீலிக்கிறேன். அவை முன்னவர் அவர்களும் நிலைமையைப் பரிசீலிப்பார்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சில நேரங்களில் சில உறுப்பினர்கள் சில பகுதிகளிலிருந்து அமர்ந்துகொண்டு பேசுவார்கள். எல்லா பக்கத்திலேயும் இருக்கின்றது. ஆனால், அது தேவையா என்றால் ஒட்டுமொத்தமாக அமர்ந்துகொண்டு பேசுவதை, அது ஆளுங்கட்சியானாலும், எதிர்க்கட்சியானாலும், அது தேவையில்லை என்று கருதுகிறவன் நான். ஆகையினாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இப்போதைய பிரச்சினை பரிதி இளம்வழுதியைப் பற்றியது. பரிதி இளம்வழுதி இனிமேல் ஒழுங்காக நடந்துகொள்வார் என்று...

**திரு. துரைமுருகன்:** இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்து மீண்டும் அவரை அவைக்கு வரும்படி அழைப்பதற்கு தாங்கள் ஆணையிட வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.



2005 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த உறுதியைத் தாங்கள் தருவதாக இருந்தால் நான் அந்த நிலைமையைப் பரிசீலிப்பேன். அவை முன்னவர் கொண்டுவந்த தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிதி மட்டுமல்ல, யாருமே இந்த அவையிலே உட்கார்ந்துகொண்டு பேசக் கூடாது என்பதில் தாங்கள் ஒரு முடிவு எடுக்க வேண்டும். நாங்களும் பரிதியை அப்படிப் பேசாமல் இருப்பதற்கு வாக்குறுதி அளிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பரிதி இளம்வழுதி அவையில் கண்ணியத்தோடு செயல்படுவார் என்பதற்கான ஒரு வாக்குறுதியை தி.மு.க. சார்பிலே கூறியிருக்கிற காரணத்தால், தீர்ப்பினை மறுபரிசீலனை செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நாளைக்கு அவரை அவைக்கு அழைத்து வாருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாளை என்பதை மாற்றி இன்றைக்கே வரச் சொல்ல வேண்டுமென்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரச் சொல்லுங்கள். திரு. பரிதி இளம்வழுதியை வந்து கலந்துகொள்ளச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–10

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனங்கள்... (குறுக்கீடுகள்)

## (ஆ) திரு. பரிதி இளம்வழுதி அவைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதி அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம். பரிதி இளம்வழுதி இன்றைக்குக் கலந்துகொள்ளலாமா என்பதற்கு அவை முன்னவர் அவர்கள்தான் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

[2005 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இன்று அவையில் கலந்துகொள்ளலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 8. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, பேசுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த கொள்கை விளக்கப் புத்தகத்தைப் பற்றி நான் சொல்கிறபோது, வாக்கியங்கள் தொடர்ந்து அப்படித்தான் இருக்கும். எண்ணிக்கை எல்லாம் மாறும் என்று இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். 21 பாராக்கள் அப்படியேதான் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எண்ணிக்கையாவது மாறியிருக்கிறதா என்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, இரண்டு மணித் துளியில் முடியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசுவது, இப்படித்தான் பேசுவார். அவையினுடைய நேரம் இவ்வளவு வீணாகிவிட்டது? (குறுக்கீடுகள்)

**திரு. எ.வ. வேலு:** 21 பாராவும் அப்படித்தான் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. எண்ணிக்கையைப் பொறுத்த அளவிற்கு பக்கம் 3–லே பார்த்தால், வனத் துறையின்கீழ் 22,820 சதுர கிலோ மீட்டர் அது 17.584 விழுக்காடாக உயரும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது தொடர்ந்து 3 ஆண்டுகாலம் இதே எண்ணிக்கைதான் குறிப்பிடப்பட்டிருக்கிறதேயொழிய, வேறு ஒன்றும் அல்ல. அதற்கு அடுத்தபடியாக, பக்கம் 8–லே, மாநிலத்தின் மொத்த வனப் பரப்பில் வன உயிரின நிர்வாகத்தின் கீழுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியினை 25 விழுக்காடுகள் அதிகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டும் இந்த 25 விழுக்காடுதான் சொல்லப்பட்டது. இந்த ஆண்டும் இதுதான் சொல்லப்படுகிறது. ஆக எண்ணிக்கைகூட தொடர்ந்து அதேதான் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய, வேறு ஒன்றும் அல்ல.



**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17.8 சதவீதம் இருந்த வனமானது, இப்போது எவ்வளவு சதவீதம் உயர்ந்திருக்கிறது என்பதை என்னுடைய பதிலுரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 16–லே, கொள்கை விளக்கக் குறிப்பிலே, என்ன சொல்லப்பட்டிக்கிறது என்றால், மழை மிகவும் குறைந்த நிலையில், இத்திட்டத்தின்கீழ், சேமிப்புப் பணிகள்மூலமாக தண்ணீர் இருப்பு, கிராமங்களில் 5 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடு உயர்ந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் இந்த ஆண்டு. ஆக தொடர்ந்து பார்க்கிறோம். 2003–2004–லும் இதே வாக்கியம்தான். 5 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடு. 2004–2005–ல் 5–லிருந்து 10 விழுக்காடு...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடு வளர்ப்புத் திட்டத்தில், அந்தக் கிராமத் திட்டத்தில் எடுத்துக் கொண்ட வேலையின் அடிப்படையில், தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள் போன்றவற்றை அமைத்ததன்பொருட்டு, நீர்மட்டம் 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. அந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதால் உயர்ந்திருக்கிறது என்றுதான் இதில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து ஒரே நிலையிலே அந்த 5–லிருந்து 10 விழுக்காடு என்பது தொடர்ந்திருக்கிறது. மழை இருக்கும்போது ஏறும், மழை குறைந்தால் இறங்குவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், தொடர்ந்து 5–10 விழுக்காடு என்றுதான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) பதில் சொல்லுங்கள், நான் என்ன வேண்டாம் என்றா சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் முடியுங்கள் (குறுக்கீடுகள்) வேலு, கடைசி வாக்கியத்தை நிறைவு பண்ணுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 31-3-2002 அன்று 441 கோடி ரூபாய் செலவிடப்பட்டது என்று 2004-2005-ல் 19 ஆம் பக்கத்தில் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு, இந்த ஆண்டு, அதே குறிப்புப் புத்தகத்தில், 31-3-2002 அன்று வரை 445.99 கோடி ரூபாய்க்கு—இதில் எது சரி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்திவேல் முருகன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, எவ்வளவு நேரம், (குறுக்கீடுகள்) எவ்வளவு நேரம்? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை இன்னும் 6 பேர் பேச வேண்டும். 2 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) 6 பேர் பேச வேண்டும், இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். திரு. சக்திவேல் முருகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு, வனம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த, சோதனைகள் பல கடந்து, தளராத நெஞ்சுறுதியால் சாதனையை தன்வசமாக்கி, இன்னலுற்ற அனைவரின் வேதனையை நீக்கி வெற்றி கண்ட தமிழக முதல்வர் எங்கள் வாழ்வாதார மூச்சு இதய தெய்வம் எனது அன்னைக்கும், (குறுக்கீடுகள்) சங்கத் தமிழின் வித்தாம் எங்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் (குறுக்கீடுகள்) முதன் முதலில் எனது நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தொழிலாளர் நலமாக இருக்க வேண்டுமென்றால் – தொழிற்சாலை மேம்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு வித்தியாசமான துறை, இது ஒரு கடல் போன்றது. கடல் என்றால் அலை இருக்கத்தான் செய்யும். உடல் என்றால் நோய் இருக்கத்தான் செய்யும். அதேபோல் தொழிலாளி, முதலாளி என்றால் பிரச்சினைகள் வந்து போய் இருக்கும். பிரச்சினைகள் வருவதும், வருகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதும்தான்



இந்தத் துறையின் முக்கியமான பணியாகும். அவர்கள் இருவரையும் எந்தக் காலத்திலும் பிரிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் சொன்னதைப்போல இந்த மானியக் கோரிக்கைகளின்மீது தரத்துடன் சில கருத்துகளை பதிவு செய்ய விரும்புகிறேன். அதேசமயம் இங்கே அண்ணாச்சி எ.வ. வேலு அவர்கள் கூறும்பொழுது சில சலுகைகள் வழங்கியதாகக் கூறியதால் கடந்த கால சில உண்மை நிகழ்வுகளை இந்த சமயத்தில் சுட்டிக்காட்டுவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன், அண்ணாச்சி என்கிறது திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். தான். திரு. எ.வ. வேலு அவர்களுக்குச் சொன்னால் புரியாது. (குறுக்கீடு)

**திரு. எம். சக்திவேல் முருகன்:** கடந்த கால சில உண்மை நிகழ்வுகளை இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்டுவது எனது கடமை என்று நினைக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசினுடைய நிர்வாகத் திறமையை பொறுத்துத்தான் அந்த மாநிலத்தில் தொழில் அமைதி நிலவும். காவல் துறையினுடைய கடமை உணர்வின்மூலமும், தொழிலாளர் நலத் துறையினருடைய அணுகுமுறையின்மூலமும்தான் – தொழிற்சாலைகளில், தொழிலாளர்கள் நிம்மதியாக வேலை பார்க்க முடியும். அந்த வகையில் பார்த்தால் கடந்த கால தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறையில் சிறு கவனம்கூட செலுத்தப்படவில்லை. இங்கே வனத் துறையைப் பற்றி பேசும்பொழுது எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் எதற்கெடுத்தாலும் 5%, 10% தான் தொடர்ந்து உயர்வு என்று கூறினார்கள். ஆனால், கடந்த கால தி.மு.க. ஆட்சியில் சரியான நிர்வாகத் திறமையின்மை காரணமாக 1997 ஆம் ஆண்டு மொத்த மனித வேலை இழப்பு நாட்கள் 20,97,873 ஆகும்.

இப்படி, 1997 ஆம் ஆண்டில் அம்மா ஆட்சியை விட, கூடிய இழப்பு நாட்களைக் கடந்த தி.மு.க. அரசு கொஞ்சமாவது தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்ததா என்றால் தீர்க்கவில்லை மாறாக 1998 ஆம் ஆண்டு அது 20 இலட்சத்திலிருந்து உயர்ந்து 30,55,614 வேலை இழப்பு நாட்களாக கூடி பெரும்பாலான தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா நடத்திவிட்டார்கள். அதற்குப் பிறகும் அந்தத் துறையை கவனிக்காமல் பல தொழிற்சாலைகளை அறவே மூடிய பிறகும் 1999 ஆம் ஆண்டு 26,54,141 வேலை இழப்பு நாட்கள் என்ற அளவில் குறையாமல் இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியினருக்கு தொழிலாளர்களை கவனிக்க எங்கே நேரமிருந்தது? அவர்கள் எண்ணமெல்லாம் எங்கள் அம்மாவை எப்படியாவது வழக்குகளைப் போட்டு அழிப்பதில்தான் நேரத்தை, கவனத்தைச் செலுத்தினார்கள். ஆனால், எங்கள் அம்மா அவர்களுடைய பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மூலமாகவும், அணுகுமுறையின் காரணமாகவும் மொத்த மனித வேலை இழப்பு நாட்கள் 2003 ஆம் வருடம் 15,70,863 ஆக குறைந்தது. மேலும், 2004 ஆம் வருடம் இது 11,50,415 ஆக குறைந்தது. அம்மா அவர்களின் சீரிய நிர்வாகத்தினால் இப்படிக் குறைந்தது. மனித வேலை இழப்பு நாட்கள் மிகவும் குறைவானது. இது மேலும் கடந்த தி.மு.க. ஆட்சியை விட இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் மனித வேலை இழப்பு நாட்கள் பாதியாக குறைக்கப்பட்டது அம்மா அரசின் நடவடிக்கைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள்மீது கருணை காட்டுவதில் எங்களுடைய அம்மாவுக்கு நிகர் வேறு யாரும் இல்லை என்பதற்கு பல உதாரணங்கள் கூற முடியும். அது அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சி காலமாக இருந்தாலும் சரி, அல்லது தற்போது நடைபெறும் அம்மா அவர்களுடைய ஆட்சி காலமாக இருந்தாலும் சரி, அம்மா அவர்கள்தான் பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்களுக்கு பல்வேறு வகைகளில் கருணை காட்டியுள்ளார்கள்.

அம்மா அவர்களால் 1994 ஆம் ஆண்டில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு—கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் என்ற அமைப்பை உருவாக்கி அதில் 6,36,812 நபர்களை ஆரம்ப காலத்தில் உறுப்பினர்களாக்கி அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான வழிமுறைகளையும் அப்போது அம்மா அவர்கள் ஏற்படுத்தினார்கள். தற்பொழுது மீண்டும் அம்மா அவர்கள் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை இதே அவையில் அறிவித்தார்கள்.

அரசு ஊழியர்கள் போன்றவர்களுக்கு முக்கிய பணிப் பாதுகாப்பும், பணிப் பாதுகாப்பிற்குரிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களும், உள்ளன. இத்தகைய பணிப் பாதுகாப்பே இல்லாத சூழ்நிலையிலும், பணிப் பாதுகாப்புக்குரிய அரசு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இல்லாத சூழ்நிலையிலும், இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பான சுமார் 6½ இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையின் எதிர்காலத்திற்கு உண்மையான ஒளி விளக்கு ஏற்றியவர் எங்கள் அன்னை



என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புள்ளிவிவரத்துக்காக நான் கூறுகிறேனே தவிர, இதை இப்பொழுது நான் கூறுவது யாரையும் குறை கூறும் நோக்கில் இல்லை. இந்தச் சலுகை உழைக்கின்ற உழைப்பாளிகள் கட்சி நடத்துகின்ற மேற்கு வங்காளத்தில்கூட இது இல்லை. இந்தச் சலுகை கேரளாவில்கூட முழுமையான அளவில் இல்லை. இந்தச் சலுகையை அறிவித்து அம்மா அவர்கள் உண்மையான கம்யூனிசவாதியாக, கம்யூனிச சித்தாந்த வாதியாக, கம்யூனிச சித்தாந்தத்தை செயல்படுத்திய எங்கள் அன்னையே, உழைக்கின்ற வர்க்கம் இன்று உங்களைத் தலை வணங்குகிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே இந்தச் சலுகையை அளித்தவர் நமது அம்மாதான் என்பதை பெருமையுடன் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–20

அதைப்போல, விவசாயி சேற்றிலே கால் வைக்கவில்லை என்றால் நாம் சோற்றிலே கை வைக்க முடியாது என்று சொல்வார்கள். அந்த அளவில் நமது நாட்டினுடைய பரம்பரைத் தொழிலான, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டி, 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு எங்கள் அம்மா அவர்கள் இதே அவையில் கூலி உயர்வை அளித்து, 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுடைய நீண்ட, நெடுங்கால ஏக்கத்தைப் போக்கி, வாட்டம் நீக்கி, உண்மையான விவசாயியாக அம்மா அவர்கள் திகழ்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறையில் போராட்டம் என்பது தவிர்க்க முடியாதது. ஆனால், அவற்றை, அந்தப் பிரச்சினைகளை முடிப்பதில்தான் ஓர் அரசினுடைய திறமையும் வெற்றியும் உள்ளது. தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிகின்ற தோட்டத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு ஊர்வலமாகச் சென்ற போது, எனது சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த மாஞ்சோலை எஸ்டேட் தோட்டத் தொழிலாளர்களையும் அவர்களது குழந்தைகளையும் அடித்துவிரட்டி, தாமிரபரணி ஆற்றில் 17 பேர்களைக் கொன்றதோடு நிற்காமல் கூலி உயர்வு கேட்டவர்கள்மீது பல்வேறு வழக்குகள் பதிவு செய்து அவர்களைக் காட்டுக்கும், கோர்ட்டுக்கும் அலைய வைத்தார்களே, கடந்த கால தி.மு.க. ஆட்சியினர். அவர்கள்மீது உள்ள வழக்குகளை வாபஸ் பெறுங்கள் என்று இதே அவையில் கேட்டபோது, அவர்கள்

மேல் முன்னாள் தி.மு.க. ஆட்சி கருணை காட்டியதா என்றால் கருணை காட்டவில்லை. வழக்குகளை வாபஸ் பெறக் கோரிய தோட்டத் தொழிலாளர்கள்மீது கருணை காட்டினார்களா என்றால் இல்லை.

அதேபோல, 10–4–2000, 15–5–2000 மற்றும் ஜூலை, 2000 ஆகிய காலங்களில் பச்சை தேயிலைக்கு விலை உயர்வு வேண்டும் என்றும், கூலி உயர்வும் கேட்டு, அறப்போராட்டம், மேல் சட்டை இல்லாத அறப் போராட்டம், ஆதிவாசிகள் இன மக்கள் அறப் போராட்டம் செய்தவர்கள்மீது கொஞ்சம்கூட இரக்கமில்லாமல் இருபதுக்கும் மேற்பட்ட வழக்குகளைப் போட்டு சிறையில் அடைத்து, தொழிலாளர்களுக்கு, சிறு, குறு விவசாயிகளுக்குத் துரோகம் செய்தது யார்? கடந்த தி.மு.க. அரசு அல்லவா? அவர்கள்மீது முன்னாள் முதல்வரும், கடந்த தி.மு.க. ஆட்சியும் கருணை காட்டினார்களா என்றால் இல்லை. ஆனால், நான் முதலில் சொன்ன மாஞ்சோலைத் தேயிலை தோட்டத் தொழிலாளர்கள்மீதும், நீலகிரி மாவட்டத் தேயிலைத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகள், ஆதிவாசி மக்கள்மீதும் தொடரப்பட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற்று தொழிலாளர்களின்மீது உண்மையான கருணை காட்டியவர் எங்கள் அம்மா அவர்கள்தான். (மேசையைத்தட்டும் ஒலி) எத்தனை வருடங்களானாலும் வழக்குகள் போட்டு துரோகம் செய்தது முன்னாள் தி.மு.க. ஆட்சி என்பதையும், வழக்குகளை வாபஸ் பெற்றது இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சி என்பதையும் மறக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது. அதேநேரம் அவர்களுடைய வாழ்வு, மறைந்த முன்னாள் மத்திய வர்த்தகத் துறை அமைச்சரின் தவறான ஏற்றுமதி–இறக்குமதிக் கொள்கையால் தேயிலைத் தொழில் முற்றிலும் நலிவடைந்து போனதை ஏற்றம் பெறும் வகையில், ஊட்டி தேயிலை என்று அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தி, ரேஷன் கடைகளில் விற்கச் செய்து தொழிலாளர்களுடைய குடும்பத்திற்குக் கருணை காட்டியது அம்மா என்பதை நீலகிரி மாவட்ட மக்கள் மறக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் எப்படி கருணை காட்டினார்கள் என்பதற்கு இரண்டு உதாரணங்களைச் சொல்லியுள்ளேன். இன்னும் ஒரேயொரு உதாரணம். அரசு இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் பிரச்சினையில் இவர்கள் எப்படி கருணை காட்டாமல் வஞ்சித்தார்கள் என்பதைப்பற்றி இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 1984 'ஆம்' ஆண்டு முதல் அரசு இரப்பர் கழகமாக



அமைக்கப்பட்ட அந்த இரப்பர் கழகம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அம்மா அவர்களின் ஆட்சியில் இலாபகரமாகச் செயல்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு தி.மு.க.–வினுடைய நிருவாகச் சீர்கேட்டின் காரணமாக நஷ்டமடைந்து அங்கே பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1–1–1998 முதல் 3½ ஆண்டுகளுக்குரிய சம்பளம் வழங்க முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டார்கள். சம்பளத்தைப் பெற முடியாமல் குடும்பத்தை வழி நடத்திச்செல்ல முடியாமல் தவித்த தொழிலாளர்களுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் இருந்த நேரத்தில், அன்றைய தி.மு.க. ஆட்சியின் முதல்வர் அவர்கள் திருவள்ளுவர் சிலை திறக்க கன்னியாகுமரி மாவட்டம் வந்தார்கள். எதற்கெடுத்தாலும் பொற்கால ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்லிய முதல்வர் அவர்கள் வருகிறார்களே, அவர்கள் வரும்போது இரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு நற்காலம் வராதா என எண்ணி, ஜனநாயக ரீதியில் அன்றைய முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற வகையில் அறப் போராட்டம் செய்த போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய முதல்வர் அவர்கள் என்ன சொன்னார் என்றால், இருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கும்போது இதே நிலை நீடித்தால் நாங்களே மீண்டும் ஆட்சிக்கு வந்தால்கூட இந்த அரசு இரப்பர் கழகத்தை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று சொன்னார். பல்லாயிரக்கணக்கான அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு சம்பளமும் வழங்காமல் துரோகம் செய்துவிட்டுச் சென்றதுதான் அன்றைய தி.மு.க. ஆட்சி. அன்றைய முதல்வர் சம்பளம் மட்டுமா கொடுக்கவில்லை? மழை, வெயில் எனப் பாராமல் உழைக்கும் அந்தத் தொழிலாளர்களுக்கு அம்மா ஆட்சியில் வழங்கிக் கொண்டிருந்த சாதாரண 40 ரூபாய் குடைகூட கொடுக்கவில்லை. குடை மட்டுமா கொடுக்கவில்லை பேரவைத் தலைவர் அவர்களே; அவர்களுக்கு bed sheet–ம் கொடுக்கவில்லை. அவர்களுக்கு bed sheet மட்டுமல்ல. அவர்களுக்கு uniform–மும் கொடுக்கவில்லை. அவர்களுக்கு ஒன்றுமே கொடுக்கவில்லை. ஆனால், நஷ்டத்தில் இயங்கி வந்த இரப்பர் கழகத்தை இலாபகரமாக்கியும், தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நடப்பு சம்பளத்தையும் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் தி.மு.க. ஆட்சியில் கொடுக்காமல் விட்டுச் சென்ற அந்த 3½ வருட சம்பள பாக்கியையும் சேர்த்துக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) இன்று வரை இலாபத்தில் செல்கின்ற அளவில் அம்மா அரசு செய்தது. மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று சொன்ன அவர்கள் நஷ்டமாகத்



D
V211,31 '05
P05-79.1)
186277.
சென்னை-600 008

திறமை உள்ளவர்களா? அல்லது இலாபகரமாக்கி அவர்களுக்கும் அதாவது அவர்கள் வழங்காமல் சென்ற சம்பளத்துக்கும் சேர்த்து சம்பளப் பாக்கி பட்டுவாடா செய்த எங்களுடைய அம்மாவின் ஆட்சி திறமை மிக்க ஆட்சியா என்பதை மனசாட்சி உள்ளவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பிற்பகல் 12–25

அதோடு நிற்காமல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைமேல் சாதனை என்று சொல்கின்ற வகையில் தற்பொழுது அம்மா அவர்கள் தனியார் இரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு இணையான சம்பள உயர்வு அறிவித்து 12 (3) settlement–ன்படி இன்று 100 ரூபாய் சம்பளமாக உயர்த்திட ஆணை வெளியிட்டு அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றிய ஒரே அரசு அம்மாவின் அரசு என்பதைக் கூறிக்கொள்ள இங்கு நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கென 2004–2005 ஆம் ஆண்டில் 2,722 வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்ற அம்மாவின் அரசை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடி சுற்றும் தொழில் என்பது இன்று தமிழ்நாட்டினுடைய குடிசைத் தொழிலாக இருந்து வருகிறது. நமது மாநிலத்தில் குறிப்பாக பெண்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பீடிகளின் விற்பனை இன்று வட மாநிலங்களில் விற்பனைக்கு செல்கின்றபோது அங்குள்ள விற்பனைப் போட்டி, தொழில் போட்டியைச் சமாளிக்கின்ற வகையில் நமது மாநிலத்தில் உள்ள பீடி உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசி தென் மாவட்டங்களில் குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் பீடி சுற்றும் தொழில் அதிகரிக்கின்ற வகையில் ஆவன செய்ய அம்மா அவர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

அதேபோல தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதை அகற்றுவதில் நமது மாநிலம் முன்னோடியாக திகழ்கிறது. அது எந்த அளவில் மத்திய அரசின் பாராட்டைப் பெற்றது என்பதை நமது அம்மா அவர்களே இதே அவையில் தெள்ளத்தெளிவாகக் கூறினார்கள். எனவே, குழந்தைத் தொழிலாளர்கள் முறையை அகற்றுவதில் தமிழ்நாடு முதன்மை இடத்தை நோக்கிச் செல்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல வேலைவாய்ப்புத் துறையை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் 31–12–2004 நிலவரப்படி 8,029 கண்பார்வையற்றோரும், 6,392 காது கேளாதவர்களும், 59,581 உடல் உறுப்பு ஊனமுற்றவர்களும் பதிவு செய்துள்ள சூழ்நிலையில் ஊனமுற்றோர் என்றாலே அவர்கள்மீது தனி கருணை உள்ளம் கொண்ட எங்களுடைய அம்மா அவர்கள் 1992 ஆம் ஆண்டே ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறைக்கென தனியாக ஒரு துறை அமைத்து ஊனமுற்றோர் வாழ்வில் பல சிறப்பான திட்டங்களை அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இதே அவையில் அம்மா அவர்கள் தமிழக அரசின் பல்வேறு சலுகைகளை கண்பார்வையற்றோருக்கெல்லாம் அறிவித்து அவர்களுடைய வாழ்க்கையில் புது நம்பிக்கையுடனும், புது தெம்புடனும், இராஜபார்வை பார்க்கச் செய்து, அவர்களைப் பேரழகனாக்கி, போராடும் வாழ்க்கைக் களத்தில் நம்பிக்கையை அவர்களுக்கு ஏற்படுத்திய எனது அன்னையே, கடவுள் எங்கே இருக்கிறார் என்றால், பார்வையற்றோர், ஊனமுற்றோருக்கு அறிவிப்பு வெளியிட்ட எங்கள் அன்னையே, உங்கள் உள்ளத்தில்தான் கடவுள் இருக்கிறார் என்பதை இங்கே பணிவுடன் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையாக இருந்தாலும் சரி, அதன் தொடர்பு கொண்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பாக இருந்தாலும் சரி அம்மா ஆட்சியில் சிறப்பாக செயல்படுகிறது என்பதை இங்கே நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். வனத் துறையின் கண்காணிப்பில் உள்ள TANTEA, TAFCURN, அரசு இரப்பர் கழகம் ஆகிய அமைப்புகள் எல்லாம் இலாபம் அடையும் வகையில் புத்துயிர் அடையச்செய்யும் வகையில் பல்வேறு செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூலமாகவும் திறமையாக நிர்வாகம் செய்து சீரமைத்தவர் எங்கள் அம்மா அவர்கள். கடந்த நமது அம்மா ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம்தான் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம். அதன்மூலமும், மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்மூலமும் வனம் மற்றும் அதையொட்டியுள்ள கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளான அவர்களுக்கு வேண்டிய குடிநீர் வசதி, மின் வசதி, சாலை வசதி போன்ற அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்தும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தும் மகளிர் வனக் குழுக்கள் அமைத்தும் அதன்மூலம் அவர்களுடைய துணையோடு வனத்தைப் பாதுகாக்கும் வகையில் இந்தத் திட்டம் அற்புதமாக செயல்படுகிறது அம்மா அவர்கள் ஆட்சியில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் அமல்படுத்தி வந்த மணல் அரிப்பை தடுத்து, மழைவளம் ஏற்படுத்தும் வகையில் ஏரி, குளங்களின் கரைகள், புறம்போக்கு நிலங்களில் கருவை மரம் நடும் திட்டம் கடந்த தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டது. மீண்டும் அம்மா ஆட்சியில் அந்த அற்புதத் திட்டம் தொடங்கப்பட்டு 2004–2005–ல் ரூ. 565.02 இலட்சமும் 2005–2006–ல் ரூ. 563.49 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்று அம்மா அரசு ஏரி குளங்களைப் பாதுகாக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மர ஏலத்தில் அம்மாவின் அரசு கடந்த தி.மு.க. ஆட்சியை விட பலமடங்கு அதிகமாக ஒரு மெட்ரிக் டன் சந்தன மரம் அதிக விலைக்கு ஏலம் போகிற அளவில் நேர்மையான முறையில், அதாவது பிறர் செய்ததுபோல தவறான வழிமுறைகளை கையாளாமல் நேர்மையான முறையை கடைபிடித்து சாதனையை செய்தது அம்மா அரசு.

எல்லாவற்றிற்கும் சிகரமாக வனங்களைப் பாதுகாக்கின்ற வகையில், வனத்தையும், வன உயிரனங்களையும் அழித்த காட்டுக் கொள்ளையன் வீரப்பனை கொன்றது, (மேசையைத் தட்டும் ஒலி) அவனை கொன்றவர்களுக்கு உறுதுணையாக இருந்த 104 வன அலுவலர்களுக்குப் பரிசுகளும், பதவி உயர்வும் வழங்கி கௌரவித்தது; வீரப்பன் கொல்லப்பட்டதன்மூலம் ஏராளமான யானைகள் கொல்லப்படுவதிலிருந்து வன உயிரினங்களைப் பாதுகாத்தது; சந்தன மரங்கள் வெட்டப்படுவதிலிருந்து தடுத்துப் பாதுகாத்தது ஆகியவற்றில் என் அன்னை அரசுக்கு, ஈடு இணை இல்லை என்று இந்த உலகமே பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் துறை என்ற துறையை உருவாக்கியதே எங்கள் அம்மாதான். அதன்மூலம் சுற்றுச்சூழல் பாதிக்காதவாறு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இன்று பல்வேறு கட்டுப்பாடுகளைத் தொழிற்சாலைகளுக்கு விதித்து, அதிலும் zero degree முறையைப் புதியதாகக் கையாண்டு மாசுக் கட்டுபாட்டு வாரியம் சிறப்பாகச் செயல்பட்டு தொழிற்சாலைகள் பெருகிட, தொழிலாளர் நலம் பேணிட பேருதவி புரிகிறது.



புதுமைத் திட்டமாக திருவண்ணாமலை நகரம், பழனி மலைக் குன்றுகள், சோளிங்கர் கோவில் மலைக் குன்றுகள் ஆகியவற்றை அழகுபடுத்தும் வகையில் பசுமைத் திட்டம் தீட்டிய அம்மா அவர்களின் அரசை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் வனம் தொடர்பாக அம்மாவின் கவனத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் கொண்டுவருகிறேன். எனது தொகுதியில் உள்ள வனப் பகுதியில் உள்ள ஊத்து எஸ்டேட் மசூதி, 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட பயங்கர வெள்ளத்தால் முற்றிலும் சேதமடைந்தது. அதைப் பழுது பார்க்க மூலப் பொருட்கள் கொண்டு செல்ல அப்போதைய அம்மா ஆட்சியில் அனுமதிக்கப்பட்டு, பாதி பழுது பார்க்கும் பணி முடிந்தது. மீண்டும் தி.மு.க. ஆட்சியில் மூலப் பொருட்கள் கொண்டு செல்ல முடியவில்லை. எல்லா மதத்தினரும் அமைதியாக எந்நாளும் வாழும் மாநிலமாக தமிழகத்தை ஆக்கிய எங்கள் அன்னையே, அரை குறையாக நிற்கும் ஊத்து மசூதியை மீண்டும் முன்னர் இருந்ததுபோல் ஆக்கிட, மூலப் பொருட்கள் கொண்டு செல்ல அனுமதி வழங்க அம்மாவைப் பணிவோடு வேண்டுகிறேன்.

அதுபோல் பாபநாசம் Lower Dam, காணிகுடியிருப்பில் உள்ள விடுபட்ட மக்களுக்கு அவர்களது குடிசைகளுக்கு மின் வசதி ஏற்பட வனத் துறை N.O.C. வழங்க ஆணையிட அன்போடு வேண்டுகிறேன்.

இந்த நேரத்தில் மாண்புமிகு அம்மா அவர்களை நான் பணிவோடு வேண்டுவது, ரூபாய் 72 தினந்தோறும் advance–ஆகப் பெற்றுக்கொண்டிருக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பளப் பிரச்சினையையும் ரூபாய் 250 மாதம் இடைக்கால ஊதியமாகப் பெற்றுக்கொண்டிருக்கின்ற பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய ஊதியப் பிரச்சினையையும், எத்தனையோ சலுகைகளை அளித்துக்கொண்டிருக்கின்ற எங்கள் அம்மாவே, தாங்கள் இந்த இரண்டுப் பிரச்சினைகளையும் அவை சம்பந்தப்பட்ட முதலாளிகளையும், தொழிலாளர் நலத் துறையையும் அழைத்து நீங்கள் ஒரு சுமுக முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளில் நானும் ஒருவன் என்ற முறையில் தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். சக்திவேல் முருகன்] [2005 ஏப்ரல் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு ஒரே ஒரு நிமிடம். "Defeat the defeat, until the defeat gets defeated" என்ற பழமொழிக்கேற்ப "தோல்வியைத் தோல்வியடையச் செய்யும் வரைக்கும் தோல்வியைத் தோல்வியுறச் செய்வதே" என்பதற்கு உதாரணமாகத் திகழும் எங்கள் அன்னையே! எனக்கு அண்ணாச்சி சுப்பையா பாண்டியன் போல் கவிதைச் சொல்ல வரவில்லையென்றாலும், ஓரிரண்டு வரிகளில் மட்டும் நான் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

"சிரித்த முகங்காட்டி தன்னைச்

சார்ந்தோர்க்கு நல்வழி காட்டி

கருத்து நிறைந்த முகத்தினிலே கனிந்த அருள்காட்டி

அரியதாய், பெரியதாய், எளியதாய், இனியதாய்,

மலர்வதாய், கனிவதாய், மனதிலே நிறைந்த தாய்,

தொழிலாளர்கள் வாழ்வில் வசந்தம் வீசச் செய்த எங்கள்

அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி)

எதிரிகளுக்கு ஃபீனிக்ஸ் பறவையே,

சிறு துளி தங்கமும் அணியாத் தங்கத் தாரகையே,

தாயே மக்கள் என்றும் உங்கள் வசம், ஆட்சி என்றும் உங்கள் வசம்;

நடக்காது எதிரிகள் வேஷம்; அம்மா வெல்லப்போவது நிஜம், நிஜம்

இதுவே எங்கள் சபதம்" (மேசையைத் தட்டும் ஒலி)

என்று கூறி என்னுடைய இதய தெய்வம் அன்னையை வணங்கி இந்த மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்திலே பேசுகின்ற வாய்ப்பை அளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, உட்காருங்கள். திரு. கோவை தங்கம்.



2005 ஏப்ரல் 4]

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம் பணி புரியும் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு 80 ரூபாய் கூலி நிர்ணயம் செய்து அறிவித்துள்ளீர்கள். இந்த அரசைப் பாராட்டுகின்றேன்; வரவேற்கின்றேன். ஆனால், கொட்டுகின்ற மழையிலும், கடும் வெயிலிலும் அட்டைப் பூச்சிக் கடியிலும், இரத்தம் சிந்தியும், யானைகள், புலி, சிறுத்தைப் புலி, கரடி, பாம்புகள் போன்ற கொடிய வன விலங்குகள், விஷப் பூச்சிகள் மத்தியில் நாள்தோறும் உயிரைப் பணயம் வைத்து வேலை செய்கின்ற, 8 மணி நேரம் கடுமையாக உழைக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் எவ்வளவு என்று கூறாமல் இருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. இதனால் தமிழ்நாட்டில் பல இலட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றம் அடைந்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், இருங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-12-2001 வரை தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் மற்றும் ஊக்கத் தொகை, தொழிற் சங்கங்களுக்கும், தோட்ட நிறுவனங்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அளிக்கப்பட்டு வந்தன. இந்த ஒப்பந்தத்தை இரத்து செய்து தின ஊதியம் ரூ.76.85-ஐ, ரூ.60/-ஆக குறைக்கப் போவதாக நிர்வாகங்கள் அறிவிப்புக் கொடுத்தன. தொழிற் சங்கங்கள் இதுகுறித்து தாவா எழுப்பின. இப்பிரச்சினைத் தொடர்பாக தொழிலாளர் ஆணையர் மட்டத்திலும், மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் மட்டத்திலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. பேச்சுவார்த்தை நிலுவையிலே இருக்கும்போது, நீலகிரி மற்றும் கூடலூர் பகுதிகளிலுள்ள தோட்ட நிறுவனங்களும், அங்கு இயங்கிவரும் தொழிற் சங்கங்களும் ஊதிய உயர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊதியக் குறைப்பு ஒப்பந்தங்களில் இந்த அரசு எந்தவிதத்திலும் தொடர்புடையது அல்ல. வால்பாறை பகுதியிலுள்ள தோட்ட நிறுவனங்களும், தொழிற் சங்கங்களும் இவ்வாறு ஒரு ஊதியக் குறைப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. ஆனால், இந்த ஒப்பந்தத்தைத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கோவை மாவட்ட ஆட்சியர்முன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, தொழிலாளர்கள் பிடித்தம் ஏதுமின்றி சம்பள முன்பணம் பெற்றுக்கொண்டனர். மேற்கண்டவாறு தோட்ட நிறுவனங்களும், தொழிற் சங்கங்களும் ஊதியக் குறைப்பு ஒப்பந்தம் செய்து கொண்டாலும், ஊதியக் குறைப்புப் பிரச்சினை, சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டது. இந்தப் பிரச்சினை சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தின் முன்னர் நிலுவையில் இருப்பதால், தீர்ப்பின் முடிவைத் தொழிலாளர் எதிர்கொள்ளலாம். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எக்காலத்திலும் தொழிலாளர்களின் ஊதியக் குறைப்பை ஏற்றுக் கொண்டதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய கஷ்டங்களையெல்லாம் இதே சட்டமன்றத்திலே நான் பேசியபோது, என்னுடைய வேண்டுகோளை ஏற்று, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவில் பழைய ஒப்பந்தப்படி சம்பளம் கிடைப்பதற்குச் சிறப்பு நீதிமன்றத்தை இங்கே நியமித்தார்கள். சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் கடந்த 3 வருடங்களாகத் தீர்ப்புச் சொல்வதில் காலதாமதம் செய்துவிட்டார்கள். நீதிபதி அவர்களும் காலதாமதம் செய்துவிட்டார்கள்; நிர்வாகமும் காலதாமதம் செய்துவிட்டது.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பாயத்தில் தீர்ப்பு வழங்குவதில் தாமதம் என்று நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். தொழில் தாவாவினைத் தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு அனுப்பும்போது, அந்த வழக்கின் தீர்ப்பு எந்தக் காலக்கட்டத்திற்குள் அளிக்கப்படவேண்டுமென்று அரசு குறிப்பிடலாம். ஆனால், ஒரு தீர்ப்பாயம், ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்குவது, அந்த வழக்கிலுள்ள பிரச்சினைகள் மற்றும் அந்த வழக்கின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தது. காலதாமதத்தைத் தவிர்க்க அரசு தலையிடமுடியாது என்பதை



மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு 5 ரூபாயைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்கிறார்கள். இப்போது நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமல்ல; தமிழ்நாடு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பல இலட்சக்கணக்கான பேர்கள் இதனால் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதில் தலையிட்டால், நிச்சயமாக ஒரு மணி நேரத்தில் இந்தப் பேச்சுவார்த்தையை முடித்து வைக்கமுடியும் என்று நாங்கள் நம்புகின்றோம். ஏனென்று சொன்னால், வழக்கு முடிகின்றபோது, சுமார் 100 கோடி ரூபாய் வரை முதலாளிகள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய நிலை வந்துவிடும் என்பதைச் சுட்டிக்காட்டித்தான், சிறப்பு நீதிமன்றத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள், இங்கே நான் கேட்டபோது, சிறப்பு நீதிமன்றத்தை நியமித்துத் தந்தார்கள். நல்ல எண்ணத்திலே, தொழிலாளர்களுக்கு உதவி புரிய வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே தந்தார்கள். ஆனால்...

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மக்களின் நன்மையைக் கருதி, தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 16-3-2005 தேதியிட்ட அரசாணைமூலம் திரு. கே. பாலசுப்பிரமணியன், ஓய்வுபெற்ற நீதிபதி அவர்களைச் சிறப்பு நீதிமன்ற நீதிபதியாக நியமித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் ஓய்வுபெற்றுவிட்டார்கள். ஆகவே, உடனடியாகச் சிறப்பு நீதிமன்ற நீதிபதியை நியமித்து, உடன் தீர்ப்பு வழங்குங்கள் என்று நான்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்திலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் வேண்டுகோள் விடுத்தேன், சட்டமன்றத்திலும் பேசினேன். ஆனால், அது முக்கியமல்ல. தொடர்ந்து நிர்வாகம் ஒத்துழைக்காமல், காலம் கடத்தி வருகிறது. இதனால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய குடும்ப நிலைமை மிகவும் பாதித்து வருகிறது. அதைத்தான் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஏன் நிர்வாகத்தையும், தொழிற் சங்கத் தலைவர்களையும்,

அரசுத் தரப்பையும் கூட்டி, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்குமுன் வரவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். ஏனென்றால், பல இலட்சக்கணக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இந்தப் பிரச்சினையில் தலையிட்டு அனைத்துத் தரப்பினரையும் அழைத்துப் பேசி முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஒரே ஒரு மணி நேரத்திலே அவர்களால் முடிக்க முடியும். ஏன் அவர்களை அழைத்துப் பேசுவதற்கு முன்வரத் தயங்குகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், சிறப்பு நீதிமன்ற நீதிபதியும் காலம் கடத்துகின்றார். நீதிமன்றமும் காலம் கடத்திக்கொண்டு வருகிறது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குடும்பங்கள் வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய கஷ்டங்களை நான் நேரடியாகப் பார்க்கின்றவன். (குறுக்கீடு)

பிற்பகல் 12–40

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டுமென்கின்ற அந்த உயரிய மனப்பான்மை கொண்டுதான், மாண்புமிகு அம்மா அவர்கள், ஒரு சிறப்பு நீதிமன்றத்தை அமைத்து, அதற்கு நீதிபதியையும் நியமனம் செய்திருக்கின்றார்கள். எனவே, அந்த நீதியை வழங்கவேண்டியது, அந்த நீதிபதியினுடைய பொறுப்பு. அதைத்தான் அந்த நீதிபதி செய்யவேண்டும்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை வற்புறுத்திக் கூறுவதற்குக் காரணம், திரும்பத் திரும்ப வற்புறுத்துவதற்குக் காரணமே தொழிலாளர்களுடைய கஷ்டங்களை நான் நேரடியாகப் பார்த்தவன். ரூ.72/—யை வைத்து அவர்கள் குடும்பம் நடத்தமுடியவில்லை, மருந்து வாங்கக்கூட காசு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள், குழந்தைகளைப் படிக்க வைக்கக்கூட முடியவில்லை, சொல்லமுடியாத துயரத்தில் இருக்கிறார்கள். ஆகவேதான், இதை வற்புறுத்துகிறேன்.



மேலும், தற்காலிகத் தொழிலாளர்களாக வால்பாறையில் கடந்த 20, 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணி புரிந்து வருகிறார்கள். இது வேறு எங்குமே நடைபெறாத செயல் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார். மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அகில இந்திய அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது, தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யவேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சட்டத்தின்படி, 24 மாதங்களில், 480 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் என்ற தகுதியை, உரிமையைப் பெறுகிறார்கள். இந்தச் சட்டம், தோட்ட நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பொருந்தும். இதனை அமல் செய்யும்நோக்கில் தொழிலாளர் துறையைச் சார்ந்த தோட்ட நிறுவன ஆய்வாளர்கள், தோட்ட நிறுவனங்களை ஆய்வு செய்து விசாரணை மேற்கொண்டு, தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய ஆணைகளைப் பிறப்பித்தனர். ஆனால், தோட்ட நிறுவன அதிபர்கள் இந்த ஆணைகளை அமல்படுத்தாமல், சென்னை உயர் நீதிமன்றத்தில் Writ மனு தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்றுள்ளனர். இதுதவிர, தோட்ட நிறுவன அதிபர்களும், தோட்டத் தொழிலாளர் சங்கங்களும் அரசுக்கு மனு செய்து, தமிழ்நாடு பணி நிரந்தரப்படுத்தும் சட்டத்திலிருந்து தோட்ட நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். ஆனால், தொழிலாளர்களின் நலனில் உண்மையான அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அந்த விதி விலக்கை அளிக்க மறுத்துவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20, 25 ஆண்டுகளாக தற்காலிகத் தொழிலாளர்கள் வால்பாறையில் இருக்கிறார்கள்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஒரு ஐந்து நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்றுதான் நான் கேட்கின்றேன். அதேபோல், வால்பாறையில் ஒரு கலைக் கல்லூரி வேண்டும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய குடும்பத்திற்காக அவர்கள் ரூ.72/- வைத்துக்கொண்டு வால்பாறையிலிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு கோவையிலே வந்து படிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு அந்த அளவிற்கு வசதி வாய்ப்பு கிடையாது. ஏற்கெனவே, பாரதியார் பல்கலைக்கழகம்மூலம் சின்டிகேட்டிலும், செனட்டிலும் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். பல்கலைக் கழகமே கலைக் கல்லூரி நடத்துவதாக சிபாரிசு செய்திருக்கின்றார்கள். கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அரசுக்கு சிபாரிசு செய்திருக்கின்றார்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் 99 சதவீதம் பேர்கள் அங்கே இருக்கிறார்கள். அங்கே ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலே ஓர் அரசு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்ததன்பேரிலே கல்லூரிக் கல்வி இயக்குநரும், அந்தப் பல்கலைக்கழகமும் மற்றும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து அந்தப் பகுதியிலே, வால்பாறைப் பகுதியிலே ஒரு கலைக் கல்லூரி தொடங்க இட மதிப்பு நீங்கலாக சுமார் ரூபாய் 2.23 கோடி மதிப்பீடு செய்யப்பட்டது. அங்கு கல்லூரி தொடங்க தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் பயன்படுத்தாது வைத்திருக்கும் மருத்துவமனைக் கட்டடத்தை கல்லூரிக்கு ஒதுக்குமாறு அந்நிறுவனத்திடம் கேட்கப்பட்டது. அதற்கு மருத்துவமனை விரிவாக்கத்திற்கு அக்கட்டடம் தேவைப்படுவதாகவும், தேயிலைத் தோட்டப் பகுதியில், அத்தோட்டம் தொடர்பற்ற திட்டம் தொடங்குவது விரும்பத்தக்கது அல்ல என்று கூறி மறுத்துவிட்டது.

*பிற்பகல் 12-45*

மேலும் வால்பாறை அமைந்திருக்கின்ற கோயம்புத்தூர் மாவட்டத்திலே நான்கு அரசுக் கல்லூரிகளும், எட்டு அரசு உதவி பெறும் கல்லூரிகளும், 39 சுய நிதி கல்லூரிகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேற்படி இந்தச் சூழ்நிலையிலே வால்பாறையிலே அந்த வாடகைக் கட்டடம் அமைப்பதற்குக்கூட, கல்லூரிகள் அமைப்பதற்குக்கூட அங்கு



கட்டடம் இல்லை என்பதை மாவட்ட நிருவாகம் தெரிவித்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்தக் கோரிக்கையை நிருவாகம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வால்பாறையில் இருக்கின்ற கிளப்புக்குச் சொந்தமான ஒரு பதினைந்து ஏக்கர் உபயோகமற்ற நிலத்தில் கல்லூரி அமைக்கலாம் என்று இப்போது அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கும் கோவை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கும் வழங்கி உள்ள கடனை இரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்திற்குப் போதுமான தண்ணீர் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளுக்குள் முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு செயல்படுத்தி வருவதை அவர் மறந்துவிட்டு ஏதோ புதியதாக கோரிக்கை வைத்திருக்கிறார். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, செயல்பட்டு வருகிற ஒரு திட்டத்தை வழங்க வேண்டுமென்று ஒரு புதிய கோரிக்கையாக வைப்பதிலே பொருள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் மற்றும் தமிழ்நாட்டில் மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகள் மற்றும் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், டாக்சி, ஆட்டோ தொழிலாளர்களுக்கு எல்லாம் சிறு வணிகக் கடன் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அரசு ஊழியர்கள், போக்குவரத்து ஊழியர்கள், அரசு உதவி பெறும் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறும்

கேட்டுக்கொள்கிறேன். சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவை தங்கம், உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளுக்குக் கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, மின் விளக்கு, உட்கார்ந்து படிக்க பெஞ்சுகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போதுமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்றும் தொழிலாளர்களுக்குப் போதுமான மருத்துவ உதவி கிடைக்க நிர்வாகத்தை வலியுறுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மலைப் பகுதியில் பணியாற்றும் பேருந்து ஓட்டுநர்கள், நடத்துனர்கள், ஆகியவர்களுக்கு சம்பளம் கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், மற்ற 'கேட்டுக்கொள்கிறேன்' என்கிற கோரிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஒரே ஒரு நிமிடம். மேலும் தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்கின்ற பணத்தை முதலாளிகள் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் கட்டுவது இல்லை. இது மிகவும் வருந்தத்தக்கது. கட்டாத முதலாளிகள்மீது அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு அரசு புதிய திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். படித்துவிட்டு வேலை இல்லாத இளைஞர்களுக்கு சிறு தொழில் செய்ய கடனுதவி வழங்க வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறையிலே தொடர்ந்து மரம் வெட்டப்படுகிறது. வால்பாறையில் மழை பொய்த்துவிட்டது. பலமுறை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்தில்கூட நேரடியாக சொல்லியிருக்கிறேன். இப்போதும் மரங்களை வெட்டிக்கொண்டே இருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்தி—



**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு இருக்கின்றது. பட்டா நிலத்தில் இருக்கின்ற மரங்களை வெட்டுவதற்கு அந்தக் குழுவிடம் மனுத் தாக்கல் செய்தால், அந்தக் குழு ஆய்ந்து அனுமதி கொடுக்கிறது. இல்லை, அனுமதி கொடுக்க மறுக்கிறது. அப்படி அனுமதி கொடுத்துதான் அங்கு பட்டா நிலத்தில் மரங்கள் வெட்டப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் முடித்துவிடுங்கள். திரு. டி.கே. இராஜா. (குறுக்கீடு) திரு. கோவை தங்கம் அந்த வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை, சின்கோனாவில் யானைகள் இடித்து ஆறு வீடுகள் தரைமட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த வீடுகளுக்கு கடனுதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் வால்பாறையில் நீண்ட நாட்களாக அரசு மருத்துவமனையிலே, கோட்டூர் மருத்துவமனையிலே பெண் மருத்துவர் இல்லை என்ற கோரிக்கையை நான் இதே சட்டமன்றத்திலே பலமுறை வலியுறுத்தி இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் எழுதிக் கொடுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை, இல்லை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. டி.கே. இராஜா.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி தெரிவித்துவிடுகிறேன். ஒரே ஒரு நிமிடம். இப்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு பெண் மருத்துவரை சுமார் பதினைந்து ஆண்டு கால கோரிக்கையை ஏற்று பெண் மருத்துவரை நியமித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் ஊதியம் தொடர்பான பிரச்சினையை இங்கே எழுப்பியுள்ளார். சில ஆண்டுகளாகத் தொடர்ந்து நீடிக்கின்ற இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் வகையில், இந்த அரசு இந்தப் பிரச்சினையை சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தின் முடிவிற்கு– –Special Industrial Tribunal முடிவிற்கு அனுப்ப ஆணையிட்டுள்ளது. அதேபோல், பஞ்சாலைத் தொழிலில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு சம்பந்தமான பிரச்சினைகள், சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு அனுப்ப அரசு ஆணையிட்டுள்ளது. இந்தச் சிறப்பு நடவடிக்கையின் வாயிலாக, தமிழக அரசு அதிக அளவில் தொழிலாளர்கள் இருக்கக்கூடிய துறைகளில் சுமுகமான தீர்வு ஏற்படுவதற்கு வழிவகை செய்துள்ளது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தீர்ப்பாயத்தின் முடிவிற்கு ஏற்கெனவே இந்தப் பிரச்சினைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், தற்போது அரசு நேரடி சமரசப் பேச்சுவார்த்தை மேற்கொள்ள இயலாது. இருந்தாலும், நிர்வாகமும், தொழிற்சங்கங்களும் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டிகே. இராஜா.

***திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டு வனம் மற்றும் சுற்றுச்சூழல், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், எங்களுடைய நிறுவனத் தலைவர், தமிழ் இனப் போராளி, மருத்துவர் அய்யா அவர்களுக்கும், சின்ன அய்யா அவர்களுக்கும், எங்களுடைய தலைவர், அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.



***"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்."***

என்று வள்ளுவர் சொன்னார். வற்றாத நீரும், வெட்ட வெளி நிலமும், உயர்ந்து நிற்கும் மலைத் தொடரும், அடர்ந்து நிற்கும் காடும் ஒரு நாட்டினுடைய அரண் என்று வள்ளுவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மரம் நடும் அறமே, மாபெரும் அறம் என்ற முழக்கத்தை உருவாக்கி, தமிழ்நாடெங்கும் இலட்சக்கணக்கான மரங்களை நட்டு, வளர்த்து, "கண்ணீரைப் போக்க தண்ணீரைக் காப்போம்" என்ற முழக்கத்தோடு, நூற்றுக்கணக்கான ஏரி, குளங்களையெல்லாம் தூர் வாரியவர்தான் எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள்.

2002 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில், Johannesberg நகரில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையில், நீடித்த வளர்ச்சிக்கான உலக உச்சி மாநாட்டிலும், 2003 ஆம் ஆண்டு ஜப்பான் நாட்டில் Kyoto நகரில் நடந்த ஐ.நா. சபையில், உலகத் தண்ணீர் மாநாட்டிலும் பங்கேற்று, தமிழகத்தின் பெருமையை உலகிற்கு உணர்த்தியவர் எங்களுடைய மருத்துவர் சின்ன அய்யா என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"இந்த உலகம் நமது முன்னோர் விட்டுச்சென்ற சொத்து அல்ல. மாறாக, இது நமது எதிர்கால சந்ததியினரிடமிருந்து நாம் வாங்கிய கடன். எனவே, இந்த பூமியைக் காப்பாற்றி, அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச்செல்ல வேண்டும்" என்பது, ஓர் ஆப்பிரிக்கப் பழமொழி. எனவே, உலக சுற்றுச்சூழலையும், இந்தியாவினுடைய சுற்றுச்சூழலையும், தமிழ்நாட்டினுடைய சுற்றுச்சூழலையும் காப்பது நம்முடைய கடமையாகும். சுற்றுச்சூழலில் காடுகளின் பங்கு முதன்மையானதாக இருக்கிறது. தேசிய வனக் கொள்கையின்படி, மாநிலத்தின் நிலப்பரப்பில் 33.33 விழுக்காடு வனப் பகுதியாக இருக்க வேண்டும். ஆனால், தமிழ்நாட்டினுடைய மொத்த நிலப்பரப்பில் 17.58 விழுக்காடு நிலம் வன நிலம் என மானியக் கோரிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில், இந்தியக் காடுகள் கணக்கெடுப்பு அமைப்பு–Forest Survey of India —தமிழகத்திலே 13.13 விழுக்காடு நிலத்தில் மட்டுமே வனம் இருப்பதாகக் கூறியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்திய வன அளவை மையம் 17.6 சதவிகிதமாக இருந்த வனமானது, இதய தெய்வம் புரட்சித் தலைவி

அம்மா அவர்களுடைய தொலைநோக்குச் சிந்தனையுடன் கொண்டு வந்த காடு வளர்ப்புத் திட்டத்தின் பயனாக, இப்போது 21 சதவிகிதத்தை எட்டியிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் சபைக்குத் தவறான கருத்தைத் தெரிவிக்கின்றார் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம், தமிழ்நாடு சுற்றுச்சூழல் நிலை அறிக்கை. சுற்றுச்சூழல் இயக்குநரக வெளியீடு பக்கம் 31–லே இருப்பதைத்தான் நான் சொன்னேன். இது தவறான தகவல் அல்ல.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாக்கவும், காடுகளை வளர்க்கவும், இந்த அரசு எத்தனை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை இங்கே தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இயற்கை வளங்கள் மலிந்த சுற்றுச்சூழல் மக்கள் உடல்நலத்துடன் வாழ்ந்திடவும், உள்ளப் புத்துணர்ச்சியுடன் திகழ்ந்திடவும் மட்டுமே உதவிடவில்லை. இயற்கையின் சீற்றங்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுகின்ற பாதுகாப்பு அரணாகவும் அது திகழ்கிறது. அண்மையில் தமிழகத்தை சுனாமிப் பேரலைகள் கடும் சீற்றத்துடன் தாக்கிய நேரத்தில் கடலோரங்களில் மாங்ரோவ் காடுகள், அதாவது சதுப்பு நிலக் காடுகள் மற்றும் பசுமை அரண் Shelter belt ஆகிய இயற்கைப் பாதுகாப்பு அரண்கள் அமைந்திருந்த இடங்களில், உயிர்ச் சேதங்களும், உடைமைச் சேதங்களும், மிக மிகக் குறைவாக இருந்தன என்பதே, இதனை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. கடலோரங்களில் அமைந்துள்ள சதுப்பு நிலக் காடுகள், சுற்றுச்சூழல் சமநிலையை ஏற்படுத்துவதுடன், ஊட்ட சுழற்சி, மீன் இன வளர்ச்சி, கடலோரப் பாதுகாப்பு போன்றவற்றையும் அளிக்கிறது. அதேபோன்று கடலோரப் பசுமை அரண்களும், பறவைகள் மற்றும் விலங்கினங்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த உகந்த இடமாக அமைந்து, சுற்றுச்சூழல் சமநிலையை ஏற்படுத்துகின்றன. மேலும், இந்தப் பசுமை அரண்கள் மண் அரிப்பு ஏற்படுவதை தடுப்பதுடன் அலைகளின் வேகத்தையும் கட்டுப்படுத்துகின்றன. இதுவன்றி, புயல் மற்றும் சூறாவளி ஏற்படும் காலங்களில், காற்றின் வேகத்தைத் தடுக்கின்ற வேலியாக அமைந்து, அதன் பாதிப்புகளை வெகுவாகக் குறைக்கிறது. இந்தக் காரணங்களின் அடிப்படையிலேயே, கடலோரப் பகுதிகளில் மாங்ரோவ்



சதுப்பு நிலக் காடுகளை உருவாக்கிடவும், பசுமை அரண் ஏற்படுத்திடவும், நான் ஆணையிட்டேன். இதன் அடிப்படையில், திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில், ஒரு கோடி ரூபாய் செலவில் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பில் மாங்ரோவ் காடுகள் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 13 கடலோர மாவட்டங்களில் 7 கோடி ரூபாய் செலவில் சுமார் 5,000 ஏக்கர் பரப்பில் பசுமை அரண் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சவுக்கு, பூவரசு, புன்னை, குடைவேலமரம் போன்ற மரங்கள் நடப்படும். இந்தத் திட்டச் செயல்பாட்டின் ஆய்வுகளின் அடிப்படையில், இத்திட்டம் மேலும் விரிவுப்படுத்தப்பட்டு, அதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி.கே. இராஜா:** முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. சுனாமியிலிருந்து காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு, எந்தவிதமான கட்டுமானப் பணிகளும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளிலே அனுமதிக்கக்கூடாது. சுனாமியால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புகளை முழுமையாக ஆய்வு செய்து முடித்த பின்னர், சுவர் எழுப்பும் திட்டத்தைப் பற்றி ஆலோசிப்பது நல்லது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சுனாமியால் அடிக்கடி பாதிப்பிற்குள்ளாகும் பசிபிக் கடலோரப் பகுதி நாடுகளில்கூட, இதுவரை தடுப்புச் சுவர் கட்டப்படவில்லை. எனவே, முழுமையான ஆய்வுகள் முடியாமல், தடுப்புச் சுவர் பற்றிப் பேசுவது தேவையில்லையென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியாவின் நீர் வளத்தில் தமிழகத்தின் நீர் வளம் மூன்று விழுக்காடுதான். இந்த நீர் வளம் நாளுக்குநாள் ஆபத்தான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. எனவே, நாம் நீர் வளத்தைப் பாதுகாக்க வேண்டிய சூழ்நிலையிலே, இருந்துகொண்டிருக்கிறோம். சமீபத்திலே, தமிழக அரசின், பொதுப் பணித் துறை நீர் வள ஆதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலே தமிழகத்தின் 72 விழுக்காடு நிலத்தடி நீர் கெட்டுப் போய் இருப்பதாக கூறியிருக்கிறார்கள். இது மிக ஆபத்தான போக்கு என்பதிலே, சந்தேகம் இல்லை. நிலத்தடி நீரை மாசுப்படுத்துவதில் முன்னிலையிலுள்ள...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழ்நாடு முழுவதும் 72 சதவிகிதம் நிலத்தடி நீர் கெட்டுப் போய்விட்டது என்று கூறுகிறார். அது தவறானது. சாயத் தொழிற்சாலைகள், தோல் தொழிற்சாலைகள் அதிகமுள்ள, திருப்பூர், ஆம்பூர், வாணியம்பாடி, வேலூர் போன்ற இடங்களில்தான் நிலத்தடி நீர் மாசுப்பட்டிருக்கிறது; அதைத் தடுப்பதற்கு அம்மாவின் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பல ஆறுகள் நச்சாக மாறிக்கொண்டு இருக்கின்றன. செத்த ஆறாக காட்சித் தரும் நொய்யல், நஞ்சை சுமக்கும் பவானி, சாயக் கழிவு நதி அமராவதி, மாசுபட்ட வைகை, துயரமான தாமிரபரணி, பாழாய்ப்போன பாலாறு, மாசுபட்ட பழவேற்காடு ஏரி இப்படிப்பட்ட பட்டியல் வகைகளில், நம்முடைய ஆறுகள் எல்லாம் இன்றைக்கு மாசுபட்டுக் கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் தடுப்பதற்கு இந்த அரசு துரிதமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

மேலும், வேலைநிறுத்தம் என்பது தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் போராட்டம்மூலம் பெற ஏற்படுத்தப்பட்ட ஒரு வழிவகை. தமிழ்நாடு அரசு தன் அரசு, ஊழியர்கள் வேலைநிறுத்தத்திலே 2003–லே ஈடுபட்டபோது கொண்டுவந்த எஸ்மா, டெஸ்மா சட்டங்களில் இந்திய உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு போட்டபோது, தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய அடிப்படை உரிமை இல்லை என உச்ச நீதிமன்றம் புதிய சட்டம் போட வழி வகுத்தது. இது தொழிலாளர் நலனை மிகவும் பாதிக்கிறது. இந்தியாவிலுள்ள அனைத்து ஊழியர் சங்கங்களும் இதனை எதிர்த்து வருகின்றன. இத்தகைய கொடூர சட்டத்தை தமிழ்நாடு அரசு திரும்பப் பெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

போனஸ் வழங்க சட்டம் போட்டது இந்த அரசுதான். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர்களுக்கு 8.33 சதவிகிதம் போனஸ் மட்டும்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. அரசுப்



போக்குவரத்துக் கழகங்களின் எண்ணிக்கை 7 ஆக குறைக்கப்பட்டு, இலாபகரமாக இயங்கிவரும் நிலையில், சட்டப்படியான குறைந்தபட்ச போனஸ் சதவிகிதமான 8.33 கொடுப்பது நியாயம் இல்லை. இதனால் போக்குவரத்துத் துறை ஊழியர்கள் உள்ளக் குமுறலுடன் பணியாற்றுகிறார்கள். மேலும் அவர்களுக்கு...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், நானும் பலமுறை இங்கு விளக்கம் அளித்திருக்கிறோம். இருந்தாலும், மீண்டும் அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அவர்கள் இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு விட்டுச் சென்ற நிதி நெருக்கடியை நீங்கள் அறிவீர்கள். அப்படிப்பட்ட கடுமையான நிதி நெருக்கடியிலே–தொடர்ந்து போக்குவரத்துக் கழகங்களையே நடத்த முடியாத நிலைக்கு நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்த அந்தப் போக்குவரத்துக் கழகங்களை நிதி நெருக்கடியிலிருந்து காப்பாற்றுவதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானது. அதனுடைய காரணமாகத்தான் 8.33 சதவிகிதம் வழங்கப்பட்டது. இப்பொழுது நிதிநிலை சற்று சீரடைந்ததற்குப் பின்பு, 2.38 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியது. ஆனாலும்கூட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8.33 சதவிகிதத்தைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், 1.67 சதவிகிதம் கருணைத் தொகையையும் சேர்த்து இப்பொழுது 10 சதவிகிதமாக வழங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, 2.38 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியதற்கே ஏறத்தாழ போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 75 கோடி ரூபாய் பயன் பெறுகின்ற, 75 கோடி ரூபாய் செலவிலே இன்றைக்கு 75 கோடி ரூபாயை போக்குவரத்துத் தொழிலாளிகளுக்கு வழங்கி இருக்கிறார்கள். அவர்கள் இலாபம் ஈட்டியது 2.38 கோடி ரூபாய். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களோ, அவர்களுக்கு – தொழிலாளர்களுக்கு வாரி வழங்கியது ஏறத்தாழ 65 கோடி ரூபாய் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் நிதிநிலைமை சீரடைய, சீரடைய தொழிலாளர்களுடைய நலனிலே அக்கறை கொண்ட அம்மா அவர்கள் இன்று படிப்படியாக இந்தச் சலுகைகளை வழங்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கிற போனஸ் என்பது அதிலே வருகிற இலாபத்தோடு ஒப்பிட்டுப் பேசுவது அல்ல. நஷ்டம் வருகிற காலங்களிலேயும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 20 percent ஆகக் கடந்த ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்டதை 10 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறீர்களே, அதுதான் கேள்வி இப்பொழுது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கூட கேட்கலாம். அதிலே ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால், நீங்கள் கேட்பதிலே தார்மீக ரீதியாக அதற்கு உரிமையே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், அந்தப் போக்குவரத்துக் கழகங்களை 5 ஆண்டு காலமாக உங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏறத்தாழ 1,498 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயக்கிவிட்டு, அந்தப் போக்குவரத்துக் கழகங்களையே இயக்க முடியாத நிலை–நிதி நெருக்கடி என்று சொன்னால், அவை திவாலாகக்கூடிய நிலையிலே அறிவித்துவிட்டு, அந்தக் கழகமே இயங்க முடியாத நிதி நெருக்கடியிலே தள்ளி விட்டு விட்டு நீங்கள், நாங்கள் 20 சதவிகிதம் கொடுத்தோம் என்று கேட்பதிலே என்ன நியாயம்? இருந்தாலும்கூட, நிதி நெருக்கடியை ஓரளவு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய நிர்வாகத் திறமையால், தன்னுடைய ஆளுமைத் திறமையால், தொலைநோக்குப் பார்வையால், திட்டமிடும் ஆற்றலால், அவர்களது வெளிப்படையான நிர்வாகத்தால் இன்றைக்கு படிப்படியாக அந்த நிதி நெருக்கடியைச் சமாளித்து இன்றைக்கு 18 ஆண்டுகளுக்குப் பின்பாக முதல் முறையாக சொற்ப இலாபம் என்று சொன்னாலும், அந்த இலாபத்தை ஈட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் படிப்படியாக நிதி நிலைமை சீரடைகின்றபோது தொழிலாளர்களுடைய பிரச்சினையும் நீங்க, படிப்படியாக இன்றைக்கு அவர்களுக்குச் சலுகைகளை வழங்கி வருகிறார்கள். 8.33 சதவிகிதத்தை இப்பொழுது கருணைத் தொகை 1.67 சதவிகிதத்துடன் சேர்த்து 10 சதவிகிதமாக வழங்கி இருக்கிறார்கள். அதேபோல, இடைக்கால நிவாரணத்திற்காக மாதம் 250 ரூபாய் இப்பொழுது தாய் உள்ளத்தோடு வழங்கி இருக்கிறார்கள். விடுமுறை நாட்களை சரண்டர் செய்து, அதற்குப் பணம் பெறுகின்ற வசதியை வழங்கி இருக்கிறார்கள். இப்படி நிதி நிலைமை சீரடைய, சீரடைய அதற்குத் தகுந்தாற்போல இப்பொழுது சலுகைகளை வழங்கி வருகிறார்கள். இன்னும் நிதி நிலைமை சீரடையும்போது இன்னும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழிலாளர்களுடைய



நலனிற்காக வாரி வழங்கக் காத்திருக்கிறார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

பிற்பகல் 1–05

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 20 சதவிகிதம் வழங்கிய தார்மீக உரிமையில்தான் நான் கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறேன். மேலும் 20 சதவிகிதம் வழங்கியபோது, நிதி நிலை அப்பொழுது எப்படி இருந்தது என்பது மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சி உறுப்பினராக இங்கே அமர்ந்திருந்தார். அப்பொழுது 25 சதவிகிதம் வழங்க வேண்டுமென்று சொன்னவரும் அந்த உறுப்பினர்தான். அப்போதும், போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலைமை தெரியும். ஆக, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற எங்களைப் பொறுத்தவரையில், ஒரு நிர்வாகம் என்பது அங்கே இருக்கிற staring, இலாபக் கணக்கு மட்டும் பார்த்து நடத்துவது அல்ல. அங்கே பணியாற்றுகிற ஒன்றரை இலட்சம் தொழிலாளர்களுடைய–அவர்கள் ஒன்றும் டாடா, பிர்லா குடும்பத்தைச் சார்ந்தவர்களும் அல்ல. அவர்களையும் பார்த்து ஒரு humanistic administration– மனிதாபிமானத்தோடு நடத்துகின்ற நிர்வாகம் இருக்க வேண்டும் என்பதுதான் தொழிலாளர் நலப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே அனைவரும் எதிர்பார்க்கின்ற ஒன்று. நீங்கள் கேட்டீர்கள், 25 சதவிகிதம் கொடு என்று கேட்டீர்கள். இப்போது 8.33 சதவிகிதமாக்கி, பின்னர் 10 சதவிகிதமாகக் கொடுத்திருக்கிறீர்களே, குறைந்தபட்சம் 20 சதவிகிதமாவது கொடுக்கக் கூடாதா என்று கேட்கிற தார்மீக உரிமை, கடமை எனக்கு இருக்கிறது என்கிற உணர்வோடு கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். உங்களுக்கு அந்தத் தார்மீக உரிமை இல்லை என்பதை நான் மீண்டும் ஒருமுறை சொல்ல விரும்புகிறேன். காரணம், அந்தத் துறையிலேயே, அதற்கு முன்பு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, அப்போதும் இதே அதிகாரிகள்தான் இருந்தார்கள். இதே துறைதான் இருந்தது. அப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி காலத்திலே, 5 ஆண்டு காலத்திலும் மொத்த நட்டமே ஏறத்தாழ 400 கோடி ரூபாய் அளவிலேதான் இருந்தது. ஆனால், நீங்கள், 5 ஆண்டு காலத்திலே ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய்க்கு நட்டத்தை உருவாக்கிவிட்டு, அந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கடுமையான நிதி நெருக்கடியை

உருவாக்கிவிட்டு, நீங்கள் கேட்பதிலே நியாயம் இல்லை என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, சென்ற ஆட்சிக் காலத்திலேகூட, நாங்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றபோது கேட்டோம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே குறைந்த அளவுதானே நட்டம் வந்திருக்கிறது, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏன் 1,500 கோடி ரூபாய் நட்டம் வந்திருக்கிறது என்று அப்போதும் நாங்கள் இதே கேள்வியைக் கேட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நீங்கள் சரியான தகவல், பதில் அளிக்க முடியவில்லை. அன்றைக்கு நீங்கள் அதற்கு உரிய காரணத்தைக்கூட சொல்ல முடியவில்லை. ஆனால், உங்களுடைய இயலாமையை நீங்கள் திசை திருப்ப முயற்சிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜா. (குறுக்கீடு) போதும், போதும், பொன்முடி. கேட்டதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். இராஜா, இரண்டு மணித்துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய குறுக்கீடு வந்துவிட்டது. நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த 10 சதவிகிதத்தை 20 சதவிகிதமாக போனஸ் உயர்த்திக் கொடுங்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அரசு, தொழிற் சங்கத்துடன் 3 ஆண்டுக்கொருமுறை ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை என்பது முதலில் அமலில் இருந்தது. இதை இந்த அரசு 5 ஆண்டாக உயர்த்தியது. ஆனால், 1998–க்குப் பிறகு 6 ஆண்டுகளாகியும்கூட அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்க அமைப்புகளோடு பேச்சுவார்த்தை நடத்தி, அந்த ஊதிய ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை. அதை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இன்று தமிழ்நாட்டிலே...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் பலமுறை இங்கு பதில் சொல்லப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத் தொழிற் சங்கத்தினுடைய ஊதிய ஒப்பந்தம் நடக்காமல் இருப்பதற்கு, அரசோ அல்லது போக்குவரத்துக் கழகங்களோ காரணம் இல்லை என்பதை பலமுறை உங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மீண்டும் உங்களுக்கு வேண்டுமானால்—அன்றைக்கு நீங்கள் சபைக்கு வரவில்லை .என்று கருதுகிறேன்—நினைவூட்ட விரும்புகிறேன். அந்தப்



போக்குவரத்துத் தொழிற் சங்கங்களினுடைய பேச்சுவார்த்தை, ஊதிய ஒப்பந்தம் நடக்காமல் இருப்பதற்கு முழு முதல் காரணம், தொழிற் சங்கங்கள்தான். அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகளை வாபஸ் வாங்கிவிட்டு, இப்போது வந்தாலும் உடனடியாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு போக்குவரத்துக் கழகமும், அரசும் தயாராக இருக்கிறது என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராஜா, இதெல்லாம் மானியக் கோரிக்கையிலே அமைச்சர் விரிவாகச் சொன்னார். அப்போது நீங்கள் leave–லே இருந்ததால் தெரியவில்லை.

**திரு. டி.கே. இராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே வழக்கு இருப்பது தெரியும். நான் அரசைக் கேட்டுக்கொள்வது, நீங்கள் அதற்கு ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்தித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று தமிழ்நாட்டிலே, போக்குவரத்துத் துறையிலே ஒரு இலட்சம் பேர் தற்காலிகப் பணியாளர்களாகவும், மின் வாரியத்திலே 8.5 ஆயிரம் பேரும் மற்றும் வனத் துறையிலே 5 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களும் தற்காலிகப் பணியாளர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று இன்றைக்கு வெளியிலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நீங்கள் பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 198[illegible]-லிருந்து 1986 வரையிலே வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமாக கிராம சமூக வனவியல் ஊழியர்களாக, வனத் தோட்டக் காவலர்களாக நியமிக்கப்பட்ட 600 பேரை ஊரக வளர்ச்சித் துறை பணிக்கு மாற்றினார்கள். ஆனால், ஊரக வளர்ச்சித் துறை அவர்களை பணியிலே எடுத்துக்கொள்ளவில்லை. நீங்கள் வனத் துறையிலும் பணி கொடுக்கவில்லை, ஊரக வளர்ச்சித் துறையிலும் பணி கொடுக்கவில்லை, இப்போது அந்த 600 குடும்பங்களும் 16 ஆண்டுகாலமாக நடுத்தெருவிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே; அவர்களுக்கு நீங்கள் நிரந்தரப் பணி இல்லை என்று சொன்னாலும்கூட தற்காலிகப் பணியாவது வழங்கி அந்த 600 குடும்பங்களையும் நீங்கள் வாழ வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிராம சமூக ஊழியர்கள், தோட்டக் காவலர்கள் இதில் 4,000 பேர் 25 வருடங்களாக தற்காலிக ஊழியர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு சம்பளம் வெறும் ரூ. 817/- மட்டுமே.

சமீபத்திலேகூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சத்துணவுப் பணியாளர்களுக்கெல்லாம் ஊதியத்தை உயர்த்திக் கொடுத்தார்கள். ஆனால், இவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு என்பதே கிடையாது. இவர்கள் இறந்துவிட்டாலோ அல்லது அடிபட்டாலோ அல்லது ஓய்வு பெற்றாலோ இவர்களுக்கு எந்த நிதியுதவியும் கிடையாது. எனவே, நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இவர்களுக்கு அரசு உத்தரவு ஆணை எண் 2டி, 56—ன்படி ரூ.2,006.25 பைசா சம்பளம் உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 மணித்துளிகளுக்கு மேலே ஆகிவிட்டது. (குறுக்கீடு) 15 மணித்துளிகளுக்கு மேலே ஆகிவிட்டது. (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். ஒரேயொரு மணித் துளியில் உரையை முடியுங்கள்.

**திரு. டி.கே. இராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டமான வேலூர் மாவட்டம் 12 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியது. 2,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. 3.5 இலட்சம் மக்கள்தொகை கொண்ட பெரிய மாவட்டம். 20 Union–களையும் 14 நகராட்சிகளையும் கொண்ட மாவட்டம். நீண்டநாள் கோரிக்கை வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருப்பத்தூரைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டம் உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) இராஜா, உரையை முடித்துவிடுங்கள். ஹேமச்சந்திரன், அவர் இப்போது உரையை முடித்துவிடுவார்.

**திரு. டி.கே. இராஜா:** திருப்பத்தூர் நகரிலே கழிவுநீர் எல்லாம் இன்றைக்குப் பெரிய ஏரியிலே கலந்து சுற்றுச்சூழலைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. மிகப்பெரிய, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 250 ஏக்கர் பாசன ஏரி இன்றைக்குப் பாழ்பட்டுக் கொண்டிருக்கின்றது. பாதாளச் சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று நான் நீண்ட காலமாகக் கோரி வருகின்றேன்.



அதேபோல, இடநெரிசல் காரணமாக நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. ஒரு புறவழிச் சாலையும், அரசு பொது மருத்துவமனைக்கு, மாவட்ட மருத்துவமனை அந்தஸ்தும் வேண்டுமென்று அமைச்சரிடத்திலே கோரிக்கை வைத்திருக்கின்றேன். ஆனால், அவர்கள் வேலூரிலே C.M.C. இருக்கிறது; வேலூரிலே Apollo இருக்கிறது; வேலூரிலே மருத்துவக் கல்லூரி இருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) இராஜா, உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. டி.கே. இராஜா:** ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராஜா, எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) மற்றதை எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) மற்ற கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனங்கள்...(குறுக்கீடு)

**திரு. டி.கே. இராஜா:** வாக்கியத்தை முடிக்க வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன் அவர்கள் பேச ஆரம்பித்துவிட்டாரே! சரி சொல்லுங்கள்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் வாலாஜாவிற்கு மாவட்ட மருத்துவமனை வழங்குவதை எப்படி ஏற்றுக்கொள்வது? எனவே, என்னுடைய திருப்பத்தூர் மருத்துவமனைக்கு மாவட்ட மருத்துவமனை அந்தஸ்து கொடுங்கள். என்னுடைய கோரிக்கையை எல்லாம் நிறைவேற்றித் தருவதற்கு உங்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த உங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்காகத்தானா! இதை நானே சொல்லியிருப்பேனே! திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம் மற்றும் தொழிலாளர் நலத் துறையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று வனம் என்பது மிக முக்கியமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இன்று அரசைப் பொறுத்த அளவிலே அதைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன

என்பதைப்பற்றி எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், போதுமான அளவுக்கு அதற்கு வசதிகள் வழங்கப்படவில்லை என்பதை நான் இங்கே தங்கள்மூலம் அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உதாரணமாக, இந்தக் காடுகளிலிருந்து மரங்களை வெட்டி எடுத்துச் செல்கின்ற நேரத்தில், அதுகுறித்து மக்கள் தகவல் கொடுக்க வேண்டுமென்றால் Forest Range Officers–க்குத்தான் தகவல் கொடுக்க முடியும். ஆனால், பல இடங்களிலே Forest Range Office–களிலே அதற்கான தொலைபேசி வசதியே கிடையாது. பல இடங்களிலே அங்கே Wireless facilities இல்லை. ஆகவே, வனங்களைப் பாதுகாப்பதற்கு இந்த Range Office–களுக்கு Phone facilities–ம், முடிந்தால் Wireless facilities–ம் கொடுக்கப்பட வேண்டும். பல இடங்களிலே போதுமான அளவுக்கு வாகனங்கள் இல்லாததன் காரணமாக காலாகாலத்திலே போய் அந்தத் திருட்டுகளைப் பிடிப்பதற்கும் இந்த வனத் துறை அதிகாரிகளால் முடியவில்லை. ஆகவே, அதற்குத் தகுந்த அளவில் உள்ள வாகன வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இந்தக் காடுகளிலே வனத் துறையைச் சார்ந்த Ranger–கள், அதேபோன்று Forester–கள் எல்லாம் Range Office–க்கு அருகில் தங்கியிருந்தால்தான் தகவல்கள் போகிற நேரத்திலே இவர்கள் போய் அந்த மரங்களைக் கடத்திச் செல்லக்கூடியவர்களைப் பிடிக்க முடியும். இவர்களுக்குத் தகவல் கிடைத்து பல மணி நேரம் கழிந்த பிறகு போனால் அந்த ஆட்களை இவர்கள் எப்படிப் பிடிக்க முடியும்? முடியாது. அதுவும் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே இந்த வன எல்லையிலே, கேரள எல்லை இருக்கிறது. ஆகவே, அவர்கள் திடீரென்று கேரள எல்லைக்குப் போய்த் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிகளிலே அதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்று கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே Private Forest Act என்று ஒரு Act–ஐ வைத்துக்கொண்டு அந்த வனப் பகுதிக்கு அருகிலே இருக்கிற மக்களுக்குப் பெரிய தொல்லையை இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று வனப் பாதுகாப்பு என்ற பெயரிலே அந்தப் பகுதியில் உள்ள வீடுகளை maintenance பண்ணுவதற்குக்கூட அனுமதிக்கப்படாத நிலை இருந்து கொண்டிருக்கிறது.



பிற்பகல் 1–15

அந்த இடத்தில் ஒரு வீட்டின் சுவர் மழையினாலே இடிந்துபோனால், அதைத் திருப்பிக் கட்டுவதற்குக்கூட வனத் துறை பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. ஆகவே, அதற்குக் காரணம் கேட்டால், கல் உடைக்கக் கூடாது, மரத்தை வெட்டக் கூடாது என்பவையெல்லாம் இன்றைக்குச் சட்டத்திலே இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, நாங்கள் அனுமதிக்க முடியாது. அதற்கு அனுமதி பெற வேண்டுமென்றால் மத்திய அரசிடம் சென்று அனுமதி பெற வேண்டுமென்ற துரதிர்ஷ்டவசமான நிலை இருக்கிறது. ஆகவே, இந்த Private Forest Act என்ற அந்த Act–ஐ கன்னியாகுமரி மாவட்டத்திலே எந்த அளவுக்கு அமல்படுத்தலாம், எந்தெந்தப் பகுதிகளில் அமல்படுத்தப்பட வேண்டுமென்று இந்த அரசு ஒரு குழுவை நியமனம் செய்து, அந்தக் குழுவினுடைய சிபாரிசின்படி செய்யவேண்டும். துரதிர்ஷ்டவசமாக நாங்கள் திருவிதாங்கூர் கொச்சி இராஜ்யத்திலிருந்து வந்தவர்கள் என்ற காரணத்தாலே, திருவிதாங்கூர் கொச்சி இராஜ்யத்திலிருந்த சட்டங்கள் இன்னும் கன்னியாகுமரி மாவட்டத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. காரணம் என்ன? தேக்கு மரம் என்றால் எங்கள் மாவட்டத்தில் வெட்ட முடியாது. ஆனால், மற்ற பகுதிகளில், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தேனி மாவட்டத்தில் வெட்டலாம். ஆனால், எங்கள் பகுதியில் வெட்ட முடியாது என்ற ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இதற்குக் காரணம் அந்தச் சட்டமும், இந்தச் சட்டமும் ஆக இந்த இரண்டு மாநிலங்களிலுள்ள சட்டங்களைக் கொண்டு வந்து எங்களை நெருக்குகின்ற ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, அங்கே குவாரியில், கல் உடைக்கின்ற தொழிலைச் செய்யக்கூடியவர்களுக்கு உரிமம் பெறவேண்டுமென்றால், வனத் துறையிடமிருந்து No Objection Certificate வாங்கிக் கொடுக்க வேண்டும். No Objection Certificate–ஐ அங்கிருக்கின்ற D.F.O.–விடம் கேட்டால், அவர் என்ன சொல்கின்றார் என்றால், நீங்கள் டெல்லிக்குப் போய் வாங்கி வந்துவிடுங்கள், நான் இதிலே ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலை. அப்படி ஒரு மரத்தை வெட்ட வேண்டுமென்றால், எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு தேக்கு மரத்தையோ அல்லது வனத் துறைக்கு சம்பந்தப்படாத மரம், அயலி மரமோ அல்லது பலா மரமோ வெட்ட வேண்டுமென்றால்கூட, இன்றைக்கு சென்னையில் இருக்கின்ற P.C.C.F.–ன் அனுமதி பெற்றுத்தான் வெட்ட முடியும் என்ற நிலை இருக்கிறது. இது, Private Forest Act–ஐ கன்னியாகுமரி மாவட்டத்தில்

முழுமையாக அமல்படுத்தப்படுவதற்கு அரசு ஒரு Notification-ஐப் போட்டதன் காரணமாக ஏற்பட்ட நிலை. இது மற்ற மாவட்டங்களிலே இல்லை. எந்தெந்தப் பகுதியிலே உண்மையாக இது அமல்படுத்தப்பட வேண்டுமென்று அரசு பரிசீலித்து முடிவு எடுத்து அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று எங்கள் மாவட்டத்தில் வனத் துறையோடு சம்பந்தப்பட்டிருக்கின்ற மிகப் பெரிய ஸ்தாபனம், அரசு இரப்பர் கழகம். பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்காக அரசு இரப்பர் கழகத்தை ஏற்படுத்தினார்கள். ஏறத்தாழ 3,000 ஆட்கள் இன்றைக்கு வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அரசினுடைய சில தவறான நடவடிக்கைகளின் காரணமாக அந்த ஸ்தாபனம் இன்றைக்கு மிகப் பெரிய நெருக்கடியில் நடந்துகொண்டிருக்கின்ற நிலை இருக்கிறது. நான் ஒன்றிரண்டு விவரங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதாவது கழகத்திற்கு குத்தகை. (குறுக்கீடு) தொழிலாளர் பிரச்சினைக்கு நான் இன்னும் வரவில்லை. பின்னர் வருகின்றேன். அதாவது பருவமடைந்த இரப்பர் மரத்திற்குக் குத்தகை வாடகை ஏற்கெனவே 6 ஆயிரம் ரூபாயாக இருந்தது, இப்போது 3 ஆயிரம் ரூபாயாகக் குறைந்திருக்கிறது. அதற்காக அரசுக்கு நன்றி. ஆனால், நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நாம், தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக வரவேண்டுமென்று விரும்புகின்றோம். ஆனால், கர்நாடகத்திலே 12.5 ரூபாய்தான் குத்தகை. கேரளாவிலே 1,300 ரூபாய்தான் குத்தகை. நான் என்ன சொல்கிறேன் என்றால், முதல் மாநிலமாக வரவேண்டுமென்றால், அந்த 12.5 ரூபாயைவிட குறைவாக, 100 ரூபாய் என்று வைக்கவேண்டும். நான் ஒருசில விஷயங்களை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரசு இரப்பர் கழகம், வனத் துறைக்கே கொள்முதல் விலையை முழுமையாக செலுத்திவிட்டுத்தான், 1-10-1984-லே இரப்பர் மரங்களைப் பெற்று பராமரிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளை 20 வருடங்களுக்கு மேலாக கழக நிதியில் செலவு செய்து மரங்களை வளர்த்தது. அந்த நிலங்களுக்கு அதிக குத்தகை வாடகையையும் செலுத்தியுள்ளது. மர விற்பனையில் பொது விற்பனை வரவை அரசு பெற்றுக்கொள்கின்றது. அதனால் முழுமையாக கழகத்திற்கு இரப்பர் மறு நடவுப் பணிகளுக்கு பராமரிப்புப் பணிகளுக்குக்கூட இன்றைக்கு பணம் ஒதுக்கப்படவில்லை. (குறுக்கீடு)



பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரையிலேயே சொல்லலாம், அமைச்சர் அவர்கள் பதிலுரையிலேகூடச் சொல்லலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதனாலே இந்த, ஏற்கெனவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. ஹேமச்சந்திரன், இன்னும் இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** எவ்வளவு சீக்கிரத்திலே முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்திலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்ன, அது... (சிரிப்பு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** I won't take unnecessary time. இதன்மூலம் வட்டியின்மீது, அதாவது 6.45 கோடியை அரசு ஏற்கெனவே கொடுத்த கடனை இன்றைக்கு மூலதனமாக மாற்றப்பட்டிருக்கிறது. இதன்மூலம், அதாவது 10 சதவீதம் வட்டி அதற்கு விதித்திருக்கிறது. ஏற்கெனவே இதற்கு வட்டி செலுத்தித்தான் அந்தப் பணம் மூலதனமாக மாறியிருக்கிறது. இப்போது இதற்கு மேலும் 10 சதவீதம் வட்டி கட்ட வேண்டும் என்று சொல்கிற நேரத்தில், வட்டியின்மீது வட்டி விதிக்கிற ஒரு நிலையை அரசு எடுத்திருக்கிறது. அது நியாயம் இல்லை. இன்று, 2003-2004 ஆம் ஆண்டு கணக்கில் கழக விற்பனை வரவு 16.54 கோடி-இது எல்லாம் இந்தப் புத்தகத்திலே உள்ளதுதான்-14.54 கோடியாகும். அரசு இரப்பர் கழகம் தனது ஆண்டறிக்கை பக்கம் 40 மற்றும் 68-களில் அரசு வட்டிக்கு மட்டும் ரூ.1.93 கோடியும், குத்தகை வாடகைக்கு 0.75 கோடியும், ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் இரப்பர் கழகத்தின் இலாபத்தைக் குறைத்தும் நஷ்டத்திற்குக் கொண்டு செல்லவும், அரசினுடைய நடவடிக்கைகள் திட்டத்திற்குப் போய்ச் சேர்கிறது. ஆகவே, நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் 35 கோடிக்கு மேலே ரொக்கமாக அரசுக்கு இரப்பர் கழகம் இதுவரையில் கொடுத்திருக்கிறது. ஆகவே, இந்த வாடகை அல்லது இந்தக் குத்தகை ரூ. 3,000 என்று வைத்திருப்பதை குறைந்தபட்சம் ஆயிரத்திற்குக் கீழேயுள்ள ஒரு தொகையாக வைத்தால்தான் அரசு இரப்பர் கழகம் பாதுகாக்கப்படும் என்ற நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். ஹேமச்சந்திரன், ஒரு இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்திலும் இங்கு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியிலே 1998-லே நிலுவையில் வைத்த தொகை, இந்த அரசு எடுத்த நடவடிக்கை, உங்கள் மனசாட்சிக்கு—இந்த அரசு வந்தபிறகு, இந்த இரப்பர் கழகத்தின் செயல்பாடு எப்படியிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே கூற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் பேசியதைக் கவனிக்கவில்லை என்று சொல்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன். ஆறாயிரம் ரூபாயாக இருந்ததை மூவாயிரம் ரூபாயாக இந்த அரசு குறைத்தது. அந்த அளவிற்கு நன்றி.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இல்லை, இல்லை. நஷ்டத்திலே இருந்த அந்த இரப்பர் கார்ப்பரேஷனை 1998-லே இழுத்து மூட வேண்டும் என்ற நிலையை மாற்றி, எத்தனை கோரிக்கைகளை வைத்தாலும் அத்தனை கோரிக்கைகளையும் உடனுக்குடன் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றி, இன்றையதினம் அரசு இரப்பர் கழகம் எந்த நிலையில் இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதைமட்டும் தாங்கள் மனசாட்சியுடன் இந்த மாமன்றத்திலே பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் கழகத்தைப் பொறுத்தவரை, 1998–லிருந்து 2001 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சம்பள நிலுவைத் தொகை இருந்தது. அகவிலைப்படி கொடுக்காமல் இருந்தது. அவர்களுக்குக் குறைந்தபட்சம் கொடுக்க வேண்டிய சீருடை, பெட் ஷீட், குடை போன்றவைகூட கொடுக்காமல் சென்றுவிட்டார்கள். நஷ்டத்திலே இயங்கிக்கொண்டிருந்த அரசு இரப்பர் கழகத்தை தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், ஆறாயிரம் ரூபாயாக இருந்த குத்தகைத் தொகையை மூவாயிரம் ரூபாயாகவும், 12 கோடியே 90 இலட்சம் ரூபாய் அரசுக்குச் செலுத்த வேண்டிய பணத்தை அரசு இரப்பர் கழகம் செலுத்தாமல் இருந்தது; அதில் 6 கோடியே 45 இலட்சம் ரூபாயை பங்குத் தொகையாகவும், 6 கோடியே 45 இலட்சம் ரூபாயை மென் கடனாகவும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு இரப்பர் கழகத்திற்குக் கொடுத்தார்கள். மேலும் நிலுவைத் தொகையையும் கொடுத்தார்கள். 1998-லிருந்து 2001 வரைக்கும் சம்பள நிலுவைத் தொகை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொடுக்காமல் இருந்ததையும் கொடுத்திருக்கிறார்கள். மேலும், இப்போது தனியார் இரப்பர் தோட்டத்திற்கு இணையாக சம்பள உயர்வை 1–12–2004 முதல் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இப்படி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் புறக்கணிக்கப்பட்ட அரசு இரப்பர் கழகம், நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த அரசு இரப்பர் கழகம், தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, வழிகாட்டுதலின்படி இன்றைக்கு இலாபத்தை எட்டியிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-25

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சில விஷயங்களைச் சொன்னார்கள். அந்த அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்காக வேண்டி நான் அரசு கடிதம் ஒன்றைப் படிக்கின்றேன். அதாவது சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9. கடித எண் 18443/வ.8/2001–3, நாள் 29–11–2002 அனுப்புநர், திரு. எஸ். இராமகிருஷ்ணன், I.A.S., அரசுச் செயலாளர். பெறுநர் திரு. ஜே. ஹேமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர், CPI(M) Office, திருவட்டாறு, கன்னியாகுமரி மாவட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், எதற்காக address எல்லாம் படிக்கிறீர்கள்? என்ன விவரம் என்று சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சொல்கிறேன். நான் என்ன என்று சொல்கிறேன். நான் நிலைமைக்கு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்வட்ட ஆட்சித் தலைவர் கூட்டத்திலும் சரி, நீங்கள் என்னிடம் முறையிட்ட நேரத்திலும் சரி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவிடம் அரசு Rubber Corporation-னுடைய நிலை இப்போது இலாபத்தில் ஓடுகிறது. தொழிலாளர்களின் நிலை எப்படி இருக்கிறது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதைத்தான் மீண்டும், மீண்டும் வலியுறுத்தி உங்கள் மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள் என்று நான் கேட்டேன். நீங்கள் எப்பொழுதும் தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுப்பேன் என்று

பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது தொழிலாளர்களுக்கு ஏதாவது பாதிப்பு இருக்கிறதா?

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசுகிறார், ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் பேசுகிறார். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நான்தான் பதில் சொல்கிறேனே. நீங்கள் எல்லாம், (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் அவசரப்படவில்லை. மாவட்டத்தினுடைய நிலைமை, அந்த Rubber Corporation-னுடைய நிலை எப்படி இருந்தது? அதுபற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவேதான் திரும்பத் திரும்ப உங்களைக் கேட்கிறேன். நீங்கள் தைரியமாகச் சொல்லலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, 'சீசருக்குக் கொடுக்க வேண்டியதை எந்த நேரத்திலேயும் சீசருக்குக் கொடுப்பதற்கு நாங்கள் அஞ்சினதே கிடையாது' அதாவது, இன்றைய முதலமைச்சர் அவர்கள், நான் கொடுத்த மனுவிற்கிணங்க அரசுக்கு எழுதி, அரசுச் செயலாளர் அவர்கள் எனக்கு அனுப்பிய கடிதத்திலே சொல்லி இருக்கின்ற விஷயங்களைத்தான் இந்த அரசு செய்திருக்கிறது. எனக்கு ஒன்றும் இதிலே, நான் சாதனையாக ...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இவர்கள் பல போராட்டம் நடத்தினார்களே, அவர்கள் செய்தார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது இரப்பர் விலை என்ன தெரியுமா?...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் மீண்டும் உங்களிடம் சொன்னேன். நீங்கள் கடந்த சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தீர்கள். 1998-ல் நிலுவையில் இருந்த தொகையை உங்களால் வாங்க முடிந்ததா? முடியவில்லை. அதையும் இதே மாமன்றத்தில் நீங்கள் பேசியிருக்கிறீர்கள்.



அந்தத் தொகை கிடைக்கவில்லை. மீண்டும் இந்த அரசு பொறுப்பேற்றபோது உங்களுடைய கோரிக்கை அல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா (குறுக்கீடு) Sir, letter எல்லோருக்கும் கொடுக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நாங்களே letter கொடுக்கிறோம். ஒரு சட்டமன்ற உறுப்பினர் இங்கே இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் எனக்கு மருத்துவ வசதி வேண்டும் என்று கேட்டார்கள். நாங்களே பதில் அளிக்கிறோம். ஆகவே, தனிப்பட்ட ஹேமச்சந்திரன் அவர்களுக்கு இது பதில் என்று நினைத்துக்கொள்ள வேண்டாம். ஒருவர் அனுப்பும்போது அதற்கு அரசு மூலமாக அவர்களுக்கு பதில் அளிக்கப்படும். நான்தான் கேட்டேன், நான்தான் கோரிக்கை நிறைவேற்றினேன் என்று சொல்வது முற்றிலும் சாலச் சிறந்தது அல்ல. உங்களுக்கு ஏதோ பேச வேண்டும் என்று பேசினீர்கள். ஆனால், Rubber Corporation-ஐப் பொறுத்தவரையில் தெளிவாகத் தெரிந்தவர்கள், உங்களுக்கு நன்றாகத் தெரியும். போராட்டத்திற்கு இப்போது வழியில்லை. ஆகவேதான் இந்த மாமன்றத்தில் ஏதாவது பேசி செய்தி வரவேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் பேசி முடியுங்கள். அவையின் நேரம் முடியப் போகிறது. பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்லித்தான் இந்த அரசு இரப்பர் கழகத்திற்கு கொடுக்க வேண்டிய (குறுக்கீடு) சம்பள நிலுவைத் தொகையை, private தொழிலாளர்களுக்கு இணையாக சம்பள உயர்வு மற்றும் கொடுக்காமல் இருந்த பெட்ஷீட், குடை போன்றவற்றை எல்லாம், அவர் சொல்லிக் கொடுக்கவில்லை. அங்கே உள்ள தொழிலாளர்களுடைய கோரிக்கை, எங்களது சுகாதாரத் துறை அமைச்சர் உயர்திரு. தளவாய் சுந்தரம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து கோரிக்கையை வைத்தார்கள். அதைப் பரிசீலித்துதான் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்தார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் முடியுங்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.. அவையின் அனுமதியுடன் நேரம் நீட்டிக்கப்படுகிறது. ஒரு நிமிடத்திலே முடியுங்கள்.

பிற்பகல் 1-30

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம்... அந்த நேரத்திலே, ஒரு போராட்டம் நடத்தப்பட்டு, அன்றைக்கு பத்து ரூபாய் வித்தியாசம் இருந்ததிலே ஐந்து ரூபாய் கொடுப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டு, அன்றைக்கு கையெழுத்து, settlement போடப்பட்டு ஐந்து ரூபாய் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு (குறுக்கீடுகள்).....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரையிலே சொல்லச் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்த ஊதிய உயர்வு (குறுக்கீடுகள்)......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரையிலே சொல்லச் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதற்குப் பிறகு அந்த ஊதிய உயர்வு அந்த அரசால் கொடுக்கமுடியவில்லை. (குறுக்கீடு) சொல்ல விடுங்கள். அதற்குப் பிறகு புதிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே வந்ததற்குப் பிறகு, பல நடவடிக்கைகளுக்குப் பிறகு, 2-1-2002-லேயிருந்து 2005 வரை தனியார் தோட்டங்களிலே கொடுக்கிறதைவிட குறைவாக 13 ரூபாய் வைத்து 35 மாதம் அந்தத் தொழிலாளிகளுக்கு, அந்த balance இல்லை என்று அவர்களை ஒத்துக்கொள்ள வைத்து, இப்பொழுது ஊதிய உயர்வு தனியார் துறை...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் அந்த நிலுவைத் தொகை கொடுக்கும்பொழுதே agreement வந்து, 2005-க்குப் பிறகுதான் கொடுக்கப்படும் என்பது agreement. அதனாலேதான் 1-12-2004-லிருந்து private தொழிற்சாலைக்கு இணையாக இப்பொழுது சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சம்பள உயர்வு மட்டுமல்ல. இலாபத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை நான் மீண்டும், மீண்டும் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறேன்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. 1-12-2004-லேயிருந்து இந்தச் சம்பள உயர்வு கொடுத்தால் போதும் என்று அந்தத் தொழிலாளிகளை ஒத்துக்கொள்ள வைப்பதில் நானும், அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திர பிரசாத் அவர்களும், அந்தத் தொழிலாளிகளோடு பேசி, அவர்களை ஒத்துக்கொள்ள வைத்து, நம்முடைய, அந்தக் கழகத்தினுடைய Chairman அவர்களும் இருந்து பேசி ஓர் ஒப்பந்தம் போடப்பட்டது. ஆனாலும், அந்தத் தொழிலாளிகளுக்கு 13 ரூபாய் வைத்து, 35 மாத சம்பளம் உயர்வு இன்றைக்கு கிடைக்காமல் போய் இருக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள், உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் ஒன்றைச் சொல்லுகிறேன். நான் 10 ஆம் தேதி இங்கே பேசிய நேரத்திலே, நான் பேசினதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோபப்பட்டு என்னைப் பற்றிப் பேசினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதெல்லாம் பேசக் கூடாது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** எனக்கு அதிலே வருத்தம் இல்லை. என்னுடைய அந்தக் கோரிக்கை, முதலமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையின் அடிப்படையிலே அல்ல என்று சொன்னாலும்கூட எனக்கு வருத்தம் இல்லை. ஆனால், கட்டுமானத் தொழிலாளிகளுக்கு இன்று pension அறிவிக்கப்பட்டிருக்கிறது. நான் C.I.T.U. சார்பிலே முதலமைச்சருக்கும், அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு மங்களகரமாக முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை வேறு இருக்கிறது. நான் தொழிலாளர்கள் மானியத்திற்கு வரவில்லையே! அதாவது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இன்னொரு நாளைக்கு வைத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதையும் அன்புடன் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரிய இரப்பராக அல்லவா இருக்கிறது! (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் கேட்டதையெல்லாம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். அதனால் இவர்கள் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். இருக்கின்ற நிதிநிலைக்கு ஏற்ப தொழிலாளர்களுடைய கோரிக்கை குறித்து இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிந்தித்து நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பார்கள். உட்காருங்கள். நாளை 5–4–2005 வினாக்கள்–விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அவர் நாளைக்கு பேசுகின்றாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் முடித்துவிட்டார். ஹேமச்சந்திரன் முழுமையாக நிறைவு செய்து விட்டார். நல்ல திருப்தியாக உட்கார்ந்து இருக்கிறார். (குறுக்கீடு) ஒரு நிமிடத்திலே முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும் பத்து நிமிடமெல்லாம் உட்கார மாட்டார்கள். ஒரு ஐந்து நிமிடத்திலே முடியுங்கள். ஐந்து மணித்துளிகள். ஐந்து மணித்துளிகளிலே முடியுங்கள். (குறுக்கீடு) சிவபுண்ணியம், உங்கள் உறுப்பினர் நாளைக்குப் பேசுவார். (குறுக்கீடு) காலையிலே சேர்த்து விடுவோம். நாளைக்குப் பேசட்டும் அவர். நாளைக்குப் பேசட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாளை நான் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை அவர் முடித்துவிடுவார். ஒரு ஐந்து நிமிடத்திலே முடித்துவிடுவார்.



பிற்பகல் 1–35

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் பேசி முடித்துவிடுவார். ஒரு ஐந்து நிமிடத்தில் பேசி முடித்துவிடுவார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** 10 நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். அதாவது இந்த I.I.T. என்ற ஸ்தாபனத்திலே training கொடுக்கிறபோது, Computers–ஐப் பொறுத்தளவிலே self–certification என்ற ஓர் ஏற்பாடு இருக்கிறது. அது சரியல்ல. அரசு ஒரு examination நடத்தி, அரசுதான் அவர்களுக்கு Certificate கொடுக்க வேண்டுமே தவிர, அந்த ஸ்தாபனத்தை நடத்துகிற தனியார்களால் Certificate கொடுக்கப்படுகிற அந்த நிலைக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அதேபோன்று, விருதுநகர் மாவட்டத்திலே Granite Quarry திருத்தங்கல் என்ற இடத்திலே 2001-லிருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆயிரத்திற்கு அதிகமான மக்களுக்கு, அதன் சுற்றுப்புறத்திலே தங்கியிருக்கக்கூடியவர்களுக்கு இன்றைக்கு அந்த Quarry காரணமாக பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. அதற்குத் தேவையான licence-கூட அவர்கள் எடுக்கவில்லை. Pollution Control Board-ஆல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதைப் பொறுத்தளவிலே அவர்கள் இதைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்தி அந்த மக்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதேபோன்று, நம்முடைய Industries Minister அவர்கள் தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்தப்போவதாக இந்த அவையிலே அறிவித்திருக்கிறார். அது எப்படி Industries Minister சொன்னார் என்று தெரியவில்லை. ஆனால் என்னுடைய ஐயப்பாடு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2003 ஆம் ஆண்டு புதிய தொழிற் கொள்கையை

வெளியிட்டிருக்கின்றார்கள். அதில் வெளிநாட்டிலேயிருந்தும், பிற மாநிலங்களிலேயிருந்தும் தொழில் முனைவர்களை, எப்படி அவர்களைக் கவர்ந்திழுப்பது என்பதும், தொழிற்சாலைகளை எப்படி நவீன முறையில் நடத்திக்கொள்வது என்பதும், ஆலைகளிலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்கள் அவர்களுக்கு நன்மைகளைத் தருகின்ற வகையிலும் ஒரு புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்பதுதான் சொல்லியிருக்கின்றோமே தவிர, தொழில் துறை அமைச்சர் என்கிற முறையில் சொல்லாவிட்டாலும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிற் கொள்கையைப் புதியதாக உருவாக்கியதன் அடிப்படையிலேதான் அதைச் சொல்லியிருக்கின்றார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒன்றை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, மாண்புமிகு Industries Minister அவர்கள் சொல்கிற நேரத்தில் National Labour Commission–னுடைய சிபாரிசுகளுக்கிணங்க அந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது சரியல்ல. காரணம் என்னவென்றால் பி.ஜே.பி. அரசால் நியமனம் செய்யப்பட்ட அந்த தேசிய Labour Commission, தொழிலாளர்களுக்கு விரோதமாக பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையை வைத்துக்கொண்டு தொழிலாளர்களுடைய இன்றைய உரிமையை பாதிக்கக்கூடிய வகையிலே எந்தச் சட்டத் திருத்தங்களையும் கொண்டு வருவதற்கு இந்த அரசு தயாராகக் கூடாது. இந்த Common Minimum Programme என்ற முறையிலே மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற திட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. Amendments to be within the parameters of no automatic hire and fire and fully protecting the interests of the labour. இதுதான் இந்தச் சட்டத் திருத்தங்களைப் பொறுத்தளவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, குறைந்தபட்ச ஊதியத்தைப் பொறுத்தளவிலே இன்று சில விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலே ஒன்றை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, இன்று நம்முடைய Chemical Industry–ஐப் பொறுத்தளவிலே ஒரு இலட்சத்திற்கு அதிகமான தொழிலாளர்கள் பாதிக்கக்கூடிய நிலை, இன்றைக்கு இந்த அரசினுடைய minimum wages சம்பந்தமாக இதிலே வந்திருக்கிறது. அதில் நான் என்ன சொல்கிறேன் என்றால், 'and' என்று போட வேண்டிய அந்த ஒரு



word–ஐ எடுத்துவிட்டதன் காரணமாக இன்று Chemical Industry–லே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணையிலுள்ள தொழிலாளர்களுக்குத்தான் அரசால் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய இயலும். இந்த அட்டவணையில் இரசாயன உரத் தொழில் என்ற தொழில் இடம் பெற்றுள்ளது. இந்தத் தொழிலுக்கு அரசு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்துள்ளது. அரசாணை வெளியிடும்போது தொழிலின் பெயர் இரசாயனம் மற்றும் உரத் தொழில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர், அரசாணையில் திருத்தம் செய்யப்பட்டு தொழிலின் பெயரை இரசாயன உரத் தொழில் என்று குறிப்பிட்டுள்ளது. இரசாயன தொழிலில் பணிபுரியும் தொழிலாளிகளுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோன்று நம்முடைய முந்திரி ஆலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகள் இன்றைக்கு வாங்கிக்கொண்டிருக்கிற ஊதியம் குறைவாக இருக்கிறது. அரசு சிபாரிசு செய்திருக்கிற ஊதிய உயர்வில் உள்ள பலன் அவர்களுக்குக் கிடைக்கப்படாத நிலை இருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொல்லலாம். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொல்லலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, contract தொழிலாளிகள், 25,000–க்கு அதிகமான ஆட்கள் மின்சார வாரியத்தில் வேலை செய்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரத் தொழிலாளிகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதேபோன்று, இப்படி பல அரசு நிறுவனங்களிலே, contract தொழிலாளிகளை வைத்துக்கொண்டு இருப்பதனால் திண்டுக்கல்லில், Dolphi என்ற ஒரு தொழிற்சாலையிலே ஏற்கெனவே வேலை செய்துகொண்டிருந்த 150 தொழிலாளிகளை, 1½ மாத காலமாக அவர்களுக்கு வேலை மறுக்கப்பட்டு இருக்கிறது. ஏனென்றால், அவர்கள் 6 ஆண்டு காலம் நிரந்தரமாக வேலை செய்துகொண்டிருந்த அந்தத் தொழிலாளிகள், contract தொழிலாளிகள் என்று எழுதிக் கொடுத்தால்தான் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியும் என்று அந்த நிர்வாகம் இன்றைக்கு வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. Joint Labour Commissioner அவர்களைக் கூப்பிட்டு நிர்வாகத்திடம் இந்த dispute முடியும் வரை அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவேண்டும், status quo maintain பண்ணவேண்டும் என்று சொன்னதற்குப் பிறகும்கூட, அந்த நிர்வாகம் மறுக்கிறது. ஆகவே, திண்டுக்கல்லில் உள்ள அந்தத் தொழிலாளிகளை பாதுகாத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய பீடித் தொழிலாளிகளைப் பொறுத்தளவிலே, தென் மாவட்டங்களில் 2 இலட்சத்திற்கும் அதிகமான தொழிலாளிகளுக்கு, அவர்கள் காண்ட்ராக்ட் என்று ஒத்துக்கொள்ளவில்லை என்ற காரணத்தினால், Pass Book அவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே, அவர்களுக்கு Provident Fund இன்றைக்குக் கொடுக்கப்படாமல், Provident Fund List–லிருந்து அவர்களுடைய பெயர் நீக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று, Handloom தொழிலாளிகளைப் பொறுத்தளவிலே, அவர்களுடைய Master weavers–ஐயும் அதேபோன்று தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் வரவழைத்துப் பேசி, நல வாரியத்தின் பலனை அவர்களுக்குக் கொண்டு செல்லக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன்று நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே 7-வது Page-ல் Tripartite Committees என்ற தலைப்பில், ஒரு மாவட்டத்திலே சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் கொண்ட ஒரு Committee உருவாக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட ஒரு Committee இருப்பதுபோல எனக்குத் தெரியவில்லை. குமரி மாவட்டத்திலே நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர்.



அங்கே அப்படிப்பட்ட ஒரு Committee இருந்தால் நிச்சயமாக என்னை அழைத்து இருக்க வேண்டும். ஆனால், என்னை இதுவரை அழைக்கவில்லை. 2002–ல் உள்ள உத்தரவு என்று சொல்லப்படுகிறது. அதேமாதிரி, State Labour Advisory Board Meeting பல மாதங்களாக நடத்தப்படவில்லை என்று தெரிகிறது. அந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

அதேபோன்று, நல வாரியங்களைப் பொறுத்தளவிலே, கட்டுமானத் தொழிலாளிகளுடைய நல வாரியம்தான் இன்றைக்கு function ஆகிக்கொண்டு இருக்கிறதே தவிர, மற்ற நல வாரியங்கள் இன்றைக்கு function ஆகவில்லை. அந்த நல வாரியங்களையும் function செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, கடைசியாக நான் ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புவது, நம்முடைய போக்குவரத்துத் தொழிலாளிகள், இன்றைக்குக் கடுமையான பாதிப்பிலே இருந்துகொண்டு இருக்கிறார்கள். அதாவது நான் ஒரு பட்டியலை இங்கே படித்தால் நம்முடைய அமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதாவது, அந்தத் தொழிலாளிகள் 4 வருட காலங்களாக போனஸ் 20 சதவிகிதம் கிடைக்கப்படாததனால், 13,500 ரூபாய் அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று பொங்கல் performance incentive கிடைக்கப்படாததனாலே, 2,500 ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று கல்வி உதவித் தொகை, அவர்களுக்கு 2 குழந்தைகளுக்கு மேல் இல்லை என்கிற காரணத்தினாலே 800 ரூபாய் இன்றைக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் 2001-ல் ஏற்பட்டு இருந்தால், அவர்களுக்குக் கிடைத்திருக்கலாம் என்ற நிலையில் அந்த benefits எல்லாம் பார்த்தால், ஒரு தொழிலாளிக்கு 58,000 ரூபாய் இழப்பு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) வருடம் ஒன்றுக்கு ரூ.7,000 (குறுக்கீடு)....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், அமைச்சர் அவர்கள், போக்குவரத்து மானியக் கோரிக்கையிலே ரொம்பத் தெளிவாகச் சொன்னார்கள்.

பிற்பகல் 1-45

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** போக்குவரத்துத் தொழிலாளிகளிடமிருந்து Pension–க்கு என்று சொல்லி பிடிக்கப்பட்ட பணத்திலே 31–7–2004 வரை,

அந்த டிரஸ்ட் என்ன சொல்கிறது என்றால், 172 கோடி 17 இலட்சம் ரூபாய் அந்த டிரஸ்ட்டுக்கு போய்ச் சேரவில்லை. கழகங்கள் கையிலே இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இருந்தால் எப்படி அந்தப் பென்ஷன் அவர்களுக்குக் கிடைக்கும்? அதேபோன்று, உச்ச நீதிமன்றத்திலே 1-2-2005-லே G.O. 378 சம்பந்தமாக ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்பை இன்றைக்கு அமல்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அது எடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு பென்ஷன் கிடைக்க வேண்டும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழிலாளர் நலத் துறை அமைச்சர், உறுப்பினர் உரையை முடித்துவிடட்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மின்சார வாரியத்திலே ஏறத்தாழ 42 ஆயிரம் காலி இடங்கள் நிரப்பப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. பல இடங்களிலே மின்சாரத் தகராறு வருகின்ற நேரத்திலே காலாகாலத்திலே போய் சிப்பந்திகள் பார்ப்பதில்லை. என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால், போதுமான அளவுக்கு ஆட்கள் இல்லை. நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்—இந்த Policy Note–ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது austerity காரணமாக ஆட்கள் குறைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு பேருந்துக்கு 7.5 தொழிலாளிகள் இருக்க வேண்டியது 6.5 என்று இருக்கிறது. ஆனால், எல்லா கழகங்களிலும் 59 நாள் வேலைக்கு நூற்றுக்கணக்கில் ஆட்களை எடுத்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். நான் எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், நீங்கள் என்ன பெயர் சொன்னாலும் சரி, தொழிலாளிகள் இல்லாமல் போக்குவரத்தை நீங்கள் இயக்க முடியாது. மின்சாரத்தையும் உற்பத்தி செய்ய முடியாது. ஆகவே, இன்று contract என்ற முறையிலே ஆட்களை வைத்திருப்பதைவிட—அதை நான் சரி என்று சொல்லவில்லை—சம்பந்தப்பட்ட அந்தச் சங்கங்களோடு பேசி, அந்தத் தொழிலாளிகளுக்கு ஒரு wage நிர்ணயம் பண்ணி, அதைக் கொடுத்து, contended worker is the asset of the industry; அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, நம்முடைய மதுரை மாநகரத்திலே இருக்கிற....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியாக ஒன்று சொன்னீர்கள். இப்போது இறுதியாக ஒன்று சொல்கிறீர்கள்!

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, சுமைப் பணித் தொழிலாளிகளைப் பொறுத்த அளவிலே அவர்களுடைய sheds



இப்போது அகற்றப்படுகின்றன. அது சரியல்ல. சுமைப் பணித் தொழிலாளிகள் எங்கே போய் படுக்க முடியும்? ஆக, அவர்களுடைய rest shed–களை பாதுகாத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். (குறுக்கீடு) வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிட்டார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல் கிராமத்திலே நடைபெற்ற கிரானைட் குவாரிகள் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியிலே கிரானைட் குவாரிகள் சுமார் 12.77 ஹெக்டேர் அளவிற்கு கிரானைட் குவாரி நிலங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதிலும், 5 குவாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஒன்று, தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமானது. மீதி நான்கும் தனியாருக்குச் சம்பந்தப்பட்டவை என்றாலும், 1959 ஆம் ஆண்டு கனிம விதிகளின் அடிப்படையில், கனிம விதிகள் சட்டத்திற்கு உட்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், சுரங்கப் புவியியல் அதிகாரிகள், ஆகியோருடைய அனுமதியின்பேரில் அந்தக் குவாரிகளுக்குக் குத்தகை வழங்கப்பட்டது என்றாலும், அந்தத் திருத்தங்கல் கிராமத்தில் இருக்கிற பொதுமக்கள் புகார் கொடுத்ததன் அடிப்படையில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் 10-11-2004 ஆம் நாளன்று அந்தக் குவாரிகளை நிறுத்திவைக்கும்படி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தற்போது அந்தக் குவாரிகள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாடு கனிம வள நிறுவனத்தைத் தவிர மற்ற நான்கு குவாரிகளும் நீதிமன்றத்தில் தடையாணைப் பெற்று, அந்தக் குவாரிகள் தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்றன என்றாலும்கூட, பொதுமக்களுடைய நலனைக் கருத்திலேகொண்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுடைய நலனையும் கருத்திலே கொண்டு, அரசு தீவிரமாகக் கண்காணித்து வருகிறது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அமைச்சருக்கு நன்றி.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் போக்குவரத்துத் தொழிலாளர் பிரச்சினை பற்றி இங்கே குறிப்பிட்டார்கள்.

நானும் பலமுறை, அவருக்குத் தனிப்பட்ட முறையிலேகூட சொல்லியிருக்கிறேன். நீங்கள் இந்த ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை நடத்தாததன் விளைவாக தொழிலாளிகளுக்கு ஏறத்தாழ 58,100 ரூபாய் இழப்பு என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இழப்பிற்கு நான் சொல்வது என்னவென்றால், அவர் எப்படி என்னை கோபித்துக்கொள்ளக் கூடாது என்று சொன்னாரோ, நான், அவர் கோபித்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த இழப்பிற்கு மூல காரணமே நீங்கள்தான் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிச் சொல்வதால் நீங்களும் கோபித்துக்கொள்ளக் கூடாது. காரணம், நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தெளிவாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். பேச்சுவார்த்தை, தொழிலாளர் ஒப்பந்தத்தை முடித்து, இன்னும் அவர்களுக்குச் சேர வேண்டிய படிகளைக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. வாருங்கள் என்று சொல்லியிருக்கிறோம். ஏதோ ஒரு வகை ego உங்களுக்குள் இருந்துகொண்டு, அந்த வழக்கு நீதிமன்றத்திலிருப்பதை வாபஸ் வாங்கிக்கொண்டு நாளைக்கே பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று சொன்னால், ஏன் அந்த வழக்கை வாபஸ் வாங்க மறுக்கிறீர்கள் என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை. நான்கூட கேள்விப்பட்டது உண்மையோ என்னவோ தெரியவில்லை. ஒருவேளை இந்த ஒப்பந்தமே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டுவிடக் கூடாது என்பதிலே எதிர்க்கட்சிகள் ஏதோ கருத்தொற்றுமையோடு செயல்படுவதாக நான் கேள்விப்பட்டேன். காரணம், அந்த ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை முடிந்துவிட்டால், அந்தப் பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குச் சென்றுவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாகவோ என்னவோ தெரியவில்லை, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குள் ஏதோ அரசியல் காரணங்கள் இருக்கலாம்; (குறுக்கீடு) என்னுடைய சந்தேகத்தைத்தான் சொல்கிறேன்.

*பிற்பகல் 1-50*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாளைக்கே மாண்புமிகு முதலமைச்சர், அவர்களை எல்லாம் அழைத்து, வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டு வாருங்கள் என்று சொல்லிப் பேச்சுவார்த்தை நடத்தலாமே?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அதுதான் வாருங்கள் என்றுதானே சொல்கிறோம். நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வரத்தானே சொல்கிறோம். இன்னும் முழுமையாக ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள்.



அந்த வழக்கை வாபஸ் செய்துவிட்டு, நாளைக்கே வாருங்கள், நாளைக்கே பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கிறோம் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், கிளிப் பிள்ளைக்கு ஓதுவதுபோல பல முறை விளக்கிச் சொல்லியும் (குறுக்கீடு) நீங்கள், நான் தயவுசெய்து உரையை முடித்துவிடுகிறேன். அப்புறம் கேளுங்கள். நீங்கள் பேசும்போது நான் பதில் சொல்லவில்லை. (குறுக்கீடு) நான் உரையை முடித்துவிடுகிறேன். அப்புறம் கேளுங்கள். இன்றைக்கும் நாங்கள் உங்களை அன்போடு கேட்டுக்கொள்வது எல்லாம், வழக்குத் தொடுத்திருக்கிற தொழிற் சங்கங்கள் அந்த வழக்கை வாபஸ் செய்துவிட்டு நாளைக்கே பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்றுதான் மீண்டும் ஒருமுறை உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதனால், அந்த இழப்பிற்கு, தொழிலாளர்கள் பெற வேண்டிய அந்த ஊதிய இழப்பிற்கு ஒரு சதவீதம்கூட புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முழு முதற் காரணம், நூறு சதவிகிதமும் உங்களுடைய தொழிற் சங்கங்கள்தான் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்தையும் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) பென்ஷன் திட்டத்தைப் பற்றிச் சொன்னீர்கள். பென்ஷன் திட்டத்தை எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்து இப்போது நடைமுறையில் அந்தப் பென்ஷன் திட்டம் அமல்படுத்தப்பட்டு நடைமுறையில் இருக்கிறது. அதிலேகூட ஒன்றை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், இன்றைக்கு மத்திய அரசு அந்தப் பென்ஷன் வைப்பு நிதிக்கு வட்டியைக் குறைத்திருக்கிறார்கள். அதையும் நீங்கள் மத்திய அரசிடம் சொல்லி, ஏற்கெனவே நீங்கள் கோரிக்கை வைத்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், நீங்கள் அங்கே கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறீர்களே தவிர, அவர்களை வற்புறுத்தமாட்டேன் என்கிறீர்கள். கோரிக்கையைச் சொல்வதோடு நிறுத்திவிடுகிறீர்கள். நீங்கள் நினைத்தால், நீங்கள் வற்புறுத்தி, உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அதற்கு, தொழிலாளர் வைப்பு நிதிக்குக் குறைத்த வட்டியைக் கூடுதலாக ஆக்குவதற்கு நீங்கள் இன்னும் முயற்சிக்க வேண்டும்.

மற்றொன்று, மத்திய வருமான வரித் துறை, இந்தப் போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய நிதிக்கு, பென்ஷன் நிதிக்கு, Income Tax விதி விலக்கு அளிக்க மறுக்கிறார்கள். இன்றைக்கு அந்த விதி விலக்கை

அளிப்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல முறை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. அதேமாதிரி மத்திய நிதித் துறை அமைச்சருக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஆனாலும்கூட, தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கின்ற வகையில், அந்தத் தொழிலாளர்களுடைய நிதிக்கு, அவர்களுக்கு வருமான வரியிலிருந்து வரி விலக்கு அளிப்பதற்கு மத்திய அரசு இன்றைக்கும் மறுத்து வருகிறது. இங்கே இருக்கின்ற உறுப்பினர்களெல்லாம், உங்களுடைய மத்திய அரசிடம் சொல்லி, அவர்களுக்கு வருமான வரி விலக்கு அளித்திட நீங்களும் உதவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, அவர்கள் வரி விலக்கு அளிக்கவில்லை என்றாலும்கூட, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தொழிலாளர்களினுடைய நலனில் அக்கறை கொண்டதன் காரணமாக அவர்களால் இன்றைக்கு அந்தப் பென்ஷன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விவாதம் நாளைக்கும் தொடரும். (குறுக்கீடு)

## 9. அரசினர் தீர்மானங்கள்

### (இ) விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை (05–04–2005) வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) நாளைக்கு, நாளைக்கும் தொடரலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) சரி, right.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** முடிந்தால், எப்படியும் ஏப்ரல் மாதத்திற்குள் உத்தரவு வரத்தான் போகிறது. உடனே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டத்தைக் கூட்டி...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதுதான் சரி என்று சொல்லிவிட்டாரே அமைச்சர்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 05–04–2005 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (05–04–2005) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (05–04–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

90. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19–8–2004 ஆம் நாளிட்ட 140 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருட்கள் கொண்டு வருவதற்கான நுழைவு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

[2005 ஏப்ரல் 4

91. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் யாதொரு வெளிநாட்டிற்கும் கடல் பயணம் மேற்கொள்கின்ற வெளிநாட்டைச் சேர்ந்த கப்பல்களுக்குப் பயன்படுத்துவதற்காக உயர்வேக டீசல் எண்ணெய், மிதவேக டீசல் எண்ணெய், உலைகள எண்ணெய் ஆகியவற்றின் விற்பனைமீது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆறு எண்ணெய் நிறுவனங்கள் மேற்சொன்ன சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரி வீதத்தை அறிவிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் கொள்முதல் செய்வோரிடமிருந்து உறுதிமொழி ஒன்றை வணிகர் பெற்று அளிக்க வேண்டும் என்கிற நிபந்தனைக்கு உட்பட்டு வரிவீதத்தை குறைத்து வணிக வரிகள் (பி–2) துறையின் 29–12–2004 ஆம் நாளிட்ட 199 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

92. 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970)–ன்கீழ் (i) திருவாளர்கள் டி.வி.எஸ். மோட்டார் கம்பெனி லிமிடெட், சென்னை, அவர்களால் இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மோட்டார் சைக்கிள், (ii) திருவாளர்கள் டிராக்டர்ஸ் அண்டு பார்ம் எக்யூப்மென்ட்ஸ் லிமிடெட், சென்னை அவர்களால் இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற டிராக்டர்கள் மற்றும் (iii) திருவாளர்கள் டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை அவர்களால் இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற சைக்கிள் ஆகியவற்றின் விற்பனை தொடர்பான வரி விதிக்கத்தக்க விற்றுமுதல்மீது செலுத்தத்தக்க கூடுதல் விற்பனை வரியை விலக்களித்தது குறித்து வணிக வரிகள் (பி2) துறையின் 29–12–2004 ஆம் நாளிட்ட 200 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

93. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தின்கீழ் தங்கம், வெள்ளி, பிளாட்டினம் நகைகள், விலைமதிப்புள்ள கற்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரித் துறையின் 29–12–2004 ஆம் நாளிட்ட 201 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு ஆடம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]



2005 ஏப்ரல் 4]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

181. 1957 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி (பதிவு செய்தல் மற்றும் மொத்த வியாபாரத் தொகை) விதிகளுடன் இணைந்த "C" அல்லது "D" படிவத்தின் பேரில் செய்யப்படும் மாநிலத்திற்கிடையிலான வர்த்தகம் அல்லது வணிகத்தின்போது கணினி மற்றும் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள துணைப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனை தொடர்பாக யாதொரு வணிகர் செலுத்த வேண்டிய வரி 2 சதவீதம் என்ற குறைக்கப்பட்ட வீதத்தில் கணக்கிடப்பட வேண்டும் என்று வணிக வரிகள் துறையின் 29–12–2004 ஆம் நாளிட்ட 202 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

182. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

183. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–பால்வளம் மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

184. மானியக் கோரிக்கை எண் 14–சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

185. சுற்றுச்சூழல் துறையின் செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

186. வனத் துறையின் செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

187. மானியக் கோரிக்கை எண் 31–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை–தொழிலாளர்கள், தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

188. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் வரவு–செலவுத் திட்டச் செயலாக்கம், 2005–2006.

189. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை. (2003–2005)

## இணைப்பு I@

(81 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 14

## சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### முன்னுரை

1.1. நமது மாநிலத்தின் சூழலியலை நிலைப்படுத்துவதிலும், கிராமப்புற வளர்ச்சியிலும், வாழ்க்கைக்கு ஆதாரமாக வனங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன. வனங்கள் மண் வளத்தினைப் பாதுகாக்கவும், அவற்றின் மக்கிய இலைகள் நீரைத் தேக்கிவைக்கும் கொள்கலன்களாக விளங்குவதுடன் நீண்ட காலத்திற்கு நீரை தாழ்வான பகுதியைச் சார்ந்த விவசாயப் பகுதிகளுக்கு வழங்கி விவசாய நிலம் செழிப்பாக விளங்குவதற்கும் உதவியாக இருந்து வருகின்றன. வன மேலாண்மையின் மூலம் நீர், மரம், உணவு, வன உயிரினம் மற்றும் சமுதாய மனமகிழ்வு போன்ற ஐந்து முக்கியமான பகுதிகளில் அதிக பலன்கள் அளிப்பதோடு, அடிப்படை நில வளங்களும் பாதுகாக்கப்படுகின்றன.

1.2. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலக் கொள்கையின் நெறிமுறைக் கோட்பாட்டின்கீழ் பிரிவுகள் 48 A மற்றும் 51 A(g)-ல் சுற்றுப்புறச் சூழ்நிலை, வனம், வன உயிரினம் ஆகியவற்றைப் பாதுகாத்தலும், வனங்கள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவது தவிர உயிரினங்களிடம் பரிவு காட்டுவதும் மாநிலத்தின் கடமை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1.3. வனச் செல்வங்களைப் பாதுகாப்பது மற்றும் சுற்றுச்சூழல் குறித்து மிக்க அக்கறை செலுத்துவது தமிழ்நாட்டின் மாபெரும் மரபாகும். இயற்கையை மதிக்கச் செய்வதுடன் உயிருள்ளவை மற்றும் உயிரில்லாதவற்றிற்கிடையே உள்ள சிக்கலான தொடர்பினை புரிந்து கொள்ளவும் இம்மரபு நமக்கு கற்பித்துள்ளது. மனித இனத்திற்கு உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு நல்குவதில், அடர்ந்த காடுகள், சுத்தமான நீர் மற்றும் வளமான மண் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை பண்டைய தமிழ்ப் புலவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

[2005 ஏப்ரல் 4

1.4. அரசு செயல்படுத்தி வருகின்ற 15 அம்சத் திட்டங்களில், மாநில மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதிசெய்தல் ஒரு முக்கியமான அம்சமாகும்.

1.5. மாநிலத்தின் வனச் சுற்றுச்சூழல் அமைப்பானது பல்வகையான தாவரங்களையும், உயிரினங்களையும் கொண்டுள்ளது. தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினர் உயிர்வாழ உணவுப் பாதுகாப்பினை உருவாக்கக்கூடிய, சுற்றுச்சூழலின் நிலைத் தன்மை மற்றும் நீர்வளப் பாதுகாப்பிற்கு குறிப்பிடத்தக்க பல்லுயிரினப் பரவல் அவசியமானதாகும்.

1.6. மாநிலத்தின் வனவியல் பிரிவின் உடனடித் தேவைகள் அறியப்பட்டு, வன மேலாண்மையில் கூட்டு வன நிர்வாகத்தின்மூலம் கிராம வனக் குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளூர் கிராம மக்களின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படும் வகையில் வனத் துறையின் இந்த கொள்கை விளக்கக்குறிப்பில், வருங்கால வன மேலாண்மைக்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

## 2. வனத் துறை

### 2.1. வனங்களின் பரப்பளவு

வனத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 22,870 சதுர கிலோ மீட்டர் வன நிலங்கள் உள்ளன. இது தமிழ்நாட்டின் மொத்த நிலப் பரப்பளவில் 17.584 விழுக்காடாகும். இது 1988 ஆம் ஆண்டின் தேசிய வனக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உகந்த அளவான 33.33 விழுக்காட்டிற்கு மிகவும் குறைவானதாகும். பல்லுயிரினத் தலையீடுகளால் ஏறத்தாழ பாதி வனப் பகுதி தரமிழந்து காணப்படுகிறது. அரசின் பல்வேறு திட்டங்கள் தரமிழந்த காடுகளை வளப்படுத்துவதையும், காப்புக்காடுகளுக்கு வெளியே, வனப் பகுதிகளை விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 2.2. வனக் கொள்கை

மத்திய அரசின் தேசிய வனக் கொள்கை, 1988-ன் படி இந்தியாவில் வன மேலாண்மை குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. வன மேலாண்மை மாநில அரசின் பொறுப்பிலிருப்பதால், தேசிய வனக் கொள்கையின் குறிக்கோளுக்கிணங்க மாநில வனக் கொள்கையை உருவாக்குவதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. வனங்களை பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் வனப் பரப்பை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாடு,



2005 ஏப்ரல் 4]

சுற்றுச்சூழலை நிலைப்படுத்துதல் ஆகியவற்றை அடைவதே 1988 ஆம் ஆண்டின் தேசிய வனக்கொள்கை மற்றும் மாநில வனக் கொள்கையின் முதன்மையான குறிக்கோளாகும். தமிழ்நாடு மாநில வனச் சட்டம், 1882, வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 மற்றும் அவற்றின்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் தமிழ்நாடு வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வனங்கள் பாதுகாக்கப்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட பல்வேறு முக்கிய தீர்ப்புகள் வனக்கொள்கையினை சீரிய முறையில் செயல்படுத்துவதில் மக்களுடைய எதிர்பார்ப்புகளை அதிகப்படுத்தியிருக்கிறது.

### 2.3. குறிக்கோள்கள்

பின்வரும் முக்கிய குறிக்கோள்களுடன் தமிழகத்தின் வனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன:

— மாநிலத்தின் வனப் பகுதியையும், மரங்களின் அடர்த்தியையும் அதிகப்படுத்துதல்;

— சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, உயிரின வாழ்க்கைச் சூழலின் சமநிலைத் தன்மையினை மீட்டல், ஆகியவற்றை உறுதிப்படுத்துதல்;

— புயல், சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவிலிருந்து கடலோர உயிரின வாழ்க்கைச் சூழலியலைக் காத்து நிலைநிறுத்துதல்;

— தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினர் பயனடையும் வகையில் பல்லுயிரினப் பரவலை பாதுகாத்தல்;

— வெள்ளப் பெருக்கு, வறட்சி மற்றும் நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவதை கட்டுப்படுத்தி, ஆறு, ஏரி மற்றும் நீர்த்தேக்கங்களில் மண் அரிமானத்தைத் தடுத்தல்;

— கூட்டு வன நிர்வாக முறையில் மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளான விறகு, கால்நடைத் தீவனம், மரங்களல்லாத வனப் பொருட்கள் மற்றும் அவசியத் தேவைகளை கூடிய அளவு பூர்த்தி செய்தல்;

— மரபு சாரா எரிசக்தி வளங்களின் பயன்பாட்டினை பெருக்கி, அதன்மூலம் வெகுதொலைவிலுள்ள கிராமங்களின் எரியாற்றல் பாதுகாப்பிற்கு பங்களித்தல்;

— காப்புக் காடுகளுக்கு வெளிப்பகுதியில், வனப் பொருட்களுக்கு மாற்றுப் பொருட்களை உண்டாக்க மேம்படுத்தப்பட்ட வனத் தொழில்நுட்பத்தினை விவசாயிகளுக்கு கிடைக்க வழி செய்தல்;

— பல்லுயிரினச் சூழலை மேம்படுத்துவதன்மூலம் நுண்ணுயிர்கள், பூச்சிகள், பறவைகள், அனைத்து பூச்சிகள் மற்றும் விலங்குகள் வசிக்கும் சூழலை உருவாக்குதல்;

— வனங்களுக்குள் வாழும் பழங்குடியின மக்களுக்குத் தொன்று தொட்டு பயன்படுத்தும் வனப் பொருட்கள் கிடைக்க வழி செய்யவும், அதனை உரிமையாக உபயோகிக்கவும் ஏற்பாடு செய்தல்.

## 2.4. செயல்முறை

கீழே விவரிக்கப்பட்டுள்ள உத்திகளின் அடிப்படையில் முக்கிய குறிக்கோள்களை அடைய திட்டமிடப்பட்டுள்ளது:

### 2.4.1. பசுமைப் பரப்பினை அதிகப்படுத்துதல்

மத்திய திட்டக் குழுவானது 2007-க்குள் நாட்டின் வனங்களின் பரப்பினை புவியியல் பரப்பில் 25 விழுக்காடுகளாகவும், 2012-க்குள் அதன் அளவு 33.33 விழுக்காடுகளாகவும் (தேசிய வனக்கொள்கை 1988–ன்படி) அதிகப்படுத்தப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. மாநில வனப் பரப்பினை அதிகப்படுத்த சீரிய முயற்சியாக காப்புக் காடுகளிலும், அவற்றின் வெளிப் பகுதிகளிலும் மரங்களை நட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. டேராடூனில் உள்ள இந்திய வன அளவைத் துறையின் 2001 ஆம் ஆண்டின் மாநில வன அறிக்கையினை, 1999 ஆம் ஆண்டு மதிப்பீட்டு அறிக்கையோடு ஒப்பிடும்போது நமது மாநிலத்தின் மொத்த வனப்பரப்பு 4,404 ச.கி.மீ. அதிகரித்துள்ளது. அடர்காடுகளின் பரப்பளவு 17,078 ச.கி.மீட்டரிலிருந்து 21,482 ச.கி.மீட்டர் அதிகரித்துள்ளதே இதற்கு முக்கியக் காரணமாகும். இது மொத்த புவியியல் பரப்பில் வனம்/மரங்களின் மொத்த பரப்பளவு 21.17 விழுக்காடாகும்.

### 2.4.2. கூட்டு வன நிர்வாகத்தின்மூலம் உயிரின மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழலை மீட்டு நிலைப்படுத்துதல்

வனங்கள் தரமிழந்ததற்கு வனங்களை ஒட்டி அமைந்துள்ள கிராமப் பகுதிகளிலுள்ள உயிரினங்களின் அபரிமிதமான பயன்பாடே முக்கிய காரணமாகும். மக்களுக்கு நிரந்தர வருவாய் கிடைக்கும் பொருட்டு, கூட்டு வன நிர்வாக முறையில் தரங்குன்றிய வனப் பகுதிகளின் சுற்றுச்சூழலை மீட்டு இயற்கையான உயிரினச் சூழல் மேம்படுத்தப்படும். இதற்கு மாநிலத்தில் பெருமளவில் தரமிழந்த நிலங்களை மேம்படுத்தி சுற்றுச்சூழலை புனரமைக்க வேண்டியுள்ளது.



### 2.4.3. சிறப்புப் பகுதி நிர்வாகம்

தனித் தன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த மேற்குத் தொடர்ச்சி மலை, நீலகிரி, கடலோர சதுப்புக்காடுகள் மற்றும் கடல் சார்பகுதிகள் ஆகியவற்றின் சுற்றுச்சூழல், சிறப்புத் திட்டங்களின்மூலம் ஒவ்வொரு பகுதியிலும் அவற்றின் தனித்தன்மை மாறாமல் பாதுகாக்கப்படுகின்றன.

### 2.4.4. சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள் மற்றும் உயிர்ச் சூழல் காப்பகங்கள் மேலாண்மை

சிறந்த உயிரினப் பரவல்கள் செரிந்துள்ள பகுதியாக தமிழ்நாடு விளங்குகிறது. இம்மாநிலத்தின் மொத்த வனப்பரப்பில் 3134.70 சதுர கிலோ மீட்டர் அல்லது 13.7 விழுக்காடு வன உயிரினங்களின் பாதுகாப்புப் பகுதியாகும். ஐந்து தேசிய பூங்காக்கள், எட்டு வன உயிரின சரணாலயங்கள் மற்றும் இரண்டு உயிர்ச்சூழல் காப்பகங்கள் வன உயிரினப் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன், காப்புக் காடுகளுக்கு வெளியே பறவைகளின் புகலிடங்களை பாதுகாக்கும்பொருட்டு 12 பறவைகள் சரணாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தாவர மற்றும் வன உயிரினப் பாதுகாப்பினை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள், உயிர்ச் சூழல் காப்பகங்கள் போன்றவை தொடர்ந்து பராமரிக்கப்படும். தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உயிரினப் பரவல்களும், இயற்கை வளங்களும், இவைகளைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை வருங்கால சந்ததியினருக்கு கல்வி மற்றும் பொழுதுபோக்கு மூலம் ஆர்வத்தை தூண்டுவதற்காக மேலாண்மை செய்யப்படுகிறது. சத்தியமங்கலம் வன உயிரினச் சரணாலயம், மேகமலை வன உயிரினச் சரணாலயம், கொடைக்கானல் வன உயிரினச் சரணாலயம் மற்றும் நெல்லை வன உயிரினச் சரணாலயங்களை பாதுகாக்கப்பட்ட வன உயிரினச் சரணாலயங்களாக அறிவிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்கெனவே உள்ள பாதுகாக்கப்பட்ட சரணாலயங்களை விரிவுபடுத்துவதன்மூலம் மாநிலத்தின் மொத்த வனப் பரப்பளவில் வன உயிரின நிர்வாகத்தின்கீழுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியினை 25 விழுக்காடளவிற்கு அதிகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்பகுதிகளில் பலவகையான மருத்துவச் செடிகள் மற்றும் மரபியல் முக்கியத்துவம் வாய்ந்த செடிகள் பாதுகாக்கப்படும்.

### 2.4.5. நீர்ப்பிடிப்புப் பகுதி நிர்வாகம்

தமிழகத்தில் 32 ஆறுகள், 11 பெரும் நீர்த்தேக்கங்கள், 2,679 கால்வாய்கள், 38,863 ஏரி, குளங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான நீர்ப்பிடிப்புப்

பகுதிகள் வன நிலங்களில் அமைந்துள்ளன. வனங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன், பாதிக்கப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் வன வளர்ப்பு, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளை செயல்படுத்துவதால் ஆறுகள் மற்றும் ஓடைகளில் நீரோட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டு நிலத்தடிநீர் உயர்த்தப்பட்டு அதனையடுத்த நிலங்கள் வளம் பெற வகை செய்யப்படுகிறது. இவ்வகையான பணிகளினால் நீர்வளம் பெருகுவதுடன் விவசாயிகள் பொருளாதார ரீதியாகவும் பயனுறுவர்.

### 2.4.6. வனப் பாதுகாப்பு

மாநிலத்தின் வன வளங்கள், திருட்டு மர வெட்டுக்கள், கஞ்சா பயிரிடுதல், தீ விபத்துகள், ஆக்கிரமிப்பு மற்றும் வன உயிரின வேட்டைக்காரர்களால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகக் கூடியதாக இருக்கிறது. மாநிலத்தில் சந்தன மரம் மற்றும் இதர அட்டவணைப்படுத்தப்பட்ட தடிமரங்கள் உள்ளிட்ட மதிப்புமிக்க வனப் பொருட்கள் அழிவதிலிருந்து தடுக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்பிற்காக உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் பாதுகாப்புப் பணியாளர்களுக்கு நவீன ரக துப்பாக்கிகள், வாகனங்கள், கம்பியில்லாத் தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வனங்களுக்கு அருகிலுள்ள பட்டா உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்களால் செய்யப்படும் வன நில ஆக்கிரமிப்பு வன நிர்வாகத்திற்கு மிகுந்த பிரச்சினையாக உள்ளது. வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன், இவ்வகை ஆக்கிரமிப்புகளை அகற்ற வனத் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் தடுக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.4.7. உற்பத்தி வனவியல்

தொழிற்சாலைகள் மற்றும் மக்களின் வீட்டுத் தேவைக்கு 'தடிமரம்' ஓர் முக்கிய வனப் பொருளாக உள்ளது. முந்தைய ஆண்டுகளில் தடிமரங்களின் அதிக அளவு பயன்பாட்டினாலும், மக்கள் தொகை பெருக்கத்தினாலும், வனங்களில் தடிமரங்களின் இருப்பு குறைந்துள்ளது.





உள்ளூர் மக்களின் இதர தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு வன நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், குளக்கரைகள் மற்றும் தனியார் நிலங்களில் முதல் தரம் மற்றும் இரண்டாம் தர தடிமரங்களை மக்களின் உதவியுடன் நடுவதை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தனியார் நிலங்களில் தடிமர வகைகள் நடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு தடிமர உற்பத்தி, போக்குவரத்து மற்றும் பயன்பாடு குறித்த பல்வேறு விதிமுறைகளை தளர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.4.8. பழங்குடியினர் மேம்பாட்டிற்கான வனவியல்

வனச்சூழல் அமைப்பில் பழங்குடியினர் ஓர் முக்கிய அங்கமாவர். இவர்களின் பொருளாதார நிலை வன வளங்களை சார்ந்துள்ளது. பழங்குடியினர் தொடர்ந்து நிலையான பயன்களை பெறும் வகையில் அவர்கள் வசிக்கும் பகுதிகளிலும் அவர்கள் சார்ந்துள்ள வனப் பகுதிகளிலும் மர/தாவர வகைகளை பெருகச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பினை உருவாக்குதல், பழங்குடியினர் வாழும் கிராமப் பகுதிகளில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கல்வி ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

### 2.4.9. வன விரிவாக்கம்

வன விரிவாக்கப் பணிகள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வன விரிவாக்க மையங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்த வன விரிவாக்க மையங்கள், வனங்களிலிருந்து விளைநிலங்கள் எனும் அடிப்படையில் மரம் வளர்ப்பு குறித்த தகவல்களை உழவர்களுக்கு எடுத்துரைக்கின்றன.

எப்பொழுதும் அதிகரித்துவரும் வனப்பொருட்களின் தேவைகளை எதிர்கொள்ள, இயற்கைக் காடுகளுக்கு வெளியே உள்ள இயற்கை வன வளங்களை விரிவுபடுத்துவது வன ஆதாரங்கள்மூலம் இன்றியமையாததாகும். இந்தக் குறிக்கோளினை எய்த தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் வன விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட மரம் வளர்க்கும் தொழில் நுட்பத்தினை விளை நிலங்களுக்கு மாற்றுதல், பொதுமக்களை மரம் வளர்க்கும் பணிக்கு ஊக்குவித்தல் மற்றும் வனவியல் சூழல் கல்விக்கு

மேடை அமைத்தல், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களிடம் விவாதங்களை ஊக்குவித்தல் போன்றவை இந்த வன விரிவாக்க மையங்களின் கடமையாகும். மாநிலம் முழுவதும் 15 வன விரிவாக்க மையங்கள் மற்றும் 4 வன விஞ்ஞான கேந்திரங்கள் பரவலாக அமைந்துள்ளன.

நன்கு அமைக்கப்பட்ட பயிற்சிக் கூடங்கள், விவாத மையங்கள் மற்றும் நுண் உயிர் உரங்கள், நுண் உயிர் சத்து தயாரிப்பது தொடர்பாக செயல்முறை விளக்க பகுதிகள் போன்ற வசதிகள் இந்த மையங்களில் உள்ளன. வேளாண்காடுகள் மாதிரிப் பண்ணைகளிலும், பெருமரச் செடிகள் பண்ணை, மூலிகைச் செடிகள் போன்றவை இந்த மையங்களில் அமையப் பெற்றுள்ளன.

## 2.4.10. மரபு சாரா ஆதாரங்களிலிருந்து எரிசக்தி

மின் விநியோக விரிவாக்க வசதியற்ற, தொலைதூர கிராமங்களுக்கு மின் வசதி அளிக்க, புதுப்பித்துக் கொள்ளக்கூடிய எரிசக்தி வள ஆதாரங்களான உயிர்த் திடப்பொருள் (Bio-mass) மற்றும் மர எண்ணெய் வித்துக்களைக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட வனத் துறையானது முடிவு செய்துள்ளது.

## 2.4.11. சமூக வனவியல்

இத்திட்டத்தின்கீழ் மாநிலத்தின் பசுமைப் பகுதியினை அதிகரிக்கத் தனியார் மற்றும் சமுதாய நிலங்களில் மர வகைகள் நடும் பணி மேற்கொள்ளப்படும். மேலும் இத்திட்டம் மரம் வளர்க்கும் ஆர்வமுள்ள தனிநபர்/நிறுவன நில உரிமையாளர்கள் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும். மாநிலத்தின் வன வளர்ப்புப் பணிகளை மிகவும் பாதிக்கும் உபயோகமற்ற கால்நடை பெருக்கத்தைக் குறைக்க கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.

## 2.5. முக்கியப் பகுதிகள்

## 2.5.1. வன ஆராய்ச்சி

உயிரினப் பரவல் பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தமிழக வன ஆராய்ச்சிப் பிரிவு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பல்வேறு வகையான உயிரினப் பரவல்களை பாதுகாத்தல் மற்றும் பல்வேறு வன உயிரினங்களின் இயக்க ஆற்றல் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



வன மரபியல் ஆராய்ச்சிப் பிரிவின்மூலம் அதிக பலன் தரக்கூடிய மர வகைகளைக் கண்டறிந்து அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய பழங்கள், தண்டுகள், மர இழை தரவல்ல மரங்கள், இழைமரம், விறகு மரங்கள், கட்டடப் பணிக்காக பயன்படுத்தப்படும் தடிமரங்கள் போன்ற வீரிய மரங்களை உற்பத்தி செய்ய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வன ஆராய்ச்சித் துறையின்மூலம் வீரிய விதைப் பண்ணைகளில் அதிகமாக பயன்தரும் விதைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக சந்தனம், சவுக்கு, யூகலிப்டஸ், புளி, மூங்கில், தடிமரம், இழைமரம், மர இழை தரவல்ல உற்பத்தித் திறனுள்ள மர இனங்கள் மற்றும் எண்ணெய் தரும் மர இனங்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை அதிகரித்தலில் வன ஆராய்ச்சி சிறப்பான பங்களித்துள்ளது.

தமிழகத்தின் மரபணுத் தோட்டம் உள்ள மேற்கு மலைத் தொடர்ச்சி பகுதியில் அரிதான 4000 தாவர வகைகள் உள்ளன. அவற்றில் 1000 தாவர வகைகளைச் சேகரித்து தோட்டமாக அமைத்து பாதுகாக்க தமிழக வனத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவு இவ்வாண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் மரச் சாமான்களின் உற்பத்திக்கு இதுவரை பயன்படுத்தப்படாத மர வகைகளைப் பதப்படுத்தி வீட்டிற்குத் தேவையான மரச் சாமான்கள் மற்றும் வீட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்தும் வகையில் அறுவடைக்குப் பின் பின்னேர்த்தி செய்யும் தொழில்நுட்பத்தினை தமிழக வனத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## 2.5.2. மனித வள மேம்பாடு

மாநிலத்தின் வனத் துறை பழமையான துறைகளுள் ஒன்றாகும். கடந்த ஆண்டுகளில் திறமை மற்றும் தொழில்நுட்பம் வாய்ந்த மனித வளத்தின்மூலம், மாநிலத்தின் வனப் பாதுகாப்பு மற்றும் வன வளர்ச்சிக்கு தனது முக்கிய பங்களிப்பினை அளித்துள்ளது. தகுந்த பயிற்சி மற்றும் அபிவிருத்தியின்மூலம் இத்திறன் மேலும் மேம்படுத்தப்படும். 2004–2005 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் தமிழ்நாடு வனக் கல்விக் கழகத்தில் 58 வனச் சரகர்களுக்கும், 78 வனவர்களுக்கும், வைகை அணை தமிழ்நாடு வனவியல் பயிற்சி கல்லூரியில் 120 வனக் காப்பாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

## 2.5.3. மகளிர் பங்கேற்பு

இலட்சக்கணக்கான கிராமப் பெண்கள் குடும்பப் பாதுகாப்பை தங்களது முக்கியப் பணியாக மேற்கொண்டுள்ளதால் குடும்பத் தேவைக்காக விறகு சேகரித்தல், கால்நடைத் தீவனம், நீர் எடுத்தல் போன்ற

[2005 ஏப்ரல் 4

கடமைகளை சுமக்க வேண்டியுள்ளது. இவ்வன வளங்கள் நலிவடைவது அவர்களின் பணிகளை மேலும் கடினமாக்குகிறது. ஆதலால், வன வளங்களையே பெரிதும் நம்பியுள்ள ஏழ்மை நிலையிலுள்ள பெண்களுக்கு தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வளங்களைப் பற்றி முடிவெடுப்பதில் பங்கேற்று அவற்றை மேலாண்மை செய்யவும் முக்கியத்துவம் அளிக்கப்படும். கூட்டு வன நிர்வாகத்தின்கீழ் பல்வேறு மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### 2.5.4. வேலைவாய்ப்பு உருவாக்குதல்

வன நிதி ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 7.5 விழுக்காடு, வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கென செலவிடப்படுகிறது. வனங்களை அடுத்து வாழும் கிராம மக்களின் வேலைத் திறனை அறிந்து, உள்ளூர் மக்கள் பயன்பெறும்வண்ணம் அவர்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டுடன் கிராமங்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்ற நிலைகள் வலுப்படுத்தப்படும்.

## 2.6 2004–2005 ஆம் ஆண்டு சாதனைகள்

### 1. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்

2004–2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் ரூ.69.09 கோடி செலவில் 28,653 ஹெக்டேர் நிலப்பரப்பில் தோட்டங்கள் வளர்த்தும், 110 கிராமங்களில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கென 110 கிராம வனக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1997–98 முதல் 2003–2004 வரை தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் சுமார் ரூ.623.55 கோடி செலவில் 4,57,454 ஹெக்டேர் பரப்பில், 1,257 கிராம வனக் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மழை மிகவும் குறைந்த நிலையிலும், இத்திட்டத்தின், நீர் சேமிப்புப் பணிகள் மூலம் தண்ணீர் இருப்பு இக்கிராமங்களில் 5 முதல் 10 விழுக்காடு உயர்ந்துள்ளது.

### 2. தேசிய வன வளர்ப்புத் திட்டம்

2002–2003 ஆம் ஆண்டு முதல் மைய அரசின் நிதியுதவி பெறும் காடு வளர்ப்புத் திட்டங்கள் யாவும் கூட்டு வன நிர்வாக அடிப்படையில் வன அபிவிருத்தி முகமைகளின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென திட்டம் செயல்படுத்தப்படும் கோட்டங்களில் வன



2005 ஏப்ரல் 4]

அபிவிருத்தி முகமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 30 வன வளர்ச்சி முகமைகளுக்கு ரூ.3,095.35 இலட்சங்களை மத்திய அரசு விடுவித்துள்ளது. இதில் ரூ.2,214.36 இலட்சங்கள் செலவில், 19,550.37 ஹெக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3. பகுதி–II திட்டங்கள்

2004–2005 ஆம் ஆண்டில் பாதுகாப்பு, கட்டடங்கள், சாலைகள், வனக் குடியிருப்பு மற்றும் உயிரியல் பூங்கா மேம்பாடு போன்ற பகுதி–II திட்டங்கள் ரூ.1279.17 இலட்சங்கள் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4. புத்துணர்வு முகாம் (யானைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்)

முதுமலை வன உயிரினச் சரணாலயத்தில் 18–11–2004 முதல் 48 நாட்களுக்கு யானைகளுக்கென புத்துணர்வு முகாம் (சிறப்பு மருத்துவ முகாம்) நடத்தப்பட்டது. வனத் துறை, பல்வேறு கோயில்கள், மடங்கள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான சுமார் 111 யானைகள் இப்புத்துணர்வு முகாம்களில் கலந்து கொண்டன. உணவு, உள்கட்டமைப்பு வசதி மற்றும் ஆயுர்வேத மருந்துகளுக்கென ரூ.5.52 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. புத்துணர்வு முகாம் முடிவுற்றபின் அனைத்து யானைகளும் பாதுகாப்பாக அவற்றின் சொந்த இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இம்முகாமின் நன்மை பயக்கும் விளைவினை கண்கூடாகக் காண முடிந்தது.

### 5. சந்தன மர வருவாய்

மூன்று இறுதித்துலக்க கிடங்குகளில் நடைபெற்ற 335.70 மெட்ரிக் டன் சந்தன மர விற்பனைமூலம் ரூ.5,898.34 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 6. கஞ்சாச் செடிகள் அழிப்பு

9.220 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த ரூ.100.00 இலட்சம் மதிப்புள்ள 5,494 கஞ்சாச் செடிகள் அழிக்கப்பட்டன.

### 7. தஞ்சாவூர் கோட்டத்தில் தேக்கு மர விற்பனை

தஞ்சாவூர் கோட்டத்தில் தேக்கு மர விற்பனையின்மூலம் ரூ.501.00 இலட்சங்கள் ஈட்டப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 4

### 8. சிறப்பான பங்களிப்பிற்கு விருதுகள்–இந்திரா பிரியதர்ஷிணி விருதுகள்

2004–2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பின்வரும் கோட்டம்/கிராம வனக்குழு/நபர்களுக்கு, காடுவளர்ப்பு மற்றும் தரிசு நில மேம்பாட்டில் சிறப்பான பங்களித்தமைக்காக 2001 ஆம் ஆண்டிற்கான இந்திரா பிரியதர்ஷிணி விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வேலூர் வனக் கோட்டம் | – | கூட்டு வன நிர்வாகத்தின்மூலம் தரங்குன்றிய காடுகளை மீட்பதில் சிறப்பான பணி மேற்கொண்டது. |
| உங்கட்டி கிராம வனக் குழு, தருமபுரி | – | தரங்குன்றிய காடுகளில் காடு வளர்ப்பு மற்றும் நீர்சேகரிப்பில் புதிய வளர்ச்சிப் பணிகளை கையாண்டது. |
| திரு. என்.எஸ்.ஏ. வேலு முதலியார், விவசாயி, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள புலியன்குடி கிராமம் | – | தனது கணவாய் நிலங்களில் வெற்றிகரமாக மரங்கள் வளர்த்தது. |

### 9. முதலமைச்சரின் வீர விருது

'ஆபரேஷன் குக்கூன்' (Operation Cocoon) முறையில் வெற்றிகரமாக நடவடிக்கை எடுத்து சந்தனக் கடத்தல் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டதற்காக 104 வன அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசுகள் வழங்கினார். ரொக்கப்பணமாக ரூ.109.20 இலட்சமும், 56 நபர்களுக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டது. மேலும், 105 தோட்டக் காவலர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட தொகுப்பூதியம் வழங்கப்பட்டுள்ளது.

**10.** முதன்முறையாக தென்னக வனச்சரகர் கல்லூரியில் இந்திய வனப்பணி அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இந்தியா முழுவதிலுமுள்ள 33 இந்திய வனப்பணி அலுவலர்கள் ஒருவார கட்டாயப் பயிற்சி இக்கல்லூரியில் பெற்றனர். தென்னக வனச்சரகர்கள் கல்லூரி தற்போது 'தமிழ்நாடு வனக் கல்விக் கழகம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 11. புவியியல் தகவல் தரவு மையம்

புவியியல் தகவல் தரவு மையத்தில், மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து கோட்ட, சரக, பீட்டு, காப்பு வன எல்லைகள், இலக்க (டிஜிட்டல்) முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலான மாவட்டங்களை



2005 ஏப்ரல் 4]

உள்ளடக்கிய வன அதிகாரக் கோட்டங்களில் இந்த புவியியல் தகவல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. செயற்கைக்கோள் படங்களின் உதவியுடன் தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலை முழுவதிற்குமான காட்டுத்தீ வரைபடங்கள் தயாரிக்கும் பணி முடிவடைந்துள்ளது.

### 2.7. வன வருவாய் மற்றும் செலவுகள்

#### 2.7.1. வருவாய்

2004–2005 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வருவாய் (திருத்திய மதிப்பீடு மற்றும் 2005–2006 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு விவரம் கீழ்வருமாறு:—

| வ. எண் | வருவாய் – இனங்கள் | 2004–2005 திருத்திய மதிப்பீடு | 2005–2006 வரவு–செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| அ. | சந்தன மரம் | 6691.08 | 8025.63 |
| ஆ. | தடிமரம் | 801.83 | 841.92 |
| இ. | தொழிற்சாலைக்கு மூலப் பொருட்கள் வழங்குதல் | 765.75 | 804.04 |
| ஈ. | இதர சிறு வனப்பொருட்கள் | 12.06 | 12.66 |
| உ. | பண்ணைக்காடுகள் | 997.00 | 1046.85 |
| ஊ. | மூங்கில், முந்திரி, மென்மர முதலிய தோட்டங்கள் விற்பனை | 56.10 | 37.96 |
| எ. | இதர வருவாய்கள் | 1767.96 | 1856.36 |
| | **மொத்தம்** | **11091.78** | **12625.42** |

#### 2.7.2. செலவினங்கள் மற்றும் மூலதனம்

2005-2006 ஆம் ஆண்டில் வனப் பணிகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ.13,787.44 இலட்சங்களாகும். 2003–2004, 2004–2005 ஆம் ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் செலவுத் தொகை பின்வருமாறு:—

[2005 ஏப்ரல் 4

| திட்டத்தின் பெயர் | 2003-2004 ஆம் ஆண்டின் செலவினம் (இறுதி செய்யப் பட்டது) | 2004-2005 ஆம் ஆண்டின் செலவினம் (திருத்திய மதிப்பீடு) | 2005-2006 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மாநில வனத் திட்டங்கள் | 12092.85 | 11776.11 | 13787.44 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100 %) | 528.30 | 546.17 | 474.47 |
| மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 253.19 | 601.66 | 573.72 |
| **மொத்தம்** | **12874.34** | **12923.94** | **14835.63** |

## 2.8. 2005–2006 ஆம் ஆண்டிற்கான முக்கிய திட்டப்பணிகள்— தொடரும் திட்டப் பணிகள்

### 2.8.1. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்

1997–98 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும் வகையில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் எனும் தனித் தன்மை வாய்ந்த திட்டத்தினை 1994–95 ஆம் ஆண்டு நமது அரசு தயார் செய்தது. இத்திட்ட நடவடிக்கைகள் அனைத்தும் 31–03–2002–ல் முடிவுபெறும் வகையில் திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.499.20 கோடி செலவில் உருவாக்கப்பட்டது. இதில் 31–03–2002 வரை ரூ.445.99 கோடி செலவிடப்பட்டது. இத்திட்டத்தினை வெற்றிகரமான முறையில் செயல்படுத்தியதை தொடர்ந்து ஜப்பான் செலாவணி யென் மதிப்பு, அப்போதைய ரூபாயின் மதிப்பைவிட உயர்ந்ததால், கிடைத்த மீதித் தொகையிலிருந்து மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு அதாவது 2002–2003, 2003–2004 ஆம் ஆண்டுகளில், இத்திட்டமானது ரூ.177.56 கோடி செலவில் தொடரப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் பெற்ற ஊக்கத்தினால், மாநில அரசின் நிதியுதவியுடன் ரூ.69.09 கோடி மதிப்பீட்டில் 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் 110 கிராமங்களில் 28,653 ஹெக்டேர் பரப்பளவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–II–ன் முதலாண்டான 2005–2006–ல், ரூ.85.89 கோடி செலவில் 29,250 ஹெக்டேர் பரப்பில் வனங்களை ஒட்டி அமைந்துள்ள



2005 ஏப்ரல் 4]

135 கிராமங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.8.2. வன உயிரினத் திட்டங்கள்

தமிழகத்தின் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளிலுள்ள தாவர மற்றும் உயிரினங்களைப் பாதுகாப்பதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு வன உயிரினத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் உயிர்வாழ் காப்பிடங்களில் உயிரினச் சூழலை மேம்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, வன உயிரினக் கணக்கெடுப்பு, கல்வி விழிப்புணர்வு முகாம்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், சுற்றுலா, வேட்டைத் தடுப்பு முகாம்கள் நடத்துதல், தீத்தடுப்பு நடவடிக்கைகள், உள்ளூர் கிராம மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தருதல், மருத்துவ முகாம்கள், விளம்பரப் பலகைகள் அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இந்தியாவிலேயே மிகப் பெரியதும் மற்றும் அறிவியல்பூர்வமாக மேலாண்மை செய்யப்படும் ஓர் உயிரியல் பூங்காவாகும். இப்பூங்காவில் அருகிவரும் உயிரினங்களை பாதுகாத்தல், உயிரினச் சூழலை மேம்படுத்துதல் மற்றும் இப்பூங்காவைப் பார்வையிட வரும் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டங்கள் யாவும் ரூ.1075.16 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2005–06 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.1129.39 இலட்சங்கள் ஆகும்.

### 2.8.3. மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம்

நீலகிரியிலுள்ள சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிரந்தர பசுமைப் பரப்பினை விரிவாக்கவும், இயற்கை மீதான உயிரினத் தலையீடுகளை முறைப்படுத்தவும், காடு வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் இதர பணிகளின்மூலம் காடுகளை பாதுகாத்து, சுற்றுச்சூழலின் மேம்பாடு ஆகியவற்றை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தரங்குன்றிய காடுகளில் மரங்களை நடுதல், சோலை வனங்களை சுற்றி கம்பி வேலி நிறுவுதல், நீர்ப் பாதுகாப்புப் பணிகள், வனத் தீயினைத் தடுக்க தீத்தடுப்பு பள்ளங்கள் வெட்டுதல், பராமரித்தல், மண்வளப் பாதுகாப்புமூலம் தரமிழந்த சோலைக் காடுகளை வளமாக்குதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

[2005 ஏப்ரல் 4

2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.375.17 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.442.64 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.8.4. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்தின் மொத்த வனப் பரப்பான 22,870 சதுர கிலோ மீட்டரில், 5,596 சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பினை மேற்குத் தொடர்ச்சி மலை உள்ளடக்கியுள்ளது. வனச் சுற்றுச்சூழல் தரமிழந்து வரும் நிலையைத் தடுக்கவும், தற்போதுள்ள வனங்களையும் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள விலங்கினம் மற்றும் தாவர இனத்தை அதிகமாக்கவும் ஆங்காங்கே இடைவெளிகளில் மரங்கள் நடுதல், சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு அமைப்புகளை ஏற்படுத்தி, சிறு வனப் பொருட்கள் தோட்ட உற்பத்தி மற்றும் உயிரினங்களுக்காக இயற்கைச் சூழலை நிலை மாறாமல் மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் செய்யப்படும் அனைத்துப் பணிகளும் கூட்டு வன நிர்வாக முறையில் மக்களை ஈடுபடுத்தி ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்படுத்துதல் முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.386.28 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.420.20 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் முன்னுரிமை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மூலிகைச் செடிகளை வளர்த்து அதனை பாதுகாப்பதற்காக 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.28.60 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, செலவு செய்யப்பட்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டிலும் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்குப் பிறகு, ரூ.20.00 இலட்சம் செலவில் இத்திட்டத்தினை தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.8.5. படுகை நிலங்களில் தேக்கு மரத் தோட்டங்கள் வளர்த்தல்

2003–2004 முதல் 2007–2008 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு ஆற்றுப் படுகைகளிலுள்ள 16050 ஹெக்டேர் பரப்பில் ரூ.21.39827 கோடி செலவில் தேக்கு மரத் தோட்டங்கள் வளர்க்க அரசுக்கு கருத்துரு ஒன்று அனுப்பப்பட்டது. அரசாணை எண் 22, சுற்றுப்புறம் மற்றும் வனத் (வனம்–6) துறை, நாள் 29–01–2004–ல் தஞ்சாவூர், திருச்சி, மதுரை, ஈரோடு மற்றும் சேலம் கோட்டங்களில் ஆற்றுப் படுகைகளில் தேக்கு மரங்களை



2005 ஏப்ரல் 4]

வளர்க்க ஒப்புதலளித்து ஆணை வெளியிடப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.382.30 இலட்சம் செலவில் 3715 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.474.45 இலட்சம் செலவில் 3295 ஹெக்டேர் பரப்பில் தேக்கு மரத் தோட்டங்கள் வளர்க்கப்படவுள்ளன.

### 2.8.6. ஒருங்கிணைந்த காட்டுத்தீ தடுப்பு

தமிழகத்தில் வனங்களில் ஏற்படும் தீயினைக் கட்டுப்படுத்தி வனப் பாதுகாப்பினை பலப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் தீத்தடுப்புக் கோடுகள் அமைத்தல், கூட்டு வன நிர்வாகக் குழுக்களுக்கு உதவி செய்தல், நீர்ப்பிடிப்பூக் குழிகள் ஏற்படுத்துதல், வாகனங்கள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் வாங்குதல், தீத்தடுப்புக் கருவிகள் வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.485.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.485.00 இலட்சம் செலவில் இத்திட்டத்தினை செயல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 2.8.7. வன ஆராய்ச்சி

தமிழகத்தின் வன ஆராய்ச்சிப் பிரிவு, உயிரினப் பரவல் பாதுகாப்பு மற்றும் உயிரியல் உற்பத்தியினைப் பெருக்குதல் ஆகியவற்றினை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.225.42 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.227.78 இலட்சம் செலவில் இத்திட்டத்தினைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.8.8. தேசிய வன வளர்ப்புத் திட்டம்

கிராம அபிவிருத்தி, கிராமங்களில் வேலை வாய்ப்புக்கு வழிவகை செய்தல் மற்றும் வனங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஒரே குடையின்கீழ் இணைக்கும் நோக்கங்களுடன் வன வளர்ச்சி முகமை எனும் அமைப்பினை தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசு ஏற்படுத்தியுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டு முதல் மைய அரசின் நிதியுதவி பெறும் காடு வளர்ப்புத் திட்டங்கள் யாவும் கூட்டு வன

நிர்வாக அடிப்படையில் வன வளர்ச்சி முகமையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென திட்டம் செயல்படுத்தப்படும் கோட்டங்களில் வன வளர்ச்சி முகமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வனங்கள் ஆட்சி மற்றும் வன உயிரினக் கோட்டங்களில் 31 வன வளர்ச்சி முகமைகளை ஏற்படுத்த மைய அரசுக்கு தமிழ்நாடு வனத் துறையால் கருத்துரு அனுப்பப்பட்டதில், மத்திய அரசு இதுவரை 30 வன வளர்ச்சி முகமைகளுக்கு 2006–2007 வரை ரூ.8,522.03 இலட்சங்களில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் ரூ.3,095.35 இலட்சங்கள் விடுவிக்கப்பட்டு, ரூ.2,214.36 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இந்த 30 வன வளர்ச்சி முகமைகளுக்கு 2005–2006 ஆம் ஆண்டிற்கு ரூ.2,207.22 இலட்சங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

### 2.8.9. குளக்கரைத் தோட்டங்கள்

ஸ்வீடன் நாட்டு நிதியுதவியுடன் 1981 ஆம் ஆண்டு முதல் சமூகக் காடுகள் திட்டம் தமிழ்நாடு வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வந்தது. தரங்குன்றிய மலைகள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் தோட்டங்கள் வளர்ப்பது மட்டுமின்றி, ஏரிகள் மற்றும் குளக்கரைகளில் கருவேல் மரங்கள் நடவு செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஸ்வீடன் நாட்டு நிதியுதவி 01–04–1996 முதல் நிறுத்தப்பட்டது. அதன் பிறகு ஏரி மற்றும் குளக்கரைகளில் கருவேல் நடவுப் பணி மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது. தற்போது இத்தடை நீக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.565.02 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டும் ரூ.563.49 இலட்சங்கள் செலவில் இத்திட்டத்தினைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.8.10. மன்னார் வளைகுடா உயிரினப் பாதுகாப்பு

மன்னார் வளைகுடா உயிரின இயற்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக சுற்றுச்சூழல் நிறுவனம் (Global Environmental Facility) நிதி ஒதுக்கீடு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. கடலோர உயிரினப் பரவல்களைப் பாதுகாத்தல், கடலோரப் பகுதி மேலாண்மையினை நிலைநிறுத்தல் மற்றும் மிகுதியான பயன்படுத்தலால் கடல் சார்ந்த வளங்களுக்கு ஏற்படும் தாக்கத்தினை குறைத்து, அதனை நில அடிப்படை நடவடிக்கைகளுக்கு மாற்றுவதன்மூலம் வேலைவாய்ப்பினைப் பெருக்குதல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். அரசால் தோற்றுவிக்கப்பட்ட அறக்கட்டளை மூலம் இத்திட்டம் ரூ.140.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்துறையின்மூலம்





நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18-07-2002 அன்று தொடங்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஓர் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டுள்ளது. அறக்கட்டளை நிறுவப்பட்டதிலிருந்து ரூ.130 இலட்சம் முன்பணம் விடுவிக்கப்பட்டு, ரூ.120.00 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.11.20 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் அறக்கட்டளையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டம் சுமார் ரூ.11.20 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.9. புதிய திட்டங்கள்

### 2.9.1. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–II

தமிழகத்திலுள்ள காடுகள் பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும் தக்காண பீடபூமி ஆகியவற்றில் அடங்கும். அதிகமான மேய்ச்சல், காட்டுத் தீ மற்றும் இவ்வனங்களிலிருந்து தலைச்சுமையால் எடுத்துச் செல்லப்படும் அதிக பாதிப்பினாலும் தொடர்ந்து பெருவாரியான காடுகள் தரங்குன்றிப் போனது. கிராம மக்களின் வறுமையின் காரணமாகவும், தேவைகளுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. உடனடியாக 1,77,500 ஹெக்டேர் தரங்குன்றிய காடுகளைச் சார்ந்த 800 கிராமங்களை பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–II ரூ.567.42 கோடி நிதி இலக்குடன் எட்டாண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தினை 2005–2006 முதல் 2012–2013 வரை எட்டாண்டுகளுக்கு செயல்படுத்தும்வகையில் ஜப்பான் நாட்டு கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு வனத் துறை மற்றும் மைய அரசினிடையே கலந்தாய்வுக் கூட்ட நடவடிக்கைக் குறிப்பு புதுடில்லியில் 05–10–2004 அன்று ஒப்பமிடப்பட்டுள்ளது.

### 2.9.2. பகுதி – II திட்டங்கள்

2005–2006 ஆம் ஆண்டில் பாதுகாப்பு, கட்டடங்கள், சாலைகள், வனக்குடியிருப்பு மற்றும் உயிரியல் பூங்கா மேம்பாடு போன்ற பின்வரும் 36 பகுதி–II திட்டங்களை செயல்படுத்த ரூ.1,313.08 இலட்சங்கள் மதிப்பீட்டிற்கு நிதி நிலைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

[2005 ஏப்ரல் 4

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | வனவிலங்குகளுக்கு குடிநீர் வசதி | 30.00 |
| 2. | மருத்துவத் தாவரங்கள் இருக்கும் இடத்தை பராமரித்து பாதுகாத்தல் | 5.00 |
| 3. | பாதுகாப்புப் பகுதிகளுக்கு வெளியே காப்புக் காடுகளில் வன உயிரினத் தொகைக் கணக்கெடுப்பு | 10.00 |
| 4. | அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் நுழைவு வாயிலை மேம்படுத்துதல் | 10.00 |
| 5. | மிருகக்காட்சிசாலை கல்வித் திட்டப் பங்கேற்பாளர்களுக்கு 10 ஓய்வில்ல அறைகள் கட்டுதல் | 20.00 |
| 6. | அமிர்தியில் மூலிகை மனை மற்றும் சித்த முறைகளுடன் கூடிய பொருள்விளக்க மையம் ஏற்படுத்துதல் | 10.00 |
| 7. | 5 அரை நிரந்தர வேட்டைத் தடுப்பு கொட்டகைகள் தலா ரூ.1 இலட்சம் வீதம் கட்டுதல் | 5.00 |
| 8. | பறவைகள் சரணாலய மேம்பாடு | 16.00 |
| 9. | கிண்டி தேசிய பூங்காவில் உள்ள பூங்கா இல்லத்தினை மேம்படுத்துதல் | 2.00 |
| 10. | நிலப்பட மற்றும் பல்லுயிரின மதிப்பீடு மற்றும் செயல் திட்டங்கள் உருவாக்குதல் | 16.00 |
| 11. | மண் அரிப்பினையும் காற்றின் திசை வேகத்தினை குறைக்கவும் விருதுநகர்-திருச்சி மண்டலங்களில் கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் எழுப்புதல் | 52.00 |
| 12. | சதுப்பு நிலக் காடுகளை உருவாக்குதல் | 100.00 |
| 13. | 5 முக்கியமான வனத் தணிக்கைச் சாவடிகளுக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்து பலப்படுத்துதல். | 12.00 |
| 14. | நில அளவை உபகரணங்கள் (ஜி.பி.எஸ்) கள அலுவலர்களுக்கு வழங்குதல் | 1.25 |
| 15. | வனப் பாதுகாப்பினை பலப்படுத்துதல்—கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்கள் வாங்குதல். | 40.00 |



2005 ஏப்ரல் 4]

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 16. | வன நிர்ணயப் பணி—எல்லைக் கற்கள் மற்றும் கெய்ரன் கற்கள் அமைக்கும் பணி | 15.00 |
| 17. | வனப் பாதுகாப்பு—ஆக்கிரமிப்பு அகற்றிய பகுதிகளில் மறு உற்பத்தி நடவடிக்கை | 17.50 |
| 18. | வன அலுவலர்களுக்கு படைக்கலப் பயிற்சி அளித்தல் | 15.00 |
| 19. | பழங்குடியினர் பள்ளிகளில் குடிநீர் வசதி ஆய்வுகூட உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பெண்களுக்குத் தனி கழிவறை அமைத்தல் | 30.00 |
| 20. | 269 ஹெக்டேர் பரப்பில் மூங்கில் தோட்டம் எழுப்புதல் | 25.00 |
| 21. | வேளாண் காடுகளில் மூங்கில் இனங்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளை உயர்த்துதல் | 5.00 |
| 22. | இரண்டு இலட்சம் மரக் கன்றுகள் உற்பத்தி செய்து இலவசமாக விவசாயிகளுக்கு வழங்குதல் | 6.00 |
| 23. | சென்னை, மதுரை, திருச்சி மாநகராட்சிகளில் மாசுபடுவதைத் தடுக்க வழங்குவதற்காக 30 x 45 செ.மீ அளவுள்ள 83,333 உயர நாற்றுகள் உற்பத்தி செய்து மரக் கன்றுகளை வளர்த்தல் | 25.00 |
| 24. | வனத் துறையில் பயிற்சி கொடுப்பதன் மூலம் மனித இனத்துக்குரிய ஆதாரத்தினை பெருக்குதல் | 5.00 |
| 25. | கோவை தென் பிராந்திய வனச் சரகக் கல்லூரியில் பயிற்சி அளித்தல் மற்றும் அதனை மேம்படுத்துதல் | 10.00 |
| 26. | வைகை அணையில் உள்ள தமிழ்நாடு வனவர்கள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி மற்றும் மேம்படுத்தல் | 10.00 |
| 27. | மாநில துறைத் தலைமை அலுவலக நூலகம் மற்றும் பயிற்சி மையங்களை மேம்படுத்துதல் | 5.00 |
| 28. | அமிர்தி—கிண்ணிகுளம் சாலை மேம்பாடு செய்தல் | 30.00 |
| 29. | குமுளி—கம்பமெட்டு சாலை மேம்பாடு செய்து தார்ச் சாலையாக மாற்றுதல் | 30.00 |
| 30. | பண்ணைக்காடு—பெரும்பள்ளம் சாலை மேம்பாடு செய்து தார்ச் சாலையாக மாற்றுதல் | 30.00 |

[2005 ஏப்ரல் 4

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 31. | திருச்சி மாவட்டத்தில் மூலக்காடு–மணலோடை சாலை மேம்பாடு செய்து தார்ச் சாலையாக மாற்றுதல் | 30.00 |
| 32. | சின்னப்பழமலை முதல் மூலக்காடு–மணலோடை சாலையினை மேம்படுத்துதல் | 10.00 |
| 33. | திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சைமலை சோபனாபுரத்தில் ஒய்வில்லத்தினை அமைத்தல் | 3.00 |
| 34. | கோவை தென்னக வனச் சரகர் கல்லூரி அலுவலக வளாகத்தில் வனப் பாதுகாவலருக்கு கூடுதல் தளம் கட்டுதல் | 11.00 |
| 35 | புதியதாக நியமிக்கப்பட்ட கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்களுக்கு புதிய கார் வாங்குதல் | 23.33 |
| 36 | சுனாமி பாதுகாப்பு அரணாக கடற்கரையோரப் பகுதிகளில் பசுமைத் தடுப்புகளை உருவாக்குதல் | 648.00 |
| | மொத்தம் | 1,313.08 |

### 2.9.3. காட்டாமணக்குத் தோட்டங்கள் வளர்க்கும் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள 115 கூட்டு வன நிர்வாக கிராமங்களில், 460 ஹெக்டேர் பரப்பில் காட்டாமணக்கு மாதிரி விளக்கப் பண்ணைகள் அமைக்க, 2004–2005 முதல் 2006–2007 வரை மூன்றாண்டுகளுக்கு ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.9.4. கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலக் காடுகளில் மறு சீரமைப்பு மேற்கொள்ளுதல்

தமிழ்நாட்டு கடலோரங்களில் உள்ள கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்புநிலக் காடுகள் சமீபத்தில் ஏற்பட்ட சுனாமி தாக்குதலின் போது அங்கிருந்த மக்களையும் அவர்தம் உடைமைகளையும் பாதுகாத்துள்ளது. இந்தச் சுனாமி தாக்குதலினால் இத்தோட்டங்களிலிருந்த இளந்தாவரங்கள் சேதமடைந்தன. மேலும் மீதமுள்ள தமிழகக் கடலோரப் பகுதிகளில் தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலக் காடுகள் வளர்க்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே, கடலோரப்பகுதிகளில் கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலக்



2005 ஏப்ரல் 4]

காடுகளில் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள சுமார் ரூ.10.00 கோடி செலவில் கருத்துரு ஒன்று உலக வங்கியின் நிதியுதவி பெற அனுப்பப்பட்டுள்ளது.

### 2.9.5. உயிர்–திடப்பொருள் (Bio-mass) மூலம் கிராமங்களில் எரிசக்தி பாதுகாப்பு

தமிழ்நாட்டில் பெரும்பாலான வெகுதொலைவில் அமைந்துள்ள கிராமங்கள் மின் விநியோக விரிவாக்கத்தின்கீழ் கொண்டு வரப்படாததால் மின்வசதியில்லாத நிலையில் உள்ளன. இக்கிராமங்களுக்கு மின்வசதி மற்றும் இயக்கும் எரிசக்தி அளிக்க, புதுப்பித்துக்கொள்ளக்கூடிய எரிசக்தி வளங்களிலிருந்து மின்சாரத்தினை உற்பத்தி செய்ய "உயிர்திடப்பொருள்மூலம் கிராமங்களில் எரிசக்தி பாதுகாப்பு" என்னும் திட்டத்தினை உருவாக்கியுள்ளது. இத்திட்டமானது ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்தும் வகையில் ரூ.98.96 இலட்சங்கள் மதிப்பீட்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி முகமையின் மூலம் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 2.9.6. கிழக்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்வாதார நீர்வளப் பாதுகாப்பிற்கென 2005–2006 ஆம் ஆண்டில் சிறுவனப்படு பொருள் தோட்டங்கள், மலைவாழ் மக்களின் வாழ்க்கையைச் சார்ந்து பணிகள், இலவச நாற்றுகள் விநியோகம், சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் தீத்தடுப்புப் பணிகள் போன்ற பணிகளை ரூ.105.00 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ள கருத்துரு உருவாக்கப்பட்டுள்ளது.

## 2.10. கழகங்கள்

### 2.10.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்

தொழிற்சாலைகளின் தேவைக்காக கூழ்மரங்கள் மற்றும் முந்திரித் தோட்டங்கள் உற்பத்தி செய்தல், பராமரித்தல், அறுவடை செய்தல் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான விறகு மரங்கள் விநியோகம் செய்தல் ஆகியன இக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். இக்கழகத்தின் பங்கு மூலதனம் முழுவதும் தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் ஆளுகையின்கீழ் 71,013 ஹெக்டேர் காப்புக் காடுகள் வனத் துறையிலிருந்து குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு

மூலதனம் ரூ.10 கோடியாகும் மற்றும் இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 3.76 கோடியாகும்.

### 2.10.2. சாதனைகள்

2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்ட தோட்டங்களின் விவரம் பின்வருமாறு:

(ஹெக்டேரில்)

| | 2003–2004 | 2004–2005 | 2005–2006 (உத்தேசிக்கப் பட்டது) |
|---|---|---|---|
| யூகலிப்டஸ் தோட்டங்களின் உற்பத்தி | 2,307 | 3,005 | 3,500 |
| முந்திரித் தோட்டங்களின் உற்பத்தி | 1,128 | 10,62 | 1,000 |
| சவுக்குத் தோட்டங்களின் உற்பத்தி | 48 | 50 | 40 |
| நெல்லித் தோட்டங்களின் உற்பத்தி | 64 | — | — |
| இதர தோட்டங்களின் உற்பத்தி | — | 250 | 100 |

### 2.10.3. கூழ் மர விநியோகம்

2004–2005 ஆம் ஆண்டில் இக்கழகம் 80,071 மெட்ரிக் டன் கூழ்மரங்களை மரத் தொழிற்சாலைகளுக்கு வழங்கியதன்மூலம் ரூ.12.14 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் 75,000 மெட்ரிக் டன் கூழ்மரங்களை தொழிற்சாலைகளுக்கு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.10.4. முந்திரித் தோட்டங்கள்

2004–2005 ஆம் ஆண்டில் முந்திரித் தோட்ட விற்பனை மூலம் ரூ.4.13 கோடி ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2005 ஆம் ஆண்டில் முந்திரித் தோட்டங்களை குத்தகைக்கு விட ஜனவரி மாத இறுதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

### 2.10.5. சந்தன எண்ணெய்

2004–2005 ஆம் ஆண்டில் இக்கழகத்தினால் 471.00 கிலோ கிராம் சந்தன எண்ணெய் மற்றும் இதர பொருட்களும் இத்தொழிற்சாலையில்



தயாரிக்கப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் இக்கழகம் 853.00 கிலோ கிராம் சந்தன எண்ணெயும் மற்றும் இதர பொருட்களையும் விற்றுள்ளது. இதனைத் தவிர 81 கிலோ கிராம் சந்தன எண்ணெயும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சந்தன மரப் பொருட்களின் தர முத்திரையினை உள்ளூர் மற்றும் உலக சந்தைகளில் நிலைநிறுத்தும் தீவிர முயற்சியில் வனத் தோட்டக் கழகம் ஈடுபட்டுள்ளது. இக்கழகம் உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்ததன்மூலம் ரூ.295.00 இலட்சங்களும், அந்நியச் செலாவணிமூலம் ரூ.29.00 இலட்சங்களும் வருவாயாக ஈட்டியுள்ளது.

### 2.10.6. வருவாய் மற்றும் செலவின விவரம்

இக்கழகத்தின் 2003–2004 (உள்ளபடி), 2004–2005 (திருத்திய திட்ட மதிப்பீடு) மற்றும் 2005–2006 ஆம் ஆண்டின் (திட்ட மதிப்பீடு) நிதி ஒதுக்க விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | வருவாய் | செலவு | இலாபம் (+) நட்டம் (–) |
|---|---|---|---|
| 2003–2004 (உள்ளபடி) | 3,138.18 | 2,795.39 | (+) 342.79 |
| 2004–2005 (திருத்திய திட்ட மதிப்பீடு) | 3,855.14 | 2,859.94 | (+) 995.20 |
| 2005–2006 (திட்ட மதிப்பீடு) | 2,924.49 | 2,480.45 | (+) 444.04 |

### 2.11. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம், குன்னூர்

1968 ஆம் ஆண்டின் சாஸ்திரி–ஸ்ரீமாவோ உடன்படிக்கையின்படி இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளின் புனர்வாழ்விற்காக சமூகப் பொருளாதார நோக்கத்துடன் தேயிலைத் தோட்டங்களை உருவாக்க தமிழக அரசால் அரசு தேயிலைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு வனத் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இக்கழகம் 1956ஆம் வருடத்திய கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 01–04–1976–லிருந்து ஒரு கழகமாக செயல்படத் துவங்கியது. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ரூ.10.00 கோடி ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.5.96 கோடியாகும்.

[2005 ஏப்ரல் 4

தோட்ட உற்பத்தி மற்றும் மறுவாழ்வுப் பணிகள் இக்கழகத்தால் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டன. இக்கழகம் 4,431.92 ஹெக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டத்தினை உற்பத்தி செய்து, 2,445 இலங்கை அகதிகளின் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளித்து வருகிறது. தற்போது 6,453 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் 2,093 தொழிலாளர்களுக்கு தினக் கூலி அடிப்படையில் வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது.

நிரந்தரத் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி, நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் அடிப்படை வசதிகளான இலவசக் குடிநீர், இலவச மருத்துவ சிகிச்சை, குழந்தைகள் காப்பகம், தொடக்கக் கல்வி, மகப்பேறு பயன்கள், நோய் நிலைப் பயன்கள், விடுப்பு ஊதியம், தேசிய மற்றும் விழாக்கால ஊதியம், வெப்ப உடைகள், மிகைச் சம்பளம், பணிக் கொடை, சேம நல நிதி போன்ற பலன்களை வழங்கி வருகின்றது.

இக்கழகத்தின் வரவு செலவு விபரம் மற்றும் பசுந்தேயிலை உற்பத்தி மற்றும் பதப்படுத்தப்பட்ட தேயிலை உற்பத்தியின் 2003–2004, 2004–2005 மற்றும் 2005–2006 ஆம் ஆண்டிற்கான செயல் சாதனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### 2.11.1. பசுந்தேயிலை உற்பத்தி

(இலட்சம் கிலோவில்)

| 2003-2004 (உள்ளபடி) (உற்பத்தி) | 2004-2005 | 2005-2006 (மதிப்பீடு) |
|---|---|---|
| 429.79 | 416.00 | 493.00 |

### 2.11.2. பதப்படுத்தப்பட்ட தேயிலை

(இலட்சம் கிலோவில்)

| 2003-2004 (உள்ளபடி) (உற்பத்தி) | 2004-2005 | 2005-2006 (மதிப்பீடு) |
|---|---|---|
| 105.55 | 110.40 | 118.32 |



2005 ஏப்ரல் 4]

### 2.11.3. வருவாய் மற்றும் செலவின விவரங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | தேயிலை மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | நிகர இலாபம்(+) நட்டம் (–) |
|---|---|---|---|
| 2003–2004 (உள்ளபடி) | 4,221.14 | 4,600.80 | (–) 379.66 |
| 2004–2005 (தற்காலிகமானது) | 5,460.00 | 4,829.00 | (+) 631.00 |
| 2005–2006 (திட்ட மதிப்பீடு) | 5,974.00 | 5,189.00 | (+) 785.00 |

திறம்பட்ட மேலாண்மையினாலும், பல்வேறு செலவு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூலமும், கடந்த மூன்றாண்டுகளாக ஏற்பட்ட விலை வீழ்ச்சி மற்றும் எதிர்மறையான வானிலைச் சூழ்நிலைகளிலும், கழகமானது நட்டத்தினை வெகுவாக குறைத்துள்ளது.

### 2.12. அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்

அரசு ரப்பர் கழகம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத் துறையின் 4,279.78 ஹெக்டேர் வன நிலங்களிலுள்ள ரப்பர் தோட்டங்களை குத்தகைக்கு எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ரப்பர் பயிரிட மண் வளம், தட்பவெப்ப நிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாக உள்ளது. 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 20–08–1984 அன்று, அரசு ரப்பர் கழகமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10.00 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 8.45 கோடியாகும்.

மேலும் அரசு ரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட ரப்பர் மரங்கள் 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் நடப்பட்ட மரங்கள் ஆகும். ரப்பர் வாரிய வழிமுறைகளின்படி 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவரும் மரங்கள் குறைந்த அளவு விளைச்சலை வழங்குவதால் இவற்றை பராமரிப்பது பயனற்றதாகும். உற்பத்தியைப் பெருக்கவும், கழகத்தை நிலைத்திருக்கச்

[2005 ஏப்ரல் 4

செய்யவும், ஏற்கெனவே உள்ள (சுமார் 1,800) தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பளிக்கவும் ரப்பர் வாரியத்தின் அறிவுரையின்படி இப்பகுதிகளில் உயர்நுட்பவியல் ஒட்டு மரங்களை மறுநடவு செய்ய முடிவெடுக்கப்பட்டது. 2003–2004 ஆம் ஆண்டில் 103.60 ஹெக்டேர் பரப்பிலும், 2004–2005 ஆம் ஆண்டில் 95.20 ஹெக்டேர் பரப்பிலும் மறுநடவு செய்யப்படவுள்ளது. 2005–06 ஆம் ஆண்டில் மறுநடவுப் பணிகளை மேற்கொள்வதற்கென நாற்றங்கால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.12.1. உற்பத்தி மற்றும் விற்பனை (வருவாய் மற்றும் செலவுகள்)

(ரூபாய் இலட்சங்களில்)

| வருடம் | ரப்பர் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | ரப்பர் மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | விற்பனை மெட்ரிக் டன்னில்) | நிகர இலாபம் (+) நட்டம் (-) |
|---|---|---|---|---|
| 2003–2004 (உள்ளபடி) | 2,668 | 1,681.18 | 1,563.74 | (+) 117.44 |
| 2004–2005 (மதிப்பீடு) | 2,025 | 1,429.05 | 1,404.25 | (+) 24.80 |
| 2005–2006 (திட்ட மதிப்பீடு) | 2,500 | 1,552.55 | 1,424.56 | (+) 127.99 |



2005 ஏப்ரல் 4]

## 3. சுற்றுச்சூழல் துறை

ஒரு நாட்டின் வளர்ச்சியானது நீடித்து நிலைத்து நிற்கும் சமூக மற்றும் பொருளாதார மேன்மையை வழங்குவதாகவும் எதிர்கால சந்ததியின் தேவைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தாத வளர்ச்சியாகவும் அமையப்பெறவேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது சமூகப் பொருளாதார வளர்ச்சியுடன் ஒருங்கிணைந்த அம்சமாகும். பெருகி வரும் மக்கள்தொகை பெருக்கமும், தொடர்ந்துவரும் தொழில்மயமாக்கலும், நிலம் மற்றும் நீர்வாழ் உயிரின அமைப்பின் பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக விளங்குகின்றன. இம்மாநிலத்தின் நிலம், நீர் மற்றும் வன வளங்கள் மற்றும் உயிர்ப்பன்மயம் உள்ளிட்ட வாழ்க்கைச் சங்கிலித் தொடரைச் சிதைக்காமல், சூழலியல் பாதுகாப்பினை மேம்படுத்துதல் இன்றியமையாததாகும். இதனைக் கருத்திற்கொண்டு நதிநீர் பாதுகாப்பு, ஏரிகள் தூய்மைப்படுத்துதல், கடலோரப் பாதுகாப்பு, மாசு களைதல், மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இவ்வரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.1. சுற்றுச்சூழல் துறையின் குறிக்கோள்கள்

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மேலாண்மையை செயல்படுத்தும் பொருட்டு 1995–ல் சுற்றுச்சூழல் துறை உருவாக்கப்பட்டது. இத்துறை காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி ஆறுகள் மற்றும் சென்னை நகரின் நீர்வழிகளில் மாசுத் தடுப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. இவற்றைத் தவிர, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் செயல்படுத்தப்படாத பிற சுற்றுச்சூழல் பணிகளையும் இத்துறை செய்து வருகிறது.

திட மற்றும் திரவக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல், இயற்கை உரம் தயாரித்தல், மழைநீர் சேகரம் செய்தல், மரம் நடுதல் போன்ற நடவடிக்கைகள் சூழல் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும். மக்களின் மனதளவில் மாற்றம் ஏற்படுத்தி அதன்வாயிலாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வைத் தோற்றுவிப்பது சூழல் பாதுகாப்புக்கு இன்றியமையாததாகும். சூழல் மேம்பாடு அடைவதற்கு இம்மாதிரியான சிந்தனைகள் பள்ளி மாணவர்களின் இளம் மனங்களில் பதியும்வண்ணம் புகட்டப்படுதல் வேண்டும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட கருத்துரு மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள 15 அம்ச திட்டத்தில் கூறப்பட்டுள்ள சூழல் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டு 2005–2006 ஆம் ஆண்டுக்கான இத்திட்டம்

[2005 ஏப்ரல் 4

வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வைப் பெருமளவு தோற்றுவிக்கவும், சூழல் மறுசீரமைப்பினை ஓரளவுக்கு ஏற்படுத்தவும் வழிகோலும்.

**3.2. கடற்கரை பகுதி மேலாண்மை**

கடற்கரை பகுதிகளில் வளர்ச்சியினை ஒழுங்குபடுத்துவதற்காக மைய அரசு "கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை 1991" வெளியிட்டுள்ளது. இதனை செயல்படுத்துவதற்காக, சுற்றுச்சூழல்–வனத் துறைச் செயலரைத் தலைவராகவும், மேலும் சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர்-செயலராகவும் கொண்ட மாநில கடற்கரை மேலாண்மைக் குழுமம் இயங்கி வருகிறது. இக்குழுமத்தால் பல்வேறு கருத்துருக்கள் இவ்வறிவிக்கைகளின்கீழ் பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல, அனல் மின் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக வல்லுநர் குழு மற்றும் அனல் மின் நிலையங்களிலிருந்து வெளியேறும் எரிசாம்பல் தொடர்பாக மைய அரசு வெளியிட்ட அறிவிக்கைகளினை கண்காணிக்கும் குழு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

**3.3. சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை**

மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் பல்வேறு துறைகளின் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம், தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்களை துரிதப்படுத்தவும், அவற்றிற்கான மைய அரசின் நிதி உதவியை அவ்வப்போது பெற்று, ஒருங்கிணைத்து பணிகளை மேற்பார்வையிடவும், தன்னாட்சி அடிப்படையில் "சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை" ஒன்று 2002–ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் துறை இயக்குனர் இம்முகமையின் உறுப்பினர்–செயலராக செயல்பட்டு வருகிறார். கீழ்க்கண்ட திட்டங்கள் சுற்றுச்சூழல் மேலாண்மை முகமையினால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**(அ) தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம்**

காவிரியாற்றில் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்த இத்துறையினால் ஐந்து பகுதிகளில் மாசுத் தடுப்புப் பணிகள் ரூபாய் 3627.75 இலட்சங்கள் செலவில் மைய அரசு நிதியுதவியுடன் 1996–1997 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயலாக்கப்பட்டு, 31–01–2005 வரை ரூ. 1945.39 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.



2005 ஏப்ரல் 4]

நூறு விழுக்காடு மைய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டப் பணிகள் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

சிறு பணிகள் எனப்படும் குறைந்த செலவிலான சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் ஆற்றங்கரை பாதுகாப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. பெரும்பணிகள் எனப்படும் கழிவுநீரைத் தடுத்து வழிப்படுத்துதல், கழிவுநீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் ஈரோடு, பவானி, குமாரபாளையம், பள்ளிப்பாளையம் மற்றும் திருச்சிராப்பள்ளி நகரங்களில் நடைபெற்று வருகின்றன. திருச்சி, குமாரபாளையம் மற்றும் ஈரோடு நகரங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன. பவானி நகரத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிப்பாளையம் நகரத்திற்கான விரிவான திட்ட அறிக்கை மைய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி நிலுவையில் உள்ளது.

**(ஆ) சென்னைப் பெருநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்**

சென்னை நகரின் நீர் வழிகளில் மாசுத் தடுப்புப் பணிகளை செயல்படுத்த சென்னை நகரத்தின் முக்கிய ஆறு நீர்வழித் தடங்களான கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி ஓடை, காப்டன் காட்டன் கால்வாய், மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் சேரும் 314 கழிவுநீர் சாக்கடைகளைத் தடுத்து நிறுத்தி குழாய்மூலம் மாற்று வழியில் எடுத்துச் செல்லும் பணிகள் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு மைய அரசு ரூ. 49152.00 இலட்சங்கள் நிதி உதவி அனுமதித்துள்ளது. இத்திட்டத்தில் 95 விழுக்காடு சாதனை இலக்கு எட்டப்பட்டு ரூ.28853.00 இலட்சங்கள் நிதி இலக்கு சனவரி 2005 வரை எட்டப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 16 பகுதிகளில், 6 பகுதிகளில் பணிகள் நிறைவடைந்துள்ளன. எஞ்சியுள்ள 10 பகுதிகளில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

**(இ) தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்–புதிய ஏழு நகரங்கள் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் பாயும் ஏழு முக்கிய நகரங்களான திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர், மதுரை, மயிலாடுதுறை மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் நதிநீரைத் தூய்மைப்படுத்த மைய அரசு ரூ. 57530.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஏற்பளித்துள்ளது. இதில் ரூ. 28215.00 இலட்சம் மைய அரசின் பங்காகும்.

மீதமுள்ள தொகையினை தமிழ்நாடு அரசு, உள்ளாட்சி அமைப்புகள், மக்கள் பங்கேற்பு மூலமாக பெற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் பாதாள சாக்கடை அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், குறைந்த செலவில் சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்படுத்தி ஆற்றுநீரின் மாசினைக் களைந்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மதுரை மற்றும் கும்பகோணம் நகரங்களின் திட்டப் பணிகள் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்மூலம் நிறைவேற்றப்படுகின்றன. கரூர், தஞ்சை, மயிலாடுதுறை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து நகரங்களில் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் சனவரி 2005 வரையில் ரூ. 23444.69 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### (ஈ) தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்

உதகை மற்றும் கொடைக்கானல் ஏரிகளில் மாசினைக் களைந்து தூய்மைப்படுத்துவதற்காக ரூ. 688.00 இலட்சம் செலவில் விரிவான திட்ட மதிப்பீடுகள் தேசிய ஏரிகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பொதுப் பணித் துறை மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் சனவரி 2005 வரை, ரூ. 33.37 இலட்சங்கள் கொடைக்கானல் ஏரிகள் தூய்மைப்படுத்தும் திட்டத்திற்காகவும், ரூ. 142.48 இலட்சங்கள் உதகை ஏரியினைத் தூய்மைப்படுத்தும் திட்டத்திற்காகவும், செலவிடப்பட்டுள்ளது. உதகை ஏரியில் தற்போது மாசு அறவே களையப்பட்டுவிட்டது.

### (உ) ஆம்பூரில் பாலாற்று நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரில் கரைந்துள்ள மொத்த உப்பின் அளவினைக் குறைப்பது ஒரு பிரச்சினையாக உள்ளது. இதற்கு புதுமையான தீர்வாக, சுத்திகரிக்கப்பட்ட நகராட்சிக் கழிவுநீருடன் ஆலைக் கழிவுநீரினை கலந்து உப்பின் அளவை தேவையான அளவு குறைக்கும்பொருட்டு மொத்தம் ரூ. 25.00 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டம் ஆம்பூர் நகராட்சியில் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி



வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆம்பூர் நகரத்திற்கு பாதாள சாக்கடை வசதி கிடைக்கும். இதே போல இராணிப்பேட்டை மற்றும் வாலாஜா நகராட்சிகளில் உருவாகும் கழிவு நீரைச் சுத்திகரித்து, சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவு நீரில் கரைந்துள்ள உப்புத் தன்மையை குறைக்க ரூ. 25.00 கோடி செலவில் ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு இந்த ஆண்டு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆலைகளில் இருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் மொத்த உப்பின் அளவினைக் குறைத்து பாலாறு மாசுபடுவதைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல் ஆம்பூர், இராணிப்பேட்டை மற்றும் வாலாஜா நகர மக்களுக்கு பாதாள சாக்கடைத் திட்ட வசதியினையும் அளிக்கிறது.

இத்திட்டம் 70 சதவீதம் மைய அரசின் நிதியுதவியுடனும், மீதித் தொகை, நகராட்சி (25 விழுக்காடு) மற்றும் தொழிற்சாலைகள் (5 விழுக்காடு) நிதி பங்கேற்பின் மூலமாகவும் செயல்படுத்தப்படவுள்ளது. இவ்விரு திட்டங்களுக்கும் மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

## 3.4. 2004–2005 ஆம் ஆண்டின் சாதனைகள்

### (அ) சுற்றுச்சூழல் விருதுகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றில் சிறந்த பணி செய்த வல்லுநர்கள், தனி நபர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியோரைப் பாராட்டி ஊக்குவிக்கும் வண்ணமாக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் சுற்றுச்சூழல் விருதுகள் உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5 ஆம் தேதி அன்று வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### (ஆ) சுற்றுச்சூழல் மன்றங்கள்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை பள்ளி மாணவ மாணவியரிடம் ஏற்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் உள்ள இருபத்தொன்பது மாவட்டங்களிலும் 1260 சுற்றுச்சூழல் மன்றங்கள் இத்துறையால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சூழல் மன்றங்களுக்கு நிதியுதவி, சுற்றுச்சூழல் கருத்தரங்குகள் நடத்துவதற்கான நிதியுதவி, வெளியீடுகள் ஆகிய பணிகள் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயலாக்கப்படும்.

[2005 ஏப்ரல் 4

**(இ) சுற்றுச்சூழல் கல்வி–தூய்மைமிகு பசுமை வீதிகள்–முன்னோடித் திட்டம்**

சென்னை மாவட்டத்திலுள்ள 40 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்களின் மூலம் இம்முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியின் அருகில் உள்ள ஒரு தெரு தத்தெடுக்கப்பட்டு அத்தெருவில் உருவாகும் திடக் கழிவுகள் தரம் வாரியாக பிரிக்கப்பட்டு, மக்கும் தன்மையுள்ள கழிவுகள் இயற்கை உரமாக்கப்படுகிறது. மாணவர்களால் தயாரிக்கப்படும் இயற்கை உரம், தேர்ந்தெடுக்கப்படும் வீதிகளில் நடப்படும் மரங்களுக்கு இயற்கை உரமாக இடப்படும். இவ்வாறு சுற்றுச்சூழல் மன்றங்கள் தூய்மைமிகு பசுமை வீதிகளை தத்து எடுத்துக் கொள்ளும். சுற்றுச்சூழல் செய்திகள், சுற்றுச்சூழல் மன்ற உறுப்பினர்களால் மக்களுக்குத் தெரிவிக்கப்படும். மேலும் பள்ளி அளவில் இத்திட்டப் பணிகள் சுற்றுச்சூழல் மன்ற ஆசிரியர்–ஒருங்கிணைப்பாளர் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டத்திற்கென ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.18,750/– நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

**(ஈ) சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு**

ஏரிகளைத் தூய்மைப்படுத்த புதிய நுண்ணுயிர் கலவை தயாரித்தல் மூலமாக தூய்மைப்படுத்துதல் மற்றும் மரத் தொகுப்புமூலம் கழிவுநீரைச் சுத்திகரித்தல், சுனாமிப் பேரலையால் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த புதிய ஆராய்ச்சிப் பணிகள் சுற்றுச்சூழல் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2004–2005 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ரூ. 4.94 இலட்சங்கள் தொடர்புள்ள ஆய்வு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை 2005–2006 ஆம் ஆண்டில் செலவிடப்படும்.

**(உ) ஆற்று நீரின் தரத்தைக் கண்காணித்தல்**

தமிழ்நாட்டிலுள்ள ஆறுகளைத் தூய்மைப்படுத்த தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஏரிகளைத் தூய்மைப்படுத்த தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றின்கீழ் சுற்றுச்சூழல் துறை பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் ஈரோடு, பவானி, குமாரபாளையம், திருச்சி மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய ஐந்து நகரங்களிலும், மதுரை, திருநெல்வேலி, கும்பகோணம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், கரூர்–இனாம்கரூர் மற்றும் திருச்சி–ஸ்ரீரங்கம் ஆகிய ஏழு



2005 ஏப்ரல் 4]

நகரங்களிலும் மற்றும் சென்னை நகரிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஏரிகள் தூய்மைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆற்றுநீரின் தரத்தைத் தொடர்ந்து கண்காணிப்பது இத்திட்டத்தின் முக்கியப் பணியாகும். எனவே, நீரின் தரத்தைக் கண்காணிக்கும் ஓர் ஆய்வுக்கூடத்தை இத்துறையில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வகம், தமிழ்நாட்டில் உள்ள, திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆறுகள் மற்றும் ஏரிகளின் நீரின் தரத்தினை திறம்படக் கண்காணிக்கும் பணியினை மேற்கொள்ளும்.

2004–2005 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆய்வகக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்க இத்திட்டத்தின்கீழ் ரூ. 8.40 இலட்சம் செலவிடப்பட்டது.

**(ஊ) கடற்கரைச் சூழல் பாதுகாப்பு**

தொழில்மயமாதல், நகர்மயமாதல், துறைமுகங்கள் போன்ற பிற அபிவிருத்திகளால் கடற்கரைச் சூழலில் ஏற்பட்டுள்ள தாக்கத்தைக் கண்டறிந்து கடலோரப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைத் திட்டங்களை வடிவமைத்தால் நமது கடற்கரைச் செல்வத்தை அழியாமல் பாதுகாக்க முடியும். சதுப்பு நிலக் காடுகளைப் பாதுகாக்கவும், மறு உற்பத்தி செய்யவும் வனத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. சுற்றுலா நடவடிக்கைகளை சுற்றுலாத் துறை மேற்கொள்கிறது. மேலும் மீனளம், தொழிற் சாலைகள் மற்றும் துறைமுகங்கள் கடற்கரைப் பகுதியின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

சூழலுக்கு உகந்த கடலோர வளர்ச்சிக்கு வித்திடும்வண்ணம் புலிக்கட்டு ஏரி முதல் பாலாறு முகத்துவாரம் வரை உள்ள கடலோரப் பகுதியில் ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைக்கான திட்டம் தயாரிக்கும் பணி பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் துவக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986–ன்கீழ் கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை 1991–ஐ இத்துறை கடலோரப் பாதுகாப்பிற்காக செயல்படுத்தி வருகிறது. கடலோரங்களில் நிகழ்கின்ற அறிவிக்கை மீறல் நடவடிக்கைகளை அவ்வப்போது ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மைய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை மீறல்களை கண்காணித்து கடற்கரைச் சூழல் பாதுகாப்பினை மேம்படுத்த “பசுமைப் படை” ஒன்றினை உருவாக்க

[2005 ஏப்ரல் 4

உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிக்காக மைய அரசு வழங்கிய ரூ.5.00 இலட்சத்தில் மோட்டார் வாகனம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மாநில அரசு வழங்கிய ரூ.12.00 இலட்சத்தில், 2004–2005 ஆம் நிதியாண்டில் ரூ.5.00 இலட்சம் செலவிடவும், எஞ்சிய ரூ.7.00 இலட்சத்தை 2005–2006 ஆம் ஆண்டில் செலவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.5. 2004–2005 ஆண்டு சாதனைகள் (மைய அரசின் 100% நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்)

#### (அ) தேசிய பசுமைப் படை

பள்ளி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை வலுப்படுத்த மாவட்டம் ஒன்றிற்கு 150 பள்ளிகள் வீதம் 29 மாவட்டங்களில் 4350 பள்ளிகளில் தேசிய பசுமைப் படை உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செலவினமாக ஒவ்வொரு பள்ளிக்கும் மைய அரசு ரூ.1000/– நிதி உதவி வழங்குகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைமை பயிற்றுநர் மற்றும் ஆசிரியர்–ஒருங்கிணைப்பாளர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இத்திட்டம் கண்காணிக்கப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 150 பள்ளிகளில் தேசிய பசுமைப் படை துவக்கப்படும். இத்திட்டம் 100 சதவீத மைய அரசின் நிதி உதவியுடன் 2004–2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

#### (ஆ) சூழல் தகவல் மையம்

மைய அரசின் நிதியுதவியுடன் "சுற்றுச்சூழல் தகவல் மையம்" (ENVIS–Environmental Information System) ஒன்று இயங்கி வருகிறது. வலைதளம் வாயிலாக தமிழக சுற்றுச்சூழல் பற்றிய பொதுவான தகவல்களை அளிப்பது மட்டுமன்றி, சுற்றுச்சூழலின் தற்போதைய நிலை, மாநிலத்தின் வளமான உயிர்ப்பன்மயம் மற்றும் ஆறுகளைத் தூய்மைப்படுத்தும் பணிகள் ஆகிய விவரங்களை சூழல் தகவல் மையம் வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கென மொத்தம் ரூ.10.92 இலட்சங்கள் மைய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில், 100 சதவீத மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



2005 ஏப்ரல் 4]

#### (இ) சூழல் நிலை அறிக்கை

மாநிலத்தின் சூழல் நிலை அறிக்கை தயாரிக்கும் பணி, ரூ.12.50 இலட்சம் மைய அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மைய அரசு இதுவரை ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.5.00 இலட்சம் முழுமையாக செலவிடப்பட்டுள்ளது. 2004–2005–ல், 12 மாவட்டங்களில் சூழல்நிலை அறிக்கை குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. 2005–2006 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.6. 2005–2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்

#### (i) நிலங்கள் பாலைவனமாதலைத் தடுக்கும் முன்னோடித் திட்டம்

வறண்ட நிலங்கள் பாலைவனம் ஆவது ஒரு மிகப் பெரிய சுற்றுச்சூழல் பிரச்சினை ஆகும். இதனால் உணவு உற்பத்திக் குறைவு, சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் என மக்களின் வாழ்க்கை முறையில் நேரடித் தாக்கம் ஏற்படுகிறது. நிலம் பாலைவனமாவதால் மண்வளம் மற்றும் பயிர் உற்பத்தித்திறன் வெகுவாகக் குறைகிறது. பாலைவனம் ஆவதற்கு முக்கியக் காரணங்கள் காற்றினால் மண் அரிப்பு, நீரால் மண் அரிப்பு, மண்ணில் உவர் தன்மை அதிகரிப்பு மற்றும் நீர்த்தேங்காத் தன்மை ஆகியவை ஆகும். மீளப் பெறக்கூடிய வளங்கள் தன்னைத் தானே புதுப்பித்து கொள்வதற்காக இயற்கையாகவே உள்ள திறன் குறைந்து போவதும் அதனால் அப்பகுதிவாழ் மக்களின் வாழ்க்கைத்தரம் பாதுகாப்பற்றதாகவும் சமூகப் பொருளாதார நிலை முடங்கிப் போவதும் பாலைவனம் ஆவதால் ஏற்படக்கூடிய மிகப் பெரிய தாக்கங்களாகும். மேலும் பாலைவனம் ஆவதால் குடிநீர்த் தட்டுப்பாடும் பாசன நீர்க்குறைபாடும் ஏற்படுகிறது.

பல்வேறு காரணங்களால் தமிழகத்தில் 3.7 மில்லியன் எக்டேர் நிலம் தரம் குன்றி வறட்சியுடன் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் இராமநாதபுரம், ஈரோடு, தேனி, சிவகங்கை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் ஒரு சில நிலப்பகுதிகள் பாலைவனம் ஆகக்கூடிய பிரச்சினையை எதிர்நோக்கி உள்ளன.

[2005 ஏப்ரல் 4

மணற்குன்றுகளை திறன்படுத்தி பாலைவனச்சோலை அமைக்கும் முன்னோடித் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதன்முதலாக தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்தி தடுப்பு அணைகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் அமைத்து மண் மற்றும் ஈரப் பதத்தினை பாதுகாப்பதும் அடங்கும். இத்திட்டம் கால்நடைத் தீவனப் பயிர்களாகிய புல் மற்றும் அவ்வினப் பயிர் வளர்ப்பினை ஊக்குவிப்பதால் அப்பகுதிகளில் கால்நடைப் பராமரிப்புக்கு உதவும்.

ஐக்கிய நாடுகள் சபையில் பாலைவனமாதலைத் தடுக்கும் ஒப்பந்தத்தின்கீழ் திட்டங்கள் தீட்டுவதற்கு இம்மாதிரித் திட்டம் முன்னுதாரணமாக அமையும். எனவே, 2005–2006 ஆம் ஆண்டில் 100 எக்டேர் பரப்பளவில் ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்தைச் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (ii) சூழலுக்குகந்த திருவண்ணாமலை நகரம்

சூழலுக்குகந்த நகரம் எனும் கொள்கை, சூழலுக்குகந்த சமூகப் பொருளாதார மேம்பாடு சம்பந்தமான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாகும். இதன்மூலம் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தை உருவாக்க ஒரு காலக்கெடுவிற்குள் நிறைவேற்றத்தக்க செயல்திட்டங்கள் உருவாக்கிடலாம். நகர்ப்புற வளர்ச்சியை சுற்றுச்சூழல் மேம்பாட்டினை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டமாக உருப்பெறச் செய்து சுற்றுச்சூழல் தரத்தினை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பாரம்பரியம் மிக்க நகரமாகிய திருவண்ணாமலை நகரத்திற்கு இத்தகைய சூழல் மேலாண்மை திட்டமொன்றினை 2005–2006 ஆம் ஆண்டில் உருவாக்கிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சூழல் கடுமையாக மாசுபட்டுள்ள இடங்களைக் கண்டறிதலும், நகரின் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கான வழிகளைக் கண்டறிதலும் இத்திட்டத்தின் நோக்கமாகும். அதன்மூலம் சூழலுக்குகந்த நிலப் பயன்பாட்டு வழிகள் மற்றும் மறுசீரமைப்பு முறைகளைப் பரிந்துரைக்கும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டமாக இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

திருவண்ணாமலை நகரம் புனித நகரமாகும். எனவே, இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து போகும் நகரமாதலால் அதன் தாங்கும் திறன் குறித்தும் கண்டறிய முக்கியத்துவம் அளிக்கப்படும்.



2005 ஏப்ரல் 4]

இத்திட்டத்தினை 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (iii) பழனி மலைக்குன்றில் சூழல் மேம்பாட்டுப் பணிகள்

சூழல் இழப்பினை தடுத்து மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஓர் அம்சமாகும். தமிழ்நாட்டில் பல்வேறு ஆலயங்கள் மலைக் குன்றுகளில் அமைந்துள்ளன. பெரும்பான்மையான குன்றுகள் தரங்குன்றியே காணப்படுகின்றன. மேலும் பல்வேறு வகையான கழிவுகள் மற்றும் குப்பை இக்குன்றுகளில் கொட்டப்பட்டு மாசுபட்டு வருகிறது. இக்குப்பைக் கழிவுகள் ஒன்றாகச் சேகரிக்கப்பட்டு இயற்கை உரமாக மாற்றப்பட உள்ளது. கிடைக்கப்பெறும் இயற்கை உரம் மலைக் குன்றுகளில் வளர்க்கப்பட உள்ள செடிகளுக்கு உரமாக இடப்படும். சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தாவர வளர்ச்சிக்கென பயன்படுத்தப்படும். இப்பணி உள்ளாட்சி மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக செயல்படுத்தப்படும். ஆலயத்தின் சுற்றுச்சூழல் மேலாண்மையை மேம்படுத்துதல், நந்தவனம் அமைத்தல், பழனி கோயிலின் ஸ்தல விருட்சமாகிய கடம்ப மரம் உள்ளிட்ட பல்வேறு மரங்கள் நடுதல், மரக் கன்றுகளுக்கு கருங்கல்/பாதுகாப்பு சுவர் கட்டுதல், செடிகளுக்கான மூங்கில் கூண்டுகள் கட்டுதல், இயற்கை உரமிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். மலை முகடுகளுக்கு இடையில் புல் விதைகள் தூவப்பட்டு சூழல் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும். மண் வளப் பாதுகாப்பின் ஓர் அங்கமாக சிறு சிறு தடுப்பணைகள் கட்டப்படும். நடப்படவுள்ள செடிகளுக்குத் தேவையான நீர்த் தேவையினை அபிவிருத்தி செய்யும்பொருட்டு ஆலயங்களில் உள்ள குளங்கள்/குட்டைகள் தூர்வாரப்படும். இம்முன்னோடித் திட்டம் வேலூர் மாவட்டம், சோளிங்கர் மலையில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, இரண்டாம் ஆண்டு பணிகள் தொடர உள்ளன. நடப்பாண்டில் இத்திட்டம் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் குன்றில் ரூ.10.00 இலட்சம் செலவில் நிறைவேற்றிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (iv) சென்னை மாநகரை சுற்றியுள்ள ஏரிகளில் சூழல் மறுசீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளல்

சென்னை நகரைச் சுற்றிலும் 46 ஏரிகள் அமையப் பெற்றுள்ளன. இவற்றில் பெரும்பாலான ஏரிகளிலுள்ள நீர்வளம் கழிவுநீரால் மாசு படுத்தப்பட்டு, குப்பைகள் கொட்டப்பட்டு அதன் சுற்றுச்சூழல்

[2005 ஏப்ரல் 4

முற்றிலுமாக சீர்கெட்ட நிலையில் உள்ளது. மேலும் ஏரிகளுக்கு அருகில் சில பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. சென்னை நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளதால் நகர மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் நிலத்தடி நீர் அளவு மேம்பாடு அடையும் வகையிலும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இயற்கையாய் அமைந்த வடிகால்களில் ஏற்பட்டுள்ள அடைப்பின் காரணமாக மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின்போது ஏரிகளுக்கு அருகில் உள்ள குடியிருப்புகள் மூழ்கி வருகின்றன. எனவே, நீர்வரத்துக் கால்வாய்கள் தூர்வாரப்பட வேண்டும். மேற்கூறிய பிரச்சினைகளைக் களையும்பொருட்டு ஓர் ஒருங்கிணைந்த ஏரிகள் சூழல் மறுசீரமைப்புத் திட்டம் சென்னை நகருக்கு அருகில் உள்ள ஏரிகளில் ரூ. 10.00 இலட்சம் செலவில் வரும் 2005–2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது.

**(v) சோளிங்கர் கோவில் குன்றினைப் பசுமையாக்கும் திட்டம்**

வேலூர் மாவட்டத்தில் உள்ள சோளிங்கர் கோவில் குன்றில் சூழல் மேம்பாட்டுப் பணிகள் வனத் துறைமூலம் இந்துசமய மற்றும் அறநிலையத் துறை ஒத்துழைப்புடன் முன்மாதிரித் திட்டமாக உருவாக்கப்பட்டு மலை முகடுகளை வளப்படுத்தும் மர வகைகளை நடுதல், சூழலை விரைவாகப் பசுமைப்படுத்தும் "ஸ்டைலோ" போன்ற புல், பூண்டுகள் விதைத்தல், ஸ்தல விருட்சம் நடுதல், கோயில் நந்தவனம் உருவாக்குதல் ஆகிய நடவடிக்கைகள் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டன.

சுமார் 50 எக்டேர் பரப்பில் பல்வேறு மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும் 50 எக்டேர் பரப்பில் மரக் கன்றுகள் நடுவதும், ஏற்கெனவே நடப்பட்டுள்ள செடிகளுக்கான பராமரிப்பும் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் கோயில் அடிவாரத்தில் உள்ள திருக்குளம் தூர்வாரப்பட்டு புதிய நந்தவனம் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ. 6.00 இலட்சம் கோரப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 4]

## 4. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்

**4.1.** தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், 1982-ல் அமைக்கப்பட்டு, மாசுத் தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் குறைப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக, திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1977, திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 ஆகியவற்றையும், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986-ன் உரிய அம்சங்கள் மற்றும் விதிகளையும் செயல்படுத்தி வருகிறது.

வாரியம், சென்னையில் தலைமை அலுவலகத்துடன் இயங்குகிறது. சென்னை, கோயம்புத்தூர், வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, அம்பத்தூர், தாம்பரம், வாணியம்பாடி, ஓசூர், கடலூர், தஞ்சாவூர், கரூர், சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, உதகமண்டலம், நாகர்கோவில், புதுக்கோட்டை, விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் 25 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன.

சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், அம்பத்தூர், வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர், ஓசூர் மற்றும் மணலி ஆகிய 10 இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் மற்றும் தூத்துக்குடியில் ஒரு நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகத்தையும் வாரியம் ஏற்படுத்தியுள்ளது.

### 4.2. தொழிற்சாலை மாசுக் கண்காணிப்பு

தமிழ்நாட்டில் வேகமாகப் பெருகிவரும் தொழிற்சாலைமயமாக்கல் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வரும் மாசினைத் தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. அனைத்து தொழிற்சாலைகளும், வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடைவதற்குத் தேவையான மாசுத் தடுப்பு சாதனங்களை அமைக்க வேண்டும். வாரியத்தின் கள அலுவலர்கள் அவர்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து செய்முறைக் கழிவுநீர் மற்றும் வாயுக் கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசுக் கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனை கண்காணித்து வருகின்றனர். வாரியம், தொழிற்சாலைகளை சீரிய

முறையில் கண்காணிப்பதற்காக அவற்றின் மாசுத் தன்மையின் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என மூன்று பிரிவுகளாக பிரித்துள்ளது.

### 4.3. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கும் நடைமுறை

வாரியம், கழிவுநீருக்கான தரத்தினையும் சுற்றுப்புற காற்றின் தரம் மற்றும் வெளியேற்றப்படும் புகையின் தர அளவினையும் நிர்ணயித்துள்ளது. தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், அவற்றை இயக்குவதற்கும், நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின்கீழ், இரண்டு கட்டமாக இசைவாணைகளை வாரியம் வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை கட்டுமானப் பணிகளைத் துவக்குவதற்கு முன், அது அமையவிருக்கும் இடத்தின் தகுதியைப் பொறுத்து வழங்கப்படுகிறது. வாரியத்தில் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை தொழிற்சாலை அமைத்த பின்னர், தொழிற்சாலை உற்பத்தியைத் துவங்கும் முன், தொழிற்சாலையை இயக்குவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது. வாரியம், இசைவாணை வழங்கும்போது தொழிற்சாலைகள் பூர்த்தி செய்யவேண்டிய தரத்தினைக் குறிப்பிடுகிறது. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் இசைவாணை, வாயுக் கழிவுகள் மற்றும் கழிவுகளுக்கான அடிப்படை நிபந்தனைகளுடன், ஐ.எஸ்.ஓ.14001 சான்றிதழ் (சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு), பசுமைப் பகுதி வளர்ச்சி, மழைநீர் சேமிப்பு வசதிகள், அரசு சுகாதார அமைப்புகளை பராமரித்தல், வாகனப் பராமரிப்பு மற்றும் பொறுப்பான வாகன ஒப்பந்தம், வீசியெறியும் பிளாஸ்டிக்கின் உபயோகம் இல்லாத சிறந்த நிறுவனப் பராமரிப்பு ஆகியவற்றிற்கான நிபந்தனைகளையும் கொண்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையினை, இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் வெளியிட்டுள்ளது. இவ்வறிவிக்கையின்படி, அதில் குறிப்பிட்டுள்ள 30 வகை தொழிற்சாலைகள் இந்திய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதியினைப் பெறவேண்டும். 10–04–1997–ல் வெளியிடப்பட்டுள்ள 1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கைக்கான திருத்தத்தின்படி, அவ்வகையான திட்டங்களுக்கு பொதுமக்கள் கருத்தினைப் பெற பொதுமக்கள் கேட்புக் குழுவினை அமைக்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட தொழிற் சாலைகள் / திட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கான பொதுமக்களின் கருத்துகளைக் கேட்பதற்கான



கூட்டங்கள் 1998 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றன. 31–12–2004 வரை, 286 பொதுமக்களின் கருத்துகளை கேட்பதற்கான கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. பொதுமக்கள் கேட்புக் குழுக்களிடமிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டவுடன் வாரியம், அதனை ஆராய்ந்த பின்னர் அந்தத் தொழிற்சாலைகள் / திட்டங்களுக்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்குவதற்கு முடிவெடுக்கும். வாரியத்தின் தடையில்லாச் சான்றிதழ் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையுடன் தொழில் முனைவோர், சுற்றுச்சூழல் அனுமதியினைப் பெற இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தினை அணுகவேண்டும். இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி சமர்ப்பிக்கப்பட்டவுடன், தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை வாரியத்தால் வழங்கப்படுகிறது.

வாரியம், 1995–1996 ஆம் ஆண்டு முதல் 31–12–2004 வரை தொழிற்சாலைகள் அமைக்க 4,822 இசைவாணைகளை நீர்ச் சட்டத்தின்கீழும், 4,752 இசைவாணைகளை காற்றுச் சட்டத்தின்கீழும் வழங்கியுள்ளது. வாரியம், 1982–1983 ஆம் ஆண்டு முதல் 31–12–2004 வரை தொழிற்சாலைகளை இயக்க 22,663 இசைவாணைகளை நீர்ச்சட்டத்தின்கீழும், 19,828 இசைவாணைகளை காற்றுச் சட்டத்தின் கீழும் வழங்கியுள்ளது.

### 4.4. சட்ட நடவடிக்கை

31–12–2004 வரை, வாரியம் நிர்ணயித்துள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத தொழிற்சாலைகளுக்கு 30,418 முகாந்திர விளக்கம் கோரும் கடிதங்களையும் 4,401 மூடுதல் ஆணைகளையும் வாரியம் வழங்கியுள்ளது. மாசுத் தடுப்புச் சட்டத்தினை மீறிய தொழிற்சாலைகளுக்கு எதிராக திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974–ன்கீழ் 321 வழக்குகளையும், திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981–ன்கீழ் 134 வழக்குகளையும் வாரியம் பதிவு செய்துள்ளது.

### 4.5. 17 வகையான அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள்

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள 17 வகையான அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணிக்கும் பொருட்டு ஒரு சிறப்பு கண்காணிப்பு பிரிவினை வாரியம் தனது சென்னை தலைமை

அலுவலகத்தில் அமைத்துள்ளது. அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளின்கீழ், 190 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அவை தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன.

### 4.6. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டமாக அமைந்திருக்கும் சிறிய முதலீட்டுத் தொழிற்சாலைகள், பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் தீவிரமான திட்டத்தில் வாரியம் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக உள்ளது. இதுவரை 50 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்டக் கருத்துருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 33 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. மேலும் 17 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டங்கள் அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வகை | உருவாக்கப் பட்ட திட்டங்கள் | செயலில் உள்ள திட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 24 திட்டங்கள் | 14 திட்டங்கள் |
| 2 | சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 25 திட்டங்கள் | 18 திட்டங்கள் |
| 3 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் | 1 திட்டம் |
| | **மொத்தம்** | **50 திட்டங்கள்** | **33 திட்டங்கள்** |

மேற்கண்ட திட்டங்களில், பம்மல், சிட்கோ—ராணிப்பேட்டை, சிப்காட் பகுதி-2—ராணிப்பேட்டை, வாணியம்பாடி (வளையம்பட்டு), வாணியம்பாடி (உதயேந்திரம்), ராணிப்பேட்டை (வி.சி. மோட்டூர்), ராணிப்பேட்டை (மேல் புதுப்பேட்டை), ஆம்பூர் (துத்திப்பேட்டை), ஆம்பூர் (மளிகைத்தோப்பு), பேரணாம்பட்டு (பக்காளப்பள்ளி), மேல்விஷாரம், திண்டுக்கல், மாதவரம் மற்றும் திருச்சிராப்பள்ளி (இராம்ஜி நகர்) ஆகிய 14 இடங்களில் 624 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக



பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. திருப்பூர் பகுதியில் வீரபாண்டி, சின்னக்கரை, காசிப்பாளையம், குன்னங்கல்பாளையம், ஆண்டிப்பாளையம், மண்ணரை, அங்கேரிபாளையம் மற்றும் மாணிக்கபுரம்புதூர், கரூர் பகுதியில் கருப்பம்பாளையம், அமராவதி நகர், திருமாநிலையூர், சுக்காலியூர், இராமகிருஷ்ணாபுரம், கலங்கரைவிளக்கு பகுதி, செல்லாண்டிப்பாளையம் மற்றும் ஆண்டான்கோயில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அய்யம்பேட்டை—முத்தையால்பேட்டை மற்றும் ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை ஆகிய 18 இடங்களில் 817 சலவை மற்றும் சாயப் பட்டறை தொழிற்சாலைகளுக்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. கொடைக்கானலில் 90 உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்காக ஒரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் இயங்கி வருகிறது.

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்காக தமிழக அரசு, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் வரை, மாநில அரசு மானியமாக வழங்குகிறது. மைய அரசு, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் வரை, மைய அரசு மானியமாக வழங்குகிறது. ஒவ்வொரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதன் முன்னேற்றத்தின் அடிப்படையில், அரசிடமிருந்து பெறும் மானியத் தொகையினை ஒவ்வொரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் வாரியம் வழங்குகிறது.

தமிழக அரசு 48 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 25.90 கோடியினை மானியமாக வழங்க அனுமதி அளித்துள்ளது. இதில் 31-03-2003 வரை ரூபாய் 22.66 கோடி, வாரியம் மற்றும் தமிழ்நாடு தோல் மேம்பாட்டு கழகம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 2003-2004 மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுகளில் மாநில அரசு மானியம் ரூபாய் 57.66 இலட்சம், தி/ள். கோவை தெலுங்குபாளையம் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மைய அரசு இதுவரை ரூபாய் 20.60 கோடியினை மைய அரசு மானியமாக தமிழகத்திலுள்ள 48 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்க அனுமதி அளித்துள்ளது. மைய அரசு, இம்மானியத் தொகையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு தோல் மேம்பாட்டுக் கழகம் மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மூலமாக வழங்கியுள்ளது. வாரியம், இதுவரை ரூபாய் 12.84 கோடியினை மைய அரசு மானியத் தொகையாகப் பெற்று அதில் ரூபாய் 11.65 கோடியினை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு

வழங்கியுள்ளது. மைய அரசு, இதுவரை ரூபாய் 4.29 கோடியினை தமிழ்நாடு தோல் மேம்பாட்டுக் கழகம் மூலமாகவும், ரூபாய் 3.47 கோடியினை இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மூலமாகவும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. மைய அரசு அனுமதி வழங்கியுள்ள ரூபாய் 20.60 கோடி மானியத் தொகையில் இதுவரை ரூபாய் 19.40 கோடி மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 4.7. தூய்மையான தொழில்நுட்பங்கள்

வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன் தொழிற்சாலைகள், காஸ்டிக் சோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்குப் பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல், சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்குப் பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல், 'இருமுறை மாற்றும் மற்றும் இருமுறை உட்கிரகிக்கும்' தொழில்நுட்பத்தை கந்தக அமிலம் தயாரிக்கும் நிறுவனங்கள் செயல்படுத்துதல், சயனைடு உப்புக்கு பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்ப கடினப்படுத்துதலுக்குப் பின்பற்றுதல் மற்றும் சயனைடு அற்ற முலாம் பூசுதல் ஆகிய தூய்மையான தொழில் நுட்பங்களுக்கு மாறியுள்ளன. காகிதத் தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ–குளோரைட்ஸ் உருவாவதைக் குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினைப் பின்பற்ற ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசோனைச் சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் முறையாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களுக்கு மாறி வருகின்றன.

சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்காக பெருந்துறையில் அமைக்கப்பட்டுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மொத்த கரைந்துள்ள திடப் பொருள்கள் அதிகமுள்ள (2,100 மி.கி./லிட்டருக்கு அதிகமுள்ள) கழிவுநீரை, தானாகவே மாற்றியனுப்பி, பிரித்தெடுக்கப்பட்ட சாயத்தொட்டிக் கழிவுநீருடன் சேர்த்து ஆவியாக்கும் வகையில், மொத்த கரைந்துள்ள திடப் பொருள்களைக் கண்காணிக்கும் கருவியினைக் கழிவுநீரோட்டத்திலேயே பொருத்தியுள்ளது.

விளக்கத் திட்டமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல் உடைக்கும் தொழிற்சாலைகள் அதிகம் உள்ள பகுதியில் ஒரு கல் உடைக்கும் தொழிற்சாலையில் தூசினைக் கட்டுப்படுத்தும் மாதிரி அமைப்பும், சேலம் மாவட்டத்தில் ஒரு சவ்வரிசி தொழிற்சாலையில் மாதிரிக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. வாரியத்தின் சுற்றுச்சூழல்



பயிற்சி நிலையம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் கல்வி மையம் ஆகியன இணைந்து மின் முலாம் பூசும் தொழிற்சாலைகளுக்கான சுற்றுச்சூழல் மேலாண்மை பற்றிய பயிற்சிக் கையேடு தயாரித்து, பயிற்சியும் வழங்கியுள்ளன.

தகுதியான நிறுவனங்களைக் கொண்டு, சவ்வரிசி, கல் உடைப்பு மற்றும் வார்ப்பட தொழிற்சாலைகள் போன்ற சிறு தொழிற் சாலைகளில் தூய தொழில்நுட்பத்தை மேம்படுத்த ஆராய்ச்சி அடிப்படையிலான ஆய்வுகள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

## 4.8. நீர்ப் பாதுகாப்பு

நீர்ப் பாதுகாப்பு முறையாக, மணலி மற்றும் பேசின் பிரிட்ஜ் பகுதியில் உள்ள மூன்று பெரிய தொழிற்சாலைகள், நாளொன்றுக்கு சுமார் 2.5 மில்லியன் லிட்டர் நகரக் கழிவுநீரை மூன்றாம் கட்ட சுத்திகரிப்பிற்குப் பிறகு குளிரூட்டும் தேவைகளுக்காக பயன்படுத்தி வருகின்றன. மணலியில் உள்ள பெரிய பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையம், திருப்பூரில் 19 சாயப் பட்டறைத் தொழிற்சாலைகள் மற்றும் ஆம்பூரில் 3 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழிவுநீரிலிருந்து செய்முறைக்குத் தேவையான நீரை மீட்சி செய்வதற்காக எதிர்மறை சவ்வூடு நிலையங்களை அமைத்துள்ளன. மீட்சி செய்யப்பட்ட நீர் செய்முறைக்கு மறு உபயோகம் செய்யப்படுகிறது. திருப்பூரிலுள்ள 19 சாயப் பட்டறைத் தொழிற்சாலைகள் கழிவுநீரிலுள்ள உப்பினை மறு உபயோகம் செய்ய உப்பு மீட்பு அமைப்புகளை நிறுவியுள்ளது. சர்க்கரை தொழிற்சாலைகளில், ஆவியாக்கும் நிலையத்திலிருந்து திரவமாக்கப்பட்ட நீர் மறு உபயோகம் செய்யப்பட்டு வருகிறது.

## 4.9. எரிசக்தி சேமிப்பு

எரிபொருள் பாதுகாப்பு மற்றும் மீட்சி செய்வதற்கான வழிமுறையாக, அனைத்து எரிசாராயத் தொழிற்சாலைகளும் தமது இறுதிக் கழிவிலிருந்து காற்றிலி செரிப்பான்மூலம் மீத்தேன் வாயுவை மீட்சி செய்கின்றன. பெரிய சர்க்கரைத் தொழிற்சாலைகள் உற்பத்தியுடனான மின் நிலையங்களை அமைத்துள்ளன. சவ்வரிசித் தொழிற்சாலைகள், தமது செய்முறை கழிவுநீரிலிருந்து, காற்றிலி செரிப்பான் மூலம் மீத்தேன் வாயுவை மீட்சி செய்கின்றன. மேல்விஷாரத்தில் உள்ள ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை தோல் பதனிடுவதிலிருந்து வரும் திடக் கழிவுகளை காற்றிலி செரிப்பான்மூலம் சுத்திகரிக்கப்படுவதிலிருந்து பெறப்படும் மீத்தேனைக் கொண்டு மின் உற்பத்தி நிலையத்தை அமைத்துள்ளது. பிற

தொழிற்சாலைகள், குறைந்த எரிசக்தியினை உபயோகிக்க ஊக்கப்படுத்தப்படுகின்றன. இது, அத்தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் அறிக்கையின் வாயிலாக தணிக்கை செய்யப்படுகிறது.

### 4.10. காற்றுத் தன்மை கண்காணிப்பு

பெருநகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக் கழிவுகளினாலும் மற்றும் பெருகிவரும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினாலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை பாதிப்படைகிறது. காற்றுச் சட்டத்தின்படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசுக் கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 4.11. சுற்றுப்புற காற்றுத் தன்மை கண்காணிப்பு

தேசிய சுற்றுப்புற காற்றுத் தரக் கண்காணிப்பு திட்டத்தின்கீழ், சென்னை (3 இடங்கள்), கோயம்புத்தூர் (3 இடங்கள்), தூத்துக்குடி (3 இடங்கள்), மதுரை (3 இடங்கள்) மற்றும் சேலம் (1 இடம்) ஆகிய பெரிய நகரங்களில் சுற்றுப்புற காற்றின் தன்மையை வாரியம் கண்காணித்து வருகின்றது. மாநில சுற்றுப்புற காற்றுத் தர கண்காணிப்பு திட்டத்தின்கீழ் வாரியம், சென்னை மாநகரத்தில் 5 சுற்றுப்புற காற்று தரக் கண்காணிப்பு நிலையங்களையும், திருச்சிராப்பள்ளியில் 5 நிலையங்களையும் அமைத்துள்ளது. இத்திட்டங்கள் சுற்றுப்புற காற்றின் தன்மையினை நகரங்களின் குடியிருப்பு, வர்த்தகம் மற்றும் நுட்பப் பகுதிகளில் கண்காணிக்கின்றன. இந்தக் கண்காணிப்பில் கண்டறியப்படும் காற்றுத் தர அளவுகள் ஒவ்வொரு வாரமும் முன்னோடி நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன. காற்று மாசு தொடர்பான மிகவும் நுட்பமான பகுதிகளைக் கண்டறியும் சென்னை நகருக்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தயாரிப்பதற்காக சென்னையில் 41 இடங்களில் சுற்றுப்புற காற்றுத் தரக் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

முக்கிய தொழிற்சாலை வளாகங்கள், குறிப்பாக இரசாயனத் தொழிற்சாலைப் பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வாரியம், 6 தொடர் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்களைத் தலா ரூபாய் 40 இலட்சம் மதிப்பில் கடலூர், தூத்துக்குடி, இராணிப்பேட்டை, மணலி–திருவள்ளூர், இராயபுரம்–சென்னை மற்றும் கத்திவாக்கம்–திருவள்ளூர் ஆகிய இடங்களில் சுற்றுப்புற காற்றில் உள்ள மாசுப் பொருட்களான மிதக்கும்



துகள்கள், நைட்ரஜன் ஆக்ஸைடு, கார்பன் மோனாக்ஸைடு, அமோனியா, குளோரின், ப்ளூரின் முதலியனவற்றை மதிப்பிடவும், தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்காகவும் அமைத்துள்ளது. மேலும் நிர்ணயித்த தரத்தினை விட மாசு அதிகமாகும்போது காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்த வாரியம் தொழிற்சாலைகளை அறிவுறுத்தி வருகின்றது.

காற்றுத் தர கண்காணிப்பினைப் பலப்படுத்துவதற்காக நடப்பாண்டில் சென்னை மாநகர், கோயம்பேட்டில் தானியங்கி தொடர் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையம் நிறுவுதல், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் புதிய காற்று மாதிரி சேகரிக்கும் கருவிகளை மொத்தம் ரூபாய் 72 இலட்சத்தில் அமைத்தல் மற்றும் வாரியத்தின் ஆய்வகங்களுக்கு ரூபாய் 39 இலட்சம் மொத்த மதிப்பில் புகைபோக்கி வாயுவை அளவிடும் கருவிகளை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதிகமாக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அவற்றிற்கான தொடர் காற்று தரக் கண்காணிப்பு அமைப்புகளை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆதாரத்திலேயே வாயுக் கழிவுகளை கண்காணிக்கும் வகையில் கணினி பதிவு வசதி கொண்ட தொடர் புகைபோக்கி கண்காணிப்பு நிலையங்களை அமைக்கவும் இத்தொழிற்சாலைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இத்தகைய காற்று தரக் கண்காணிப்பு அமைப்புகளை 42 தொழிற்சாலைகள் நிறுவியுள்ளன. இத்தகைய அமைப்புகள் மூலமாக தொழிற்சாலைகளின் சுய கண்காணிப்பு ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.12. வாகனப் புகைக் கண்காணிப்பு

நகரின் பெருக்கம் மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாக, வாகனப் போக்குவரத்து அதிகரித்து அவை வெளியேற்றும் கழிவுகளும் அபாயகரமான வாயுக் கழிவுகளும் அதிகரித்துள்ளன. வாகனப் புகை சோதனை செய்யும் மையங்கள் சென்னை மாநகரில் ஆலந்தூர், அம்பத்தூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய மூன்று இடங்களில் வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டு, 1992 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. இதனைத் தவிர 236 தனியார் நிலையங்கள், சென்னையில் வாகனப் புகையினை சோதனை செய்ய போக்குவரத்துத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் வாரியம் திண்டுக்கல், பழனி,

உதகமண்டலம் (2 இடங்கள்) மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் வாகனப் புகைக் கண்காணிப்பு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. வாரியம், டீசல் வாகனங்களை சோதனை செய்ய, தனது வாகனப் புகைக் கண்காணிப்பு மையங்களை மேம்படுத்தி கணினிமயமாக்கியுள்ளது. பெட்ரோல் வாகனங்களை சோதனை செய்ய கணினிமயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

சென்னைப் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் வாகனங்களின் புகை அளவிற்கான சோதனையினை மேற்கொள்ள வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. கணினிமயமாக்கப்பட்ட புகை அளவீடு செய்யும் 6 சோதனை மையங்கள் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் அடையாறு, ஆலந்தூர், அயனாவரம், அண்ணாநகர், வடபழனி மற்றும் தண்டையார்பேட்டை ஆகிய பணிமனைகளில், அவற்றின் பேருந்துகளின் வாயுக் கழிவுகளின் அளவினைக் கண்காணிக்க வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன. பிற போக்குவரத்துக் கழகங்களும் அவற்றின் பேருந்துகளின் புகை அளவினைக் கூர்ந்து கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் துறைகளும் பிறருக்கு உதாரணமாக விளங்கும் வகையில் அவற்றின் வாகனங்கள் நிர்ணயிக்கப்பட்ட புகை அளவுக் கட்டுப்பாட்டினை மீறவில்லை என்பதனை உறுதி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

வாகனப் புகையினைக் கட்டுப்படுத்த, காரீயம் இல்லாத மற்றும் 3 சதவீத பென்சின் அளவு உள்ள பெட்ரோல் மற்றும் குறைந்த சல்பர் (0.05 சதவீதம்) உள்ள எரிபொருள் போன்ற தூய்மையான எரிபொருள் சென்னை பெருநகர் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாரத் நிலை–II தரத்தினைப் பூர்த்தி செய்யும் பயணிகள் கார்கள் மட்டுமே ஜூலை 2001–லிருந்து சென்னையில் பதிவு செய்யப்படுகின்றன. 2டி எண்ணெயினை முன்கலக்கி வினியோகிக்கும் தானியங்கி அமைப்புகள், சில்லரை விற்பனை நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசு சாரா அமைப்பு மற்றும் பொது வினியோகத் துறை ஆகியவற்றுடன் இணைந்து வாயு குரோமோட்டோகிராப் மூலம் எரிபொருள் கலப்படத்தை கண்டறியும் ஆய்விற்கான ஆராய்ச்சித் திட்டத்திலும் வாரியம் கலந்துகொள்கிறது. தூய எரிபொருளான தானியங்கி திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவினை சென்னையில் அறிமுகம் செய்ய ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோயம்பேடு, கிண்டி, ஆவடி, முகப்பேர், கீழ்ப்பாக்கம், அம்பத்தூர், குரோம்பேட்டை, வால்டாக்ஸ் ரோடு,





வியாசர்பாடி, இராயபுரம், அம்பத்தூர் தொழிற்பேட்டை மற்றும் மவுண்ட் ரோடு ஆகிய 12 இடங்களில் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு தானியங்கி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. ஆட்டோ ரிக்ஷாக்கள், வாடகைச் சீருந்துகள் மற்றும் பிற தனியார் வாகனங்கள் ஆகியவற்றில் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவின் உபயோகத்தினைப் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது காற்றுத் தரத்தினை மேம்படுத்த உதவும்.

சென்னை நகரில் காற்றுத் தரத்தை மேம்படுத்த உருவாக்கப்பட்டுள்ள செயல் திட்டத்தினை செயல்படுத்துவதில் வாரியம் உதவி வருகிறது. செயல் திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து முறையான அறிக்கைகள், தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின்மூலம், மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி டில்லியில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாடு ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

### 4.13. ஒலி மாசு அளவுக் கண்காணிப்பு

நகர் பகுதிகளில் ஒலி மாசினைக் கட்டுப்படுத்தும் வகையில், மாநிலமெங்கும் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்களிலிருந்து டிசம்பர் 2004 வரை சுமார் 52,586 காற்று ஒலிப்பான்கள் அகற்றப்பட்டன. அனைத்து மாவட்டங்களும் காற்று ஒலிப்பானற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம், காற்று ஒலிப்பான்கள் அற்ற போக்குவரத்துக் கழகமாக அறிவிக்கப்பட்டதில் முதன்மையானதாகும். பிற போக்குவரத்துக் கழகங்கள் இதனை பின்பற்றியுள்ளன. மாவட்ட அளவில் ஒலி மாசினைக் கண்காணிக்க ஒலி அளவீடுமானிகள் ரூபாய் 88.00 இலட்சம் மதிப்பில் வாரியத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 4.14. நீரின் தன்மை கண்காணிப்பு

உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளில் இருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத வடிகால் கழிவுநீராலும், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத மற்றும் பகுதியாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீராலும் ஆறுகள் மாசுபடுகின்றன. மாசுபடுத்துவோர் சரியான வழிமுறைகளை மேற்கொள்ள அறிவுறுத்தும்பொருட்டு நீர் மாதிரிகளை வாரியம் தொடர்ச்சியாக

[2005 ஏப்ரல் 4

செய்முறை சுழற்சி அல்லது கச்சாப் பொருளாக மறு பயன்பாடு மற்றும் மறு உபயோகமாகும் பொருட்களை மீட்பு செய்த பின் கசடுகளை வெளியேற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கி அபாயகரமான கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மேலாண்மை செய்ய, 2000 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) திருத்தப்பட்ட விதிகள், வழிவகை செய்கின்றன. தமிழ்நாட்டில், கழிவு எண்ணெய் மற்றும் உபயோகிக்கப்பட்ட மின் கலன்களிலிருந்து பெறப்பட்ட காரீயம் ஆகியன சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையங்களில் மறு சுழற்சி செய்யப்படுகின்றன. உற்பத்தியாளர்கள் மற்றும் ஏலதாரர்களிடமும் கட்டுப்பாட்டினை வாரியம் ஏற்படுத்துகிறது. அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட நிலையங்கள் வைத்திருப்பவர் மட்டுமே இத்தகைய கழிவுகளைக் கையாள அனுமதிக்கப்படுகின்றனர்.

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களின்படி, அபாயகரமான கழிவுகளை வெளியேற்றும் நிலையங்கள் பூர்த்தி செய்வதனை சிறப்பாகக் கண்காணிக்கும் வகையில் நான்கு செயல் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அபாயகரமான கழிவுகள் வெளியேற்றும் நிலையங்கள் விதிமுறைகளை சீரிய முறையில் பூர்த்தி செய்வதை இச்செயல் குழுக்கள் கண்காணித்து வருகின்றன. தரமான கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சி அலுவலர்களின் பணிகளைப் பயன்படுத்தி இப்பிரிவினை மேலும் வலுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.16.2. நகர திடக் கழிவுகள் மேலாண்மை

நகரமயமாதல் அதிகமாவதாலும், நகர திடக் கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும் நகரப் பகுதிகளில் விஞ்ஞான பூர்வமாக திடக் கழிவுகளைப் பிரித்து கையாண்டு வெளியேற்றுவது அவசரத் தேவையாகிறது. திருப்பூர் நகராட்சி, கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்தெடுக்கத் துவங்கியுள்ளது. பிரித்தெடுக்கப்பட்ட உயிரகக் கழிவுகளை உரமாக்க திருப்பூர் நகராட்சி, தனியார் நிறுவனமொன்றை பணியமர்த்தி உள்ளது. அனைத்து நகராட்சிகளும் கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்தெடுத்து சேகரிக்கத் துவங்கியுள்ளன. உரமாக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. 56 நகராட்சிகள் மற்றும் ஒரு மாநகராட்சிக்கு நகர திடக் கழிவுகளை உரமாக்குவதற்காக அவர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்களுக்கு வாரியம் தடையில்லாச் சான்றிதழ்



2005 ஏப்ரல் 4]

வழங்கியுள்ளது. இதில் 11 நகராட்சிகளுக்கு அவர்களது உரமாக்கும் பணிகளைத் துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகர திடக் கழிவுகள் மேலாண்மையில் முன்னோடியாக விளங்கும் வகையில் உடுமலைப்பேட்டை நகராட்சி அளித்த கருத்துருவிற்கு மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது. மற்றும் இதன் முதல் தவணையாக ரூ.30.00 இலட்சங்களை வழங்கியுள்ளது. மத்திய அரசின் முன்மாதிரி சூழல் நகரமாக்கும் திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் நகரிலுள்ள 5 பழைய குளங்களைப் புதுப்பித்தல், இறைச்சி சந்தையை மேம்படுத்துதல், திடக் கழிவுகளைச் சேகரித்து வெளியேற்றும் அமைப்பினை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக ரூ.135.00 இலட்சம் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக தஞ்சாவூர் நகராட்சியிடமிருந்து பெறப்பட்ட விரிவான திட்டக் கருத்துரு மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் நகரங்களாக தேர்வு செய்யப்பட்ட நகரங்களுக்கு முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்த மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரி சிறப்பு நிலை ஊராட்சிகளுக்கு, தலா ரூ.1.00 இலட்சம் ஆதார நிதி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் மாவட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நகர திடக் கழிவு மேலாண்மைக்கான பயிலரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. 2001 ஆம் ஆண்டில் இருந்து 31–12–2004 வரை, 7 பயிலரங்குகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மட்டுமே நடத்தப்பட்டுள்ளன. இதேபோல், குப்பையே இல்லாத நிலை ஏற்பட மாவட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில், நகர திடக் கழிவுகளை உருவாகும் இடத்திலேயே தனித் தனியாக பிரித்தல் பற்றி 38 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 9,260 பங்கேற்பாளர்களுடன் நடத்தப்பட்டன.

### 4.16.3. பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை

பிளாஸ்டிக் பொருட்களின் வரைமுறையற்ற உபயோகம் மற்றும் வெளியேற்றத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை உணர்ந்து, தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினைக் குறைக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிளாஸ்டிக்கிற்குப் பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துவது சம்பந்தமாக ஒரு நடமாடும் கண்காட்சி சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 03–08–2001 அன்று துவக்கி

வைக்கப்பட்டது. மாவட்ட அளவிலான, **'பிளாஸ்டிக்கிற்கு எதிராக குழந்தைகள்'**—எனும் திட்டம் செப்டம்பர் 2001-ல் துவக்கி வைக்கப்பட்டது. வீசியெறியப்படும் பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களை ஊக்கப்படுத்தும் நிகழ்ச்சிகளை அவர்தம் மாவட்டங்களில் நடத்த ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் தலா ரூ.1.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. வீசியெறியப்படும் பிளாஸ்டிக்குகளின் பயன்பாடு மற்றும் வெளியேற்றத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விழிப்புணர்வு விளம்பரப் பலகைகள் சென்னை மாநகர பேருந்துகளில் பொருத்தப்பட்டன. சுற்றுலா நகரங்கள் மற்றும் பிற திருத்தலங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக பனை ஓலைகளில் பொருட்கள் தயாரிப்பதில் சுய உதவி தொழில் முனைவோர்களுக்கு, கிராமத் தொழில் ஆணையத்தின் பனை மற்றும் பனைப் பொருட்கள் நிறுவனம் மூலம் வேலூர், கடலூர், சேலம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, ஈரோடு, கொடைக்கானல், தூத்துக்குடி, பொன்னேரி மற்றும் சென்னை (3 நிகழ்ச்சிகள்) ஆகிய இடங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 4.16.4. மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் மேலாண்மை

2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட, 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை வாரியம் செயல்படுத்துகிறது. அதன்படி வாரியம் 317 அரசு மருத்துவமனைகளையும் 1,835 தனியார் மருத்துவமனைகளையும் கண்டறிந்துள்ளது. இந்திய மருத்துவச் சங்கத்துடன் இணைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் அனைத்தும், இடம் கண்டறியவும் மருத்துவச் கழிவுகளை கையாள பொது அமைப்புகளை ஏற்படுத்தவும் உரிய கால நடவடிக்கையினை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளன. தனியார் சுகாதார பராமரிப்பு நிலையங்களுக்கான பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்புகளை ஏற்படுத்த 11 இடங்கள் இந்திய மருத்துவச் சங்கத்தினரால் கண்டறியப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தென்மேல்பாக்கம் கிராமம் மற்றும் சென்னாக்குப்பம் கிராமம், வேலூர் மாவட்டத்தில் கண்டிப்பேடு கிராமம், தஞ்சாவூர் மாவட்டத்தில் செங்கிப்பட்டி கிராமம், இராமநாதபுரம் மாவட்டத்தில் முத்துவாயல் கிராமம் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் ஆகிய இடங்களில் 6 பொது அமைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஓரட்டுக்குப்பை கிராமம்



(2 அமைப்புகள்), சேலம் மாவட்டத்தில் தங்கையூர் கிராமம், விருதுநகர் மாவட்டத்தில் உண்டிருமிக்கடகுளம் கிராமம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டான்குளம் கிராமம் ஆகிய இடங்களில் 5 பொது அமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன. பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்பில், ஆட்டோகிளேவ், துண்டுகளாக்கும் கருவி, அழுத்தும் கருவி, உடல் கழிவுகளுக்கான எரிப்பான், பாதுகாப்பாக நிலத்தடியில் நிரப்பும் வசதி, ஆய்வகம் மற்றும் கழிவுகள் போக்குவரத்திற்கான வாகனங்கள் ஆகியன அடங்கி உள்ளன.

வாரியம், மருத்துவ கழிவுகளை கையாளுவது தொடர்பான பயிற்சியினை வாரிய அலுவலர்கள், இந்திய மருத்துவ சங்க உறுப்பினர்கள், பிற மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த அலுவலர்களுக்கு அளித்துள்ளது. வாரிய அலுவலகத்தில் ஒரு தனி மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் பயிற்சிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் வல்லுனரான அரசு சாரா அமைப்பிலுள்ள நுகர்வோர் செயல் குழுவுடன் ஒருங்கிணைந்து சென்னை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள அரசு மருத்துவமனைகளுக்கான பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.17. வாரியத்தின் பிற பணிகள்

### 4.17.1. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

மாசினைக் குறைக்கும் தூய்மையான தொழில்நுட்பத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு, வாரியம், சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவினை, சென்னையிலுள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் அமைத்துள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மாசு தடுப்பு மற்றும் தூய்மையான தொழில்நுட்ப மேம்பாடு பணிகளில் ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு வாரியம், தனது நீர் மேல் வரி நிதியிலிருந்து ஆராய்ச்சி நிதியை உருவாக்கி உதவி வருகிறது. வாரியத்தின் களப் பணி அலுவலர்களால் கண்டறியப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களின் கருத்துருக்களை ஆராயவும், தெரிவு செய்வதற்காகவும் ஒரு குழுவினை வாரியம் அமைத்துள்ளது.

### 4.17.2. சுற்றுச்சூழல் பயிற்சி மையம்

மாசுத் தடுப்பு மற்றும் சுத்திகரிப்பு உத்திகள் குறித்து ஆலோசனை வழங்குவது மற்றும் மாசினைக் கட்டுப்படுத்துவதில் திறமை அடையும் வகையில் தொழிற்சாலைகள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் வாரிய ஊழியர்கள் ஆகியோருக்கு பயிற்சியளிக்க

[2005 ஏப்ரல் 4

டென்மார்க் நாட்டிலிருந்து ரூபாய் 4.00 கோடி நிதி உதவியுடன் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தை, தனது தலைமை அலுவலகத்தில் வாரியம் அமைத்துள்ளது. பயிற்சி நிலையம் துவங்கப்பட்டது முதல் 31-12-2004 வரை 230 பயிற்சிகளை, 9,764 நபர்களுக்கு அளித்துள்ளது. சுற்றுச்சூழல் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை வளர்ப்பதில், தகுதியான நிலையங்களுடன் இணைந்து ஒரு முன்னேற்றப் பணியினை மேற்கொள்ளும் வகையில் வாரியத்தின் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4.17.3. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

சென்னையில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப திடலில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அரங்கம், சுற்றுச்சூழல் சம்பந்தமான ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி ஆகியவற்றை நடத்துகிறது. சுற்றுச்சூழல் தொடர்பான ஒளிக் காட்சிகள் மற்றும் சிறு படங்களும் திரையிடப்படுகின்றன. மேலும், வாரியம் தனது தலைமை அலுவலகத்தில் மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையத்தினை அமைத்துள்ளது. வாரியம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திவருகிறது. நடப்பாண்டில், 31-12-2004 வரை 31 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 38,000 பங்கேற்பாளர்களுடன் நடத்தப்பட்டுள்ளன. தீபாவளி மற்றும் போகி போன்ற விழாக் காலங்களில் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுக்கெதிராக சிறப்பு விழிப்புணர்வுப் பிரசாரங்கள் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் பெருமளவு வெற்றியடைந்துள்ளன. குடியிருப்புப் பகுதிகள் மாசு அற்றதாக இருப்பதை உறுதிசெய்யும் வகையில் குடியிருப்பு பகுதியில் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2004-2005 ஆம் ஆண்டில், அரசு சாரா அமைப்புகள், சுற்றுச்சூழல் முனைவோர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் முக்கிய வழிபாட்டுத் தலங்களை சூழலுக்கு உகந்தவைகளாக மாற்றவும் பல்வேறு சுற்றுச்சூழல் குறித்த விஷயங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வாரியம் அனுமதியளித்து அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தலா ரூபாய் 1.00 இலட்சம் வழங்கியுள்ளது.

### 4.18 திட்டப் பணிகள்

### 4.18.1. சுற்றுச்சூழல் வரைபடம் தயாரித்தல்

திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்ட சுற்றுச்சூழல் வரைபடம்



2005 ஏப்ரல் 4]

தயாரிப்பதற்காக வாரியம், மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உதவியுடன் நில அளவீடுமூலம் சுற்றுச்சூழலுக்காக திட்டமிடும் பணியினைச் செயல்படுத்தி வருகிறது. சென்னை நகருக்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, இறுதி செய்வதற்காக மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 4.18.2. அயல்நாட்டு உதவி திட்டங்கள்

வேலூர் பகுதியில் அமைந்துள்ள தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரை மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம் செய்வதற்கான சாத்தியக் கூறினை ஆராய அமெரிக்க வர்த்தக மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் வாரியம், 24-11-2000 அன்று ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு 1,80,100 அமெரிக்க டாலர் ஆகும். இத்திட்டத்திற்கான ஆய்வு முடிக்கப்பட்டு, அமெரிக்க வர்த்தக மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினரால் நியமிக்கப்பட்டுள்ள அமைப்பிடமிருந்து இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.18.3. பசுமை விருதுகள்

நிலைத்தகு வளர்ச்சியினைத் தனது மாவட்டத்தில் ஏற்படுத்துவதில் சீரிய பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசு, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான பசுமை விருதுகளை வழங்க முனைந்தது. மாவட்ட ஆட்சியாளர்கள் அவர்களது தனி முயற்சியாக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகவும் மற்றும் நிலைத்தகு வளர்ச்சிக்காகவும் மேற்கொண்ட பணிகளைக் கருத்தில் கொண்டு பசுமை விருதுகள் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்கப் படுகின்றன. மாவட்டங்களில் சுற்றுச்சூழல் குறித்த பிரச்சினைகள் மீது மாவட்ட ஆட்சியாளர்கள் கவனம் செலுத்த இவ்விருதுகள் தூண்டுகோலாக இருந்துள்ளது. 2003-04 ஆம் ஆண்டிற்கான பசுமை விருதுகள் நகராட்சி ஆணையர்களுக்கு வழங்கப்பட்டன. **"புதுமை படைப்போருக்கான பசுமை விருதும்"** அரசால் 2003 ஆம் ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. துணிச்சாயத் தொழிற்சாலையில் ஏற்படும் முக்கிய மாசு பிரச்சினைகளை களைவதில் புதுமை படைத்த ஒரு தொழிற்சாலைக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

## இணைப்பு II@@

*(81 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 31

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### முன்னுரை

பொருளாதார நடவடிக்கைகளுக்கு மிக முக்கிய பங்காற்றுபவர்களில் தொழிலாளர்களும் அடங்குவர். அரசின் தொழிலாளர் நலக் கொள்கை, தொழில் வளர்ச்சியையும், மேம்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. தொழில் வளர்ச்சியின் வெற்றிக்கு தொழிலாளர்கள்தான் முக்கியப் பங்காற்றுகின்றனர். உற்பத்தியை உயரளவில் பெருக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், தொழிலாளர் மற்றும் நிருவாகத்தினரிடையே சுமுகமான நல்லுறவு இருப்பது அவசியம் என்பதை இக்கொள்கை வலியுறுத்துகிறது. அமைப்பு சாரா துறைகளிலுள்ள தொழிலாளர்கள், உழைப்பு சக்திக்கு முக்கிய ஆதாரமாக அமைகின்றனர் மற்றும் இவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றுகின்றனர் என்பதையும் அரசின் தொழிலாளர் கொள்கை தெளிவுபடுத்துகிறது. இவர்கள் எதிர்கொள்கிற பிரச்சினைகள் பலதரப்பட்டவையாகவும், சிக்கலானவையாகவும், தனித்தன்மை வாய்ந்தவையாகவும் உள்ளன. தொழிலாளர் நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்குரிய நிறுவன ஏற்பாடுகளை வலுப்படுத்துவதே இவ்வரசின் தொழிலாளர் கொள்கையின் நோக்கமாகும்.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தொழில் உறவுகள், தொழிலாளர்களின் பாதுகாப்பு, தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பகங்கள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவற்றை நிர்வகித்து வருகிறது. இத்துறையின்கீழ் மூன்று துறைத் தலைவர்கள் உள்ளனர். தொழிலாளர் ஆணையர் தொழில் உறவுகள் மற்றும் தொழிலாளர் நலன் ஆகியவற்றைக் கவனித்து வருகிறார். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையர் இரு பிரிவுகளுக்கு தலைமைப் பொறுப்பு வகிக்கிறார்.

[2005 ஏப்ரல் 4

வேலைவாய்ப்புப் பிரிவு, பல்வேறு வேலைவாய்ப்பகங்கள் மூலம் வேலைவாய்ப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பயிற்சிப் பிரிவு, தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் இவை போன்ற நிறுவனங்கள் மூலம் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஆகிய இரு மத்திய அமைப்புகள் மூலம் பெருமளவில் சமூகப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மாநில தொழிலாளர் நல வாரியம், அமைப்பு சார்ந்த நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு நலப் பணிகள் ஆற்றி வருகிறது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு நலப் பணிகள் ஆற்றி வருகின்றன. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், தொழிலாளர் மேலாண்மை தொடர்பான படிப்புப் பிரிவுகளை நடத்துவதுடன், நிர்வாகத்தினர், பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு சிறப்புப் படிப்புப் பிரிவுகளையும் நடத்தி வருகின்றது. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், வெளிநாடுகளில் பணிபுரிய விருப்பமுள்ள தொழிலாளர்களுக்கு பணியமர்த்தம் பெற உதவி புரிகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு அரசின் முக்கியமான ஓர் இலக்காகும். இவையனைத்தும் பின்வரும் அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

2005–2006 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள் விவரம் வருமாறு:

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **தலைமைச் செயலகம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை** | |
| 1. | ஜெராக்ஸ் இயந்திரம் ஒன்று வாங்குதல். | 0.57 |
| 2. | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையைக் கணினிமயமாக்குதல். | 10.00 |
| | **தொழிலாளர் ஆணையரகம்** | |
| 3. | தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகத்தில் மின் ஆளுகை முறையினைக் கொண்டு வருதல். (மென் பொருள், வன்பொருள், மடிக் கணினி, எல்சிடி ப்ரொஜெக்டர்) | 75.00 |



2005 ஏப்ரல் 4]

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 4. | தலைமை அலுவலகத்தில் EPABX ஏற்பாட்டு முறைக்கு வகை செய்தல். | 1.98 |
| 5. | துறையின் சமரச மற்றும் சட்ட அமலாக்க அலுவலர்களுக்கு தொலைபேசி வழங்குதல். | 0.53 |
| 6. | துறையின் நிகரி எந்திரங்களுக்கு எஸ்ட்டிடி வசதியுடன் கூடிய ஒரு தனி தொலைபேசி இணைப்பு வழங்குதல். | 0.19 |
| 7. | துறையில் புதிதாக உருவாக்கப்பட்ட 11 அலுவலகங்களுக்கும் பிற துறை பணியாளர்களைக் கொண்ட அலுவலகங்களுக்கும் அறைகலன்கள் வழங்குதல். | 2.00 |
| | **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையரகம்** **வேலைவாய்ப்புப் பிரிவு** | |
| 8. | 8 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கணினி முறையை மேம்படுத்துதல் | 24.00 |
| 9. | வேலைவாய்ப்பு இயக்ககத்தை LAN மயமாக்குதல். | 4.00 |
| | **பயிற்சிப் பிரிவு** | |
| 10. | 5 மண்டல அலுவலகங்களுக்கு கணினிகள், ஜெராக்ஸ் எந்திரங்கள் வழங்குதல். | 10.00 |
| 11. | 20 அரசு தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கும்/ஊரகத் தொழிற் பயிற்சி மையங்களுக்கும் கணினி வழங்குதல். | 20.00 |
| 12. | (அ) கைத்திறத் தொழில் பயிற்சித் திட்டத்தின்கீழ் (CTS) 6 தொழில் பயிற்சி நிறுவனங்களிலும், அம்பத்தூர் அடிப்படை பயிற்சி மையத்திலும் உணவுத் தயாரிப்பு (பொது தொழில் கல்வி தொடங்குதல்).<br>(ஆ) பல்வகைப்படுத்துவதன் மூலம், கிண்டி, அரசு தொழிற் பயிற்சி நிறுவனத்தில் லித்தோ ஆப்செட் மெஷின் இயக்க தொழிற் கல்விகள் தொடங்குதல்.<br>(இ) கிண்டி மற்றும் மதுரையிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிறுவனத்தில் தற்போதுள்ள தொழிற் கல்விகளைப் பல்வகைப்படுத்துவதன் மூலம், டிஜிட்டல் புகைப்படத் தொழிலாளர் தொழில் கல்வியைத் தொடங்குதல். | 100.00 |

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | (ஈ) பல்வகைப்படுத்துவதன் மூலம், கிண்டி அரசு தொழில் பயிற்சி (மகளிர்) நிறுவனத்தில் தொழிற் பயிற்சி மற்றும் ஈஎஸ்எம் தொழிற் கல்வியைத் தொடங்குதல். | |
| | (உ) பல்வகைப்படுத்துவதன்கீழ் 7 அரசு தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும் ஓட்டுநர்-கம்மியர் (எல்.எம்.வி) தொழில் பாடம் தொடங்குதல். | |
| | (ஊ) துணி வடிவமைப்பு தொடர்பான கல்வி தொடங்குதல். | |
| 13. | (அ) தூத்துக்குடி, அரசு தொழில் பயிற்சி நிறுவனத்தில் தொழிற்சாலை தளவாட சாதனங்களைப் பழுதுபார்க்கும் கம்மியர் (இரசாயனத் தொழிற்சாலை) தொழில் கல்விக்கு கூடுதலாக சாதனங்கள் வாங்குதல். | 500.00 |
| | (ஆ) அம்பத்தூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் புதிதாக ஏற்படுத்தப் பட்டுள்ள கம்மியர் இயந்திரச் சாதனம் பராமரிப்பு தொழில் கல்விக்காக, கூடுதல் கருவிகள் மற்றும் சாதனங்கள் வாங்குதல். | |
| | (இ) 11 அரசு தொழில் பயிற்சி நிறுவனங்களில் பட வரைவாளர் (இயந்திரவியல்) பட வரைவாளர் (சிவில்) தொழிற் கல்விகளுக்கென கூடுதலாக கருவிகள் மற்றும் சாதனங்கள் வாங்குதல். | |
| | (ஈ) 11 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் "Instrument Mechanic" தொழிற் கல்விக்கானத் திருத்த பாடத் திட்டத்தின்படி கூடுதல் கருவிகள் வாங்குதல். | |
| | (உ) 12 தொழிற் பயிற்சி நிறுவனங்களிலுள்ள சுருக்கெழுத்துத் தொழிற் கல்விக்குக் கூடுதலாக தொழிற் கல்விச் சாதனங்கள் வாங்குதல். | |
| | (ஊ) 30 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பற்ற வைப்பவர் தொழிற் கல்விக்குக் கூடுதலாகச் சாதனங்கள் வாங்குதல். | |
| | (எ) ஈரோடு, அரசு தொழிற் பயிற்சி நிறுவனத்தில், வெளுப்புக்காரம் இடுதல், சாயம் தோய்த்தல் மற்றும் காலிகோ அச்சிடுதல் போன்ற தொழிற் கல்விக்கு பற்றாக்குறை கல்விச் சாதனங்களை வாங்குதல். | |
| | (ஏ) நிலைக் குழு சுட்டிக் காட்டியுள்ளவாறு பல்வேறு தொழிற் கல்விகளுக்கென பற்றாக்குறை கல்விச் சாதனங்களை வாங்குதல். | |



| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 14. | அரசு தொழிற் பயிற்சி நிறுவனக் கட்டடங்களைப் புதுப்பித்தல். | 100.00 |
| | **தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை** | |
| 15. | 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டடத்தில் அமைந்திருக்கும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (சி.ஐ.எஃப்) அலுவலகத்தைப் புதுப்பித்துப் பராமரித்தல். | 8.00 |
| 16. | தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரின் முறையான கோட்டங்களுக்கு, ஆய்வு நடத்தும் அதிகாரிகளின் பயனுக்காக, பாதுகாப்புப் பொருள்கள் அடங்கிய 5 பைகள் வழங்குதல். | 10.00 |
| 17. | தொழிற்சாலைகளின் ஆய்வாளர் அலுவலகத்தில் மின் ஆளுகை முறையைக் கொண்டு வருதல். | 10.00 |
| | **மருத்துவ மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (இ.எஸ்.ஐ.) திட்டத்தில் சேராதது** | |
| 18. | துறையைக் கணினிமயமாக்குதல். | 10.00 |
| 19. | தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களுக்குச் சாதனங்கள் வாங்குதல். | 50.00 |
| 20. | திருச்சி தொழிலாளர் ஈட்டுறுதி கழக மருத்துவமனையில் மூன்று தொலைபேசி இணைப்புகளுடன் EPABX முறை அமைத்தல். | 3.15 |
| 21. | 8 தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனைகள், 4 மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்களின் அலுவலகங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் வழங்குதல். | 5.00 |
| | மொத்தம் | 944.42 |

[2005 ஏப்ரல் 4

## அத்தியாயம் – 1

## தொழிலாளர் துறை

### தொழில் உறவுகள்

1.1 நல்ல தொழில் உறவுகளுக்கு, திறமையும், பொறுப்புமிக்க தொழிலாளர் நடத்தையும், சிறந்த முற்போக்கான நிருவாகமும் முதன்மையானவை ஆகும். தொழிலாளர்–நிர்வாகத்தினரிடையே நல்லுறவை வலுப்படுத்துவதன் வாயிலாக, செழிப்பான வளர்ச்சியை அடைவதற்கானச் சூழ்நிலையை தொழிலாளர் துறை உருவாக்குகிறது. உற்பத்தியைப் பாதிக்கும் தொழிற் தகராறுகளைத் தக்க தருணத்தில் சமரசமாய்த் தீர்ப்பதற்கு ஒரு நடுநிலையான அமைப்பு மூலமாக இந்த முக்கியப் பணியை தொழிலாளர் துறை அலுவலர்கள் ஆற்றி வருகின்றனர். தொழிலாளர் துறை அலுவலர்களின் திறமையான தலையீடுகள்மூலம் வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டில், வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பினால் ஏற்பட்ட மனித இழப்பு நாட்கள், 2003 ஆம் ஆண்டைவிடக் குறைந்துள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு:

| வருடம் | மனித இழப்பு நாட்கள் | | மொத்தம் |
|---|---|---|---|
| | வேலை நிறுத்தம் | கதவடைப்பு | |
| 2003 | 5,40,155 | 10,30,708 | 15,70,863 |
| 2004 | 5,15,778 | 6,34,637 | 11,50,415 |

பெரும்பாலான கதவடைப்புகள், நிதி பிரச்சினை காரணமாக ஏற்பட்டுள்ளதேயன்றி, தொழிற் தகராறுகளால் அல்ல. இவ்வாண்டில் தீர்த்து வைக்கப்பட்ட மொத்த வேலை நிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புகள் முறையே 56 மற்றும் 28 ஆகும்.

1.2 2004 ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டு எழுப்பப்பட்ட தொழிற் தாவாக்களையும் சேர்த்து மொத்தம் 9,315 தொழிற் தாவாக்களில் 7,543 தொழிற் தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டன.

1.3 2004 ஆம் ஆண்டில், போனஸ் தொடர்புடைய தொழிற் தாவாக்களை, தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்கள் மிகுந்த



2005 ஏப்ரல் 4]

கவனத்துடன் கையாண்டுள்ளனர். அதன் விளைவாக, போனஸ் தொடர்புடைய பெரும்பாலான பிரச்சினைகள் குறைந்த கால அளவில் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டு, போனஸ் காலத்தில் அமைதி நிலவியது.

### முத்தரப்புக் குழு

1.4 மூடப்பட்ட தொழில் நிறுவனங்களை திறப்பது தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய அரசாணை (டி) எண் 133, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12–02–2002–ல் மாவட்டந்தோறும் முத்தரப்புக் குழுக்களை அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார். இதன் உறுப்பினர்–செயலாளர் அம்மாவட்டத்தின் தொழிலாளர் அலுவலர் ஆவார். சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிலாளர் மற்றும் வேலையளிப்பவர் சார்பில், மூன்று பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர். இக்குழு மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி, மாவட்டத்தில் மூடப்பட்ட தொழில் நிறுவனங்கள் குறித்து விவாதிக்கும்.

### சிறப்புத் தொழில் தீர்ப்பாயம்

1.5 பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகள் தொடர்பான தொழிற் தாவாக்களை விசாரித்து தீர்வு செய்வதற்காக சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தினை அரசு அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்களின் தின ஊதியக் குறைப்பு மற்றும் தோட்ட நிறுவனங்களில் உற்பத்தி உயர்வு உள்ளிட்ட பணி நிலைமை மாற்றங்கள் குறித்து எழுப்பப்பட்ட தொழிற் தாவாவும் சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விடப்பட்டுள்ளது.

### கணினிமயமாக்கல்

1.6 தலைமை அலுவலகமும், நல வாரியங்களும் மற்றும் இதர மாவட்ட அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. தலைமையகத்திலுள்ள அனைத்துக் கணினிகளும் ஒருங்கிணைத்துச் செயல்பட "நெட்வொர்க்கிங்" செய்யப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டத்தின்கீழ் இத்துறைக்காக புதிய கணினிகளை வாங்கிட ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் துறைக்கென தனியாக

[2005 ஏப்ரல் 4

இணைய தளம் (வெப்சைட்) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விணைய தளத்தில், தொழிலாளர் சம்பந்தப்பட்ட விவரங்களான குறைந்தபட்ச ஊதியங்கள் குறித்த அரசாணைகள், சம்பளப் பட்டுவாடா போன்றவை மற்றும் நல வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் தொடர்புடைய செயல்பாடுகள் அடங்கியுள்ளன.

**தொழிலாளர் நீதிமன்றங்கள்**

1.7 தொழிலாளர் நீதிமன்றங்கள், தொழிற் தகராறுகள் சட்டம், 1947, அட்டவணை இரண்டில் விவரிக்கப்பட்டுள்ள இனங்கள்மீது தீர்ப்பு வழங்குகின்றன. மாநிலம் முழுவதும் இத்தகைய 10 நீதிமன்றங்கள் உள்ளன.

1.8 சென்னையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தொழில் தீர்ப்பாயம் இயங்கி வருகின்றது. தொழிற் தகராறுகள் சட்டம், 1947, அட்டவணை இரண்டு அல்லது மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள்மீது தொழிற் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்க முடியும்.



2005 ஏப்ரல் 4]

## அத்தியாயம் – 2

## அமலாக்கம்

2.1 பல்வேறு தொழில் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள பரிணாம வளர்ச்சி காரணமாக தொழிலாளர் நிர்வாகம் மிகவும் கடினமாகியுள்ளது. ஒவ்வொரு நிலையிலும் புரிந்து கொள்ளுதல், கூர்உணர்வு, துரிதம் மற்றும் திறமை தேவைப்படுகிறது. தற்போதைய நிலையில், தொழிற்சாலைகளை போட்டிக்குரியதாக்கவும், அதே சமயத்தில், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்திடவும், தொழிலாளர் நிர்வாகம் பயனுள்ள தொழில் உறவு முறையை உருவாக்க வேண்டியுள்ளது. அமலாக்கத்தைப் பொறுத்தவரை, தொழிலாளர் நிர்வாகம், தொழிலாளர் சட்டங்களைத் திறம்பட அமல்படுத்த வேண்டியுள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர், தொழிலாளர் நலன்களைக் காக்கவும், அவர்களது உரிமைகளைப் பாதுகாத்திடவும் தொழிற் தகராறுகள் சட்டத்துடன் இதர பல சட்டங்கள் நாடாளுமன்றத்தாலும், சட்டப் பேரவையாலும் இயற்றப்பட்டுள்ளன. பெரும்பாலான சட்டங்கள் தொழிலாளர் துறையால் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை குறித்த சுருக்க விவரம் பின்வருமாறு:–

**தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946**

2.2 2004 ஆம் ஆண்டில், 437 தொழில் நிறுவனங்களின் நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

**தொழிற் சங்கங்கள் சட்டம், 1926**

2.3 2004 ஆம் ஆண்டில், 302 தொழிற் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, ரூ.49,500/– பதிவுக் கட்டணமாகவும், ரூ. 2,775/– திருத்தக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 9,685 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951**

2.4 தமிழ்நாட்டில் உள்ள மொத்த தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 61,439 ஹெக்டேர் மற்றும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 90,497 ஆகும். (35,466 ஆண்கள் மற்றும் 55,031 பெண்கள்) மொத்தம் 679 பதிவுபெற்ற தோட்ட நிறுவனங்கள் உள்ளன. 2004 ஆம் ஆண்டில் 5,535 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 286 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ. 91,450/– அபராதத் தொகை நீதிமன்றங்களால் விதிக்கப்பட்டுள்ளது.

### உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதரப் பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனை மற்றும் இதரப் பிரிவுகள்) சட்டம், 1955

2.5 2004 ஆம் ஆண்டில், அமலாக்க அலுவலர்களால் 79 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961

2.6 2004 ஆம் ஆண்டின் இறுதியில், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை 1,951 ஆகும். அந்நிறுவனங்களில் 1,37,994 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பதிவுக் கட்டணமாக ரூ. 3,78,021/– வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 5,553 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 449 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ. 1,56,200/– அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

### பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966

2.7 மாநிலத்தில் 2014 பீடி நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 2,51,328 பீடித் தொழிலாளர்கள் உள்ளனர். 2004 ஆம் ஆண்டில் 5,904 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, முரண்பாடுகளுக்காக 553 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. முந்தைய ஆண்டின் நிலுவை வழக்குகள் 299. மொத்தம் 852 வழக்குகளில், 536 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு ரூ. 97,225/– அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது. மீதம், 316 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

### தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

2.8 மாநிலத்தில் மொத்தம் 3,38,679 கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. 2004 ஆம் ஆண்டில், 3,51,405 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தம் 35,781 வழக்குகள் முடிக்கப்பட்டன. அவற்றுள் 33,485 வழக்குகளில் இணக்கக் கட்டணத் தொகையாக ரூ.24,34,640/– துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,296 வழக்குகளில் நீதிமன்றங்கள் ரூ.1,17,835/–அபராதத் தொகை விதித்துள்ளன.

### தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

2.9 மாநிலத்தில் மொத்தம் 30,498 உணவு நிறுவனங்கள் உள்ளன. 2004 ஆம் ஆண்டில், வேலையளிப்பவர்களிடமிருந்து ரூ.13,20,551/– பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. 44,620 ஆய்வுகள்



மேற்கொள்ளப்பட்டன. 3,936 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.3,23,270/– இணக்கக் கட்டணத் தொகையாக துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 824 வழக்குகளில் நீதிமன்றங்களால் ரூ. 43,830/– அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

2.10 2004 இல், மொத்தம் 99,720 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 7,266 வழக்குகள் முடிக்கப்பட்டு, 6,921 வழக்குகளில் ரூ. 3,87,325/– இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களில் முடிக்கப்பட்ட 345 வழக்குகளில் ரூ.16,175/– அபராதத் தொகையாக விதிக்கப்பட்டுள்ளது.

### சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936

2.11 2004 ஆம் ஆண்டில், சம்பளப் பட்டுவாடாச் சட்டத்தின்கீழ் மேல்முறையீட்டு அலுவலர் முன்பு தாக்கல் செய்யப்பட்ட கேட்பு மனுக்களில் 66 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ. 48,36,747/– பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

### ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970

2.12 2004 ஆம் ஆண்டில் 1,073 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 152 நிறுவனங்கள் முதன்மை வேலையளிப்பவர்களாக பதிவு செய்யப்பட்டன. 231 ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன.

### தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1981

2.13 2004 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட 912 மனுக்கள் முடிக்கப்பட்டு, இதன் காரணமாக 2,308 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) சட்டம், 1985

2.14 2004 ஆம் ஆண்டில் 6,15,770 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 34,922 வழக்குகள் முடிக்கப்பட்டன. இவற்றில் 34,796 வழக்குகளில் ரூ. 72,28,881/– இணக்கக் கட்டணம் துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 126 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ. 1,03,275/– அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் – 3

### குறைந்தபட்ச ஊதியங்கள்

3.1 குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 என்பது வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்த ஒரு (பாதுகாப்பு வளையம்) முக்கிய சட்டமாகும். குறைந்தபட்ச ஊதியம் என்பது பொதுவாக பிழைப்பூதியம் போன்றதேயாகும். அதனை வழங்க மறுப்பது என்பது வாழ்க்கையில் மனிதத் தன்மையை அகற்றுவதற்கு ஒப்பாகும். குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில், 90 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பட்டியலில் உள்ள எந்த வேலைக்கும் குறைந்தபட்ச அளவு ஊதியம் நாளொன்றுக்கு ரூ. 66/—க்கு குறையாமல் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு ஆலோசனை கூறியுள்ளது.

3.2 2004 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்ட 27 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்து இறுதி அறிவிக்கையை வெளியிட்டுள்ளது:–

1. பாரங்களை ஏற்றி இறக்கும் தொழில்.
2. காட்டன் ஜின்னிங், பிரெஸ்ஸிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில்.
3. கட்டுமானப்பணி, சாலைகள் பராமரித்தல் அல்லது கட்டடங்கள் கட்டுதல் தொழில்.
4. காற்றூட்டப்பட்ட நீர் தயாரிக்கும் தொழில்.
5. முந்திரித் தொழில்.
6. பட்டாசு தயாரிக்கும் தொழில்.
7. தேங்காய் உரிக்கும் தொழில்.
8. அப்பளம் தயாரிக்கும் தொழில்.
9. பேக்கரீஸ் மற்றும் பிஸ்கட் தயாரிக்கும் தொழில்.
10. பாத்திரங்கள் தயாரிக்கும் தொழில்.
11. ஜவ்வரிசித் தொழில்.
12. சலனப் படங்கள் தயாரிக்கும் தொழில்.
13. பட்டு இழை முறுக்கும் தொழில்.



14. எண்ணெய் ஆலைத் தொழில்.
15. மர ஆலைத் தொழில்.
16. லாண்டரீஸ் மற்றும் துணி துவைக்கும் தொழில்.
17. தகரக் கொள்கலன்கள் தயாரிக்கும் தொழில்.
18. புகையிலை தயாரிப்பு (பீடி சுற்றுதல் அல்லாத பீடி தயாரிப்பு உட்பட) தொழில்.
19. தங்கம் மற்றும் வெள்ளி பொருட்கள் தயாரிக்கும் தொழில்.
20. சினிமா தொழில்.
21. அச்சகங்கள் தொழில்.
22. காகிதம் மற்றும் காகிதம் சார்ந்த கையினால் காகிதம் தயாரிக்கும் தொழில்.
23. உப்பளங்கள் தொழில்.
24. பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழில்.
25. தச்சு மற்றும் கருமார் தொழில்.
26. ஆட்டோமொபைல் பணிமனைகள்.
27. தையல் தொழில்.

3.3 2004 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்ட இரு தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியங்களை நிர்ணயம் செய்துள்ளது:

1 தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழில்
2. காலணிகள் தயாரிக்கும் தொழில்

3.4 2004 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்வது தொடர்பாக முதனிலை அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது:

1. ஆட்டோமொபைல் பணிமனைகள்.
2. தச்சு மற்றும் கருமார் தொழில்.
3. அகர்பத்தி தயாரிக்கும் தொழில்.
4. கைத்தறி நெசவுத் தொழில்.

5. உப்பளங்கள் தொழில்.

6. கோணித் தொழில்.

7. தீப்பெட்டி தயாரிக்கும் தொழில்.

8. இரசாயன உரத் தொழிற்சாலைகள்.

9. மின்னணுவியல் தொழிற்சாலைகள்.

10. மருந்து மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் தொழில்.

11. பதநீர் இறக்கும் தொழில்.

12. புகையிலை தயாரிப்பு (பீடி சுற்றுபவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட ஊதியம்) தொழில்.

3.5 2004 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யும் பொருட்டு ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது:–

1. பந்தல் அமைக்கும் தொழில்.

2. தோட்ட நிறுவனங்கள் தொழில்.

3. வெளுப்பாக்கல் மற்றும் சாயம் தோய்த்தல் தொழில்.

4. உணவு சமைக்கும் தொழில்.

5. பாய் நெய்தல் மற்றும் கூடை முடைதல் தொழில்.

6. மருந்து தயாரிக்கும் தொழில்.

7. உள்ளாட்சி நிறுவனங்கள்.

8. திரவ பெட்ரோலிய சிலிண்டர்களை (LPG Cylinders) விநியோகிக்கும் தொழில்.

3.6 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டப்பிரிவு 20(1)-ன்படி கேட்பு மனுக்களை விசாரணை செய்ய 9 வட்டார தொழிலாளர் துணை ஆணையர்கள் உரிய அதிகாரம் பெற்றவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

3.7 2004 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் 2,258 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன. கேட்பு மனுதாரர்களுக்கு ரூ.3,55,79,259.25 தொகை அளிக்க உத்தரவிடப்பட்டது.



## அத்தியாயம் – 4

## சமூகப் பாதுகாப்பு

### பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், 1972

4.1 2004 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 3,118 மனுக்களில் (972 மனுக்கள் சென்ற ஆண்டு இறுதியிலும், 2,146 மனுக்கள் இந்த ஆண்டிலும் பெறப்பட்டுள்ளன). 1,692 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, ரூ.4,91,65,690/– மனுதாரர்களுக்கு பட்டுவாடா செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

### போனஸ் வழங்குதல் சட்டம், 1965

4.2 இச்சட்டம், 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும். போனஸ் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களில், தொழிலாளர்கள் எண்ணிக்கை 10–க்கு குறையும் நேர்வுகளிலும், நிறுவனங்கள் தொடர்ந்து போனஸ் வழங்க வேண்டும். நஷ்டத்தில் இயங்கினாலும் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச போனஸ் 8.33% வழங்க வேண்டும். இச்சட்டம், ஒரு நிறுவனம் இலாபத்தில் இயங்கும்போது வழங்கப்பட வேண்டிய போனஸ் குறித்த வரைமுறை ஒன்றை வகுத்துள்ளது. இச்சட்டத்தின்கீழ், அதிகபட்சமாக வழங்கப்பட வேண்டிய போனஸ் 20% ஆகும்.

### வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், 1923

4.3 விபத்து ஏற்படும் நேர்வில் தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்க இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. 2004 ஆம் ஆண்டில், வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் 4,175 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. முந்தைய ஆண்டுகள் நிலுவையுடன் சேர்த்து 3,666 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு, கேட்பு மனுதாரர்களுக்கு ரூ.43,20,06,735/– இழப்பீட்டுத் தொகை பட்டுவாடா செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

### மகப்பேறு நலச் சட்டம், 1961

4.4 இச்சட்டத்தின்படி, குழந்தைப்பேற்றிற்காக 12 வாரங்கள் விடுப்பு, மருத்துவச் சான்றிதழின்பேரில் ஒரு மாத மருத்துவ விடுப்பு, கருச்சிதைவிற்காக 6 வார விடுப்பு முதலிய சலுகைகள் உள்ளன. மேலும், பேறுகாலத்திற்கு முந்தைய மற்றும் பேறுகாலத்திற்குப் பிந்தைய கவனிப்பை நிர்வாகம் இலவசமாக அளிக்கவில்லையெனில், ரூ.250/– மருத்துவப்

போனசாக வழங்க சட்டம் வழிவகை செய்கிறது. 2004 ஆம் ஆண்டில், 9 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.2,050/– மனுதாரர்களுக்கு பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

### சம ஊதியச் சட்டம், 1976

4.5 2004 ஆம் ஆண்டில் 12,886 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 8 வழக்குகள் தொடரப்பட்டு, ரூ.7,800/– அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

4.6 2004 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் 378 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, ரூ.46,73,078/– மனுதாரர்களுக்கு பட்டுவாடா செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

### மக்கள் சாசனம்

4.7 தொழிலாளர் ஆணையரகம் மக்கள் சாசனம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த மக்கள் சாசனத்தில், இத்துறையின் செயல்பாடுகள் குறித்தும், இத்துறையால் அமலாக்கம் செய்யப்படும் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் குறித்தும், இந்தச் சட்டங்கள் மற்றும் திட்டங்களின் பயன்களை எவ்வாறு பெறுவது என்பது குறித்தும் பொதுமக்கள் தெளிவாக அறிந்துகொள்ள விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.



## அத்தியாயம் – 5

## நல வாரியங்கள்

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

5.1 தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972–ன்படி அமைக்கப்பட்டு, 1975 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இவ்வாரியம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், 5 வேலையளிப்போர் பிரதிநிதிகளையும், 5 தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், 4 அரசுத் தரப்பு பிரதிநிதிகளையும், 3 சட்டமன்ற உறுப்பினர்களையும் மற்றும் 2 பெண் நியமன உறுப்பினர்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி

5.2 தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களை நடத்தும் வேலையளிப்போரிடமிருந்து, சந்தாத் தொகை பெறுகிறது. மேற்படி நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆண்டு ஒன்றிற்கு ரூ.5/– அளிக்கிறார்கள். வேலையளிப்பவரின் பங்களிப்பு ரூ.10/– ஆகும். தொழிலாளர்களின் பங்குக்கு ஈடாக அரசு தனது பங்கை இந்நிதிக்கு அளிக்கிறது.

தொழிலாளர் நலச் சட்டங்களின் சட்ட விதி மீறல்களுக்காக நீதிமன்றங்களால் விதிக்கப்படும் அபராதத் தொகையில் 90% தொழிலாளர் நலவாரியத்தால் பெறப்படுகிறது.

### வாரியத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்

5.3 பின்வரும் திட்டங்கள், தொழிலாளர் நல நிதியிலிருந்து செயற்படுத்தப்படுகின்றன:

### தையற் பயிற்சி

5.4 தொழிலாளர் நல வாரியத்தால், 71 தொழிலாளர் நல மையங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நல மையங்களில், தொழிலாளர்களைச் சார்ந்தோர்களுக்காக தையற் பயிற்சி வகுப்புகள் ஓராண்டுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு மாதம் ரூ.80/– உதவித் தொகையாகவும், பயிற்சி முடித்து தேர்வுக்குச் செல்லும் மாணவிகளுக்கு

தேர்வுக் கட்டணமும் வாரியத்தால் வழங்கப்படுகிறது. மேலும், தையற் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் கீழ்நிலை மற்றும் மேல்நிலைகளில் தேர்ச்சி பெறும் மாணவிகளுக்கு ஒவ்வொரு மையத்திலும் புதிய தையல் இயந்திரங்கள் பரிசாக வழங்கப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 1,640 பயிற்சியாளர்கள் பயனடைந்துள்ளார்கள். ரூ.8,89,390/– வாரியத்தால் இத்திட்டத்திற்குச் செலவிடப்பட்டுள்ளது. மேலும், முதல் மதிப்பெண் பெற்ற 92 மாணவிகளுக்கு தையல் இயந்திரங்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ.2,14,503/– இத்திட்டத்திற்குச் செலவிடப்பட்டுள்ளது.

**குழந்தைகள் காப்பகம்**

5.5 பணிபுரியும் தாய்மார்களின் குழந்தைகளுக்காக, குழந்தைகள் நலக் காப்பகம் வாரியத்தால் நடத்தப்பட்டு வருகிறது. 2 முதல் 5 வயது வரை உள்ள 1,148 தொழிலாளர்களின் குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளார்கள். மேலும், குழந்தைகளுக்குச் சத்தான உணவு, பால் தினமும் வழங்கப்படுகிறது. இதைத் தவிர, வாரம் இருமுறை முட்டை மற்றும் பழம் வழங்கப்படுகிறது. மேலும், குழந்தைகளுக்கு ஆண்டிற்கு 2 ஜோடி டெரிகாட்டன் சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது. இதைத் தவிர மருத்துவர்களால் மாதம் இருமுறை குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும், அக்குழந்தைகளுக்கு பயிற்சி பெற்ற பாலசேவிகாக்களால் அடிப்படைக் கல்வி கற்றுத் தரப்படுகிறது. இத்திட்டத்திற்காக வாரியம் இதுவரை ரூ.6,66,945/– செலவு செய்துள்ளது.

**படிப்பகங்கள்**

5.6 ஒவ்வொரு தொழிலாளர் நல மையத்திலும், படிப்பகத்திற்கென தமிழ் தினசரி இரண்டும், வார இதழ்கள் இரண்டும் வழங்கப்படுகின்றன.

**கல்வி உதவித் தொகை**

5.7 தொழிலாளர்களின் பிள்ளைகள் பின்வரும் படிப்புப் பிரிவில் பயிலும்போது கீழ்க்கண்டவாறு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது:

**ஆண்டு ஒன்றுக்கு**

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவப் பட்டப் படிப்பு | ரூ.1200/– |
| 2. | பொறியியல் பட்டப் படிப்பு | ரூ.1200/– |
| 3. | சட்டப் பட்டப் படிப்பு | ரூ.1200/– |



| | | |
|---|---|---|
| 4. | விவசாயப் பட்டப் படிப்பு | ரூ.1200/– |
| 5. | தொழிற் பயிற்சிக் கல்வி | ரூ. 500/– |
| 6. | மேல்நிலைக் கல்வி | ரூ. 600/– |
| 7. | பொறியியல் பட்டயக் கல்வி | ரூ. 720/– |
| 8. | மருத்துவ பட்டயக் கல்வி | ரூ. 720/– |

இத்திட்டத்தின் மூலம் 139 மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள். இவர்களுக்காக ரூ.1,38,960/– வாரியத்தால் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொழிற் பயிற்சி மற்றும் மேல்நிலை கல்வி பயிலும் 138 மாணவர்களுக்கு ரூ.81,300/– உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**கல்வி ஊக்கத் தொகை**

5.8 ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1,000/–ம், இரண்டாம் மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.500/–ம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 70 தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.58,000/– ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**புத்தக உதவித் தொகை**

5.9 இத்திட்டத்தின்மூலம் வாரியம் 356 குழந்தைகளுக்கு ரூ. 18,855/– உதவித்தொகையாக வழங்கியுள்ளது. 6 தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி பெற ரூ.890/– உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**கண் கண்ணாடி உதவித் தொகை**

5.10 கண் கண்ணாடி வாங்கியதற்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.200/– மீள வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 537 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இவர்களுக்காக ரூ.1,07,400/– தொகை மீள வழங்கப்பட்டுள்ளது.

## காது கேட்கும் கருவி

5.11 காது கேளாத தொழிலாளர்களுக்கு காது கேட்கும் கருவி வாங்கி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக ரூ.1,000/– செலவிடப்பட்டுள்ளது.

## ஈமச்சடங்கு செலவுத் தொகை

5.12 இவ்வாண்டு 114 தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.500/– என்ற வீதத்தில் வழங்கப்பட்டது. இவ்வகையில் ஈமச்செலவு சடங்குக்கு ரூ.57,000/– வழங்கப்பட்டுள்ளது.

## காசநோய்ப் பிரிவு.

5.13 தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தாம்பரம், ஆசாரிப்பள்ளம், திருப்பூர், ஆஸ்டின்பட்டி மற்றும் கீழ்ப்பெண்ணாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனைகளில் தொழிலாளர்களுக்காகத் தனிப் பிரிவுகளைக் கட்டியுள்ளது.

## ஓய்வு இல்லங்கள்

5.14 தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் மாமல்லபுரம், குற்றாலம், வால்பாறை ஆகிய இடங்களில் மிகக் குறைந்த வாடகையில் தொழிலாளர்கள் குடும்பத்தாருடன் தங்குவதற்கு வசதியாக ஓய்வில்லங்கள் கட்டப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டு 8,404 நபர்கள் தங்கிப் பயனடைந்துள்ளனர்.

சென்னை, டி.எம்.எஸ். வளாகத்தில் இணக்க பேச்சுவார்த்தைக்கு வரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குறைந்த வாடகையில் தங்குவதற்காக ஜீவா இல்லம் என்ற ஓய்வில்லம் கட்டப்பட்டுள்ளது. 31–12–2004 முடிய 2,897 தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்கி பயனடைந்துள்ளனர்.

## தொழிலாளர்களுக்கான பத்திரிகை

5.15 தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் "உழைப்பவர் உலகம்" என்ற மாத இதழ் தொழிலாளர்கள் / பொது மக்கள் படித்து பயன்பெறும் வகையில் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் நீதிமன்றத் தீர்ப்புகள், தொழிலாளர் சட்டம், வினா-விடை, விலைவாசிக் குறியீடுகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. தற்போது 3,301 சந்தாதாரர்கள் இதனைப் படித்துப் பயன்பெற்றுள்ளனர்.

இவ்வாரியத்தால் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு நலத் திட்டங்கள் குறித்த அட்டவணை பின்வருமாறு:–



**01–01–2004 முதல் 31–12–2004 வரை பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை குறித்த அட்டவணை:**

| வரிசை எண் | திட்டங்கள் | பயனாளிகள் | செலவழிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | தையல் இயந்திரம் பரிசு | 92 | 2,14,503 |
| 2 | மாணவிகளுக்கு உதவித் தொகை | 1,640 | 8,25,941 |
| 3 | குழந்தைகளுக்கு பால் | 1,148 | 3,02,888 |
| 4 | குழந்தைகளுக்கு மதிய உணவு | 1,148 | 3,61,957 |
| 5 | குழந்தைகளுக்கு மருத்துவம் | 1,148 | 2,100 |
| 6 | குழந்தைகளுக்கு சீருடை | 1,148 | 1,48,723 |
| 7 | தேர்வுக்கு செல்லும் மாணவிகளுக்கு தேர்வுக் கட்டணம் | 663 | 56,951 |
| 8 | தேர்வுக்கு செல்லும் மாணவிகளுக்கு பேருந்து கட்டணம் | 91 | 6,498 |
| 9 | தட்டச்சு / சுருக்கெழுத்து உதவித்தொகை | 6 | 890 |
| 10 | காதுகேட்கும் கருவி உதவித்தொகை | 1 | 1,000 |
| 11 | மூன்று சக்கர வண்டி வழங்குதல் | — | — |
| 12 | செயற்கை உறுப்பு உதவித்தொகை | 1 | 1,655 |
| 13 | கண் கண்ணாடி உதவித்தொகை | 537 | 1,07,400 |
| 14 | ஈமச்சடங்கு உதவித்தொகை | 114 | 57,000 |
| 15 | பாடநூல் உதவித்தொகை | 356 | 18,855 |
| 16 | பொறியியல் பட்டக் கல்வி உதவித்தொகை | 66 | 77,280 |
| 17 | பொறியியல் பட்டயக் கல்வி உதவித்தொகை | 51 | 36,720 |
| 18 | மருத்துவ பட்டக் கல்வி உதவித்தொகை | 17 | 20,400 |
| 19 | மருத்துவ பட்டயக் கல்வி உதவித்தொகை | 3 | 2,160 |
| 20 | சட்டக் கல்வி உதவித்தொகை | — | — |

[2005 ஏப்ரல் 4

| வரிசை எண் | திட்டங்கள் | பயனாளிகள் | செலவழிக் கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 21 | வேளாண்மை பட்டக் கல்வி உதவித்தொகை | 2 | 2,400 |
| 22 | தொழிற் பயிற்சி கல்வி உதவித்தொகை | 15 | 7,500 |
| 23 | மேல்நிலைக் கல்வி உதவித்தொகை | 123 | 73,800 |
| 24 | கல்வி ஊக்கத்தொகை | 70 | 58,000 |
| | மொத்தம் | 8,440 | 23,84,621 |

**தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்**

5.16 1–1–2004 முதல் 31–12–2004 வரையிலான காலத்தில் இவ்வாரியத்தில் பங்களிப்புத் தொகையாக ரூ.26,30,85,345/– பெறப்பட்டுள்ளது.

5.17 1–1–2004 முதல் 31–12–2004 வரை இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,11,031. 31–12–2004 முடிய மொத்தம் 6,30,812 தொழிலாளர்கள் இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ளனர்.

5.18 ஒரு தொழிலாளிக்கு ரூ.25/– என்ற அடிப்படையில் ரூ.27,75,775/– பதிவுத் தொகையாக மேற்படி காலத்தில் வசூல் செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்துகொண்ட அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் இலவசமாக அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

**வாரியத்தினால் அமலாக்கப்படும் நலத் திட்டங்கள்**

**தனி நபர் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம்**

5.19 இவ்வாரியத்தில் பதிவு செய்துகொண்ட கட்டுமானத் தொழிலாளர்கள் தனி நபர் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் இந்தக் காப்பீட்டினை மீண்டும் புதுப்பிப்பதற்கான கட்டணம் வாரியத்தால் செலுத்தப்படுகிறது.

பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர் ஒருவர் விபத்தின் காரணமாக இறந்தால், அவருடைய நியமனதாரருக்கு ரூ.1 இலட்சம் அளிக்கப்படுகிறது. உடல் உறுப்புகள் இழப்பு மற்றும் பார்வை இழப்பு மற்றும் இதர இழப்புகளுக்கு இழப்பின் சதவிகிதத்தின் அடிப்படையில் ரூ.1 இலட்சம் வரை ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 4]

**கல்வி உதவித் தொகை திட்டம்**

5.20 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் ஆகியோருக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படுகின்றது:–

10 ஆம் வகுப்பு தேர்ச்சி ரூ.1,000/–

12 ஆம் வகுப்பு தேர்ச்சி ரூ.1,500/–

| வரிசை எண் | படிப்பு பிரிவு பற்றிய விவரம் | கல்வி உதவித் தொகை | |
|---|---|---|---|
| | | வெளியிலிருந்து படிப்பவர்கள் (ஒவ்வொரு ஆண்டிற்கும்) ரூ. | விடுதியில் தங்கி படிப்பவர்கள் (ஒவ்வொரு ஆண்டிற்கும்) ரூ. |
| 1 | இளங்கலை பட்டப் படிப்பு | 1,500 | 1,750 |
| 2 | பட்ட மேற்படிப்பு | 2,000 | 3,000 |
| 3 | சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை பராமரிப்பு மற்றும் அவை தொடர்புடைய படிப்புகள் | 2,000 | 4,000 |
| 4 | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | 4,000 | 6,000 |
| 5 | ஐடிஐ மற்றும் பாலிடெக்னிக் படிப்பு | 1,000 | 1,200 |

**திருமண உதவித் திட்டம்**

5.21 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் திருமணத்திற்கும் மற்றும் அவரது மகன்/மகள் திருமணத்திற்கும் திருமண உதவித் தொகையாக ரூ.2,000/– வழங்கப்படுகிறது.

**மகப்பேறு உதவித் திட்டம்**

5.22 பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளிக்கு மகப்பேறு/கருச்சிதைவு/கருக்கலைப்புக்கு ரூ.2,000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

**இயற்கை மரணமுற்ற தொழிலாளர்களின் குடும்பத்திற்கான உதவித் திட்டம்**

5.23 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இயற்கை மரணமடைந்தால் அன்னாரது நியமனதாரருக்கு ரூ.10,000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

**ஈமச் சடங்கு உதவித் திட்டம்**

5.24 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி மரணமடைந்தால் அவரது நியமனதாரருக்கு ரூ.2,000/– ஈமச் சடங்கிற்காக உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

**கண் கண்ணாடி வாங்கிய தொகையினை ஈடு செய்தல் உதவித் திட்டம்**

5.25 கண் கண்ணாடி வாங்கிய செலவுத் தொகையை ஈடு செய்வதற்காக ஒரு தொழிலாளிக்கு ரூ.250/– வீதம் ஒவ்வொரு வருடமும் 1,000 தொழிலாளர்களுக்கு முதலில் பெறப்படும் விண்ணப்பங்கள் அடிப்படையில் அளிக்கப்படுகிறது.

5.26 01–01–2004 முதல் 31–12–2004 முடிய கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வாரியத்தால் அளிக்கப்பட்ட நலத்திட்டங்களின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | நலத் திட்டம் | தொழிலாளர்கள் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | விபத்து மரணம் | 141 | 1,41,00,000 |
| 2 | காய விபத்து | 8 | 4,04,000 |
| 3 | இயற்கை மரணம் | 1,798 | 1,79,45,000 |
| 4 | ஈமச் சடங்கு உதவித் தொகை | 1,939 | 38,76,500 |
| 5 | மகப்பேறு உதவித் தொகை | 423 | 8,46,000 |
| 6 | திருமண உதவித் தொகை | 6,457 | 1,29,14,000 |
| 7 | கல்வி உதவித் தொகை | | |
| | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 6,690 | 66,89,750 |
| | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 3,319 | 49,78,500 |
| | உயர் கல்வி | 1,572 | 26,41,600 |
| 8 | கண் கண்ணாடி உதவித் தொகை | 215 | 53,505 |
| | மொத்தம் | 22,562 | 6,44,48,855 |



**ஓய்வூதியம்**

60 வயது பூர்த்தியடைந்த, குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் வாரியத்தின் உறுப்பினராக இருந்த தொழிலாளருக்கு மாதம் ரூ. 200/– வீதம் ஓய்வூதியம் வழங்கப்படும்.

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்**

5.27 வாரியங்களின் நிர்வாகத்தினை முறைப்படுத்துவதற்காக, அரசு பின்வரும் நல வாரியங்களை 21–7–2004 முதல் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்துடன் ஒருங்கிணைத்தது:–

தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம்

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம்

தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்

தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம்

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்

தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம்

தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பு மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம்

தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம்

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியம்.

5.28 இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட 9 வாரியங்களில் ஏற்கெனவே பதிவு செய்து கொண்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்கள் தொடர்ந்து தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பயன்களைப் பெறுவார்கள்.

[2005 ஏப்ரல் 4

5.29 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள 67 தொழில்களில், 60 தொழில்கள் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்திற்கு பொருந்தும்.

5.30 இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்ட நலத் திட்ட உதவிகள் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது:–

| | நலத் திட்ட உதவிகள் | வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| 1. | (அ) விபத்து இறப்பு | ரூ.1,00,000/– |
| | (ஆ) இழப்பு<br>(1) இரு கைகளும்<br>(2) இரு கால்களும்<br>(3) ஒரு கை, ஒரு கால்<br>(4) இரண்டு கண்களும் பார்வை இழப்பு | ரூ.1,00,000/– |
| | (இ) ஒரு கை, ஒரு கால் அல்லது ஒரு கண் இழப்பு | ரூ.50,000/– |
| | (ஈ) நிரந்தர பகுதி ஊனம் | மருத்துவரால் நிர்ணயிக்கப்படும் சதவீதம் |
| 2. | இயற்கை மரண உதவி | ரூ.10,000/– |
| 3. | ஈமச் சடங்கு உதவி | ரூ. 2,000/– |
| 4. | கல்வி உதவித் தொகை (தொழிலாளர்களின் இரு குழந்தைகளுக்கு) | |
| | (அ) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | ரூ.1,000/– |
| | (ஆ) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | ரூ.1,500/– |
| | (இ) முறையான இளநிலை பட்டப் படிப்பு<br>ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் –<br>விடுதியில் தங்கிப் படித்தால் – | <br>ரூ.1,500/–<br>ரூ.1,750/– |
| | (ஈ) முறையான முதுநிலை பட்டப் படிப்பு<br>ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் –<br>விடுதியில் தங்கிப் படித்தால் – | <br>ரூ.2,000/–<br>ரூ.3,000/– |



2005 ஏப்ரல் 4]

| | நலத் திட்ட உதவிகள் | வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| | (உ) சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் மற்றும் அது போன்ற தொழில்நுட்பப் படிப்பு<br>ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் –<br>விடுதியில் தங்கிப் படித்தால் – | <br>ரூ.2,000/–<br>ரூ.4,000/– |
| | (ஊ) முதுநிலை தொழில்நுட்பப் படிப்பு<br>ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் –<br>விடுதியில் தங்கிப் படித்தால் – | <br>ரூ.4,000/–<br>ரூ.6,000/– |
| | (எ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு<br>ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் –<br>விடுதியில் தங்கிப் படித்தால் – | <br>ரூ.1,000/–<br>ரூ.1,200/– |
| 5. | திருமண உதவி (தொழிலாளி/மகன்/மகள் திருமணத்திற்கு) | ரூ.2,000/– |
| 6. | மகப்பேறு உதவி இரு குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.2,000/– |

5.31 உடலுழைப்புத் தொழிலாளி பதிவின்போது ஒருமுறை செலுத்தும் பங்குத் தொகையாக ரூ.100/–ஐச் செலுத்த வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ரூ.10/– செலுத்தி, பதிவினைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

5.32 01–01–2004 முதல் 31–12–2004 வரை 58,959 தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர். இதுவரை மொத்தம் 7,01,841 தொழிலாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

5.33 01–01–2004 முதல் 31–12–2004 வரையுள்ள காலத்தில் தகுதியுடைய தொழிலாளர்களுக்குப் பின்வருமாறு உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன:

| வ. எண் | திட்ட உதவிகள் | தொழிலாளர்கள் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | கல்வி உதவி | 4,536 | 55,71,400 |
| 2. | மகப்பேறு | 1,098 | 21,96,000 |

[2005 ஏப்ரல் 4

| வ. எண் | திட்ட உதவிகள் | தொழிலாளர்கள் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 3. | திருமண உதவி | 1,974 | 38,48,000 |
| 4. | இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கு உதவி | 992 | 62,35,100 |
| 5. | குழு தனி நபர் விபத்து காப்பீடு | 38 | 38,00,000 |
| | மொத்தம் | 8,638 | 2,17,50,500 |

### தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டம்

5.34 மத்திய அரசின் "ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்" தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி மத்திய அரசு வீடு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 20,000/– அல்லது வீடு ஒன்றின் கட்டுமானச் செலவில் 50 சதவீதத் தொகை, இதில் எது குறைவோ அத்தொகையை மானியமாக வழங்கி வந்தது. இது தவிர, மாநில அரசும் வீடு ஒன்றுக்கு ரூ.5,000/– வீதம் மாநில அரசின் மானியமாக வழங்குகிறது. இவ்வகையில், அரசு இதுவரை வீடு ஒன்றுக்கு ரூ. 5,000/– என்ற வீதத்தில் 499 வீடுகளுக்கு ரூ.24.95 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

மத்திய அரசு 01–07–2004 முதல் மத்திய அரசின் மானியத் தொகையை ரூ.20,000/–த்திலிருந்து அதிகரித்து அதிகபட்சமாக ரூ. 40,000/– அல்லது கட்டுமானச் செலவில் 50 சதவிகிதத் தொகை, இதில் எது குறைவோ அத்தொகையை வழங்க ஆணைகள் வழங்கியுள்ளது. இதனையடுத்து 2004–2005 ஆம் ஆண்டுக்கு 2,722 பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட ஏதுவாக, மத்திய அரசிடம் ரூ.10,88,80,000/– மானியத் தொகை கோரி உரிய முன்மொழிவு கடந்த 25–10–2004 அன்று ஹைதராபாத், நல ஆணையர்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 4]

## அத்தியாயம் – 6

## தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல்

### செயல் திட்டம்

6.1 தமிழக அரசு குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றுவதற்காக முன்னோடித் திட்டம் ஒன்றை வகுத்து, இப்பிரச்சினையை சீரிய முறையில் சமாளிக்க செயல்திட்டம் வகுத்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தை நாட்டிலேயே சிறந்த மாநிலமாக ஆக்குவதற்காக வகுத்த 15 அம்சத் திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுதல் மிக முக்கியமானதொன்றாகும். குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றுவதற்கான செயல் திட்டத்துக்கு அரசாணை எண் 53, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12–5–2003–ல் அரசு ஒப்புதலளித்தது. இந்தச் செயல் திட்டம் 2005 ஆம் ஆண்டுக்குள் அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றவும், 2007 ஆம் ஆண்டுக்குள் அபாயகரமற்றத் தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றவும் வழிவகுத்துள்ளது.

### மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கம்

6.2 அரசு, மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கத்தை ஏற்படுத்திடவும், செயல் திட்டத்தினை அமல்படுத்துவதற்காக அச்சங்கத்திற்கு ரூ.1.25 கோடி ரூபாய் மானியமும் வழங்கியுள்ளது. மாநிலக் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கம் 21–10–2003 அன்று சங்கப் பதிவுகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆணையர் இதன் தலைவராகவும், கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்கள் இதன் உறுப்பினர்–செயலாளராகவும் உள்ளனர்.

### குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்பு

6.3 2003 மார்ச்சில் சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் நடைபெற்ற கணக்கெடுப்பில், 70,344 குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. இருப்பினும், 2004 ஆம் ஆண்டில் சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் மறு கணக்கெடுப்பின்படி, பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளில் 44,418 குழந்தைத் தொழிலாளர்கள் மட்டுமே உள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. இந்தக் குறைந்து வரும் எண்ணிக்கை குழந்தைத் தொழிலாளர் செயல்திட்டம் சீரிய முறையில் செயல்பட்டு வருவதை எடுத்துக்காட்டுகிறது.

[2005 ஏப்ரல் 4

## மாநில குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான ஆலோசனைக் குழு

6.4 08–12–2004 அன்று 7–வது மாநிலக் குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான ஆலோசனைக் குழுக் கூட்டம் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலைமையில் கூடி குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்காக அரசு எடுத்துவரும் முனைப்பான நடவடிக்கைகள் குறித்து உறுப்பினர்களுடன் விவாதிக்கப்பட்டது.

## தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்

6.5 தூத்துக்குடி, புதுக்கோட்டை, திருச்சி, கோவை, சேலம், வேலூர், தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 1995–1996 ஆம் ஆண்டிலிருந்தும், திருநெல்வேலி மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டிலிருந்தும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்பட்டு வருகிறது. சென்னை, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் 2004 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட சங்கங்களின்மூலம் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் செயல்படுத்தப்படுகிறது.

## சிறப்புப் பள்ளிகள் செயல்படும் விதம்

6.6 தற்போது 408 சிறப்புப் பள்ளிகளில் 15,059 குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி பயில்கின்றனர். ஒவ்வொரு சிறப்புப் பள்ளியிலும் இரு ஆசிரியர்கள் மற்றும் ஒரு கைத் தொழில் ஆசிரியர் மற்றும் ஒரு எழுத்தர் ஆகியோர் நிருவகிக்கின்றனர். அரசு சாரா நிறுவனங்களால் சிறப்புப் பள்ளிகள் இயக்கப்படுகிறது. சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆரம்பக் கல்வித் திட்டம் மற்றும் மாவட்டப் பயிற்சிக் கல்வித் திட்ட அலுவலர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. குழந்தைகள் மூன்று நிலைகளில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். குழந்தைகள் விளையாட்டு முறையில் கல்வி கற்பிக்கப்பட்டு, பின்னர் முறையான கல்வி நிலையங்களுக்கு மாற்றப்படுகின்றனர். தன்னார்வத்துடன் கல்வி பயிற்றுவிக்கும் பணியினை நிறைவேற்றும் ஆசிரியர்களைக் கொண்டு சிறப்புப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன.



2005 ஏப்ரல் 4]

சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு சத்துணவு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் மாதந்தோறும் ரூ.100/– உதவித் தொகை வழங்கப்படுகிறது. சிறப்புப் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு இலவசப் பயண அட்டை மற்றும் சீருடை வழங்கப்படுகின்றன. சுகாதாரத் துறையின் ஒத்துழைப்புடன் முறையான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

## சிறப்புப் பள்ளி மாணவர்களை முறையான கல்வி பயில மாற்றுதல்

6.7 மாநிலக் கல்வித் துறையின் ஒத்துழைப்புடன் சிறப்புப் பள்ளிகளில் கல்வியினைத் தேர்வு பெற்ற மாணவர்கள் முறையான பள்ளிகளில் கல்வியினைத் தொடர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிறப்புப் பள்ளிகளில் ஒரு குறிப்பிட்ட அளவு கல்வி பயின்ற மாணவர்களை முறையான பள்ளிகளில் அதற்கு இணையான வகுப்புகளில் சேர்ப்பதற்கு பள்ளி நிறுவனத்தார்க்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் சிறப்புப் பள்ளியிலிருந்து முறையான பள்ளிகளுக்கு மாற்றப்படுகின்றனர். இவ்வாறு மாற்றப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து கல்வி பெறுவதை உறுதி செய்யும் வகையில் கண்காணிக்கப்படுகின்றனர். 2001 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 24,496 குழந்தைகள் முறையான பள்ளிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## சட்ட அமலாக்கம்

6.8 மாநிலத்தில் கீழ்க்காணும் சட்டங்களில் குழந்தைத் தொழிலாளர் துறை மற்றும் வேலைக்கு அமர்த்துதல் தொடர்பாக தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலை ஆய்வகத் துறை அதிகாரிகள் சட்ட விதிமுறைகளை அமலாக்கம் செய்துவருகிறார்கள்:–

1. குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986
2. தொழிற்சாலைகள் சட்டம், 1948
3. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961
4. பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966
5. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947
6. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

[2005 ஏப்ரல் 4

செயல் திட்டம் வகுக்கப்பட்ட பின், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான சிறப்பு இயக்கம் (திடீராய்வு, சிறப்பாய்வு, கூட்டாய்வு முதலியன) தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் துறையினரின் அமலாக்கப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக, பெருமளவில் நிறுவனங்களும்/தொழிற்சாலைகளும் அமலாக்க அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டன. 2003 ஆம் ஆண்டில் குற்றம் புரிந்த வேலையளிப்பவர்கள் மீது 1,650 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2004 ஆம் ஆண்டில் 2,143 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

அனைத்து மாவட்டங்களிலும் தொழிலாளர் ஆய்வர், தொழிற்சாலைகள் ஆய்வர், தொண்டு நிறுவனங்கள், மருத்துவர் அடங்கிய "மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் தடுப்புக் குழுக்கள்" அமைத்திட அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். தற்போது, அனைத்து மாவட்டங்களிலும் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இக்குழுக்கள் அடிக்கடி கூட்டாய்வுகள் மேற்கொள்கின்றன.

**விழிப்புணர்வு உருவாக்குதல்**

6.9 குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு சம்பந்தமாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்த, துண்டுப் பிரசுர வெளியீடு, சிறு நூல்கள், சுவரொட்டிகள் மற்றும் ஸ்டிக்கர்ஸ் வெளியிடப்பட்டன. பேருந்துகளில் விளம்பரத்தட்டிகள் மூலமாகவும், பொது இடங்களில் விளம்பரத்தட்டிகள் நிறுவியும் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு முறைக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது.

அரசாணை எண் 534, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12–5–2003–ல் ஜூன் 12 ஆம் தேதி "குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்" கடைப்பிடிக்க உத்தரவிடப்பட்டது. 12–06–2004 அன்று குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் அனைத்து மாவட்டங்களிலும் அனுசரிக்கப்பட்டது. கூட்டங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், தெருக் கூத்துகள், பேரணிகள், மனிதச் சங்கிலி போன்றவை அந்த தினத்தில் நடத்தப்பட்டன. ஸ்டிக்கர்ஸ், வாசகங்களுடன் கூடிய சுவரொட்டிகள் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக அச்சிடப்பட்டு, வாகனங்கள் மற்றும் பொது இடங்களில் ஒட்டப்பட்டன.



2005 ஏப்ரல் 4]

குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்த செய்திகளைத் தாங்கி, "குருத்து" என்ற தமிழ் இருமாத இதழ் வெளியிடப்படுகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை குறித்த விவரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் புதிய இணைய தளம் (www.childlabour.tn.gov.in) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான விருது**

6.10 குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் சிறப்பாகச் செயலாற்றும் மாவட்ட ஆட்சியர்களை ஊக்குவிக்க கேடயம் வழங்கி கௌரவிக்கும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 2003 ஆம் ஆண்டிற்கான சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான விருது கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டது.

**குழந்தைத் தொழிலாளர் அற்ற மாவட்டம்**

6.11 தங்கள் மாவட்டங்களை குழந்தைத் தொழிலாளர் அற்ற மாவட்டமாக அறிவிக்க கோரும் முன்மொழிவுகள் சிவகங்கை, இராமநாதபுரம், தஞ்சாவூர், பெரம்பலூர், திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இந்த முன்மொழிவுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

**'இண்டஸ்' திட்டம்**

6.12 இந்திய அரசும், அமெரிக்க ஐக்கிய நாட்டு தொழிலாளர் துறையும் குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான இந்திய அமெரிக்கக் கூட்டு அறிக்கை ஒன்றில் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் கையெழுத்திட்டன. இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில், இவ்விரு நாடுகளும் சேர்ந்து இந்திய அமெரிக்க திட்டம் (INDUS Project) உருவாக்கி, இத்திட்டத்திற்கான நிதியினை இந்திய அரசும் அமெரிக்க அரசும் வழங்குகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை முழுவதுமாக நீக்குவதற்காக பல்நோக்கு செயல்பாடுகள் கொண்ட திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் திருவண்ணாமலை, திருவள்ளூர், நாமக்கல், காஞ்சீபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயற்படுத்தப்படுகிறது.

[2005 ஏப்ரல் 4

**திட்டத்தின் பல்வேறு கூறுகள் மற்றும் வழிமுறைகள்**

- அபாயகரமான மற்றும் அபாயகரமற்ற தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களை அடையாளம் காணுதல்.
- குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களுக்கு மாற்றுக் கல்வி தருதல்.
- வளர் இளம்பருவத்தினருக்கு தொழிற் கல்வி அளித்தல்.
- குழந்தைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு வருவாய் ஏற்படுத்தி தரும் மாற்று ஏற்பாடுகள்.
- குழந்தைத் தொழிலாளர்களின் அடிப்படை கல்வி முறையினை வலுப்படுத்துதல்.
- குழந்தைத் தொழிலாளர்களை கண்காணித்தல் மற்றும் நெறிப்படுத்துதல்.
- சமூகக் கூட்டமைப்பு

202 இடைமாற்றுப் பள்ளிகளிலும் மற்றும் 42 தொழிற்பயிற்சி நிலையங்களிலும் முறையே 7,624 மற்றும் 985 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரசு சாரா நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், நிறுவன உரிமையாளர்கள், தொழிற்சங்கங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து குழந்தைத் தொழிலாளர் முறையை அபாயகரமான தொழில்களில் 2005 ஆம் ஆண்டுக்குள்ளும், அபாயகரமற்ற தொழில்களில் 2007 ஆம் ஆண்டுக்குள்ளும் முற்றிலுமாக குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றனர்.



2005 ஏப்ரல் 4]

## அத்தியாயம் – 7

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

7.1 தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பின்னர், 1978 ஆம் ஆண்டில் இந்த கல்வி நிலையம் முதன்மைக் கல்வி நிலையமாக உயர்த்தப்பட்டது. அரசுத் துறையாக செயல்பட்டு வந்த இந்நிலையம், பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 இன்கீழ் பதிவு செய்யப்பட்டு, 8–10–1987 முதல் தன்னாட்சி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகக்கொண்ட ஆட்சிமன்றக் குழு இந்நிறுவனத்தின் நிர்வாகத்தினை நிர்வகித்தும், வழிகாட்டியும் வருகிறது. தொழிலாளர் இணை ஆணையர் அல்லது தொழிற்சாலைகளின் இணைத் தலைமை ஆய்வாளர் இக்கல்வி நிலையத்தின் இயக்குநராகவும், ஆட்சிக்குழுவின் உறுப்பினர்–செயலராகவும் இருப்பார். இக்கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:–

1. ஆரோக்கியமான தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்குதல்
2. நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இணக்கமான நெருக்கத்தை தோற்றுவித்தல்
3. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல்
4. தொழிலாளர் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் மற்றும் புத்தகங்கள், வெளியீடுகள் மூலம் அறிவொளியினைப் பரப்புதல்
5. தொழிலாளர் மேலாண்மைத் துறையில் பட்டதாரிகளை உருவாக்குதல்

[2005 ஏப்ரல் 4

7.2 பொதுத் துறை மற்றும் தனியார் துறை தொழிலகங்களின் நிர்வாக அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்க தலைவர்கள், தொழிற்சாலைத் துறை அலுவலர்கள் ஆகியோர்களுக்கு ஏற்ப இக்கல்வி நிலையம் காலமுறை தோறும் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் / கருத்தரங்குகள் / புத்தாக்கப் பயிற்சிகள் / புத்தறிவுப் பயிற்சிகள் ஆகியவற்றை நடத்தி வருகிறது.

7.3 இக்கல்வி நிலையம், தொழிலாளர்கள், நிறுவனப் பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர் / தொழிற்சாலைகள் துறை அலுவலர்கள் ஆகியோர் பயன் பெறும் வகையில் கீழ்க்காணும் சட்டங்கள் தொடர்பான கருத்தரங்குகள் / பயிற்சிகளை நடத்தி வருகிறது:–

1. கடைகள், உணவு நிறுவனங்கள், போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் பிற தொழிலாளர் நலச் சட்டங்கள்.
2. தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிலாளர் நலச் சட்டங்கள்.

7.4 இதைத்தவிர, இக்கல்வி நிலையம் குன்னூர் தேயிலை வாரியத்துடன் இணைந்து, அதன் தொழிலாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தோட்ட தொழிலாளர் சட்டங்கள் அமல்படுத்தும் தொழிலாளர் நல அலுவலர்கள் ஆகியோருக்கு கீழ்க்காணும் தலைப்புகளில் பயிற்சிகளை நடத்தியது:–

1. தோட்டத் தொழிலாளர்களுக்கு கல்விப் பயிற்சி.
2. தேயிலைத் தோட்டம் மற்றும் தொழிற்சாலைகளின் நிர்வாக நடைமுறைகளில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தொழிலாளர் தலைவர்களின் பங்கு.
3. தோட்டத் தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்தும் தொழிலாளர் துறை அலுவலர்களுக்கான பயிற்சி.

7.5 இத்துடன், இக்கல்வி நிலையம், நொய்டாவிலுள்ள வி.வி. கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிலையத்துடன் இணைந்து உப்பளத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நடத்தியுள்ளது. இக்கல்வி நிலையம், தமிழ்நாடு கட்டுமானத்



2005 ஏப்ரல் 4]

தொழிலாளர் நல வாரியத்துடன் இணைந்து கட்டுமானத் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது.

7.6 இக்கல்வி நிலையம், 84 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள் அளித்ததின்மூலம் 3,484 பேர் பயனடைந்துள்ளனர்.

7.7 இக்கல்வி நிலையம், சிவகங்கை மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் சம்பந்தமான மதிப்பாய்வு செய்து, திறனாய்வு அறிக்கையை தொழிலாளர் நல ஆணையருக்கு சமர்ப்பித்துள்ளது.

7.8 மேலும், இக்கல்வி நிலையம் ஓராண்டு பகுதிநேர தொழிலாளர் நிர்வாக முதுநிலைப் பட்டயப் படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ), தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பும் [பி.ஏ. (எல்.எம்.)] மற்றும் தொழிலாளர் மேலாண்மை முதுகலைப் பட்டப் படிப்பும் [எம்.ஏ. (எல்.எம்.)] முழுநேரப் படிப்பு. சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வி நிலையம், 2001 முதல் முழுநேரம் மற்றும் பகுதி நேர முனைவர் ஆராய்ச்சி (பி.எச்.டி.) நடத்துவதற்கு சென்னைப் பல்கலைக்கழகத்தால் ஓர் ஆராய்ச்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் நுழைவுத் தேர்வின் வாயிலாக ஆண்டு ஒன்றுக்கு தொழிலாளர் மேலாண்மை இளங்கலைப் பட்டப் படிப்பில் 50 மாணவர்களும், தொழிலாளர் மேலாண்மை முதுகலைப் பட்டப்படிப்பில் 40 மாணவர்களும், தொழிலாளர் நிருவாக முதுகலைப் பட்டயப் படிப்பில் 65 மாணவர்களும் சேர்க்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

7.9 பட்டம்/பட்டயப் படிப்பு முடித்து தேர்ச்சி பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| பி.எல்.எம். | 46 |
| எம்.எல்.எம். | 32 |
| பி.ஜி.டி.எல்.ஏ. | 25 |
| மொத்தம் | 103 |

[2005 ஏப்ரல் 4

7.10 பட்டம்/பட்டயப் படிப்புகளில் தற்போது சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை:

| | |
|---|---|
| பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) | 50 |
| எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) | 31 |
| பி.ஜி.டி.எல்.ஏ. | 33 |
| பி.எச்.டி. | 03 |

7.11 24-9-2004 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்ட பட்டம் / பட்டயச் சான்றிதழ்களின் எண்ணிக்கை

| ஆண்டு | பி.எல்.எம் | எம்.எல்.எம் | பி.ஜி.டி.எல்.ஏ. |
|---|---|---|---|
| 1999 | 11 | 11 | 09 |
| 2000 | 17 | 15 | 03 |
| 2001 | 22 | 15 | 16 |
| 2002 | 27 | 14 | 14 |
| 2003 | 37 | 19 | 09 |
| மொத்தம் | 114 | 74 | 51 |



2005 ஏப்ரல் 4]

## அத்தியாயம்–8

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

### நிர்வாகம்

8.1 தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல், தொழிலாளர்களின் உடல் நலன் பாதுகாத்தல், தொழிலாளர் நலனைப் பாதுகாத்தல் ஆகிய பணிகளில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் முக்கிய பங்கினை வகிக்கிறார்.

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் இரு முக்கிய செயல்பாடுகள் வருமாறு:

1. முறைப்படுத்தும் செயல்பாடு – இத்துறை, தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர 13 தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துகிறது.
2. பாதுகாப்பு மற்றும் உடல் நலப்பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடு.

நிர்வாகம் மற்றும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்துவது தொடர்பான பணிகளுக்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் பொறுப்பு வகிக்கிறார்.

### முறைப்படுத்தும் செயல்பாடு

### ஆய்வுகள்

8.2 தொழிலகங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல் நலம், நல வசதிகள் போன்றவற்றை 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் முறைப்படுத்துகிறது. அபாய செயல்முறைகள் இல்லாத, சிறு தொழில் நிறுவனச் சான்று பெற்ற தொழிற்சாலைகள், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து பாதுகாப்பு, சுகாதாரம், தொழிலாளர் நலம் மற்றும் தொடர்புடைய பொருள்கள் குறித்து புகார்கள் ஏதும் பெறப்படாத நிலையில், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன.

[2005 ஏப்ரல் 4

எனினும், உடல்நலம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டி, அபாய செயல்முறைகள் அடங்கிய தொழிற்சாலைகள், சிறு தொழில் நிறுவனச் சான்று பெற்றிருந்தாலும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. அதைப்போலவே, தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் அபாயம் மிகுந்த பணியைக் கருத்தில் கொண்டு, அவை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. இதுபோன்ற வழக்கமான ஆய்வுகள் தவிர, பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் நல வசதிகள் குறித்து சீரான கண்காணிப்பு மேற்கொள்ள, சிறப்பு ஆய்வுகள், விடுமுறை நாள் ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆய்வுகள்மூலம் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை மேற்கொள்ளும் திறம்பட்ட நடவடிக்கைகள்மூலம், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் சிறந்த பணிச் சூழலைக் கண்காணிக்கிறது.

**பட்டாசுத் தொழிற்சாலைகளில் சிறப்புக் குழு ஆய்வு**

8.3. பட்டாசுத் தொழிற்சாலைகளில், தீபாவளிப் பண்டிகை காலத்தில் பட்டாசு அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதுபோன்ற காலங்களில் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வெடிவிபத்துகள் மற்றும் விபத்துகள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, பட்டாசுத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பான பணி நிலையையும், வேலைமுறையையும் கண்காணிப்பதற்காக வழக்கமான ஆய்வுகள் தவிர, சிறப்புக்குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி சிறப்பு ஆய்வுகள் காரணமாக, சிவகாசியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் 2004 ஆம் ஆண்டில், பண்டிகை காலத்தில் பெரும் தீ விபத்துகளோ வெடி விபத்துகளோ ஏற்படவில்லை.

**தொழிலக விபத்துகள்**

8.4. பாதுகாப்பு ஆய்வு மற்றும் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் போன்று அதிக அளவில் பாதுகாப்பு மேம்பாட்டு பணிகளை செயல்படுத்துவதால், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும் விபத்துகள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 4]

2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் நடந்த விபத்துகளின் விவரம்:

| வருடம் | பதிவு பெற்ற மொத்தத் தொழிற்சாலைகள் எண்ணிக்கை | பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் உள்ள மொத்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை | மரண விபத்து | மரணமற்ற விபத்து |
|---|---|---|---|---|
| 2002 | 32,723 | 12,37,653 | 36 | 2,136 |
| 2003 | 34,071 | 12,56,120 | 35 | 1,908 |
| 2004 | 34,520 | 12,70,599 | 40 | 1,838 |

**புகார் விசாரணை**

8.5. 2004 ஆம் ஆண்டில் 818 புகார்கள் பெறப்பட்டன. அவை அனைத்தும் விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தொழிலாளர் மற்றும் தொழிற் சங்கங்களின் குறைகளை களைய தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளரால் சென்னையிலும், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் மாவட்டங்களிலும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் ஒவ்வொரு மாதமும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

**பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தடுப்பு**

8.6. தொழிற்சாலைகள் சட்டம், 1948 அட்டவணை I-ன்படி, 29 செயல்முறைத் தொழில்கள் ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்களாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சில இரசாயனத் தொழிற்சாலைகளில் ஏற்படும் கட்டுப்படுத்த இயலாத எதிர்விளைவுகள் அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், அருகில் வசிக்கும் பொது மக்களுக்கும் அபாயத்தை விளைவிப்பதுடன், சுற்றுச்சூழலையும் பாதிக்கக்கூடும். நமது மாநிலத்தில் இத்தகைய 131 தொழிற்சாலைகள் 'பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள்' என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தொழிற்சாலைகளின் செயல்முறைப் பாதுகாப்பு குறித்து ஆய்வகத் துறை தனிக் கவனம் செலுத்துகிறது. 1988 ஆம் ஆண்டு, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் "பெரும் விபத்து மற்றும் பேரபாய தடுப்புப் பிரிவு" ஒன்று,

[2005 ஏப்ரல் 4

தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளரின் தலைமையில் உருவாக்கப்பட்டது. இப்பிரிவு அபாயம் விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளின் நிருவாகத்துக்கு தக்க பாதுகாப்பு செயல்முறைகளை பரிந்துரைக்கிறது. அவை நிர்வாகத்தினரால் கடைபிடிக்கப்படுகின்றனவா என்பதை இத்துறையின் கள அலுவலர்கள் கண்காணிக்கின்றனர்.

2004 ஆம் ஆண்டு வரை, பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளிலிருந்து 131 உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் பெறப்பட்டு, அவற்றில் 107 திட்டங்கள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு, மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பாளர்களாகவும், தொழிற்சாலைகள் உள்ளிருப்பு அவசர கால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். எதிர்பாராத இரசாயன விபத்துகள் மாநிலத்தில் ஏற்படும்போது திட்டமிடுதல், முன்னேற்பாடு, தடுத்தல் ஆகியவற்றில் மாநில அரசுக்கு உதவிட 23-04-1998 தேதியிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, அரசாணை (நிலை) எண் 109-ல் மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நெருக்கடி நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் அலுவலர்கள், மாவட்ட மற்றும் உள்ளூர் அளவிலான நெருக்கடி நிலைக் குழுக்களில் உறுப்பினர்-செயலாளர்களாக உள்ளனர். மாநில அளவிலான நெருக்கடி நிலைக் குழுவிற்கு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் உறுப்பினர்–செயலாளராகவும் இருக்கிறார்.

அபாயநிலை அவசரக் காலகட்டத்தில் இன்றைய நிலைக்கேற்ப தேவையான முன்னேற்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் அளவு குறித்து மதிப்பீடு செய்வதற்காக தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்களின் முன்னிலையில் பேரபாயத் தொழிற்சாலைகளில், மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2004 ஆம் ஆண்டில், இதுபோன்ற 60 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட நடவடிக்கைகள் தவிர, பாதுகாப்பு செய்முறையை உறுதி செய்திட, ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழிற்சாலைகளிலிருந்து பாதுகாப்பு அறிக்கைகள் கோரப்பட்டு, இத்துறையால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 41–அ–வில் குறிப்பிட்டுள்ளபடி, மனை மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு "பெரும் விபத்து



2005 ஏப்ரல் 4]

மற்றும் பேரபாயம்" விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்து, இத்தொழிற்சாலைகள் அமைப்பதற்கான அனுமதி வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது. 2004 ஆம் ஆண்டில் இது தொடர்பான மூன்று விண்ணப்பங்கள் மனை மதிப்பீட்டுக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டன. அரசு அனுமதி அளிக்கும்போது சில நிபந்தனைகளை விதிக்கிறது. அரசு விதிக்கும் நிபந்தனைகளைக் கடைபிடிப்பதற்கான அனைத்து தொடர் நடவடிக்கைகளும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு, தொடக்க நிலையிலிருந்தே ஆலைப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.

## குறைந்தபட்ச ஊதியம் உறுதி செய்ய ஆய்வுகள்

8.7. ஆண்டுதோறும் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டில், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் 43 நீதிமன்ற வழக்குகளும், 130 கோரிக்கை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

## குழந்தைத் தொழிலாளர் பணி முறை நீக்குதல்

8.8. தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 67-ன்படி, தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணி முறையை நீக்குதல் தொடர்பாக, இத்துறை மிகவும் கண்டிப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி, சட்ட விதிகளைக் கடைபிடிக்கத் தவறிய தொழிற்சாலை நிர்வாகங்கள்மீது, தொழிற்சாலை சட்டப் பிரிவு 92-ல் விதிக்கப்படும் தண்டனையைவிட, கடுமையானதாகக் கருதப்படும் குழந்தைத் தொழிலாளர் சட்டத்தின் பிரிவுகள் 14 மற்றும் 15-ன்கீழ் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இவ்வாறாக, 2004 ஆம் ஆண்டு, 117 வழக்குகள் தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 67–ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ரூ. 8,52,550/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கமான ஆய்வுகளைத் தவிர, பிரதி மாதமும் சிறப்பு ஆய்வுகள் நடத்தி, ஊறு விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்துதலைத் தடுப்பதற்கு சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது இதுபோன்ற ஆய்வுகள் மேற்கொள்ளும் பணி அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் 2,179 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இதர தொழிலாளர் நலச் சட்டங்கள்

8.9. சம்பளப் பட்டுவாடாச் சட்டம், தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைச் சட்டம், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், பிழைப்பூதியச் சட்டம், ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (நிரந்தரத் தகுதி வழங்குதல்) சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் அமல்படுத்தப்படுகின்றன.

## பாதுகாப்பு மற்றும் உடல்நலம்–பயிற்சி மற்றும் மேம்பாடு

## தொழில் முறை சுகாதார மேம்பாடு

8.10. இரசாயனத் தொழிற்சாலைகளில் கையாளப்படும் இரசாயனப் பொருட்களின் நச்சுத் தன்மையால் தொழிலாளர்களின் உடல் நலத்திற்கு ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்தவும், உடல் நலம் மற்றும் சுகாதார மேம்பாடு குறித்துக் கண்காணிக்கவும், சீர்படுத்தவும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவ அலுவலர்கள், தொழிற்சாலைகளில் சுகாதார ஆய்வுகள் மற்றும் கடும் மருத்துவ கண்காணிப்புகள் மேற்கொண்டு, அதன்வழி தொழிலாளர்களின் நல்வாழ்வு குறித்து மருத்துவ மற்றும் தடுப்பு நடவடிக்கைகளையும் வழிவகைகளையும் தெரிவித்து வருகிறார்கள்.

இத்துறையில் தலைமை மருத்துவ அலுவலர் (தொழிற்சாலைகள்) தலைமையில் இயங்கிவரும் தொழில் நலவியலகம், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார சீர்கேடு விளைவிக்கும் தன்மையுள்ள அமோனியா, குளோரின், சல்பர்–டை–ஆக்ஸைடு, ஹட்ரஜன் சல்பைடு போன்ற இரசாயனப் பொருட்களால் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் உடல் நலம் பாதிக்கப்படுவதை கண்காணிக்கிறது. இரசாயனப் பொருட்களினால் ஏற்படக்கூடிய உடல் நலம் மற்றும் சுகாதாரக் கேடுகளை கண்டறிந்து, தேவையான உடல் நல ஆலோசனைகள் இந்த ஆய்வகத்தால் வழங்கப்படுகின்றன. ஒலி, தூசி, உஷ்ண அழுத்தம் மற்றும் ஒளி விலக்கம் போன்ற பௌதீக காரணிகளால் உண்டாகக்கூடிய விளைவுகள் குறித்தும் இந்தத் தொழில் நலவியல் ஆய்வகம் ஆய்வு மேற்கொள்கிறது.

தொழிற்சாலைகளில் ஏற்படும் அதிகப்படியான இரைச்சல் காரணமாக அங்கு பணிபுரியும் தொழிலாளர்களது காதுகள் செவிடாகும் வாய்ப்பு ஏற்படுவதுடன், அவர்களின் மனநிலை பாதிக்கப்படுவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. பணி செய்யும் இடங்களில் ஏற்படும் இரைச்சல் தொடர்பான பிரச்சினையை எதிர்கொள்ள இத்துறை சீரிய முயற்சிகளை



மேற்கொண்டுள்ளது. தொழிற்சாலைகளின் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் சத்தத்தினை அளவீடு செய்ய, தொழிற்சாலைகள் ஆய்வாளர்களுக்கு ஒலி அளப்பான் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதிக இரைச்சலால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற பகுதியில் இத்துறை ஆய்வாளர்கள் ஆய்வின்போது அந்த சத்தத்தினை அளவீடு செய்து, தொழிலாளர்களை அந்த இரைச்சலிலிருந்து பாதுகாக்க பொறியியல் தடுப்புமுறைகளை கையாளும்படி நிருவாகத்துக்கு ஆலோசனை வழங்கி வருகிறார்கள்.

## மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்குதல்

8.11. தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு ஆண்டுதோறும் பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. தொழிற்சாலைகள் செயல்பட்ட மனித நேரங்கள் அடிப்படையில், அவை 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முந்தைய ஆண்டினை ஒப்பிடுகையில் விருது வழங்கும் ஆண்டில் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் விளைவாக ஏற்பட்ட, பணிபுரிந்த மனித நேரங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்ட குறைவான விபத்து விகிதம், நடப்பு ஆண்டில் ஏற்பட்ட குறைவான விபத்து நிகழ்வு எண்ணிக்கை, மிக அதிகமாக விபத்து நிகழா மனித நேரங்கள் போன்ற காரணிகளின் அளவீடுகளை சீர்தூக்கி, இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், முதல் பரிசாக ரூ.2,500/– மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும், இரண்டாம் பரிசாக ரூ.1,500/– மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

அதைப்போன்று, விபத்து தடுப்பு நடவடிக்கையில் முக்கியப் பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும்வண்ணம், ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைப் பற்றி பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு, இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

04–03–2005 அன்று 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளுக்கான உயர்ந்த உழைப்பாளர் விருது மற்றும் மாநில பாதுகாப்பு விருதுகள், முறையே தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் வழங்கப்பட்டன. 67 தொழிலாளர்களுக்கு உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் வழங்கப்பட்டன. மேலும், மாநில பாதுகாப்பு விருதுகள் 145 தொழிற்சாலைகள் நிர்வாகத்தினருக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டது:–

[2005 ஏப்ரல் 4

| பரிசு | 2001 | 2002 |
|---|---|---|
| முதல் பரிசாக ரூ. 2500/– பெறுமான வெள்ளிக் கேடயமும் சான்றிதழும் பெற்ற தொழிற்சாலைகள் எண்ணிக்கை. | 56 | 59 |
| இரண்டாம் பரிசாக ரூ. 1500/– பெறுமான வெள்ளிக் கேடயமும் சான்றிதழும் பெற்ற தொழிற்சாலைகள் எண்ணிக்கை. | 44 | 48 |
| மூன்றாம் பரிசாக சான்றிதழ் பெற்ற தொழிற்சாலைகள் எண்ணிக்கை. | 38 | 38 |

**தீப்பெட்டி–பட்டாசு தொழிலாளர்களுக்கான தொகுதி தனி நபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம்**

8.12. தமிழ்நாட்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக தொகுதி தனி நபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்து காரணமாக பார்வை, கை, கால் இழப்பு அல்லது இறப்பு நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதிப் பயன், தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துகளுக்கு மட்டுமின்றி, 24 மணி நேர அடிப்படையில் மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ், இறப்பு நேரிட்டால் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/– வழங்கப்படும். 2003 ஆம் ஆண்டு வரை தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 1,30,948 தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், 2004 ஆம் ஆண்டில் 20,565 தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். 2004 ஆம் ஆண்டில் ரூ.8,40,000/– ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**பயிற்சி மற்றும் கருத்தரங்கு**

**பாதுகாப்புப் பயிற்சிப் பணி**

8.13. தொழிலகங்களில் விபத்துகளின் நிகழ்வுகளைத் தடுத்திடும் பொருட்டு தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் பாதுகாப்புப் பற்றிய சரியானதொரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட பயிற்சிப் பணிகளை மேற்கொள்வதும் இன்றியமையாததாகிறது. இத்தகைய பயிற்சிகளை விபத்துகள் அதிகம் நிகழும் தொழிற்சாலைகளில் இத்துறை அளித்து வருகின்றது.



2005 ஏப்ரல் 4]

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கவும், பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தொழிற்சாலை வளாகத்திலேயே, கட்டணம் ஏதுமின்றி பயிற்சி வகுப்புகள் காலமுறை தோறும் நடத்தப்படுகின்றன. தமிழில் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களாலும், நிர்வாகத்தினராலும் பெரிதும் வரவேற்கப்பட்டு, தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினரிடையே பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்தி, அதன்மூலம் விபத்துகளைக் குறைப்பதற்கு துணைபுரிந்துள்ளன. 2004 ஆம் ஆண்டில், 289 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 8,976 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**பாதுகாப்புக் கருத்தரங்குகள்**

8.14. இத்துறையால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளன்றி, தொழிலக பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய பாதுகாப்புக் குழுமம் போன்ற அரசுசாரா தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் மண்டல தொழிலாளர் கல்வி நிலையம் போன்ற அரசுத் துறை நிறுவனங்களுடன் இணைந்து, தொழிற்சாலை நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பாதுகாப்பு விழிப்புணர்வு பெறும் வண்ணம் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. எதிர்காலத்தில், தேசிய பாதுகாப்புக் குழுமம் மற்றும் இந்திய இழப்புத் தடுப்பு நிறுவனம் போன்ற இதர நிறுவனங்களுடன் இணைந்து பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இத்துறை உத்தேசித்துள்ளது.

**மாநில அளவிலான பாதுகாப்பு தணிக்கைக் குழு**

8.15. பெருவிபத்து மற்றும் இடர் மிகுந்த தொழிற்சாலைகளில் இருந்து ஆண்டுதோறும் பெறப்படும் பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளை கூர்ந்தாய்வு செய்யும் நோக்குடன் மாநில அளவிலான பாதுகாப்பு தணிக்கைக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் மேற்குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்கி வருகிறது.

இக்குழு, இதுவரை 41 கூட்டங்களை நடத்தியுள்ளது. 48 பெரும் விபத்து மற்றும் இடர்மிகு தொழிற்சாலைகளில் இருந்து பெறப்பட்ட பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்து, அதன் பரிந்துரைகள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மூலமாக சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினருக்கு அனுப்பப்படுகிறது. அதன்படியே நிர்வாகத்தினர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

## மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழு

8.16. மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழுவின் மூன்று முக்கிய செயல்பாடுகளாவன:—

1. தேவையான பயிற்சிகளை அளிப்பதுடன், சம்பந்தப்பட்ட நபர்களைப் பயிற்றுவிப்பதன்மூலம், பலதிறப்பட்ட, பல்வேறு சிந்தனையுள்ளவர்களுக்கிடையே ஏற்படும் இடைவெளியைக் கணிசமாகக் குறைத்து, தொடர்பு ஏற்படுத்துவதோடு, தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கிடையே இணக்கமான சூழ்நிலையை உருவாக்குதல்.

2. உற்பத்தி மற்றும் பாதுகாப்பு போன்ற பொருட்பாடுகள் இரண்டும் ஒன்றோடொன்று பிணைந்தவை, மற்றும் ஒன்றை மற்றொன்று சார்ந்து இருப்பது ஆகும் மற்றும் ஒன்றின் பயன் மற்றொன்றிற்கு என்று இருவகையிலும் பரஸ்பரம் பரிமாற்றத்திற்குட்பட்டது என்ற எண்ணத்தை உருவாக்குதல்.

3. இப்பிரிவின் நடவடிக்கைகளை வரும் ஒவ்வோர் ஆண்டிலும், விரிவுபடுத்தி பெரும்பயனை எய்துவதற்கு இயலும் பொருட்டு, அரசு, நிருவாகம், தொழிலதிபர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகள் ஆகியோரை ஒருங்கிணைத்துச் செயல்படுதல்.

## நவீனமயமாக்குதல்

8.17. நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய அளவிலான தொழில் வளர்ச்சியினாலும், நவீன தொழில்நுட்பங்களுடன் பல்வேறு தொழிற்சாலைகள் துவங்கப்படுவதாலும் ஆலைப் பாதுகாப்பும், தொழிலாளர் பாதுகாப்பும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. இத்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் தற்கால தொழில்நுட்ப மேம்பாட்டுக்கேற்ப, தங்களுடைய தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இக்குறிக்கோள்களுடன் இத்துறையின் செயல்பாடுகள் கணினி, தகவல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பயிற்சி முறைகள்மூலம் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், நிர்வாகம், தொழில்நுட்பத் திறமை, பயிற்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, தொலைநோக்குப் பார்வையுடன் நவீன செயல்பாடுகள் குறித்த எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

8.18. மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட "கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணிவரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி



நிலைமைகள்) சட்டம், 1996"-ன்கீழ் தமிழ்நாடு விதிகள் இயற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விதிகள் உருவாக்கப்பட்டு, அறிவிக்கை செய்யப்பெற்ற பின்னர், இவ்விதிகளின்கீழ், கட்டட மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடற் சுகாதாரம் மற்றும் இதர நலன்களை உறுதி செய்திட அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## மின் ஆளுகை முறை (இ-கவர்னன்ஸ்)

8.19. இத்துறையில் மின் ஆளுகை (e-Governance) முறையை சிறப்பான வகையில் செயல்படுத்தும்பொருட்டு, இத்துறையின் பணிகளை ஆய்ந்தறிந்து தேசிய தகவல் மையம் அறிக்கை கொடுத்துள்ளது. அவ்வறிக்கையின்படி, இத்துறையின் சார்நிலை அலுவலகங்களை தலைமை அலுவலகத்துடன் Network மூலம் இணைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், துரிதமாக இத்துறையின் செயல்பாடுகள் அமைய தேசிய தகவல் மையத்தின் ஆலோசனையோடு, ஒரு புதிய மென்பொருள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 100-கீழ், நிர்வாகத்தினர் பயன்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை வரையறுக்கப்பட்டு அரசு ஆணை எண் 257, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (எம்2) துறை, நாள் 16-08-2004-ல் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில், தொழிற்சாலை நிர்வாகத்தினர் ஐந்து தொழிலாளர் நலச் சட்டங்களில் உள்ள ஆண்டறிக்கைகளுக்கு பதிலாக, ஒரே ஆண்டறிக்கையாக எளிதாகவும், துரிதமாகவும் சமர்ப்பிக்க ஏதுவாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

## குறிப்பிடத்தக்க சாதனைகள்

8.20. ஆய்வகத் துறையின் அனைத்துப் பணிகளிலும் பாராட்டத்தக்க வளர்ச்சியை இத்துறையின் செயலாக்க அறிக்கையில் காண முடிகிறது. 2003 ஆம் ஆண்டில், 12,56,120 தொழிலாளர்களுடன், 34,071 ஆக இருந்த பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, 2004 ஆம் ஆண்டில் 12,70,599 தொழிலாளர்களுடன், 34,520 ஆக அதிகரித்துள்ளது. 2004 ஆம் ஆண்டில் 29,388 முறையான ஆய்வுகளும், 879 சோதனை ஆய்வுகளும், 295 திடீர் ஆய்வுகளும், 7,762 சிறப்பு, விடுமுறை மற்றும் இரவு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் சிறப்பு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முயற்சியினால் 43 நீதிமன்ற வழக்குகளும், 130 கேட்பு மனுக்களும் இச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## அத்தியாயம்–9

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம்

### முன்னுரை

9.1. உழைக்கும் வர்க்கத்திற்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் மத்திய அரசு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டத்தினை இயற்றியுள்ளது. கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் மேற்கண்ட சட்டங்களின்கீழ் வகுக்கப்பட்டு மத்திய அரசின்கீழ் செயல்படும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தினால் அமல்படுத்தப்படுகின்றன:–

1. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952.
2. தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995.
3. தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976.

### தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952

9.2. 01–11–1952 முதல் இத்திட்டம் அமலுக்கு வந்தது. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டம், குறிப்பிட்ட 180 தொழிற்சாலை / தொழிற்பிரிவுகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு பொருந்துவதாகும். அதிக நிறுவனங்களையும் மற்றும் அவற்றின்கீழ் வேலைவாய்ப்பு பெற்றுள்ள தொழிலாளர்களையும் சமூகப் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரும் நோக்கத்துடன், இச்சட்டம் மற்றும் திட்டம் இரண்டும் அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டன. அறிவிக்கப்பட்ட தொழிற்சாலை / தொழில் நிறுவனங்களில் 20 மற்றும் அதற்கு மேலும் பணி புரியும் எந்த ஒரு தொழிற்சாலையும் அது அமைக்கப்பெற்ற நாளிலிருந்து இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். மாதம் ரூ. 6,500/– ஊதியம் பெறும் தொழிலாளர்கள் அனைவரும் இத்திட்டத்தில் உறுப்பினராவதற்கு தகுதியுடையவராவர்.

9.3. 31–01–2005 அன்றுள்ளபடி தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மண்டலத்தில், இச்சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை 53,285 ஆகும். உறுப்பினர்களின் எண்ணிக்கை 45,81,341 ஆகும்.



9.4. இத்திட்டத்தின்கீழ் உறுப்பினராக ஒருவருக்கு அவரது கணக்கில் நிலுவையில் உள்ள சந்தாத் தொகைக்கு (வேலையளிப்போர் பங்கு உட்பட) ஆண்டு வருமானப் பங்கீட்டுப் பயன் வட்டியாக வழங்கப்படுகிறது. 1952–53-ல் ஆண்டுக்கு 3 சதவீதமாக இருந்த வட்டி வீதம் தற்சமயம் 8.5 சதவீதமாக வழங்கப்படுகிறது. இந்த வட்டி வீதம் 9.5 சதவீதமாக அதிகரிக்கப்படவுள்ளது.

9.5. வருங்கால வைப்பு நிதியில் குறைந்தபட்ச உறுப்பினர் காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர், உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட காரணங்களுக்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம் வழங்கப்படுகிறது:

1. உறுப்பினரின் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கு சந்தா செலுத்துவதற்காக.
2. உறுப்பினர் மற்றும் அவருடைய குழந்தைகள், சகோதரர் / சகோதரி ஆகியோரின் திருமணச் செலவுக்காக.
3. குழந்தைகளின் உயர்கல்வி.
4. வீடு/மனை வாங்கிட.
5. வீடு கட்ட வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த.
6. உடல் நலமின்மைக்கான செலவை மேற்கொள்ள.
7. தற்காலிகமாக வேலையில்லாதபோது ஏற்படும் செலவை மேற்கொள்ள.
8. உடல் ஊனமுற்றோருக்கு தேவையான சாதனங்கள் வாங்கிட.
9. இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் செலவுகளைச் சமாளித்தல்.
10. ஓய்வு பெறுவதற்கு ஒரு வருடத்திற்கு முன் 90% தொகையினைப் பெறுதல்.

9.6. இத்திட்டத்தின் உறுப்பினராக உள்ள ஒருவர் கீழ்க்காணும் நேர்வுகளில் அவருடைய பங்குத் தொகையை இறுதியாக முழுவதுமாக திரும்பப் பெற உரிமை உடையவராகிறார்:–

1. 55 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது.
2. நிரந்தரமாக மற்றும் முழுவதுமாக பணி செய்ய இயலாதபோது.

[2005 ஏப்ரல் 4

3. தானாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் பணி முடிவு செய்யப்படும்போது அல்லது ஆட்குறைப்புச் செய்யப்படும்போது.

4. சில சூழ்நிலைகள் காரணமாக உறுப்பினர் தகுதியை இழந்துவிடும்போது.

9.7. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952-ன்கீழ் கடந்த ஆண்டுகளில் உறுப்பினர்களுக்கு பல்வேறு இனங்களில் தீர்வு செய்யப்பட்டுள்ள நேர்வுகள் குறித்த விவரம் கீழ்வருமாறு:—

| | 2002–03 | 2003–04 | 2004–05 01/05 வரை |
|---|---|---|---|
| இறுதியாக தீர்வு செய்யப்பட்ட வருங்கால வைப்பு நிதி நிலுவைகள் | | | |
| தீர்வு செய்யப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | 3,18,644 | 4,08,263 | 2,68,247 |
| தீர்வு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | 75,134.08 | 80,865.00 | 59,412.13 |
| பகுதி திரும்பப் பெறுதல் / முன்பணம் | | | |
| ஒப்பளிக்கப்பட்ட நேர்வுகள் | 75,555 | 95,168 | 51,321 |
| ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | 26,701.64 | 24,645.18 | 4,276.28 |
| கணக்கு மாற்றங்கள் | | | |
| மாற்றல் செய்யப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | 20,564 | 28,944 | 22,849 |

**தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995**

9.8. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டம், 1952-ன்கீழ் 16–11–1995 அன்று வகுக்கப்பட்டது. வேலையளிப்போர், தொழிலாளர் ஆகியோர் வருங்கால வைப்பு நிதிக்கு அளிக்கும்



2005 ஏப்ரல் 4]

தொகையில் ஒரு பகுதி, அதாவது ஊதியத்தில் ரூ 1–1/6 இந்நிதிக்கு செலுத்தப்படுகிறது. மேலும், மத்திய அரசு ரூ. 1–1/6 ஊதியத்தை தனது பங்களிப்பாக செலுத்துகிறது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடிய பயன்கள் வருமாறு:–

| வரிசை எண் | தகுதி | ஓய்வூதிய வகை |
|---|---|---|
| 1 | பணியில் இருந்தாலும், இல்லாவிடினும் 58 வயது நிரம்பியுள்ளதன்பேரில் | வயது முதிர்வு ஓய்வூதியம் |
| 2 | 50 வயதிற்கு மேல், 58 வயதிற்குக்கீழ் பணியை விட்டுச் சென்றிருந்தால் | குறைக்கப்பட்ட ஓய்வூதியம் |
| 3 | முழுமையாக மற்றும் நிரந்தரமாக இயலாமை அடைந்ததன்பேரில் பணியை விட்டுச் சென்றிருந்தால் | இயலாமை ஓய்வூதியம் |
| 4 | உறுப்பினர் இறந்து விடுவதன் பேரில் | விதவை – குழந்தைகள் ஓய்வூதியம் |
| 5 | பெற்றோர் இறந்து விடுவதன்பேரில் / அல்லது உறுப்பினர் இறந்த பிறகு தம்பதியர்களில் ஒருவர் மறுமணம் செய்து கொள்வதன்பேரில் | அனாதை ஓய்வூதியம் |
| 6 | உறுப்பினர் இறந்து விடுவதன்பேரில், உறுப்பினர் இறந்து விடும் நாளன்று தம்பதியரில் ஒருவர் அல்லது 25 வயதுக்குக் குறைவாக உள்ள தகுதிவாய்ந்த குழந்தைகள் இல்லாதபோது | நியமனதாரர் ஓய்வூதியம் |
| 7 | உறுப்பினர் இறந்து விடுவதன்பேரில், தம்பதியரில் ஒருவர் அல்லது தகுதி வாய்ந்த குழந்தை மற்றும் தகுதிவாய்ந்த வாரிசில்லாத போது | நியமனதாரரின் தந்தைக்கும் தொடர்ந்து தாய்க்கும் ஓய்வூதியம் |
| 8 | உறுப்பினர் இறந்து விடுவதன்பேரில் நிரந்தரமாக இயலாமை பெற்ற மகன் அல்லது மகள் இருந்தால் | இயலாமை பெற்ற குழந்தைகளுக்கான ஓய்வூதியம் (குடும்பத்திலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் வயது எதுவாயினும்) |

[2005 ஏப்ரல் 4

9.9. தமிழ்நாடு மண்டலத்தைப் பொறுத்தவரை தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் மண்டல, துணை மண்டல கணக்கு அலுவலகங்கள் மூலம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் அளிக்கப்படும் ஓய்வூதியர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு:—

**31–01–2005-ல் உள்ள ஓய்வூதியர்களின் எண்ணிக்கை**

| உறுப்பினர் ஓய்வூதியம் | விதவை/மனைவியை இழந்தவர் ஓய்வூதியம் | பெற்றோர் ஓய்வூதியம் | குழந்தை ஓய்வூதியம் | இதர ஓய்வூதியம் | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அனாதை ஓய்வூதியம் | நியமனதாரர் ஓய்வூதியம் | ஊனமுற்றோர் ஓய்வூதியம் | மொத்தம் | |
| 1,57,197 | 59,357 | 1,300 | 52,182 | 1,260 | 1,218 | 122 | 2,600 | 2,72,636 |

9.10. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், ஆண்டுதோறும் ஓய்வூதிய நிதியை மதிப்பீடு செய்ய வகை செய்கிறது. ஆண்டுதோறும் மதிப்பீடு செய்வதன் விளைவாக, ஓய்வூதியம் பெறுபவர்கள் அவர்களுடைய ஓய்வூதியத்தில் 16–11–96 முதல் 4 சதவீதமும், 01–04–98 முதல் 5.5 சதவீதமும், 01–04–99 முதல் 4 சதவீதமும், 01–04–2000 முதல் 4 சதவீதமும், நிவாரணத் தொகையாகப் பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

9.11. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பிற வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள இந்தியன் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ., எச்.டி.எப்.சி., மற்றும் யு.டி.ஐ. ஆகிய வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. அஞ்சலகங்கள் மூலம் ஓய்வூதியம் வழங்கும்வண்ணம் அஞ்சல் துறையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

9.12. நிறுவனம் ஒன்றை விட்டுச் செல்லும் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியப் பயன்களுடன், திட்டச் சான்றிதழ்கள் வழங்கவும், 1995 ஆம்



2005 ஏப்ரல் 4]

ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் வகை செய்கிறது. வேறொரு நிறுவனத்தில் பணியில் சேரும்போது, அவர்களுடைய ஓய்வூதிய உறுப்பினர் தகுதியும் தொடரும். 10 ஆண்டுகளுக்குக் குறைவாக பணிபுரிந்த உறுப்பினர்கள், அவர்கள் பெற்ற சம்பளம், அவர்கள் பணியை விட்டுச் சென்ற நாளில் அவர்களுடைய பணிக்கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் ஓய்வூதியப் பயனைத் திரும்பப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

9.13. கடந்த ஆண்டுகளில், திரும்பப் பெறும் பயனை அடைந்த / திட்டச் சான்றிதழ்கள் வழங்கப் பெற்றுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:–

| | 2002–03 | 2003–04 | 2004–05 01/05 வரை |
|---|---|---|---|
| தீர்வு செய்யப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | 3,24,363 | 3,39,299 | 2,42,390 |
| வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | 11,258.83 | 13,222.16 | 14,205.78 |
| வழங்கப்பட்ட திட்டச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | 28,449 | 22,372 | 16,922 |

## தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976

### செயல்வரம்பு

9.14. இத்திட்டம் 01–08–1976 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டம் பொருந்தக்கூடிய அனைத்துத் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கும் இத்திட்டம் பொருந்துகிறது.

### பங்களிப்பு

9.15. காப்புறுதி நிதிக்குத் தொழிலாளர்கள் சந்தாத் தொகை செலுத்த வேண்டியதில்லை என்ற நிலையில், வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களின் ஊதியத்தில் 0.5 சதவீதம் என்ற வீதத்தில், வேலையளிப்போர் சந்தாத் தொகை செலுத்த வேண்டும். மத்திய அரசும் இந்த காப்புறுதி நிதிக்கு சந்தா செலுத்துகிறது. இது வேலையளிப்போர் சந்தாத் தொகையில் பாதிக்கு சமமான தொகையாக இருக்கும்.

[2005 ஏப்ரல் 4

**பயன்**

9.16. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினராக இருக்கும் ஒருவர் பணியில் இருக்கும்போது இறந்துவிடும் நேர்வில், இத்தொகையைக் கோரும் நபருக்கு இறந்து விட்டவரின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் முந்தைய 12 மாத கால அளவில் இருப்பில் இருந்த சராசரித் தொகைக்கு சமமாகக் கூடுதல் தொகை வழங்கப்படும். இது அதிகபட்சமாக ரூ.60,000/– ஆகும்.

9.17. கடந்த இரண்டு ஆண்டுகளில், இறந்துவிட்ட உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டப் பயன் வகையில், கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொகைகள் வழங்கி தீர்க்கப்பட்டுள்ளது:–

| | 2002–03 | 2003–04 | 2004–05 01/05 வரை |
|---|---|---|---|
| தொகை வழங்கித் தீர்க்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 3,389 | 2,974 | 2,221 |
| பட்டுவாடா செய்யப்பட்ட பணம் (ரூபாய் இலட்சத்தில்) | 541.41 | 427.78 | 445.72 |



2005 ஏப்ரல் 4]

## அத்தியாயம்–10

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

10.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் அமைப்பு சார்ந்த துறைகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்க்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் ஒருங்கிணைந்த திட்டமாகும்.

10.2. இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள நிர்வாகங்கள் மற்றும் அமைப்புகளில் பணிபுரியும் ரூ.7,500/– மாத ஊதியம் பெறும் பணியாளர்கள் அனைவரும் பயன் பெறுகின்றனர். தொழிலாளர்களின் ஊதியத்தில் 1.75 சதவீதத்துக்கு ஈடான தொகை தொழிலாளர்களின் பங்காகும். 4.75 சதவீதம் வேலையளிப்பவரின் பங்காகும்.

10.3. இத்திட்டம் 1948 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தில் உள்ள விதிமுறைகளின்படி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் எனும் மத்திய அரசின் அமைப்பினால் நிர்வகிக்கப்படுகிறது. மருத்துவ சேவை மாநில அரசால் அளிக்கப்படுகிறது. இதற்காகும் செலவு மாநில அரசு மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

10.4. தமிழ்நாட்டில் 180 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், 5 நடமாடும் மருந்தகங்கள், 2 பயனீட்டு மருந்தகங்கள் மற்றும் 9 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்மூலம் 2,363 படுக்கைகளுடன் மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது.

10.5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் கீழ்க்கண்ட உதவிகள் காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது:

### அ. மருத்துவ வசதி

மருத்துவ வசதிகள் காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு திட்டத்தில் சேர்ந்த நாள் முதல் அளிக்கப்படுகின்றன. ஆரம்பகால சிகிச்சை, சிறப்பு சிகிச்சை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை ஆகியவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள் மூலம் அளிக்கப்படுகின்றன.

[2005 ஏப்ரல் 4

**ஆ. உடல் நலமின்மைப் பயன்**

உடல் நலமின்மைப் பயன், காப்பீட்டாளர் உடல் நலமின்றி பணிக்குச் செல்ல இயலாத நிலை ஏற்படும்போது, அரசினால் நியமிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின்பேரில், பணமாக வழங்கப்படுகிறது.

**இ. பேறுகால உதவி**

மகளிர் காப்பீட்டாளருக்கு, பேறுகாலத்தில் அல்லது கருக்கலைப்பு காலத்தில் பேறுகால அல்லது அது தொடர்பான நோய்களுக்கான சிகிச்சைக்கு பண உதவி அளிக்கப்படுகிறது (அதிகபட்சம் 85 நாட்கள்).

**ஈ. இயலாமை உதவி**

இயலாமையுற்றோருக்கான உதவி, காப்பீட்டாளர்கள் பணிபுரியும்போது ஏற்படும் விபத்தினால் விளையும் உடல் குறைகளுக்கும், தொழில்வழி நோய்களுக்கும் வழங்கப்படுகிறது.

**உ. சார்ந்துள்ளோர் நல உதவி**

வேலை செய்யும்போது ஏற்படும் விபத்தினால் அல்லது தொழில்வழி நோயினால் காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவரைச் சார்ந்துள்ளவர்க்கு இந்த உதவி வழங்கப்படுகிறது.

**ஊ. நீண்ட கால நோய்க்கான உதவி**

நீண்ட கால சிகிச்சை தேவைப்படும் குறிப்பிட்ட 34 வகை நோய்களில் ஏதேனும் ஒன்றினால் பாதிக்கப்படும் காப்பீட்டாளருக்கு, மருத்துவச் சான்றிதழ் மற்றும் மருத்துவ ஆலோசனையின்பேரில், விடுப்பிலிருக்கும் நாட்களுக்கு பண உதவி வழங்கப்படுகிறது.

**எ. உடல் நலமின்மைக்கான அதிகரிக்கப்பட்ட உதவி**

தகுதி வாய்ந்த வயதில் உள்ள காப்பீட்டாளர்கள் கருத்தடை (வாசக்டமி/ட்யூபக்டமி) செய்து கொள்ளும்போது அதிகரிக்கப்பட்ட பண உதவி வழங்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 4]

**ஏ. தற்காலிக இயலாமை உதவி**

காப்பீட்டாளருக்கு தற்காலிக இயலாமை ஏற்படும்போது, 70 சதவீதம் ஊதியம் தற்காலிக இயலாமை தொடரும் வரை, அரசால் நியமிக்கப்பட்டுள்ள காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின்பேரில் பணமாக வழங்கப்படுகிறது.

**ஐ. நிரந்தர இயலாமை உதவி**

நிரந்தர இயலாமையுற்ற காப்பீட்டாளருக்கு வாழ்நாள் முழுவதும் பணமாக வழங்கப்படுகிறது.

**ஒ. இறுதிச் சடங்கிற்குரிய உதவி**

காப்பீட்டாளரின் இறுதிச் சடங்கிற்கு அதிகபட்சமாக ரூ.2,500/- வழங்கப்படுகிறது.

10.6. மருத்துவ வசதிகளுக்காகும் செலவினை முதலில் மாநில அரசு ஏற்றுக் கொள்கின்றது. பின்னர், செலவினத்தில் 7/8 பங்கினை, காப்பீட்டாளர் ஒருவருக்கு ரூ.750/– என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மாநில அரசுக்கு திரும்பச் செலுத்துகின்றது.

10.7. பயனீட்டு மருந்தகங்கள், வேலையளிக்கும் நிறுவனத்தினரால் நடத்தப்படுகின்றன. காப்பீட்டாளர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.100/– என்ற வீதத்தில் வேலையளிக்கும் நிறுவனத்திற்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் நிர்ணயித்துள்ளவாறு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது கீழ்க்கண்ட இரண்டு பயனீட்டாளர் மருந்தகங்கள் உள்ளன:–

1. பயனீட்டாளர் மருந்தகம், டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், டால்மியாபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
2. பயனீட்டாளர் மருந்தகம், ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.

10.8. 2004–2005 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் புதிய பகுதிகளுக்கு திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, அப்பகுதிகள் ஏற்கெனவே இயங்கிவரும் மருந்தகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன:

[2005 ஏப்ரல் 4

| வரிசை எண் | விரிவுபடுத்தும் இடங்கள்/ மாவட்டம் | இணைக்கப்படும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் | செயல்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | வேடசந்தூர் புறநகர் திண்டுக்கல் மாவட்டம் | வேடசந்தூர் | 1-4-2004 |
| 2 | உத்தமசோழபுரம் நாகப்பட்டினம் மாவட்டம் | நாகப்பட்டினம் இருப்பு நாகூர் | 1-5-2004 |
| 3 | திருச்செங்கோடு புறநகர் நாமக்கல் மாவட்டம் | திருச்செங்கோடு | 1-7-2004 |
| 4 | கோயம்புத்தூர் புறநகர் கோயம்புத்தூர் மாவட்டம் | திருப்பூர்.1, அவினாசி, சின்னியம்பாளையம், காரமடை மற்றும் மேட்டுப்பாளையம் | 1-9-2004 |
| 5 | திருவள்ளூர் புறநகர் திருவள்ளூர் மாவட்டம் | திருவள்ளூர் | 1-9-2004 |
| 6 | கன்னியாகுமரி புறநகர் பகுதி கன்னியாகுமரி மாவட்டம் | நாகர்கோவில் | 1-9-2004 |
| 7 | அம்மன்குப்பம் வேலூர் மாவட்டம் | குடியாத்தம் | 1-11-2004 |
| 8 | கங்கைகொண்டான் பகுதி திருநெல்வேலி மாவட்டம் | தாழையூத்து | 1-11-2004 |
| 9 | திருநெல்வேலி புறநகர் திருநெல்வேலி மாவட்டம் | வண்ணார்பேட்டை | 1-11-2004 |
| 10 | குருவிகுளம் பகுதி திருநெல்வேலி மாவட்டம் | கழுகுமலை | 1-11-2004 |
| 11 | கோவில்பட்டி புறநகர் தூத்துக்குடி மாவட்டம் | கோவில்பட்டி | 1-11-2004 |
| 12 | செங்கோட்டை புறநகர் திருநெல்வேலி மாவட்டம் | செங்கோட்டை | 1-12-2004 |



2005 ஏப்ரல் 4]

**புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்**

10.9. காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் ஒரு மருத்துவர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் திறப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

10.10. நாமக்கல் மாவட்டம் நாமக்கல்லில் இரு மருத்துவர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**காப்பீட்டு மருத்துவர் திட்டம் (ஐ.எம்.பி.)**

10.11. கீழ்க்கண்ட இடங்களில் காப்பீட்டு மருத்துவர் திட்டம் (ஐ.எம்.பி) மருந்தகங்கள் திறப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது:

| வ.எண் | இடத்தின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | பண்ருட்டி | கடலூர் |
| 2 | வடுகந்தாங்கல்-பள்ளிகொண்டா | வேலூர் |
| 3 | திண்டிவனம் | விழுப்புரம் |
| 4 | பரமக்குடி | இராமநாதபுரம் |
| 5 | சிவகங்கை-காளையார்கோவில் | சிவகங்கை |
| 6 | சேசன்சாவடி (வாழப்பாடி மற்றும் காரிப்பட்டி) | சேலம் |
| 7 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |

**மேம்படுத்தப்பட்ட சிறப்புச் சிகிச்சை**

10.12. அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சிறுநீரகவியல் பிரிவு தொடங்கத் தேவையான உபகரணங்கள் வாங்க ஆணையிடப்பட்டுள்ளது. இப்பிரிவு விரைவில் தொடங்கப்படும்.

**சித்த மருத்துவம்**

10.13. சித்த மருத்துவப் பிரிவு தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகின்றது.

[2005 ஏப்ரல் 4

### யோகா

10.14. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் யோகா பிரிவு தொடங்குவது குறித்து அரசின் ஆய்வில் உள்ளது.

### சுழற்சி நிதி

10.15. காப்பீட்டாளர் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவச் சிகிச்சைக்காக செலவிட்ட தொகையை தாமதமில்லாமல் திரும்பப் பெறுவதற்காக அரசால் சுழற்சி நிதி உருவாக்கப்பட்டது. தற்சமயம் அச்சுழற்சி நிதியிலிருந்து காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் மருத்துவ சிகிச்சைக்காக சிறப்பு மற்றும் உயர் சிறப்புப் பிரிவில் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான செலவு திரும்ப வழங்கப்படுகிறது.

2003–2004 ஆம் ஆண்டில் இருதய அறுவை சிகிச்சைகள், சிறுநீரகவியல், நரம்பியல் தொடர்பான சிகிச்சைகள் மற்றும் புற்று நோய் ஆகிய பல்வேறு சிகிச்சைகளுக்காக காப்பீட்டாளர்கள் செலவழித்த தொகையான ரூ.2,14,69,575/– திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

### தொகுப்புத் திட்டம்

10.16. காப்பீட்டாளர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு சிறந்த மருத்துவ உதவி அளிக்கும்பொருட்டு ஒரு தொகுப்புத் திட்டம் 2004-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு மருத்துவம் பார்ப்பதற்கு வசதியாக 39 தனியார் மருத்துவமனைகளுடன் சிறப்பு மற்றும் உயர் சிறப்பு மருத்துவத்திற்காக ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இத்தகைய சிகிச்சை தேவைப்படும் காப்பீட்டாளர் முதலில் பணம் செலவழித்து விட்டுப் பின்னர் செலவை மீளப்பெற வேண்டியதில்லை. தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையின் கடிதத்தை கொடுத்ததும், பணம் ஏதும் செலுத்தாமலேயே அவர்கள் மருத்துவமனையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சிகிச்சைக்குப்பின், தனியார் மருத்துவமனையின் செலவுப் பட்டிகள் தொழிலாளர் ஈட்டுறுதி நிறுவனத்தால் சரிக்கட்டப்படும்.



2005 ஏப்ரல் 4]

### தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்–தமிழ்நாடு

#### புள்ளிவிவரங்கள்

1. திட்டம் செயல்படத் தொடங்கிய நாள் .. 23–01–1955
2. 31–12–2004 தேதி அன்று உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் .. 187

#### மண்டல வாரியாக மருந்தகங்களின் எண்ணிக்கை மற்றும் தன்மை

| வரிசை எண் | மண்டலம் | நிலையான மருந்தகங்கள் | நடமாடும் மருந்தகங்கள் | பயனீட்டாளர் மருந்தகங்கள் | மொத்தம் | சொந்தக் கட்டடத்தில் இயங்குபவை | வாடகைக் கட்டடத்தில் இயங்குபவை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 39 | – | – | 39 | 27 | 12 |
| 2 | மதுரை | 55 | 1 | – | 56 | 14 | 42 |
| 3 | கோயம்புத்தூர் | 36 | 2 | – | 38 | 14 | 24 |
| 4 | சேலம் | 50 | 2 | 2 | 54 | 12 | 42 |
| | மொத்தம் | 180 | 5 | 2 | 187 | 67 | 120 |

3. 31–12–2004 தேதி அன்று உள்ள மொத்த காப்பீட்டாளர்கள் .. 12,11,621
4. 31–12–2004 தேதி அன்று மொத்த பயனாளிகள் .. 47,01,089
5. மொத்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள். .. 8 + 1
6. அனுமதிக்கப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை .. 2,363

[2005 ஏப்ரல் 4

7. படுக்கைகளின் விவரங்கள் – மருத்துவமனை வாரியாக:—

| வ. எண் | மருத்துவமனையின் பெயர் | படுக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தொ.அ.ஈ. மருத்துவமனை, அயனாவரம், சென்னை–23 | 616 |
| 2 | தொ.அ.ஈ. மருத்துவமனை, கோயம்புத்தூர் | 506 |
| 3 | தொ.அ.ஈ. மருத்துவமனை, மதுரை | 209 |
| 4 | தொ.அ.ஈ. மருத்துவமனை, வேலூர் | 50 |
| 5 | தொ.அ.ஈ. மருத்துவமனை, சேலம் | 50 |
| 6 | தொ.அ.ஈ. மருத்துவமனை, சிவகாசி | 100 |
| 7 | தொ.அ.ஈ. மருத்துவமனை, ஓசூர் | 50 |
| 8 | தொ.அ.ஈ. மருத்துவமனை, திருச்சி | 50 |
| 9 | தொ.அ.ஈ. கழக மருத்துவமனை, கே.கே. நகர், சென்னை–78 (புது டெல்லி தொ.அ.ஈ. கழகத்தால் நிர்வகிக்கப்படுகிறது) | 330 |
| 10 | தொ.அ.ஈ. மருத்துவமனை இணைப்புகளில் | 136 |
| 11 | அரசு மருத்துவமனைகளில் ஒதுக்கப்பட்டவை | 266 |
| | மொத்தம் | 2,363 |

**8. சிகிச்சை பெற்றோர் விவரம்**

| வ. எண் | விவரம் | 2002–03 | 2003–04 |
|---|---|---|---|
| 1 | சிகிச்சை பெற்ற வெளிநோயாளிகள் | 65,44,208 | 57,36,984 |
| 2 | சிகிச்சை பெற்ற உள்நோயாளிகள் | 3,09,272 | 2,62,587 |
| | மொத்தம் | 68,53,480 | 59,99,571 |



2005 ஏப்ரல் 4]

# அத்தியாயம்–11

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (வேலைவாய்ப்புப் பிரிவு)

### வேலைவாய்ப்புப் பணிகள்

### வேலைவாய்ப்பகங்களின் பணிகள்

11.1. வேலைவாய்ப்பு அலுவலகங்கள், இளைஞர்கள் ஊதியத்துடன் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு உதவி புரிதலில் உன்னதப் பணியாற்றி வருகின்றன. மேலும், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தொழில்நெறி வழிகாட்டல் மூலமாக சுய வேலைவாய்ப்புகளில் ஈடுபட இளைஞர்களுக்கு உதவி புரிகின்றன. வேலை நாடும் மனுதாரர்களைப் பதிவு செய்து அவர்களை அறிவிக்கப்படும் பணிக் காலியிடங்களுக்குப் பரிந்துரைத்தல், வேலை நிலவரத் தகவல் புள்ளிவிவரங்களைச் சேகரித்து அவற்றை வெளியிடுதல், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் போன்ற பணிகள் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முக்கியப் பணிகளாகும்.

### வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக அமைப்பு

11.2. ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாக இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (வேலைவாய்ப்புத் திட்டங்கள்) மற்றும் இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு) ஆகிய மூன்று இணை இயக்குநர்கள் உள்ளனர். சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் மண்டலத் துணை இயக்குநர்களைத் தலைவர்களாகக் கொண்டு நான்கு மண்டல அலுவலகங்கள் உள்ளன.

மாவட்ட அளவில், உதவி இயக்குநர்கள் அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் தலைமையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. வேலைநாடி பதிவு செய்ய வருபவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் இதர சேவைகளை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வழங்கி வருகின்றன.

மேற்குறிப்பிடப்பட்டவை தவிர, சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் பின்வரும் சேவைகளை அளிக்கின்றன:

1. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சாந்தோம், சென்னை – தொழிற் கல்வித் தகுதிகள் மற்றும் முதுகலைப் பட்டக் கல்வித் தகுதிகளைக் கொண்டுள்ள மனுதாரர்கள் இவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்படுகின்றனர்.
2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்) அடையாறு, சென்னை.
3. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில்நுட்பப் பணியாளர்கள்) சென்னை மற்றும் கோயம்புத்தூர்.
4. ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையம், கடலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர்.
5. பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிலையம், சேலம், திருவண்ணாமலை, உதகமண்டலம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் சங்கராபுரம்.

## 2004–05 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புப் பணிகளின் செயல்பாடுகள்

11.3. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுவிட்டது. இதனால் பதிவுதாரர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல், வேலையளிப்போருக்கு பட்டியல் அனுப்புதல் போன்ற அனைத்துப் பணிகளும் கணினிவழி மேற்கொள்ளப்படுகிறது. 01–01–2004 முதல் 31–12–2004 வரை 5,67,619 மனுதாரர்கள் தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர். இக்காலகட்டத்தில் 16,799 பேர் பணியமர்த்தப்பட்டனர்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பதிவுகளை வரண்முறைப்படுத்தும் நோக்கில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்ய வருபவர்கள் வசிப்பிட ஆதாரமாக குடும்ப அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். இதன்மூலம் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்வது முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கணினிமயமாக்கல் பணி முழுமையடைந்ததன்மூலம் அனைத்து பதிவுதாரர்களின் பதிவு விவரங்கள் கணினி விவரங்களுடன் ஒத்திசைவு மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக 31–12–2004 நிலவரப்படி உயிர் பதிவேட்டில் காத்திருப்போரின் எண்ணிக்கை 41,51,170 ஆகும்.



## மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டல் சேவைகள் புரிதல்

11.4. தொழில்நெறி வழிகாட்டல், மாணவர்கள் மற்றும் வேலை நாடுநர்களுக்கு காலத்திற்கு ஏற்ற தேவையாகும். இளைஞர்களுக்கு வழிகாட்டும் நோக்கத்திற்கென 18 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் செயல்படுகின்றன. பதிவின்போது வழிகாட்டல், தனி நபர் தகவல் அளித்தல், மூத்த பதிவுதாரர்களை ஆய்வு செய்தல், குழு விவாதங்கள் நடத்துதல், தொழில் தகவல்கள் பற்றிய விவரங்கள் அளித்தல், தொழிற் பழகுநர் பயிற்சியில் அமர்த்தல் மற்றும் பிற பயிற்சிகளில் அமர்த்தல், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொழில்நெறிச் சொற்பொழிவாற்றுதல், வேலையளிப்போர்களிடம் தொடர்பு ஏற்படுத்தி பராமரித்தல், தொழில்நெறிக் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல் மற்றும் தமிழ்நாடு தொழிற்கல்விகளுக்கான நுழைவுத் தேர்வில் கலந்து கொள்ளும் இந்து ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்றவை தொழில்நெறி வழிகாட்டல் செயல்பாடுகளில் அடங்கும்.

1–1–2004 முதல் 31–12–2004 வரையில் 2,689 மனுதாரர்கள் பயிற்சியில் அமர்த்தப்பட்டனர். 930 தொழில்நெறிச் சொற்பொழிவுகள் மற்றும் 29 தொழில்நெறிக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டிற்கொருமுறை தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. கடந்த காலங்களில் வெவ்வேறு மாவட்டங்களில் வெவ்வேறு தேதிகளில் தொலைதூரக் கிராமங்களில் தொழில்நெறி கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டதால், பொதுமக்களின் கவனத்தை இவை ஈர்க்காமல் போயின. எனவே, அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டத் தலைநகர்களில் ஒரு குறிப்பிட்ட நாள் தொழில்நெறி வழிகாட்டல் நாளாகத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, பல்வேறு துறைகளைச் சார்ந்த பெருமக்கள் பங்கு பெறும் அளவில், தொழில்நெறிக் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் பொது மக்களிடம் உடனடி வரவேற்பினைப் பெற்று, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடைபெற்று வருகின்றன.

[2005 ஏப்ரல் 4

### ஆதிதிராவிட இனத்தோர்க்கு தொழிற்கல்விகளுக்கான நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள்

11.5. 1-1-2004 முதல் 31-12-2004 வரை ரூ.8.55 இலட்சம் செலவில் 1,266 இந்து ஆதிதிராவிட மனுதாரர்களுக்கு 2004 ஆம் வருடத்திய தொழிற் கல்விகளுக்கான நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது. 189 மனுதாரர்கள் பல்வேறு தொழிற்கல்விகளில் சேர அனுமதி பெற்றனர்.

### சுய வேலைவாய்ப்பு

11.6. 1-1-2004 முதல் 31-12-2004 வரை சுயவேலைவாய்ப்புக்காக 2,249 மனுதாரர்களுக்கு பல்வேறு வங்கிகளிலிருந்து பல்வேறு நிறுவனங்கள் மூலமாக ரூ886.00 இலட்சம் கடன் உதவியாக பெற்றுத்தர வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உதவி செய்தன.

### உடல் ஊனமுற்றோருக்கான பணியமர்த்தல் / மறுவாழ்வு

11.7. சென்னை, சாந்தோமில் அமைந்துள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உதகமண்டலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோருக்கான 13 சிறப்புப் பிரிவுகள் பதிவு செய்துள்ள ஊனமுற்றோருக்கு பணியமர்த்தல் / மறு வாழ்வுப் பணிகளை மேம்படுத்தத் தேர்ந்த பணியமர்த்த நுட்பங்களை மேற்கொண்டு வருகின்றன.

1-1-2004 முதல் 31-12-2004 வரை 289 கண் பார்வையற்றோர், 292 செவிப் புலனிழந்தோர் மற்றும் 3,428 உறுப்பு நலம் குன்றியோர் பதிவு செய்துள்ளனர். 31-12-2004 நிலவரப்படி, 74,002 உடல் ஊனமுற்றோர்கள் பதிவு செய்து வேலைக்காக உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கின்றனர். அவர்களில் 8,029 கண் பார்வையற்றோர், 6,392 செவிப் புலனிழந்தோர் மற்றும் 59,581 உறுப்பு நலம் குன்றியோர் ஆவர்.

உடல் ஊனமுற்றோரைப் பணியமர்த்துவதில் உன்னதமான சேவை புரிந்தமைக்காக சென்னை உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலருக்கு 2004 ஆம் ஆண்டிற்கான குடியரசுத் தலைவர் விருது வழங்கப்பட்டது. உலக ஊனமுற்றோர் தினமான 3-12-2004 அன்று இவ்வலுவலர் குடியரசுத் தலைவரிடமிருந்து விருதினைப் பெற்றார்.



2005 ஏப்ரல் 4]

### பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்கும் திட்டம்

11.8. 2004-2005 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,000-க்கும் மேற்பட்ட பார்வையற்ற மனுதாரர்கள் பயன் அடைவார்கள்.

### பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்கள்

### சிறப்பு தொழில்முறை வழிகாட்டும் மையங்கள்

11.9. பழங்குடியினரின், குறிப்பாக பழங்குடி இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. சங்கராபுரம், சேலம், திருவண்ணாமலை மற்றும் உதகமண்டலம் ஆகிய 4 இடங்களிலும் பழங்குடியினருக்கான சிறப்பு வழிகாட்டி மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்களின் முக்கிய செயல்பாடுகள் வருமாறு:-

(1) தொழில்கள் மற்றும் பயிற்சிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, தொகுத்து பழங்குடியினருக்கு வழங்குதல்.

(2) பழங்குடியினத்தைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் வேலை நாடுநர்களுக்கு வழிகாட்டுவதற்காக காலாண்டு இடைவெளியில் தொழில் தகவல் கையேடுகளை வெளியிடுதல்.

(3) பெருவாரியான அளவில் பழங்குடியின மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் மற்றும் தங்கியிருக்கும் விடுதிகளுக்குச் சென்று தொழில்நெறி வழிகாட்டுதல், சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், உயர் கல்விகள், தொழிற்கல்விகள், பயிற்சி வசதிகள், வெளிநாடுகளில் உள்ள கல்விகள் பற்றிய விவரங்கள், கல்வி உதவித் தொகை பற்றிய விவரங்கள் மற்றும் ஆட்பற்றாக்குறை ஏற்படுகின்ற தொழில்களில் (உதாரணம் - சுருக்கெழுத்து தட்டச்சர், இடைநிலை ஆசிரியர்) வேலைவாய்ப்புகள் பற்றிய விவரங்களை அளித்தல்.

(4) பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் ஆட்பற்றாக்குறை காணப்படும் பணிக் காலியிடங்களை இனம் கண்டு, அப்பணிக் காலியிடங்களை நிரப்புவதற்கு உரிய பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல்.

(5) பழங்குடியினர் வசிக்கும் இடங்களுக்குச் சென்று, அவர்களை வேலைவாய்ப்புக்காகப் பதிவு செய்தல்.

(ப) பழங்குடியினரை சுய வேலைவாய்ப்பிற்கு ஊக்கப்படுத்தி, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெற்றுத் தருதல்.

**பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்**

| வரிசை எண் | 2004–05 ஆம் ஆண்டில் செயல்பாடுகளின் விவரம் (31-12-2004 முடிய) | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நெடுந்தொலைவில் வசிக்கும், பதிவு செய்யப்பட்ட பழங்குடியின மனுதாரர்கள் எண்ணிக்கை | 653 |
| 2 | பதிவின் போது வழிகாட்டப்பட்ட பழங்குடியின மனுதாரர்களின் எண்ணிக்கை | 869 |
| 3 | தனிநபர் தகவல் வழங்கப்பட்ட மனுதாரர்களின் எண்ணிக்கை | 3,509 |
| 4 | வழிகாட்டுதலுக்காக நடத்தப்பட்ட குழுக் கூட்டங்கள் | 218 |
| 5 | பழங்குடியின மனுதாரர்களுக்காக நடத்தப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டு பயன்பெற்ற மனுதாரர்களின் எண்ணிக்கை | 8,313 |
| 6 | ஆற்றப்பட்ட தொழில்நெறி சொற்பொழிவுகள் | 202 |
| 7 | தொடர்பு கொள்ளப்பட்ட வேலையளிப்போர் / நிறுவனங்களின் எண்ணிக்கை | 226 |
| 8 | விஜயம் செய்யப்பட்ட பழங்குடியினருக்கான பள்ளிகள் மற்றும் தங்கும் விடுதிகளின் எண்ணிக்கை | 125 |
| 9 | வேலையில் அமர்த்தப்பட்ட பழங்குடியின மனுதாரர்களின் எண்ணிக்கை | 33 |
| 10 | நடத்தப்பட்ட தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சிகள் | 21 |



**சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்– பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்**

11.10. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய 5 இடங்களில் ஆதிதிராவிட/ பழங்குடியின மனுதாரர்களுக்குப் பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:—

(அ) ஆதிதிராவிட/பழங்குடி இனத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் தொழில் தகவல்கள் பற்றிய விவரங்கள் அளித்தல்.

(ஆ) ஆதிதிராவிட / பழங்குடியின மனுதாரர்களுக்குத் தன்னம்பிக்கையூட்டுதல் மற்றும் தொடர்புடைய திட்டங்களை வகுத்துச் செயலாக்குதல்.

(இ) பணி மேம்பாட்டுத் திட்டங்களை அமைத்து நடத்துதல்.

(ஈ) ஆதிதிராவிட / பழங்குடியின வேலை நாடுநர்களுக்கு சுருக்கெழுத்து / தட்டச்சுப் பயிற்சிபெற வசதிகள் ஏற்படுத்துதல்.

(உ) ஆதிதிராவிட/பழங்குடியின மனுதாரர்களுக்கு உள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு, இது போன்ற பிற தொழில்நெறி வழிகாட்டுதல் பணிகளை மேற்கொள்ளுதல்.

மேற்கண்ட பணிகள் தவிர, பல்வேறு தேர்வுக் குழுக்களால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும் இந்து ஆதிதிராவிட மனுதாரர்களுக்கு அரசால் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும் போது, பயிற்சி வகுப்புகள் நடத்தும் பணிகளையும் இம்மையங்கள் ஆற்றி வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகள் ஆதிதிராவிட மனுதாரர்களின் வெற்றி வாய்ப்பிற்கு வழிவகுக்கின்றன.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ், இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து பயிற்றுவித்தல் மற்றும் வழிகாட்டும் மையங்களின் மூலமாக பயனடைந்த ஆதிதிராவிட பயனாளிகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு:—

[2005 ஏப்ரல் 4

| வரிசை எண் | 2004–05 ஆம் ஆண்டில் செயல்பாடுகளின் விவரங்கள் (31-12-2004 நிலவரப்படி) | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தொழில்நெறி மற்றும் பயிற்சி பற்றிய தகவல்கள் வழங்கப்பட்ட ஆதிதிராவிட பதிவுதாரர்களின் எண்ணிக்கை. | 5,363 |
| 2 | ஆதிதிராவிட பதிவுதாரர்களுக்கு தன்னம்பிக்கையை வளர்க்கும் நோக்கில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை. | 293 |
| 3 | வேலைவாய்ப்பு சொற்பொழிவுகள் எண்ணிக்கை. | 364 |
| 4 | சுய வேலைவாய்ப்பிற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 517 |

**கிராமப்புறங்களில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் தோற்றுவித்தல்**

11.11. பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் போட்டியிடும் திறனை அதிகரிக்கும் பொருட்டு, தமிழகத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் அமைத்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 23–9–2003 அன்று சிவகங்கையில் நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கான தன்னார்வப் பயிலும் வட்டங்களை அர்ப்பணித்தார். பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதுடன், போதுமான பாடப் புத்தகங்கள், மாத / வார இதழ்கள், நாளிதழ்கள் மற்றும் பாடக் குறிப்புகள் ஆகியவற்றை தன்னார்வப் பயிலும் வட்டங்கள், மனுதாரர்களின் பயன்பாட்டிற்காக அளிக்கின்றன. 2004–05 ஆம் ஆண்டில் புத்தகங்கள் மற்றும் மாத / வார இதழ்கள் வாங்குவதற்காக அரசு ரூ.46.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. 31–12–2004 வரை 15,213 மனுதாரர்கள் உறுப்பினராகியுள்ளனர். இதுவரை தன்னார்வப் பயிலும் வட்டங்களின் வாயிலாக 1,550 இளைஞர்கள் பணி வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். மத்திய தேர்வாணையம் நடத்தும் குடிமைப் பணிகள் தேர்வில் 7 மனுதாரர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.



2005 ஏப்ரல் 4]

**தனியார் துறையில் பணியமர்த்தல்**

11.12. பொதுத் துறை நிறுவனங்களில் பணியமர்த்தல் குறைந்து வரும் நிலையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மனுதாரர்களுக்கு தனியார் துறையில் பணியமர்த்தம் பெற்று வழங்குவதை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இலக்காகக் கொண்டுள்ளன. அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தனியார் துறையில் பணியமர்த்தல் முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன. அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் பிரதி மாதம் இரண்டாம் வெள்ளிக்கிழமை தனியார் துறை பணியமர்த்தல் நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது. இந்த முகாம்களில் உள்ளூர் வேலையளிப்போர்கள் மற்றும் வேலை நாடும் மனுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலேயே சந்திக்கின்றனர். அன்றையதினமே வேலையளிப்பவர் பணி நியமனம் வழங்குகிறார். தனியார் துறை வேலையளிப்பவர்களுக்கு தேர்வு செய்வதற்கான செலவினம் மற்றும் காலம் மிச்சமாவதால், இத்தகைய முகாம்கள் பரவலாக வரவேற்கப்படுகின்றன. இப்பணி தனியார் துறை வேலையளிப்பவர்கள் மற்றும் வேலை நாடுநர்களுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. 01–01–2004 முதல் 31–12–2004 வரையான காலகட்டத்தில் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களாலும் 4,813 மனுதாரர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டனர்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகளைக் கணினிமயமாக்குதல்**

11.13. தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 1986 ஆம் ஆண்டு முதல் கணினிமயமாக்கல் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. TNSWAN-ஐப் பயன்படுத்தி ஒய்டு ஏரியா நெட் வொர்க் மூலமாக அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களையும் ஆணையரகத்துடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 4

**தனியார் துறையில் பணியமர்த்தலை ஊக்குவிக்க இணையதளம் அமைத்தல்**

11.14. தனியார் துறையில் பணியமர்த்தலை ஊக்குவிப்பதற்காக வேலைவாய்ப்பகங்களுக்கான இணையதளம் (http://www.employment.tn.gov.in) ரூ.7.05 இலட்சம் செலவில் சென்னை தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் செயலாக்கத்தில் தேசியத் தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் 6-6-2003 அன்று தொடங்கப்பட்டது.

இந்த இணையதளத்தில் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தைச் சார்ந்த 2.95 இலட்சம் பதிவுதாரர்களின் பதிவு விவரங்கள் அடங்கிய வங்கி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணைய தளம், இணைய வலை உபயோகிப்பவர்களிடையே உடனடி பிரபலமானதுடன், குறைந்த காலகட்டத்தில் 15-3-2005 வரையில் 2,12,402 நபர்களால் பார்வையிடப்பட்டு, 1,488 வேலையளிப்பவர்கள் இணையதளத்தில் பதிவு செய்துள்ளனர். தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்களின் பதிவுகளை 'ஆன்-லைன்' முறையில் புதுப்பித்தல் இந்த இணையதளத்தின் சிறப்பம்சமாகும். இதுவரை, 46,679 பதிவர்கள் ஆன்-லைன் முறையிலான புதுப்பித்தல் வசதியைப் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும், இவ்விணையதளத்தில் இணைய வலை உபயோகிப்பவர்களின் பயனுக்காக, உயர் கல்வி, போட்டித் தேர்வுகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் மீதான தகவல்கள் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளன. வேலைவாய்ப்புகளுக்காக விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் பற்றிய விவரங்களை அளித்தல் இவ்விணையதளத்தில் உள்ள தொழில்நெறி தகவல் அளித்தலின் சிறப்பம்சமாகும்.



2005 ஏப்ரல் 4]

## அத்தியாயம்-12

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (பயிற்சிப் பிரிவு)

**துறையின் குறிக்கோள்**

12.1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அதன் தொழில் உற்பத்தியைச் சார்ந்துள்ளது. நவீன தொழில்நுட்பவியலின் முன்னேற்றத்திற்கு தகுந்தாற் போல நன்கு பயிற்சி பெற்ற பல்திறன் கொண்ட மனித ஆற்றல் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படுகிறது. இதனை கருத்திற்கொண்டு, தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப, முறையான தொழிற் பயிற்சியின்மூலம் பல்வேறு தொழிற் பிரிவுகளில் செயல்திறன் மிக்க பயிற்சியாளர்களை உருவாக்க, கைவினைஞர் பயிற்சித் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. இப்பயிற்சி தொழில் உற்பத்தியின் அளவையும், தரத்தையும் உறுதி செய்கிறது. பயிற்சி பெற்ற இளைஞர்கள் உலக அளவில் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு இத்திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. தொழிற் பயிற்சி நிலையங்களால் உருவாக்கப்படும் கைவினைஞர்கள் தொழிற்சாலைகளின் முதுகெலும்பாகத் திகழ்கின்றனர். தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக உள்ள தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற் பள்ளிகள்மூலம் இக்கால மற்றும் எதிர்கால தேவைக்கேற்ற கைவினைஞர்களை இம்மாநிலம் உருவாக்கி வருகிறது. உயர் கல்வி பெறுவதற்கென அதிக அளவில் செலவழிக்க இயலாத ஏழை மற்றும் நடுத்தர மக்கள்தான் இதன் முக்கிய பயனாளிகள் ஆவர்.

**அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள்**

12.2. இத்துறையால் வழங்கப்படும் தேசிய தொழிற் சான்றிதழ் பெற்ற கைவினைஞர்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளதால், நம் நாட்டில் மட்டுமல்லாது அயல் நாடுகளிலும் வேலைவாய்ப்புகள் அதிகம் பெறுகின்றனர். இதனால் ஆண்டுதோறும் பெருமளவிலான விண்ணப்பத்தாரர்களை அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தன்பால் ஈர்க்கின்றன. தமிழ்நாடெங்கும் பரவலாக உள்ள 57 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள், 38 பொறியியல் மற்றும் 12 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கின்றன. மொத்த பயிற்சியாளர் இருக்கைகளின் எண்ணிக்கை 18,192 ஆகும். பயிற்சிக் காலம் தொழிற் பிரிவைப் பொறுத்து ஒன்றிலிருந்து மூன்றாண்டுகள் வரை

அமைகிறது. சுமார் 15,636 மாணவர் மற்றும் மாணவியர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெற்று வருகின்றனர். இம்மாநிலத்திலுள்ள 57 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுள், மகளிருக்கென 12 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும், ஆதிதிராவிடருக்கென சிதம்பரத்தில் ஒன்றும், மலைவாழ் மக்களுக்கென சங்கராபுரத்தில் ஒன்றும் இயங்குகின்றன. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்களின் 2004–05 ஆம் ஆண்டு சேர்க்கைக்கான எண்ணிக்கை (கூடுதலாக அனுமதிக்கப்பட்ட இருக்கைகளையும் சேர்த்து) 11,987 ஆகும். ஆகஸ்ட் 2004-ல் மட்டும் 11,152 பயிற்சியாளர்கள் (93.03 %) சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இட ஒதுக்கீட்டு முறைக்கு உட்பட்டு, மதிப்பெண் தகுதி அடிப்படையில் ஆண்டுதோறும் மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்படுகின்றனர். தொழிற் பயிற்சி நிலையத்தில் சேருவதற்கு குறைந்தபட்சக் கல்வித் தகுதி தொழிற் பிரிவுக்கு ஏற்ப, எட்டாம் வகுப்பு தேர்ச்சி முதல் மேல்நிலைக் கல்வி (அதாவது +2) வரை ஆகும். தொழிற் பிரிவுகள் மற்றும் பாடத் திட்டங்கள் அகில இந்திய அளவில் ஒரே சீராக இருக்கும் வகையில், தேசிய தொழில்நெறிக் கல்விப் பயிற்சித் திட்டக் குழுவால் வடிவமைக்கப்பட்டுள்ளன. பயிற்சியின் முடிவில் தொழிற் தேர்வுகள் அகில இந்திய அளவில் ஜூலை மாதம் நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு தேசிய தொழிற் சான்றுகள் வழங்கப்படுகின்றன. தேர்ச்சி பெறாத பயிற்சியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் துணைத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தேர்வு முடிவுகள் அரசின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற் சான்று வழங்கப்படுகிறது.

தொழிற்சாலைகளின் தேவைகள், பயன்படுத்தப்படும் நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மாறுபட்டு வரும் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு புதிய தொழிற் பிரிவுகளான தொழில் மின்னணுவியல் (கம்மியர்), இயந்திர மின்னணுவியல் (கம்மியர்), தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல் கருவிகள் பராமரிப்பு, கணினி வன்பொருள், கைவினைஞர் உணவு உற்பத்தி (பொது), லித்தோ ஆப் செட் மெஷின் மைண்டர், எண்ணியல் நிழற்பட கலைஞர், ஓட்டுநர் மற்றும் கம்மியர் போன்ற நவீன தொழிற் பிரிவுகள் பல்வேறு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள், தொழிற் பயிற்சி நிலையங்களின் கூட்டு நடவடிக்கையை முன்னேற்றவும், பயிற்சி மற்றும் மனித ஆற்றலை



மேம்படுத்தவும், இந்திய தொழிற்சாலைகளின் கூட்டமைப்புடன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை "புரிந்துணர்வு உடன்படிக்கை" ஒன்றைச் செய்துள்ளது. மற்றொன்று 5 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும், 5 தொழில் நிறுவனங்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை நீங்கலாக, தொழிற் பயிற்சி நிலையங்கள் சிறந்த முறையில் இயங்குவதற்கும், தொழிலாளர் சந்தைக்கும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கிடையே நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ளவும் நிறுவன மேலாண்மைக் குழு (Institute Managing Committee) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களின் பயிற்சியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படுகிறது:—

| | |
|---|---|
| (அ) ஆதிதிராவிடர்களுக்கு | : ரூ. 150/– மாதந்தோறும் |
| (ஆ) பழங்குடியினத்தவருக்கு | : ரூ. 175/– மாதந்தோறும் |
| (இ) சீர் மரபினருக்கு | : ரூ. 140/– மாதந்தோறும் |
| (ஈ) பர்மா/இலங்கை/வியட்நாம் அகதிகளுக்கு | : ரூ. 175/– மாதந்தோறும் |
| (உ) பெற்றோர் வருமானம் ஆண்டிற்கு ரூ.16,100/–க்கு மிகாமல் இருக்கும் மொத்த பயிற்சியாளர்களில் 1/3 பகுதியினருக்கு | : ரூ. 50/– மாதந்தோறும் |

**அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி மையங்கள்**

12.3. தொழிற்சாலைகளுக்குத் தேவையான திறமை வாய்ந்த மனித ஆற்றலின் தேவை அதிகரிப்பை நிறைவேற்றும் பொருட்டு, தொழிற் பயிற்சியில் தனியாரும் பங்குபெற ஊக்கம் அளிக்கப்படுகிறது. தேசிய தொழில்நெறி மேம்பாட்டுப் பயிற்சிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 615 தொழிற் பயிற்சி மையங்கள், 60,213 பயிற்சியாளர்கள் இருக்கைகளுடன் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி மையங்களில் ஐம்பது சதவீத இருக்கைகள், அரசின் இன ஒதுக்கீடு மற்றும் மதிப்பெண் அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. 2004–05 ஆம் ஆண்டில் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்களின் சேர்க்கைக்கான இருக்கைகள் 32,394 ஆகும். அதில் ஆகஸ்ட் 2004-ல் 24,238 பயிற்சியாளர்கள் (74.8 %) சேர்க்கப்பட்டுள்ளனர்.

[2005 ஏப்ரல் 4

## தொழிற் பள்ளிகள்

12.4. குறைந்த கல்வித் தகுதி பெற்றவர்களும் தொழிற் கல்வி பெறும் நோக்குடன் 43,525 இருக்கைகள் கொண்ட 493 தனியார் தொழிற் பள்ளிகள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன. இத்தொழிற் பள்ளிகள் 55 நீண்டகால தொழிற் பிரிவு மற்றும் 50 குறுகியகால தொழிற் பிரிவு உள்ளடக்கிய 105 தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கின்றன. இத் தொழிற் பள்ளிகளில், உணவு தயாரித்தல், தையற் கலை, கணினி மென்பொருள், அழகுக் கலை, ஆபீஸ் ஆட்டோமேஷன் மற்றும் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 45 நாட்கள் முதல் 3 ஆண்டுகள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு முதல் பள்ளியிறுதி வகுப்பு வரையில் கல்வி பயின்று தேர்ச்சி பெற்றோர் மற்றும் தோல்வியுற்றோர் இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இப்பயிற்சியாளர்களுக்கு மாநில அளவில் தேர்வு நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில அரசால் சான்று வழங்கப்படுகின்றது. 493 தொழிற் பள்ளிகளுள், 48 பள்ளிகள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன. 2004–05 ஆம் ஆண்டிற்கு ஒருகோடி ரூபாய் மானியமாக அளிக்கப்பட்டது.

## தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்

12.5. 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்ட விதிகளின்படி, அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்கள் தமது செயல்திறனை மேம்படுத்திக்கொள்ள தொழில் நிறுவனங்களில் ஓராண்டு முதல் நான்காண்டுகள் வரை தொழிற் பழகுநர் பயிற்சிபெற பரிந்துரைத்து அனுப்பப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் 1983 தொழில் நிறுவனங்களில், 153 தொழிற் பிரிவுகளில் தொழிற் பழகுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. 31–12–2004 நிலவரப்படி 15,498 தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சிக் காலத்தில் தொழிற் பழகுநர்கள் பணிமனை செய்முறைத் திறனை தொழில் நிறுவனங்களிலும், கருத்தியல் பாடத் திறனை இத்துறையின் கீழ் இயங்கும் 11 தொடர் அறிவுரை மையங்களிலும் பெறுகின்றனர். தொழிற் பழகுநர்களுக்கு பயிற்சிக் காலத்தில் மாதந்தோறும் ரூ.820/– முதல் ரூ.1,230/– வரை உதவித் தொகையாக சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன. பயிற்சியின் முடிவில் அகில இந்திய அளவில் தொழிற் தேர்வு ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதத்தில் நடத்தப்பட்டு, தேர்வு முடிவுகள் அரசின் இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. தேர்ச்சி பெற்ற தொழிற் பழகுநர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 12,500 தொழிற் பழகுநர்கள் தொழிற் தேர்வில் கலந்து கொள்கின்றனர்.



2005 ஏப்ரல் 4]

தொழில் நிறுவனங்களால் புதிதாக அமர்த்தப்படும் தொழிற் பழகுநர்களுக்கு அடிப்படை பயிற்சி அளித்தல் அவசியமாகிறது. மேலும், கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் இடம் பெறாத தொழிற் பிரிவுகளுக்கான அடிப்படைப் பயிற்சி, தொழிற் பழகுநர் திட்டத்தின்கீழ் உள்ள அடிப்படைப் பயிற்சி மையத்தில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உணவகம், உணவாக்கம் மற்றும் பரிமாறுதல் தொழிற் பிரிவிற்கான அடிப்படைப் பயிற்சி மையம் அம்பத்தூரிலும், இரசாயன தொழிற் பிரிவிற்கான அடிப்படைப் பயிற்சி மையம் இராணிப்பேட்டையிலும் இயங்குகின்றன. 31–12–2004 நிலவரப்படி 175 அடிப்படைப் பயிற்சி தொழிற் பழகுநர்கள், 36 தொழில் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## ஆதிதிராவிட வகுப்பினர் / பழங்குடியினர் நலத் திட்டம்

12.6. ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியின வகுப்பினர்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு எளிதில் வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சில தொழிற் பிரிவுகளில் தொழிற் பயிற்சி வழங்குவதற்கென கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் ஆதிதிராவிடர்களுக்கென 96 இருக்கைகளுடன் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இதில் மூன்று தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பழங்குடியினருக்கென தனியாக 80 இருக்கைகளுடன் ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் இயங்கி வருகிறது. இதில் மூன்று தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இதைத் தவிர, மற்ற அனைத்து அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 18% இருக்கைகள் ஆதிதிராவிடர் வகுப்பினருக்காகவும், 1% இருக்கைகள் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## அகில இந்திய திறனாய்வுப் போட்டி

12.7. பல்வேறு மாநிலங்களில் பயிலும் தொழிற் பயிற்சியாளர்களின் போட்டியிடும் திறமையை வளர்க்கும் வகையில், அகில இந்திய திறனாய்வுப் போட்டி 1964 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு

ஆண்டும் அகில இந்திய திறனாய்வுப் போட்டிகள் 14 தொழிற் பிரிவுகளில் நடத்தப்பட்டு, ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் வெற்றி பெறும் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– ரொக்கத் தொகையும், நற்சான்றிதழும் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன.

இதுவரை நடைபெற்றுள்ள 40 அகில இந்திய திறனாய்வுப் போட்டிகளில், தமிழ்நாடு இணையற்ற சாதனை புரிந்து, சிறந்த மாநிலம் என்ற பரிசினை 20 முறை வென்று குடியரசுத் தலைவர் கேடயத்தை 20 ஆண்டுகளும் பெற்றுள்ளது. இச்சாதனைகள் தமிழ்நாட்டில் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் உயர்தரமான பயிற்சிக்கும், பயனடைந்த பயிற்சியாளர்களின் திறமைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றன.

**மாண்புமிகு முதலமைச்சர் விருது**

12.8. பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, ஆண்டு தோறும் மாநில அளவில் 18 தொழிற் பிரிவுகளில் திறனாய்வுப் போட்டிகள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் தேர்ச்சி பெறும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு "மாண்புமிகு முதலமைச்சர் விருது" பரிசுத் தொகையாக ரூ.5,000/–மும், நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. சிறந்த பயிற்சியாளரை உருவாக்கக் காரணமாக இருந்த பயிற்றுநர்களுக்கும் கீழ்குறிப்பிட்டவாறு ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | சிறந்த பயிற்சியாளர் | ரூ.5,000/– |
| 2. | முதல்வர் | ரூ.450/– |
| 3. | இளநிலை பயிற்சி அலுவலர்/உதவி பயிற்சி அலுவலர் | ரூ.1,000/– |
| 4. | பணிமனை கணிதம் மற்றும் அறிவியல் பயிற்றுநர் | ரூ.200/– |
| 5. | பொறியியல் வரைபட பயிற்றுநர் | ரூ.200/– |

இரண்டாவது மற்றும் மூன்றாவது இடம் வகிக்கும் பயிற்சியாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.





**டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது**

12.9. பயிற்சியாளர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சியளித்து, தனித்து விளங்கும் பயிற்றுநர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படுகிறது. ஆண்டு தோறும் பயிற்றுநர்கள் (பயிற்சி அலுவலர்–2, உதவி பயிற்சி அலுவலர்–4, இளநிலை பயிற்சி அலுவலர்–4) மற்றும் இரு முதல்வர்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.500/–க்கான கிசான் விகாஸ் பத்திரமும், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

**பயிற்றுநர்களுக்குப் பயிற்சி**

12.10. ஒவ்வொரு ஆண்டும், 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் மத்திய பயிற்சி நிலையங்கள்/முன்னோடி பயிற்சி நிலையங்களுக்கு பயிற்றுநர் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். இப்பயிற்சியின் காலம் ஓர் ஆண்டு ஆகும். இப்பயிற்சி அவர்களது நவீன தொழில்நுட்ப அறிவினையும், செயல்திறனையும் மேம்படுத்திக்கொள்ள உதவுகின்றது. இளநிலை பயிற்சி அலுவலர், உதவிப் பயிற்சி அலுவலர் ஆகியோருக்கு கல்வி கற்பிக்கும் நுணுக்கம், ஒலி ஒளி சாதனங்களை உபயோகித்தல், வகுப்பறை மேலாண்மை, போன்றவற்றில் இரு வார கால பயிற்சி அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. இப்புத்தறிவுப் பயிற்சித் திட்டம் அவர்களுடைய கற்பிக்கும் திறனை செம்மைப்படுத்துகிறது. இப்பயிற்சி, அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க வழி கோலுகிறது.

**மேம்பட்ட தொழில்நெறி பயிற்சித் திட்டம்**

12.11. தொழிலகத் தொழிலாளர்கள் பயனடைய அம்பத்தூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் மேம்பட்ட தொழில்நெறி பயிற்சி அளிக்கப்படுகிறது. கணினியுடன் இணைந்த நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்பாட்டினை தொழிலாளர்கள் தெரிந்துகொள்ளும் வகையில், இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வரை இப்பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சி, தொழிலாளர்களை நவீன தொழில்நுட்ப அறிவினை பெற்றவர்களாக ஆக்குகிறது.

[2005 ஏப்ரல் 4

## உயர் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டம்

12.12. நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளைப் பழுது பார்த்தல், பராமரித்தல், இயக்குதல் போன்றவற்றில் புதிய தலைமுறை தொழிலாளர்களை உருவாக்க உயர் தொழில்நுட்பத் திறனை கற்பிக்கும் பொருட்டு, அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தானியங்கி இயந்திரத் தொழில், கணினிசார் வரைவு, எழுத்து மற்றும் எண் மின்னணுவியல் மற்றும் தனி கணினி பராமரிப்பு போன்ற உயர் தொழில்நுட்பப் பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## மின் கம்பி உதவியாளர் தகுதிகாண் தேர்வு

12.13. மின்சார ஒப்பந்ததாரர்களிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றி, குறைந்தது 5 வருட முன் அனுபவம் பெற்ற 21 வயதை அடைந்தவர்கள் இத்தேர்விற்குத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்தேர்வு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 4]

# அத்தியாயம்–13

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

13.1. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தமிழக அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம் வேலைதேடும் இந்திய தொழிலாளர்கள் அயல்நாடுகளில் தகுந்த பணியைப்பெற உதவி புரிவதாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும். வழங்கப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் ஆகும். இலாபம் ஈட்டும் தமிழக அரசு நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். 31-3-2004 அன்றுள்ளவாறு இதன் மொத்த இலாபம் ரூ.22.07 இலட்சமாகும். இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் 31-12-2004 வரை 5,827 நபர்களுக்கு அயல்நாடுகளில் வேலைவாய்ப்பு அளித்துள்ளது. நடப்பு ஆண்டில் 108 நபர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தந்துள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் பயன்பெற்றோர்களில் பெரும்பாலோர் முழு திறன்படைத்த அல்லது ஓரளவு திறன்படைத்த பணியாளர்களும் மற்றும் மருத்துவத் துறையைச் சார்ந்தோர்களும் ஆவர். சவுதி அரேபியாவின் சுகாதார அமைச்சகம் தமது துறைக்குத் தேவையான மருத்துவர்களையும், மருத்துவத் தொழில்நுட்பப் பணியாளர்களையும் இந்தியாவில் தேர்வு செய்வதற்கு சார்ந்திருக்கும் நிறுவனங்களில் இந்நிறுவனமும் ஒன்றாகும்.

13.2. தன் செயல்பாடுகளைப் பலமுனைப்படுத்தும் நோக்கில், இந்நிறுவனம் பின்வரும் பணிகளையும் செய்து வருகிறது:

1. சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலரின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் மனுதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பாஸ்போர்ட் தொடர்பான பணிகளை அளிப்பது.

2. வெளிநாடுகளில் உள்ள வேலையளிப்போரால் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கும் தம் சொந்த முயற்சியால் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெறும் மனுதாரர்களுக்கும் விசா முத்திரையிடுவது தொடர்பான பணியைச் செய்து தருவது.

3. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானப் பயணச்சீட்டுகளை விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம் முழுமைபெற்ற ஒரு பயணப் பிரிவைக் கொண்டுள்ளது. பன்னாட்டு விமானப்

[2005 ஏப்ரல் 4

போக்குவரத்துக் கழகம் (IATA) என்ற அமைப்பின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்நிறுவனம், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானப் பயணச்சீட்டுகளையும் கையிருப்பு வைத்துள்ளது. மேலும், உள்நாட்டு , வெளிநாட்டு பயணச்சீட்டுக்களை கணினி மூலம் முன்பதிவு செய்யும் வசதிகளைப் பெற்றுள்ளது.

4. இந்நிறுவனம் அயல்நாட்டில் வாழும் தமிழருக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. ஒரு முறை மட்டுமே செலுத்த வேண்டிய எளிய பிரிமியத் தொகையின் மூலம் 5 ஆண்டுகளுக்கு, அயல்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு விபத்து, மருத்துவம் ஆகிய இனங்களில் காப்பீடு பெற இத்திட்டம் வகை செய்கிறது.

13.3. இந்த சமூகப் பாதுகாப்புத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 13-5-2002 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் 31–12–2004 அன்று வரை 225 காப்புறுதிப் பத்திரங்களை அளித்து, ரூ.11.02 இலட்சம் பிரிமியமாகப் பெற்று, அதன் மூலம் ரூ.2.53 இலட்சம் வருமானமாகப் பெற்றுள்ளது.

13.4. இந்நிறுவனம் 31–3–2004 நிதியாண்டு முடிய ரூபாய் 2.68 இலட்சம் நிகர இலாபமாகப் பெற்று, தமிழக அரசுக்கு 8 சதவீத இலாபப் பங்கு அளித்துள்ளது.

❖❖❖

D V211,31/8/05 805 791

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 186277 சென்னை-600 008 நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.